விலை 10.00

Registered as a Newspaper at G.P.O.

பக்கங்கள்: 32

THAMILTHANTHI

# தமிழ்த்தந்தி

உண்மையாய்.. உரிமையாய்.. உணர்வாய்..

www.facebook.com/thamilthanthi

Follow@thamilthanthi

★ விளம்பரங்கள்
★ வாழ்த்துகள்
மற்றும் இதர வணிக தொடர்பாடலுக்கு:
Tel: 0114 - 369411
Fax: 0114 - 641294
e-mail: thamilthanthi@gmail.com

தமிழ் 07 தந்தி 06 ஞாயிற்றுக்கிழமை 06.01.2019 Sunday 06th January 2019 e-mail: thamilthanthi@gmail.com www.thamilthanthi.com

# கிழக்கை தாரைவார்த்த கூட்டமைப்பு!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர்

## செல்வராஜா கஜேந்திரன் கொந்தளிப்பு!

**கூட்டமைப்பின் பரிபூரண ஒத்துழைப்புடன் தமிழ் தேசியத்தை சிதைக்கும் சிங்களப் பேரினவாதம்**

**போர்க்குற்றங்களிலிருந்து இராணுவத்தை பாதுகாக்கும் தீவிர முயற்சியில் சுமந்திரன்**

**இவர்களால் தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையுமில்லை; இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்**

கிழக்கு மாகாண ஆளுநர் விடயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாரிய தவறிழைத்துள்ளது. இது கிழக்கை முழுமையாக தாரைவார்த்து விட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாகாண சபை ஒற்றையாட்சிக்கு கீழ்பட்டது. அது தமிழ் மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக அவர்கள் மேல் திணிக்கப்பட்ட ஒரு விடயம். தமிழ் மக்களுடைய தேசியம், சுயநிர்ணய உரிமை, தாயகம் என்பவற்றை நிராகரித்து இந்தியாவினுடைய நலன்களுக்காக மட்டும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக மட்டும் கொண்டு வரப்பட்டதுதான் 13ஆவது திருத்தச் சட்டம். அந்த மாகாண சபை தமிழ் மக்களுடைய அபிலாசைகளை முற்றாக மறுதலிக்கின்ற ஒருவிடயம். அத்துடன் தமிழ் தேசியத்தின் அடையாளங்களை கரைக்கின்ற ஒருவிடயம்.

அதனால் நாங்கள் மாகாண சபையை முற்றாக நிராகரிக்கின்றோம். இன்றும் நாங்கள் மாகாணசபையை நிராகரித்து தமிழ் தேசியத்துக்கான அங்கீகாரத்தை கோரி எங்கள் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

அரசாங்கத்திற்கு தொடர்ந்து முட்டுக்கொடுத்துக் கொண்டு வரும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். சிங்களப் பேரினவாதம் தான் திட்டமிட்டபடியே தன்னுடைய நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துக் கொண்டு செல்கின்றது. அதற்கு கூட்டமைப்பினரும் உடந்தை.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களுடைய உறவை சீர்குலைப்பதில் ஹிஸ்புல்லாவிற்கு பெரும் பங்கிருந்தது. முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் மறைந்த அஷ்ரப் ஐயா அவர்கள் தமிழ்-முஸ்லிம் உறவை வளர்ப்பதில் பெரும் பங்காற்றியிருந்தார் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை. அவருடைய மறைவிற்குப் பின்னர் முஸ்லிம்களின் தலைமைத்துவத்திற்கு வந்த பலர் அரசாங்கத்தின் எடுபிடிகளாக மாறி தமிழ்-முஸ்லிம் மக்களிடையே பகையை வளர்த்து அந்த உறவை சீரழிப்பதில் தீவிரமாக செயற்பட்டு வந்தார்கள்.

அதில் ஹிஸ்புல்லாவிற்கு தீவிர பங்குண்டு. அப்படிப்பட்டவரை கிழக்கின் ஆளுநராக நியமித்திருப்பது மேலும் மேலும் தமிழ்-முஸ்லிம் உறவை சீரழிப்பதற்காக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கையே. இது கூட்டமைப்பின் முழுமையான அனுசரணையுடன்தான் இந்த செயற்பாடு நடைபெற்றுள்ளது என்பதையும் நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் சிங்களப் பேரினவாதம் தன்

02 ஆம் பக்கம் பார்க்க

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இரு வாரத்திற்குள் நிவாரணம்; அமைச்சர் உறுதி



முப்பது வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். உதவுவது அனைவரதும் கடமை விவசாய அமைச்சர் ஹரிஸ்

விவசாயம், கிராமப்புற பொருளாதார அலுவல்கள், கால்நடைகள் மேம்பாடு,நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் எம்.ஹரிஸ் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயம் மற்றும் கால்நடைகள், குளங்கள் உள்ளிட்ட தனது அமைச்சின் கீழ் வருகின்ற விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்கே அமைச்சர் எம்.ஹரிஸ் தனது அமைச்சின் செயலாளர், மற்றும் கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம், கமநல நல

02 ஆம் பக்கம் பார்க்க

## புதிய தலைமையை உருவாக்குவோம் விக்னேஸ்வரனுக்கு சங்கரி அழைப்பு

தமிழ் மக்களுக்கான புதிய தலைமையை உருவாக்குவதற்கு தம்முடன் இணைந்து செயலாற்ற வருமாறு முன்னாள் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

தமிழ் மக்களின் பிரச்சனைகள் நாளாந்தம் வளர்ந்துகொண்டே போகின்றதேயன்றி, தீர்வு எதுவும் ஏற்படுவதாக தெரியவில்லை. நடைமுறைகளை அவதானிக்கும்போது மேலும் எத்தனை தீபாவளிகள் தாண்டும் என தெரியவில்லை.

சுயநலம் கருதி சிலர் செயற்பட்டமையாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சுயநலத்தை உதறி தள்ளிவிட்டு ஒன்றுபட்டு செயற்பட வருமாறு அக்கறை கொண்ட தமிழ் கட்சிகளை தமிழர் விடுதலை

02 ஆம் பக்கம் பார்க்க



## விலங்குகளுக்காக ஒதுக்கப்பட்ட பால்மா பொதியிடப்பட்டு சந்தைகளுக்கு விநியோகம்

விலங்களுக்காக ஒதுக்கப்பட்ட பால்மா தொகையைப் புதிதாகப் பொதியிட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வேவல்தெனிய - தெனிஹெல பகுதியிலேயே இதற்கான சுற்றுவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது, 14,000 கிலோகிராம் பால்மா மற்றும் 400 கிராம் பால்மா பக்கற்றுகள் 2250 உம், கொழும்பு விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நியூஸிலாந்தில் தயாரிக்கப்பட்ட பால்மா பக்கற்றுகள் என கடந்த சில நாட்களாக சந்தைகளில் இவை விநியோகிக்கப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டதுடன், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி துல்கிரிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் சந்தேகநபர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## இன்று வெள்ளோட்டம்

மாத்தறை - பெலியத்த வரையிலான ரயில் பாதையின் வெள்ளோட்டம் இன்று(06) இடம்பெறவுள்ளது.

மாத்தறை - கதிர்காமம் ரயில் பாதையின் முதற்கட்டமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ள மாத்தறை - பெலியத்த வரையிலான ரயில் பாதையின் வெள்ளோட்டமே இன்று நடைபெறவுள்ளது.

இதன்போது, ரயில் சேவையானது, பெலியத்தயிலிருந்து மாத்தறை நோக்கி செல்லவுள்ளது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தலைமையில் இந்த

02 ஆம் பக்கம் பார்க்க



## எரிவாயுவின் விலையை 359 ரூபாவால் அதிகரிக்க கோரிக்கை

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளதையடுத்து உள்ளூரிலும் அதன் விலையை 359 ரூபாவால் அதிகரிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதுது.

12.5 கி.கி. எரிவாயுவின் தற்போதைய விலை 1733 ரூபா என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் கைப்பாவையான கூட்டமைப்பு எங்களுக்கு தீர்வைப் பெற்றுத் தராது

எங்களின் சுழற்சிமுறை உணவு தவிர்ப்புப் போராட்டம் 684 நாட்களை கடந்தும் தொடர்ந்து கொண்டுள்ளது. நாங்கள் எங்கள் போராட்டத்தில் மிகத் திடமாக உள்ளோம். எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு தீர்வினை விரைந்து தருமாறு எதிர்வரும் பொங்கல் தினத்தன்று பாரியளவிலான போராட்டம் ஒன்றையும் மேற்கொள்ளவுள்ளோம்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக் கண்டறியும் சங்கத்தின் செயலாளர்

02 ஆம் பக்கம் பார்க்க



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் சங்கத்தின் செயலாளர் ராஜ்குமார்

## அரசியல் கைதிகள் விடயத்தில் விரைவில் தீர்வு; நீதி அமைச்சர்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரலவிடம் நேரடியாக கோரிக்கை விடுத்தார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவின் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு பதிலையும் வழங்காது அமைச்சர் தலதா அத்துக்கோரல நழுவிச் சென்றுள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி

02 ஆம் பக்கம் பார்க்க



# மார்ச் 05ஆம் திகதி வரவு-செலவுத் திட்டம்

2019ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 05ம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நடத்தப்பட்டு ஏப்ரல் மாதம் 04ம் திகதி வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று நிதியமைச்சு கூறியுள்ளது.







இலங்கை பொதுஜன பொறியியல் முன்னணியினரால் கிளிநாச்சியில் வெள்ளத்தால் சேதமடைந்த வீடுகளை சீர் செய்யும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநாச்சி மருதநகர் பகுதியில் வெள்ளத்தால் இவ்வாறு சேதமாகிய தற்காலிக வீடுகளை புனரமைக்கும் பணியில் குறித்த குழுவினர் ஈடுபட்டனர்.

## இந்தியாவின்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

ராஜ்குமார் தமிழ்த்தந்திக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

போரால் பாதிக்கப்பட்டு இன்னும் முழுமையான தீர்வைப் பெறாமல் நாங்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் எங்களின் போராட்டங்களை கொச்சைப்படுத்தி, மலினப்படுத்தி தங்களுக்கு ஆதாயங்களை தேடுவதற்கு சில தீயசக்திகள் முன்னிற்கின்றன. அவற்றை எல்லாம் தாண்டி அனைத்துத் தடைகளையும் துடைத்தெறிந்து எங்களின் போராட்டம் தீர்வு கிடைக்கும்வரை தொடரும்.

இரண்டு வருடங்களை நெருங்கும் எங்கள் ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை உலகம் உற்றுநோக்கிக் கொண்டிருக்கும் அதே சமயத்தில் எங்களின் போராட்டத்திற்கு மேற்குலக ஐரோப்பிய நாடுகள் பெரும் வரவேற்பைக் கொடுத்துள்ளன.

அண்மையில் இங்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களிடம் நேரடியாகச் சென்று இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட அபிவிருத்திகள் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

அத்துடன் சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தங்களின் பதவி மோகங்களுக்காக அரசாங்கத்திடம் அடிமைப்பட்டுக் கொண்டு எங்களை காட்டிக்கொடுக்கும் வேலைகளையே செய்கின்றனர். தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்காக அவர்கள் குரல் கொடுப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்த்தால் அது எங்களின் மடத்தனம்.

இப்படியானவர்கள் அரசியலில் இருக்கும்வரை எங்களுக்கான அரசியல் தீர்வு கிடைப்பதற்கு இவர்கள் விடவும் மாட்டார்கள். அவர்கள் தரவும் மாட்டார்கள். கூடியவிரைவில் இவர்களை அரசியல் அரங்கிலிருந்து அகற்றுவதற்கு அனைத்து தமிழ் மக்களும் தயாராக வேண்டும்.

ஏனெனில் தமிழர்களால் ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்படும் அரசியல் தலைமைகள் என்று போலித்தேசியம் பேசி வந்தோர் பதவி சுகத்திற்காகவே தவமிருக்கின்றார்கள். இவர்களுக்கு தமிழர் அரசியல் உரிமைகளில் பற்றோ, அக்கறையோ இல்லை. அதுவே யதார்த்தமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இந்தியாவின் கைப்பொம்மையாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதனால் இந்தியா சொல்வதற்கெல்லாம் தாளம் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களா எங்களுக்குத் தீர்வு பெற்றுத் தரப்போகின்றார்கள்.

அண்மையில், வவுனியாவில் ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்ட விடயம் தொடர்பில் தமிழ் மக்கள் தரப்பில் அச்ச உணர்வு மேலோங்கியுள்ளது. சுமந்திரன் தனக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்புத் தேவை என்பதற்காக தனக்கு கொலை அச்சுறுத்தல் என்று முன்னாள் போராளிகளை பகடைக்காயாக்கி அந்தப் பாதுகாப்பைப் பெற்றுக் கொண்டார்.

அதே உத்தியைத்தான் தற்பொழுது இலங்கை அரசாங்கமும் செயற்படுத்துகிறது. முன்னாள் போராளிகளை சர்வதேசத்திற்காக வெளியில் விட்டாலும் இப்படி ஆயுதங்களை கைப்பற்றி அவர்களை இயல்பு வாழ்க்கை வாழ விடாமல் மீண்டும் அவர்களை சிறைக்குள் தள்ளுவதற்கு முயல்கின்றது.

இதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பும் உடந்தையாக இருப்பதுதான் வேதனையளிக்கும் விடயம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்று...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

நிகழ்வு நடைபெறவுள்ளது.

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரை முன்னெடுக்கப்படவுள்ள ரயில்சேவை 3 கட்டங்களின் கீழ் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன் முதன்கட்டமாகவே மாத்தறையிலிருந்து 26 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பெலியத்த வரையில் ரயில்சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

இரண்டாம் கட்டமாக பெலியத்தயிலிருந்து ஹம்பாந்தோட்டை வரை 48 கிலோமீற்றர் தூரமும் மூன்றாம் கட்டமாக ஹம்பாந்தோட்டையிலிருந்து கதிர்காமம் வரையிலான 39 கிலோமீற்றர் தூரமும் ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது.

இலங்கையில் மிக நீளமான சுரங்க ரயில் பாதை மாத்தறை - பெலியத்த பாதையிலேயே அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 615 மீற்றர் நீளமான சுரங்கப்பாதையும் 268 நீளமான இரண்டு சுரங்கப் பாதைகளும் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தினால்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

காப்புறுதி சபையின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட உயரதிகார்கள் சகிதம் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவர்

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்ற நிலைமைகளை ஆராயும் கூட்டத்திலும் கலந்துகொண்டார். இதன் போது வெள்ள அனர்த்தம் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயம், கால்நடைகள், நீர்ப்பாசனம், போன்ற துறைகளில் ஏற்பட்ட அழிவுகள், அதனால் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகளால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்து அமைச்சர் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு விரைவாக நட்டஈடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் குறிப்பாக நெல் வயல்கள் முழுமையாக அழிந்திருந்தால் நாற்பதாயிரம் ரூபா காப்புறுதி சபையால் வழங்கப்படும் அதற்கான மதிப்பீடுகள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தோடு கால்நடைகள் இறந்திருந்தாலும் அதற்கான கொடுப்பனவும் வழங்கப்படும் எனத் தெரிவித்த அமைச்சர்;

முப்பது வருட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இத் தருணத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அனைவரதும் கடமை. எனவும் தெரிவித்தார்

வெள்ளத்தினால் பாதிப்புக்களுக்கு அதிகம் பொறுப்பு சொல்ல வேண்டியது எங்களுடைய அமைச்சு. எனவே பாதிக்கப்பட்ட குளங்களை புனரமைப்பது, குறித்த கவனம் செலுத்தப்படும் அத்தோடு இரண்டு வார காலத்திற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை கிடைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார்.

மாவட்டச் செயலகத்தில் இடம் பெற்ற கூட்டத்தினை தொடர்ந்து அமைச்சர் உள்ளடங்கிய குழுவினர் வெள்ளத்தினால் அழிவடைந்த நெல் வயல்களை பார்வையிடுவதற்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு கிளிநொச்சி பன்னங்கண்டி மற்றும் முரசுமோட்டை பிரதேசங்களுக்கும் சென்றிருந்தனர்.

## அரசியல்...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

தொடக்கம் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் வடமாகாண மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக 10 ஆயிரத்து 118 குடும்பங்களைச் சேர்ந்த 32 ஆயிரத்து 551 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துக்கோரல நேரில் சென்று பார்வையிட்டதுடன், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 490 குடும்பங்களுக்கு தேவையான உதவி பொருட்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்தார்.

எனினும் அந்த நிகழ்வில் உரையாற்றிய நீதி அமைச்சர் தலதா அத்துகோரல பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவின் கோரிக்கை தொடர்பில் எந்தவொரு கருத்துக்களையும் வெளியிடவில்லை.

இந்நிலையில் நிகழ்வின் நிறைவில் ஊடகவியலாளர்கள் நீதி அமைச்சர் தலதா அத்துகோரலவிடம் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்கு பதிலளித்த அவர் அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கதைத்துள்ளேன். அங்கு ஒரு முடிவு எட்டுவதாக பதிலளித்து விட்டு சென்றுள்ளார்.

## புதிய...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

கூட்டணி விளைந்து அழைக்கின்றது. கடந்த கால வரலாற்றை நம் தலைவர்களில் சிலரும், அவர்களின் சில தொண்டர்களும் உதாசீனம் செய்ததே இதற்கு காரணமாகும்.

1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்கு புதிய குடியரசு அரசியல் சாசனத்தை உருவாக்க மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். அதனை தமிழ் மக்கள் எதிர்நோக்ககூடிய கஸ்டங்களை முன்கூட்டியே அறிந்த எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்கள் இந்த புதிய அரசியல் சாசனத்தை எதிர்ப்பதற்கு ஒத்துழைப்பு தருமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீஜீ பொன்னம்பலம் அவர்களிற்கு கோரிக்கை விடுத்தார்.

ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்த இரு தலைவர்களும் தங்களிற்கிடையே 22 ஆண்டுகளாக காணப்பட்ட வேற்றுமைகளை மறந்து 1972ம் ஆண்டு தமிழர் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி, அது 1976ம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி என பேயர் மாற்றம் பெற்றது. தமிழ் பிரதேசங்களில் இயங்கும் மிகப்பெரும் தமிழ் அரசியல் கட்சிகள் என்பதால்,இவ்விரு கட்சிகளின் இணைவு ஏக பிரதிநிதித்துவத்தின் தன்மையை இக்கட்சிக்கு வழங்கியது போல் தோன்றியது. ஆனால் அது அப்படியல்ல. வேறுபல சிறிய கட்சிகளும் தமிழர் விடுதலை கூட்டணியுடன் இணைந்ததுடன், இடதுசாரி கட்சிகளும் குறிப்பிடதக்க அளவு வலுவிழந்தன. எது எப்படி இருப்பினும் உலகளாவிய ரீதியில் குடியேறியுள்ள இலங்கை தமிழ் மக்கள் இந்த ஒற்றுமையை மிகவும் பாராட்டி, இணைப்பை இரு பெரும்தமிழ் அரசியல் ராட்சகர்கள் மீள கை கோர்த்தமையை பலவிதத்திலும் பிரமாதமாககொண்டாடினார்கள். இவ்விரு தலைவர்களும் ஏற்கனவே நடந்தது போல மீண்டும் பிளவுபடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கவேண்டுமென்று தமிழர் விடுதலை கூட்டணியை தமது சொத்தாக தமிழ் மக்களிற்கு விட்டுச் சென்றனர். இந்த இணைப்பை மெலும் பலப்படுத்தவும், மலைநாட்டு தமிழ் மக்களையும் ஒரே கொடியின்கீழ் கொண்டுவரும் நோக்கத்தோடும் தான் வகித்த தலைவர் பதவியை தந்தை செல்வநாயகம் அவர்கள் 1976ம் ஆண்டு நடந்த கட்சி மாநாட்டில் தானாக முன்வந்து, கௌரவ ஜீ.ஜீ.பொன்னம்பலம், கௌரவ எஜ்.தொண்டமான் ஆகியோருடன் பகிர்ந்துகொண்டார்.

தந்தை செல்வா, ஜீஜீ பொன்னம்பலம் ஆகியோரின் மறைவுக்கு பின்னர் 1977ம் ஆண்டு நடந்த பாராளுமன்ற பொது தெர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட முதலாவது பொது தேர்தலாகும். அத்தேர்தல் நியமனக்குழுவில் ஓர் அங்கத்தவராக கௌரவ எஸ் தொண்டமான் அவர்களும் இடம்பெற்றிருந்தார். தேர்தல் முடிவுகளில் சந்தேகத்திற்கிடமின்றி ஒற்றுமையை தமிழ் மக்கள் மிக பாரதூரமாக எடுத்துக் கொண்டார்கள் என்பது தெளிவாகியது. போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே தமிழர் விடுதலை கூட்டணி ஈட்டிய வெற்றி ஒவ்வொருவரையும் தமக்கிடையே நிலவி வந்த பேதங்களை மறந்து, மீண்டும் நண்பர்களாகவும், உறவினர்களாகவும் பழகினார்கள். ஆயுதம் தாங்கிய குழுக்கள் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்க தொடங்கியவரை இந்த ஒற்றுமை நீடித்தது, அதன் பின்னர் தொடர்ந்த நீண்டகால யுத்தம் காரணமாக பல்வேறு இழப்புக்கள் மற்றும் அரசியல் ரீதியான சவால்களிற்கு மத்தியில் தொடர்ந்து பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் யாவருக்கும் ஏற்பட்டது. சாத்வீக போராட்டம் தோற்றமையினால் தான் ஆயுத குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டன என்ற கூற்று ஏற்க கூடியதல்ல.

நடந்துபோன விடயங்களை மீண்டும் கிளறிபார்க்க நான் விரும்பவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். ஆனால் சில விடயங்களை குறிப்பிட்டே ஆகவேண்டும். விரும்பதகாத சக்திகள் எவையும் தமிழரசு கட்சியின் சின்னத்தையும் அதன் பெயரையும் துர்ப்பிரயோகம் செய்யக்கூடாதென்ற ஒரே காரணத்திற்காகவே தனது கணவர் தமிழரசு கட்சியின் பதிவை பாதுகாத்து வைத்திருந்தார் என்றும், தமிழரசு கட்சியை அவரிற்கு ஒருபோதும் புனரமைக்கும் எண்ணம் இருக்கவில்லை என்றும், அவரால் வளர்க்கப்பட்ட சிலர் தமிழரசு கட்சியின் பெயரை துர்பிரயோகம் செய்யவும், அதனை புனரமைக்க முயல்வதும் கவலைக்குரியது எனவும், இவர்கள் மீது அவர் வைத்திருந்த நம்பிக்கையை முறியடித்திருக்கின்றார்கள் எனவும் திருமதி அமிர்தலிங்கம் அவர்கள் மிக்க தெளிவாக குறிப்பிட்டுள்ளார். நான் மிக அழுத்தம் திருத்தமாக கூறுவது யாதெனில், திரு செல்வநாயகம் அவர்களோ, திரு ஜீஜீ பொன்னம்பலம் அவர்களோ அன்றி தமிழர் விடுதலை கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினர்களோ இவர்களில் எவரும் தமிழரசு கட்சியை புனரமைப்பு செய்ய ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை. இந்த கைங்கரியத்தை ஒரு பேராசை பிடித்த நபர், தந்தை செல்வா இறந்து 28 ஆண்டுகளின் பின் தன்நலம் கருதியே செய்துள்ளார். அதேபோல், தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரை காலத்திற்கு காலம் பயன்படுத்தி மக்கள் ஒற்றுமையாக வாக்களிக்க வேண்டும் எனுவம், தேர்தலை சர்வதேச சமூகம் உன்னிப்பாக கவனிக்கின்றதாகவும் போன்ற வார்த்தைகளை பயன்படுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டார்கள். வெற்றி பெற்றவுடன், தங்களிற்குள் தனியாக குழுவாக பிரிந்து செயற்படுவார்கள். அதன் விளைவை கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் பிரதிபலித்ததை நாம் கண்கூடாக பார்த்தோம். தொடர்ந்தும் அந்த மாயைக்குள் சிக்கி தவிக்காமல், மக்கள் விடுபட்டு; வந்து உண்மையை உணர்ந்து செயற்பட ஆரம்பித்தமையாலேயே உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு பெரும் வீழ்ச்சி ஏற்பட்டது. இதே சிந்தனையில் மக்கள் செயற்பட்டால் பிரச்சினைகளிற்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொள்ள முடியும்.

இக்கட்டத்தில் எதுவித பதவிகளிற்கும் ஆசைப்படாது 60 ஆண்டுக்கு மேல்மக்கள் சேவையில் ஈடுபாடு கொண்டிருந்த நான், எனது அரசியலில் இன்றைய நிலைப்பாட்டை நம் மக்களிற்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன். சட்டக்கல்லூரியில் 60 ஆண்டுகள் திரு விக்னேஸ்வரன் அவர்களை நான் அறிவேன். இரண்டொரு சந்தர்ப்பத்தில் அவரைப்பற்றிய தப்பான அரசியல் விமர்சனங்கள் வந்தபோது, அவற்றையும் கண்டித்துள்ளேன். ஒனறு மட்டும் உறுதியாக கூற என்னால் முடியும். ஏனைய சிலர் தொடர்ச்சியாக செய்தது வருவதுபோல அவர் நம்மினத்தை விற்கவோ, காட்டிக் கொடுக்கவோ மாட்டார் என்பதை நான் அறிவேன். இந்த நிலமையைதான் தீர்க்க தரிசனமாக ‘ஆண்டவன்தான் தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும’ என அன்று தந்தை செல்வா கூறியிருக்கலாம்.

இன்றுவரை தேர்தல்களில் தமிழர் விடுதலை கூட்டணி தனித்து எல்லா வட்டாரங்கள், தொகுதிகளிலும் போட்டியிடும் தீர்மானத்துடனேயே உள்ளது. அப்படி இருப்பதற்கு நியாயப்படுத்த கூடிய பல காரணங்கள் உண்டென்பதை சகல கட்சிகளின் தலைவர்களும் தம் தம் மனச்சாட்சியை தொட்டு கேட்க வேண்டும்;. ஆகவே, திரு சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தமிழர் விடுதலை கூட்டணியின் தலமை ஏற்கும் பட்சத்தில் அவருடன் இணைந்து செயற்பட நாம் தயாராக உள்ளோம். இதே ஏற்பாட்டை தான் நான்கு ஆண்டுகளிற்கு முன்னர் அவரிற்கு எமது கட்சியின் தலைவர் பதவியை வழங்க முன்வந்தேன் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். எனவே, 1972ம் ஆண்டு தமிழர் விடுதலை கூட்டணி ஆரம்பிக்கப்பட்டபோது, அக்கட்சிகள் ஒன்றாக சங்கமித்தமையேயன்றி, பங்காளிகளாக இருக்கவில்லை. இதேபோன்றதொரு நிலமை ஆரம்பத்திலேயே உருவாகுமாக இருந்தால், தேர்தல் முடிந்ததும் அனைவரும் ஒரே கட்சியாக தமிழர் விடுதலை கூட்டணியை ஏற்று, புதிய நிர்வாகத்தையும் தெரிய வைத்து தந்தை செல்வாவின் கனவை நனவாக்குவோம். என்னைப்பொறுத்தவரையில், எமது பிரச்சினை தீரவேண்டும் என்பதேயொழிய, எதுவித பதவியையும் இலக்கு வைத்து இன்றுவரை செயற்படவில்லை என்பதை உறுதியாக கூறி, நல்லெண்ணம் படைத்த அனைவரையும் ஒன்று சேர வருமாறு அழைக்கின்றேன்.

## கிழக்கை...

01 ஆம் பக்கம் தொடர்ச்சி

செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு பரிபூரணமாக ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஏனெனில் ஜனாதிபதி மைத்திரிபாலவின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ்தான் இராணுவம் இருக்கின்றது. மைத்திரியை தங்களுக்கு எதிரானவர்கள் போல் காட்டிக் கொண்டு, அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் வெள்ளப் பாதிப்பிற்குப் பிறகு இராணுவத்தின் தளபதியுடன் சேர்ந்து மக்களுக்கு பொதியை வழங்குவதில் சுமந்திரனும் சேர்ந்து கொண்டுள்ளார். வெள்ளப் பாதிப்பும் சற்றுக் குறைந்தபின் நாலைந்து நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் மக்களைப் பார்ப்பதற்காக அங்கு வந்திருந்தார்.

ஏனென்றால் சர்வதேசத்திற்கு இராணுவத்தினர் மக்களை மீட்பதிலும், அவர்களுக்கான மனிதாபிமானப் பணியிலும் ஈடுபடுகின்றார்கள் என்பதைக் காட்டுவதற்கும் எதிர்வரும் மாதங்களில் ஜெனீவாவில் இடம்பெறப் போகும் அமர்வுகளில் இராணுவத்தின் மீதான நல்லெண்ணம் வெளிப்பட வேண்டுமென்று காட்டுவதற்காகவும் இவ்வாறன நடவடிக்கையின் மூலம் இராணுவத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்களை இல்லாமலாக்குவதற்கும் தான் சுமந்திரன் இராணுவத்துடன் சேர்ந்து இந்த செயற்பாட்டை செய்திருந்தார்.

ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்று குற்றஞ்சாட்டிக் கொண்டு அவரின் நேரடி கண்காணிப்பின் கீழிருக்கும் இராணுவத்தை பாதுகாப்பதற்காக சுமந்திரன் அந்தக் காரியத்தில் ஈடுபட்டிருந்தார். ஆகவே இவைகள் எல்லாம் உள் விளையாட்டுத்தான். இதை தமிழ் மக்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். மைத்திரிக்கு தாங்கள் எதிர்ப்பு என்பது போல் வெளியில் காட்டிக் கொண்டு உள்ளால் அவர்களுக்கு பூரண ஆதரவை வழங்கி வருகின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தை கூட்டமைப்பு ஏற்கனவே தாரைவார்த்து விட்டது. தமிழர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கான அனுமதியை கூட்டமைப்பு எப்பவோ வழங்கிவிட்டது. கடந்த எட்டு வருடங்களாக கிழக்கு மாகாணத்தைப் பற்றி கூட்டமைப்பு பேசினது கிடையாது. கடந்த எட்டு வருடங்களில் உலகத்தின் இரு முக்கிய நாட்டுப் பிரதமர்கள் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்கள். ஒருவர் முன்னாள் பிரிட்டர் பிரதமர் டேவிட் கமரூன். மற்றயவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள். இவர்கள் இருவரும் வடக்கிற்குதான் தங்கள் விஜயத்தை மேற்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் தமிழ் மக்களுக்கு தலைமை தாங்குகின்றேன் என்று சொல்லியவர் தென்தமிழீழத்தைச் சேர்ந்த சம்பந்தன் ஐயாதான்.

அந்த சந்தர்ப்பத்தில் கூட சம்பந்தன் ஐயா அவர்களை கிழக்கிற்கு அழைக்கவும் இல்லை. சம்பந்தன் ஐயாவை மட்டும்தான் அவர்கள் சந்தித்தனர். அப்பொழுது கூட கிழக்கு மக்களின் துன்பங்கள், துயரங்களைக் கூட பேசவுமில்லை. எந்த ஒரு இராஜதந்திரிகளை சந்தித்தாலும் கிழக்கு மக்களின் துன்பங்களைப் பற்றி ஒருவார்த்தை கூட பேசினது கிடையாது. குறிப்பாக கூட்டமைப்பின் பூரண ஆதரவோடுதான் கிழக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்புகள், அடையாளங்கள் அழிக்கப்படுதல், தமிழ் பெண்கள் சீரழிக்கப்படும் செயற்பாடுகள் எல்லாம் வேற்று சக்திகளால் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் இவர்களின் விருப்பத்திற்கு மாறாக செயற்படுவது உண்மை என்று சொன்னால், இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்புத் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை ஊடாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அவரை கொண்டு செல்வதற்கு கூட்டமைப்புத் தயாரா? ஏனென்றால் மைத்திரிபாலவும் இறுதிப்போரில் இருவாரங்கள் பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்டுள்ளார். மகிந்த ராஜபக்ஷ அந்த இனஅழிப்புப் போரை நேரடியாக தலைமைதாங்கி செயற்பட்டார். ஆகவே இவர்கள் எல்லோரையும் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு கூட்டமைப்புத் தயாரில்லை. ஆகவே இந்த நாசகார நடவடிக்கைகள் அனைத்துமே கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன் தான் ராஜபக்ஷவும் செய்கின்றார், மைத்திரியும் செய்கின்றார், ரணிலும் செய்கின்றார். 2012ஆம் ஆண்டு ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் முதன் முதலாக இலங்கை தொடர்பான தீர்மானம் வருவதற்கு முன்னதாகவே சரணடைந்த போராளிகளுக்கு முகாம்களில் சிறப்பாக புனர்வாழ்வு அளிக்கப்படுகின்றது என்று மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக சம்பந்தன் நற்சான்று வழங்கியிருந்தார். அன்றைய காலகட்டத்தில் பாலியல் வல்லுறவுகளும், கொலைகளும், கடத்தல்களும் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில்தான் சம்பந்தனும், சுமந்திரனும் பகிரங்கமாக ஊடகங்களிலும் பாராளுமன்றத்திலும் சொல்லியிருந்தார்கள் முன்னாள் போராளிகள் மிகச்சிறப்பாக புனர்வாழ்வளிக்கப்படுகின்றார்கள் என்று. ஆகவே எந்த அரசாங்கமாக இருந்தாலும் அது தமிழ் தேசியத்திற்கு எதிராக செயற்படுவதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் கசப்பான யதார்த்தம்.

இந்திய, மேற்குலக நாடுகளின் முகவராக இருக்கும் சுமந்திரன் சிங்களப் பேரினவாதத்தை திருப்திப்படுத்தம் நோக்கில் தமிழ் தேசியத்தின் இருப்பை, அடையாளங்களை அழிக்கும் செயற்பாடுகளை செய்து கொண்டிருக்கின்றார். தமிழர்களின் அடையாளங்களை அழிப்பதற்கு அவர்கள் தலைமையாக இருந்தால் தான் அதைச் செய்யலாம். இதனால் அவர்கள் மாற்றுத் தலைமை வருவதையோ அல்லது வளருவதையோ விரும்பவில்லை.

இந்த உண்மையை மக்கள் விளங்கிப் புரிந்து கொண்டு எங்களின் பின்னால் அணி திரளவேண்டும். அதன் மூலமே இப்படியானவர்களின் கீழ்த்தரமான வேலைகளை நிறுத்த முடியும். இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்



**க.கிஷாந்தன்**

நற்குண முன்னேற்ற அமைப்பு மூலம் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், குருவி மக்கள் மன்றத்துடன் இணைந்து கம்பளை கல்வி வலயத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 38 பாடசாலைகளின் மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வு நாவலப்பிட்டி லோட்டஸ் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது 38 பாடசாலைகளிலும், 550ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது, கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன், நற்குண முன்னேற்ற அமைப்பின் உறுப்பினர்கள், கம்பளை கல்வி வலய அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா பிரதேசத்தில் திடீரென கால்நடைகள் இறப்பு

**கந்தளாய் நிருபர்**

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் கால்நடைகள் நோயால் இறந்து வருகின்றனவென இப்பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா, கற்குழி, சூரங்கள், செம்பி மோட்டை, கல்லறப்பு, மணியரசங்குளம், கண்டலடி ஊற்று, வட்டமடு போன்ற பிரதேசங்களிலேயே கால்நடைகள் திடீரென நோய்வாய்ப்பட்டு தற்போது இறந்து வருகின்றன.

இதனால் கால்நடைகள் வளர்ப்போர் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர். இது பற்றி கிண்ணியா பிரதேச கால்நடை வைத்தியர் டொக்டர் எம்.எஸ். எம். பைஸர் கருத்துத் தெரிவிக்கையில்: கிண்ணியா பிரதேசத்தில் கால் நடைகள் திடீர் திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் தாங்கள் உரிய இடங்களுக்குச் சென்று பிரேத பரிசோதனைகளைச் செய்து குழிகளை வெட்டி அவற்றைப் புதைப்பதற்கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கிண்ணியா பிரதேசத்தில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்திருப்பதாகவும் இக்கால்நடைகளுக்கு சரியான மேய்ச்சல் தரைகள் இன்மையால் அதறகான உணவுகள் கிடைக்காமையே இதற்கான பிரதான காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இம்மாவட்டத்தின் கடந்த காலத்தில் தோப்பூர் மற்றும் கந்தளாய் பிரதேசத்திலும் பெரும்பாலான கால்நடைகள் இறந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் அகற்றப்பட்ட வேண்டும்

**கந்தளாய் நிருபர்**

திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கடைகள் அனைத்தும் அகற்றப்பட்ட வேண்டுமெனவும் இவை ஆலயத்தின் புனிதத்தன்மையைப் பாதிப்பதுடன் இயற்கை சமநிலையைச் சீர்குலைப்பதாகவும் திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் நா.இராசநாயகம் தெரிவித்தார்.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலுள்ள கடைகளை அவ்விடத்திலிருந்து அகற்றி மலையடிவாரத்தில் அமைப்பது தொடர்பாக திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் வியாழக்கிழமை (03) நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசந்த புஞ்சிநிலமே க.துரைரெட்ணசிங்கம், மாவட்ட செயலாளர் என்.ஏ.ஏ புஸ்பகுமார, நகராட்சி மன்ற உறுப்பினர்கள் அதிகாரிகள், திருக்கோணேஸ்வரர் ஆலயப் பரிபாலன சபையினர், கடை வியாபாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும் போது நாட்டிலுள்ள ஏனைய புனித பிரதேசங்களான அநுராதபுரம், தலதா மாளிகை போன்ற இடங்களில் ஆலயங்கள் உள்ள இடங்களுக்கு அருகாமையில் இவ்வாறான வியாபாரா நிலையங்கள் அமைந்திருக்கவில்லையெனவும் ஆலயங்களுக்கு சற்றுத் தொலைவிலேயே வியாபாரநிலையங்கள் அமையப் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு ஆலயத்தின் அருகில் இக்கடைகள் அமைந்திருப்பதால் திருகோணமலை நகரத்தின் அழகை ஆலயத்திலிருந்து பார்க்கும் பார்வை முகம் மறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நுவரெலியா மாவட்டத்தின் முதலிடம்

**சுஜீவன்**

நடந்து முடிந்த க பொ த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளின் படி 3A சித்திகளைப் பெற்று (Z Score 2.2084) நுவரெலியா மாவட்டத்ன் கலைப்பிரிவில் முதலிடத்தைப் பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளார் நு/கேம்பிரிஜ் கல்லூரியின் மாணவி ஸ்ரீதேவி ரவிச்சந்திரன். மஸ்கெலியா பிரதேசத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீதேவி. ரவிச்சந்திரன் ராமேஸ்வரி தம்பதியினரின் மூத்த புதல்வியாவார்.



இவர் தனது ஆரம்பக் கல்வியை மஸ்கெலியா புனித ஜோசப் தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர்தர கல்வியை கொட்டக்கலை கேம்பிரிஜ் கல்லூரியிலும் தொடர்ந்தார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 2 புள்ளிகளால் வெட்டுப்புள்ளிவை அடைய முடியாத காரணத்தினால் எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணியாக வர வேண்டும் என்ற இலட்சியத்துடன் பயணத்தை தொடர்ந்த ஸ்ரீதேவி க பொ த (சா/த) பரீட்சையில் 7A 2ஆ பெறுபேற்றை பெற்று தனது முதல் மைல் கல்லை கடந்தார்.

கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் A சித்தி இருந்தமையினால் பெரும்பாலானவர்கள் தன்னை உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவில் கல்வி கற்குமாறு அறிவுறுத்திய போதிலும் தனது இலட்சியத்தை குறியாக்க கொண்டு கலைப் பிரிவில் காலடி வைத்ததாகவும் அவர் கூறினார்.

தனது சாதனைப் பயணத்தில் பலரும் தாக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். முதலாவதாக தனது பெற்றோருக்கு நன்றியை தெரிவித்தார். தனது இலட்சியத்தை நோக்கி செல்ல சகலவிதமான உதவிகளையும் பெற்றோர் தனக்கு அளித்ததாக கூறினார். அடுத்ததாக தனது பாடசாலை . மாவட்டத்தின் முதலிடம் மட்டுமன்றி நாடளாவிய ரீதியிலும் 62 ஆவது இடத்தைப் பெற தனது பாடசாலை அதிபர் உட்பட ஆசிரியர்கள் குறிப்பாக தனக்கு கற்பித்த ஆசிரியர்களான திரு ஜெயசிலன் திரு ரெடிஸன்மார்க் திருமதி யோகேஸ்வரி ஆகியோருக்கு விசேடமாக நன்றிகளை தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைவதாக சாதனை படைத்த ஸ்ரீதேவி கூறினார். அதே போல் தனது மேலதிகமாக கற்பித்த ஆசிரியர்களான திரு கோவிந்த் மற்றும் திருமதி சசிகலா ஆதியோடுக்கும் இத்தருனத்தில் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறார்.

இவ் ஆசிரியர்கள் தினமும் நடைமுறையில் நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் தனக்கு வழங்கியதாகவும் கூறினார். அத்தோடு உயர்தர பிரிவில் கணித - விஞ்ஞான பிரிவுகளில் உள்ளவர்கள் கடும் முயற்சியுடன் கல்வி கற்பதை போலவே கலை பிரிவிலும் கல்வி பயின்றால் 3A சித்தியைப் பெறுவது ஒன்றும் கடினமான விடயமல்ல என்று ஸ்ரீதேவி குறிப்பிட்டார்.

இவரின் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது என்னவெனில் தனது பிள்ளைகளின் நலன் கருதி 5 வருட காலமாக தனது வீட்டில் தொலைக்காட்சி பாவனை முழுமையாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும் வானொலி ஒன்றை மாத்திரமே பயன்படுத்தி வந்ததாகவும் ஸ்ரீதேவியின் தந்தை ரவிச்சந்திரன் தெரிவித்தார். இதன் காரணமாகவே தனது மகள் (சா/த) மற்றும் (உ/த) பரீட்சைகளில் சாதனை படைக்க ஏதுவாக இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சிவனொளிபாதத்தில் விசேட சுகாதார சேவை

**மஸ்கெலியா நிருபர்**

இம்முறை சிவனொளிபாத மலை பருவக்காலத்தில் சுகாதார சேவை விசேடமாக என்றும் இல்லாதவாறு செயற்படுத்தபட்டுள்ளது.

24 மணிநேரமும் இவ் வைத்திய சேவை நல்லத்தண்ணி பொது சுகாதார அதிகாரிகள் காரியாலயத்தில் கேட்போர் கூடத்தில் இடம் பெற்று வருகின்றது என நுவரெலியா மாவட்ட சுகாதார அத்தியட்சர் வைத்திய அதிகாரி சேனா தலகல தெரிவித்தார். அவர் மேலும் கலந்துரையாடுகையில் 2 அம்பியூன்ஸ் வண்டிகளும், 4 வைத்தியர்களும் தற்போது கடமையில் உள்ளதாகவும் இதனால் சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகளுக்கு சுகாதார சேவையை பெற்றுக்கொடுக்கவே இந்த சுகாதார சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும்,இம்முறை இந்த சேவையை இந்த சேவையை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அதன்படி யாத்திரிகள் முன்வந்துள்ளர்.

வார கடைசி நாட்களிளும், நீண்ட விடுமுறை நாட்களிலும் சிவனொளிபாத மலையை தரிசிக்க அதிகளவு யாத்திரிகள் வந்து செல்வதாலும் உள்நாட்டு வெளிநாட்டு யாத்திரிகள் நலன் பேன இச்சேவை 24மணி நேரமும் இடம் பெறும். அதற்கான சேவைக்கு அதிகளவு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சேன தலகல தெரிவித்தார். அங்கு இடம் பெறும் சேவையானது காயமடைந்தோருக்கு மருந்து கட்டுதல சுகவீனமுற்றோருக்கு மருந்து வுழங்கள், மேலதிக சிகிச்சை தேவைபடின் அம்பியூன்ஸ் வண்டி மூலம் அருகில் உள்ள வைத்திய சாலைக்கு கொண்டு செல்லுதல் முதலுதவி செய்தல் போன்ற விடயங்கள் இடம் பெறும் என்றார்.

# தன் பிறந்த தினத்தை முன்னிட்டு பஸ் தரிப்பிடங்களை புனரமைப்பு செய்த பிரதேச சபை உறுப்பினர்



**நீலமேகம் பிரசாந்த்**

தனது பிறந்த தினத்தை முன்னிட்டு பலர் பல வேலைகளை செய்து வருகின்றனர். அந்தவரிசையில் மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினரான ராஜ் அசோக் தன் பிறந்த தினத்தை முன்னிட்டு பல வருடமாக கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட இரு பஸ் தரிப்பிடங்களை அழகுப்படுத்தினார்.

அந்தவகையில் மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட கங்கேவத்த எனுமிடத்தில் கவனிப்பாரற்று கிடந்த பஸ்தரிப்பிடத்தை அப்பிரதேச மக்கள் ராஜ் அசோகின் கவனத்திற்கு கொண்டு செல்ல உடனே தன் மஸ்கெலியா பிரதேச சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் அப் பஸ் தரிப்பிடத்தை அழகுப்படுத்தினார்.

அதேபோல பிரவுன்லோ 56 பகுதிக்குறிய பஸ் தரிப்பிடமும் கவனிப்பாரற்றுகிடக்க தன் பிறந்த தினத்தை முன்னிட்டு மக்கள் கேட்டுக்கொண்ட இரு பஸ் தரிப்பிடங்களையும் தன் பிறந்த தினத்தை முன்னிட்டு வர்ணப்பூச்சுகளால் அழகுப்படுத்தினார்.

இவ் வேலைத்திட்டத்தில் இளைஞர்களின் பங்களிப்பும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மார்கழி பஜனைப் பொங்கல் நிகழ்வு

**மஸ்கெலியா நிருபர்**

மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சுவாமி தேவஸ்தான வருடாந்த மார்கழி பஜனை பொங்கல் திருவிழா எதிர் வரும் 15ம் திகதி வெகு சிறப்பாக இடம் பெற உள்ளது. 15ம் திகதி காலை ஆலய முன்றலில் அதிகாலை சூரிய பகவானுக்கு பொங்கல் வைக்கும் விழாவுடன், விசேட பூஜைகள் இடம் பெற்ற பின்னர் 10மணியளவில் இரண்டு முத்து இரதத்தில் ஸ்ரீ நாராயண பெருமான் ஆஞ்சநேயர்கள் வீதி உலா வந்து மக்களுக்கு காட்சி தர உள்ளார். அன்றைய தினம் காலை ஆலயத்தில் ஆரம்பமாகும் பவனி, ஆலயத்தை சுற்றியும் தபாற் கந்தோர் வீதியின் ஊடாக 7ம் வீதியையும், பின்னர் சாமிமலை வீதியை சென்றடைந்து பின்னர் அங்கிருந்து 2ம் வீதியை வந்தடைந்த பின்னர் 4ம் வீதியினுடாக பிரதான வீதியை வந்தடைந்த பின்னர் இறுதியாக ஆலயத்தை சென்றடையும்.

# றோட்டரி கழகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு



**நீலமேகம் பிரசாந்த்**

மலையத்தில் ஏற்பட்ட வேலை நிறுத்த போராட்டம் ,சம்பளப்பிரச்சனை என்பவற்றை கருத்தில் கொண்டு எம் உறவுகளுக்கான கைக்கொடுக்கும் நோக்கில் ROTARACT CLUB PEACE CITY HATTON மற்றும் மலையக மறுமலர்ச்சி ஒன்றியம் இணைந்து பூண்டுலோயா டன்சினன் மேல்ப்பிரிவு மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை டன்சினன் மேல்ப்பிரிவு பொது மைதானத்தில் இடம்பெற்றது.

தரம் 1 தொடக்கம் 12 வரையிலான கற்றலை தொடரும் அனைத்து மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டது. ஊடகவியலாளர் நீலமேகம் பிரசாந்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் ROTARACT CLUB PEACE CITY HATTON கழகத்தின் தலைவி விபாஜினி உட்பட கழக உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டதோடு மலையக மறுமலர்ச்சி ஒன்றியத்தின் தலைவர் கோபி கிருஸ்ணா உட்பட பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தலைவி விபாஜினி;

தொடர்ந்து இவ்வாறான சேவைகளை செய்வதற்கு எம் அமைப்பு தயாராக இருக்கின்றது.தொடர்ந்தும் பல சேவைகளை வரும் காலங்களில் முன்னெடுப்போம் என குறிப்பிட்டார்.

மேலும் இந்நிகழ்விற்கு தோட்ட மக்கள் உட்பட பலரும் ஒத்துழைப்பு வழங்கியதோடு இந்நிகழ்வு இனிதாக நிறைவுப்பெற்றது.

# அதிகளவில் கட்டணங்களை அறவிடும் வர்த்தக நிலையங்கள்

**மஸ்கெலியா நிருபர்**

சிவனொளிபாதமலை பருவகாலம் ஆரம்பித்து 20 நாட்கள் கடந்துள்ள நிலையில், இம்முறை கடந்த காலங்களை விட இம்முறை அதிகளவான யாத்ரீகர்கள் வருகைதந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சிவனொளிபாதமலையில் காணப்படும் உணவகங்களில் அதிகளவு கட்டணம் அறிவிடுவதாக நல்லத்தண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லக்சிறி பெனார்ந்துவுக்கு கிடைக்கப்பெற்ற புகாரை தொடர்ந்து நுவரெலியா மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

மேலும் கூறுகையில், இனிவரும் காலங்களில் வாராந்த சுற்றி வலைப்பை மேற்கொள்ள உள்ளதாகவும் இச்சுற்றிவலைப்பில் அதிகளவு கட்டணங்களை அறவிடும் வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.



**மாளிகைக்காடு அல் இர்ஷாதியா மத்ரசா மாணவர்களின் 2வது பட்டமளிப்பு விழா அதிபர் அல்ஹாபிழ் மௌலவி அப்துல்கரீம் (தஹ்வி) அவர்களின் தலைமையில் மாளிகைக்காடு அல் ஹுசைன் வித்தியாலயத்தில் நடைபெற்றது.**


**படம்: பைஷல் இஸ்மாயில்**

# மருத்துவத்துறைக்கு சித்தியைப் பெற்றுள்ளார்

**காரைதீவு நிருபர்**



2018 ஆம் ஆண்டு நடை பெற்று முடிந்த க.பொ.த. (உ/த) பரீட்சை பெறுபேறுகள் தற்போது வெயாகியுள்ளன அதற்கமைய கல்முனை கல்வி வலயத்தில் அமைந்துள்ள காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி மாணவனாகிய குலேந்திரன் இந்துஷன் 2A,B சிறந்த சித்தியைப் பெற்று மருத்துவத்துறைக்கு தகுதி பெற்றுள்ளார் இவர் காரைதீவு கிராமத்தை சேர்ந்த குலேந்திரன் புதல்வனானவர் இவருக்கு ஆரம்பக் கல்வி தொடக்கம் உயர்தரக் கல்வி வரை கல்விக்கு ஊக்கப்படுத்திய ஆசிரியர் அதிபர் உத்தியோகத்தர்கள் மற்றும் கற்பதற்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றார்.



# நம்பிக்கை இல்லாதவர்கள் என் பின்னால் நிற்க வேண்டாம்; சாதி ஒழிப்புக்காக தொடர்ந்து போராடுவேன்!



நம்பிக்கை இல்லாதவர்கள் என் பின்னால் நிற்க வேண்டாம் என்றும் சாதி ஒழிப்புக்காக தொடர்ந்து போராடுவேன் என்றும் ஆணவக் கொலை எதிர்ப்பாளர் கவுசல்யா தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை சங்கர் - பழநி கவுசல்யா ஆகிய இருவரும் காதலித்து 2015-ல்சாதி மறுப்பு திருமணம் செய்துகொண்டனர். இதைத் தொடர்ந்து, உடுமலைப்பேட்டையில் சங்கர் கடந்த 2016 மார்ச் 31-ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். அதன் பிறகு, தீண்டாமை, ஆணவப் படுகொலைக்கு எதிராக கவுசல்யா போராடி வந்தார்.

இந்த நிலையில், கோவையில் நிமிர்வு கலையகம் என்ற பறை இசை பயிற்சி அமைப்பின் பொறுப்பாளர் சக்தி என்பவரை கவுசல்யா காதலித்து கடந்த டிசம்பர் 9-ம் தேதி மறுமணம் செய்துகொண்டார்.

அதைத் தொடர்ந்து, வேறொரு பெண்ணைக் காதலித்து ஏமாற்றியது உட்பட சக்தி மீது பல்வேறு புகார்கள் எழுந்தன. இது சமூக வலைதளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில், சக்தி மீதான புகார்கள் குறித்து தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் தியாகு, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் விசாரணை நடத்தினர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், ஒரு பெண்ணைக் காதலித்து கைவிட்டதை சக்தி ஒப்புக்கொண்டார். ஆனால், மற்ற குற்றச்சாட்டுகளை மறுத்துவிட்டார். கவுசல்யாவும் தனது தவறைப் புரிந்துகொண்டார். எனவே, அவர்கள் இருவரும் பொது அவையில் மன்னிப்பு கேட்க வேண்டும். நிமிர்வு கலையகத்தில் இருந்து சக்தி வெளியேற வேண்டும். ரூ.3 லட்சம் அபராதம் செலுத்த வேண்டும். 6 மாதங்களுக்கு பொது நிகழ்ச்சிகளில் அவர் பறை இசைக்கக் கூடாது என்று தெரிவித்தனர்.

இது பலத்த சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியது. கவுசல்யா தனது ஃபேஸ்புக் பதிவில், தன் மீதான குற்றச்சாட்டுகளை மட்டும் ஏற்பதாகத் தெரிவித்திருந்தார்.

அப்போது பேசிய அவர், இதுகுறித்துப் பேச நான் விரும்பவில்லை. பிம்பமாக என்னை நினைத்து என் பின்னால் நின்றிருந்தால், நிச்சயம் வேண்டாம். ஆணவக் கொலைக்கு எதிராக, சாதி ஒழிப்புக்காக நிற்பேன். அதற்குத் துணை நிற்பவர்கள் இருந்தால் போதும்.

பிற்காலத்தில் எனக்கு சொல்ல வேண்டும் என்று தோன்றினால் விளக்கம் சொல்வேன். எந்த நம்பிக்கையும் இல்லாதவர்கள் என் பின்னால் நிற்க வேண்டாம் என்றார் கவுசல்யா.

# பாஜக அல்லாத மாநில கட்சிகளுடன் அதிமுக கூட்டணி: பாமக, தேமுதிக, தமாகாவை இணைக்க பேச்சுவார்த்தை?

திருவாரூர் இடைத்தேர்தல், அடுத்து வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் என தமிழக அரசியல் களம் தேர்தலை நோக்கி பயணித்து வருவதால், அரசி யல் கட்சிகளின் அணி சேர் தல், அணி மாற்றம் போன்ற காட்சிகள் அரங்கேறத் தொடங்கி யுள்ளன.

திமுக கூட்டணி ஓரளவு வடிவம் பெற்று வரும் நிலையில், எந்த அணியிலும் சேராமல் உள்ள கட்சிகள் என்ன செய்யப் போகின் றன என்ற கேள்வி அரசியல் வட்டாரத்தில் ஒலிக்கத் தொடங்கி உள்ளது.

குறிப்பாக, பாமக, தேமுதிக, தமாகா போன்ற கட்சிகள் குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வரு கிறது.

மாநில உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் பாமக மக்களவை யிலும் அதிக உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உணர்ந்துதான் மக்களவைத் தேர்தலுக்கான உத்திகளை வகுத்து வருகிறது.

இதற்காக ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி வைப்போம் என பாமகவின் புத்தாண்டு சிறப்புப் பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. அதே நேரம் அதிமுக வுக்கு சாதகமாகவும், பாஜகவை சாடியும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

மேலும் கல்வி, மருத்துவம் தவிர்த்து எப்போதும் இலவசங் களை எதிர்க்கும் பாமக பொங்கல் பரிசாக குடும்ப அட்டைதாரர் களுக்கு ஆயிரம் ரூபாய் வழங் கப்படும் என்ற ஆளுநரின் அறிவிப்பை விமர்சனம் செய் யாமல் இருப்பது கூட்டணிக் கான சந்தேகத்தை ஏற்படுத்தியுள் ளது.

இதுபற்றி பாமக தலைமையில் நெருக்கமாக உள்ள நிர்வாகிகளை தொடர்பு கொண்டு கேட்ட போது, மக்களின் எண்ணங்களை அறிந்து, அதற்கேற்ப கூட்டணி அமைப்பதே பாமகவின் தாரக மந்திரம். கட்சியின் சமூக ஊடகப் பிரிவினர் களம் கண்டு கொடுத்த அறிக்கையில் ஆளும் கட்சியான அதிமுகவுக்கு எதிர்ப்பு இல்லை. திமுகவுக்கு சாதகமாகவும் சூழ்நிலை இல்லை என்று தெரிவித்துள்ளனர். பாஜக மீது மக்கள் ஜிஎஸ்டி விவகாரத் தில் கடும் கோபத்தில் உள் ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள் ளது.

### முதல்வர் வேட்பாளர் அன்புமணி

மேலும் அதிமுகவுடன் கூட்டணி அமைத்தால், அதை சட்டசபை தேர்தல் வரை கொண்டு செல்ல முடியும்.



அன்புமணியை முதல்வர் வேட்பாளராக அறிவிக்கும்படி பேரம் பேசவும் வாய்ப்பு வரலாம். திமுகவின் கூட்டணி பற்றி பேசினால் இந்த கோரிக்கை எடுபடாது.

### பாஜகவுக்கு வாக்கு வங்கி இல்லை

தேமுதிகவை கூட்டணியில் கொண்டு வரும் முயற்சியும் நடை பெற்று வருகிறது. விஜயகாந்த் உடல்நிலை சரியில்லாத காரணத் தால் பேச்சுவார்த்தை முடிவுக்கு வருவதற்கு காலதாமதமாகிறது. பாஜக கூட்டணியில் இருந்தால் சிறுபான்மை வாக்குகளை இழக்க நேரிடும், மேலும் தமிழகத்தில் பாஜகவுக்கு சொல்லிக்கொள்ளும் அளவுக்கு வாக்கு வங்கியும் இல்லை.

பாஜக அல்லாத சில தமிழக கட்சிகளுடன் இணைந்து நாடாளுமன்றத் தேர்தலையும், அடுத்து வர உள்ள சட்டமன்றத் தேர்தலையும் எதிர்கொள்வது குறித்து அதிமுகவின் மூத்த அமைச்சர்களுடன் பேசப்பட்டு வருகிறது என்று தெரிவித்தனர்.

# கௌரவர்கள் 100 பேரும் டெஸ்ட் ட்யூப் குழந்தைகள்



கௌரவர்கள் 100 பேரும் டெஸ்ட் ட்யூப் குழந்தைகள் என்று ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேசியது சர்ச்சைகளை ஏற்படுத்தி உள்ளது.

ஜலந்தரில் 106-வது இந்திய அறிவியல் மாநாடு நடைபெற்றுவருகிறது. இதில் வெள்ளிக்கிழமை அன்று கலந்துகொண்டு பேசிய ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஜி.நாகேஸ்வர் ராவ், ஸ்டெம் செல் மற்றும் டெஸ்ட் ட்யூப் தொழில்நுட்பத்தில் பிறந்தவர்கள் கௌரவர்கள். 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியா ஏவுகணை இயக்குவதில் நிபுணத்துவம் பெற்றிருந்தது.

சார்லஸ் டார்வின் நிறுவிய பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டை, மகா விஷ்ணுவின் தசாவதாரங்கள் முன்னதாகவே நிரூபித்துவிட்டன. விஷ்ணு பயன்படுத்திய சுதர்சன சக்கரம், இலக்கைத் துரத்தி அழித்துவிட்டு மீண்டும் அவரிடமே வந்து சேரும். இது நம்முடைய ஏவுகணைகள் நிலைநிறுத்தத்துக்கு முன்னோடி. இது இந்தியாவுக்கு புதிய தொழில்நுட்பம் அல்ல, 1000 ஆண்டுகளுக்கு முந்தையது.

ராவணனிடம் ஒரேயொரு புஷ்பக விமானம் மட்டும் இருக்கவில்லை. வெவ்வேறு அளவு மற்றும் திறன் கொண்ட 24 வகையான விமானங்கள் ராவணன் வசம் இருந்தன. அவற்றை இயக்குவதற்காக இலங்கையில் ஏராளமான விமான நிலையங்கள் இருந்தன.

கௌரவர்களின் தாயான காந்தாரி, எப்படி 100 குழந்தைகளைப் பெற்றிருக்க முடியும்? எல்லோரும் ஆச்சரியப்படுகிறார்கள். யாரும் நம்புவதுமில்லை. மனிதனால் இது சாத்தியமா?

இப்போது இது சாத்தியம் என்று டெஸ்ட் ட்யூப் தொழில்நுட்பம் நிரூபித்திருக்கிறது. மகாபாரதத்தில் கருவுற்ற 100 முட்டைகள், 100 மண் பாண்டங்களில் போடப்படும். அவை டெஸ்ட் ட்யூப் குழந்தைகள் அல்லாமல் வேறு என்ன?

ஸ்டெம்செல் ஆராய்ச்சி, 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்த மண்ணில் நடந்திருக்கிறது. இன்று நாம் ஸ்டெம்செல் ஆய்வு குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஸ்டெம் செல் மற்றும் டெஸ்ட் ட்யூப் தொழில்நுட்பத்தில் பிறந்தவர்கள் கௌரவர்கள். 1000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இந்தியாவில் இது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றார் நாகேஸ்வர் ராவ்.

இவரின் பேச்சு தற்போது பலத்த சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

## ஐபோனுக்கு ஆசைப்பட்டு சிறுநீரகத்தை இழந்தார்

ஐபோனுக்கு ஆசைப்பட்டு கிட்னியை விற்ற சீன இளைஞரின் இன்னொரு கிட்னியும் பாதித்ததால் 7 ஆண்டுகளாக படுத்த படுக்கையாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சுமார் 7 வருடங்களுக்கு முன்னால் சியோ வாங் என்னும் 17 வயது டீனேஜ் இளைஞர் ஐபோன் வாங்க ஆசைப்பட்டார். அப்போதுதான் ஐபோன் 4 அறிமுகமாகி இருந்தது. பள்ளியில் அனைத்து நண்பர்களும் ஐபோன் 4-ஐ வாங்கிப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர். ஐபோன் இல்லாததால் வாங், மற்றவர்களால் கேலிக்கு உள்ளாக்கப்பட்டார்.

வாங் வீட்டின் பொருளாதார சூழ்நிலை, ஐபோன் வாங்க இடம் கொடுக்கவில்லை. நண்பர்கள் சிலர் கிட்னியை விற்றுப் பணம் பெறலாம் என்று யோசனை கூறினர். சட்டவிரோதமாக உறுப்பு விற்கும் மருத்துவமனை ஒன்றில் விசாரித்தார் வாங். ஆரோக்கியமாக உயிர் வாழ ஒரு கிட்னியே போதும் என்று போலி மருத்துவர்கள் சிலர் உறுதியளித்தனர். கிட்னியைப் பெற்றுக்கொண்டு சுமார் ரூ. 2 லட்சத்து 23 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக வாக்கு கொடுத்தனர்.

அந்தப் பணம் ஐபோன் வாங்குவதற்குத் தேவைப்படும் தொகையைவிட அதிகமாகவே இருந்தது. உடனே கிட்னியை விற்க முடிவெடுத்தார் வாங். அறுவை சிகிச்சை முடிந்த ஒரு வாரத்தில் பழைய நிலைக்கு வந்துவிடலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் அறுவை சிகிச்சைக்குப் பிறகு, வாங்கின் உடல் நிலை மோசமானது. அறுவை சிகிச்சை சுகாதாரமான முறையில் செய்யப்படாததால் தொற்று ஏற்பட்டது.

இதை வாங் கவனிக்காததால், தொற்று பெரிதாகியது. இதை அவரின் பெற்றோர் அறிந்து முறையான சிகிச்சை அளிப்பதற்குள், மற்றொரு கிட்னியும் பாதிக்கப்பட்டது. இதனால் கடந்த 7 ஆண்டுகளாகப் படுத்த படுக்கையாக இருக்கிறார் வாங். அவரின் பெற்றோர் டயாலிசிஸ் மற்றும் பிற செலவுகளுக்காகத் திண்டாடி வருகின்றனர்.

# பாதிரியார்களின் பாலியல் இச்சைகளுக்கு ஆளாகும் கன்னியாஸ்திரிகள்: ஆய்வு விசாரணையில் அதிர்ச்சி உண்மைகள்

இந்தியா முழுவதும் பாதிரியார்களால் பாலியல் தொல்லைக்கு ஆளாகும் கன்னியாஸ்திரிகள் குறித்தும், அவர்களின் நேரடி அனுபவங்கள் குறித்தும் செய்தி நிறுவனமான ஏபி சார்பில் ஓர் ஆய்வு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அதில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் இதோ:

பாதிரியார்கள் அவர்களின் அந்தரங்க அறைக்குள் வலுக்கட்டாயமாக அழைத்துச் சென்றதையும் பாலியல் உறவுக்கு உட்படுமாறு வற்புறுத்தியதையும் கன்னியாஸ்திரிகள் நம்முடன் பகிர்கின்றனர்.

யேசு பிரானின் தூதர்கள் என்று நம்பிய பாதிரியார்களே தங்களின் உடலில் அத்துமீறிக் கை வைத்ததையும் இன்னும் பிறவற்றையும் பல்வேறு தேவாலயங்களில் பணிபுரியும் கன்னியாஸ்திரிகள் தயங்கித் தயங்கி நம்முடன் பேச ஆரம்பிக்கின்றனர்.

தனது கதையை ஆரம்பிக்கும் கன்னியாஸ்திரி ஒருவர்,'அவர் குடித்திருந்தார்'என்று தொடங்குகிறார். 'எப்படி முடியாது என்று சொல்வது எனத் தெரியவில்லை' என்கிறார் மற்றொருவர். சில நிமிடங்களிலேயே தயக்கம் விடுபட்டு தொடர்ச்சியாக நடந்த பாலியல் பலாத்காரங்கள் குறித்து கன்னியாஸ்திரிகள் பேசினர்.

கத்தோலிக்க தலைமை, தங்களைக் காப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை என்று வேதனை தெரிவிக்கின்றனர்.

ஆசியா, ஐரோப்பா, தென் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட பகுதிகளில் கன்னியாஸ்திரிகளை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கிய பாதிரியார்கள் மற்றும் பேராயர்கள் குறித்து வாடிகன் நிர்வாகத்துக்குத் தெரியும் என்றும் அதை நிறுத்த குறைந்த அளவிலான முயற்சிகளையே வாட்டிகன் எடுத்தது எனவும் கடந்த ஆண்டின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ஏபி மேற்கொண்ட விசாரணையில், சில கன்னியாஸ்திரிகள், 'பாலியல் துஷ்பிரயோகம் எல்லா இடத்திலும் வழக்கமான ஒன்றுதான்' என்று நினைக்கின்றனர். சிலர், 'அரிதான ஒன்று' என்கின்றனர். யாரும் இதுகுறித்து வெளிப்படையாகப் பேசத் தயாராக இருப்பதில்லை. பெரும்பாலானோர் தங்களின் அடையாளம் மறைக்கப்பட வேண்டும் என்ற விதியின் பேரில் பேச ஆரம்பிக்கின்றனர்.

போராட்டமும் அதன் விளைவுகளும்

கடந்த ஆண்டில், கேரள மாநிலத்தில் கன்னியாஸ்திரியை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டில் பேராயர் பிராங்கோ மூலக்கல் போலீஸாரால் கைது செய்யப்பட்டார். ஆனால் அதற்கு முன்பாக அந்தக் கன்னியாஸ்திரி எதிர்கொண்ட பிரச்சினைகள் ஏராளம்.

கடந்த 2014 முதல் 2016 வரை கோட்டயம் அருகே குருவிளங்காடு பகுதியில் உள்ள தேவாலயத்தில் பணியாற்றியவர் பாதிரியார் பிராங்கோ மூலக்கல். இவர், தான் பணியாற்றிய காலத்தில் கன்னியாஸ்திரி ஒருவரை மிரட்டி 13 முறை பலாத்காரம் செய்ததாகக் கூறப்படுகிறது. இது தொடர்பாக பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி அப்போது தேவாலய நிர்வாகிகளிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து பாதிக்கப்பட்ட கன்னியாஸ்திரி குருவிளங்காடு போலீஸில் புகார் செய்தார்.

குற்றச்சாட்டுக்கு ஆளான பாதிரியார் பிராங்கோ மூலக்கல், பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் பேராயராக இருந்து வருகிறார். ஆனால், கன்னியாஸ்திரி கூறும் குற்றச்சாட்டு ஆதாரமற்றது, பொய்யானது என்று பிராங்கோ மறுத்து வந்தார்.

புகார் அளித்து 70 நாட்கள் ஆகியும் பேராயர் கைது செய்யப்படவில்லை என்று குற்றம் சாட்டிய கன்னியாஸ்திரிகள் 5 பேர் 14 நாட்கள் போராட்டம் நடத்தினர். உலகின் கவனத்துக்கு இந்நிகழ்வு வந்ததும் பாதிரியார் கைதானார்.

இதுகுறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டவரான சிஸ்டர் ஜோசபின் வில்லோனிக்கல் கூறும்போது, 'எங்களில் சிலரே நாங்கள் சர்ச்சுக்கு எதிராகப் பணிபுரிகிறோம் என்றனர். இன்னும் சிலர் நாங்கள் சாத்தானை வழிபடுவதாகக் கூறினர்' என்றார்.

### நீங்கள் நிதானத்தில் இல்லை

டெல்லியின் வறுமையான பகுதிகளில் பணியாற்றி வரும் கன்னியாஸ்திரி ஒருவரிடம் பேசியபோது, 15 ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு தேவாலயத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அந்தப் பாதிரியாருக்கு என் மேல் ஈர்ப்பு இருந்தது போல உணர்ந்தேன்.

ஒரு நாள் பார்ட்டிக்குச் சென்ற பாதிரியார் இரவு தாமதமாக வந்தார். 9.30 மணிக்கு மேல் இருக்கும். என்னுடைய அறையைத் தட்டினார். 'உன்னைப் பார்க்க வேண்டும். உன்னுடைய ஆன்மிக வாழ்க்கை குறித்துப் பேச வேண்டும்'என்றார். நான் கதவைத் திறக்கவில்லை. வலுக்கட்டாயமாகத் தள்ளிக் கதவைத் திறந்தார். என்னால் ஆல்கஹால் வாசனையை உணர முடிந்தது.

'நீங்கள் நிதானத்தில் இல்லை. உங்களுடன் பேசத் தயாராக இல்லை' என்றேன். முத்தம் கொடுக்க முயன்றார். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தொட்டார். அவரை வேகமாகத் தள்ளிவிட்டுவிட்டு கதவைப் பூட்டினேன்.

அது பாலியல் பலாத்காரம் இல்லை என்றாலும் அது ஓர் அச்சுறுத்தும் நிகழ்வாக இருந்தது. இதுகுறித்து என்னுடைய மூத்த கன்னியாஸ்திரியிடம் சொன்னேன். அவர், பாதிரியாருடன் மீண்டும் சந்திப்புகள் நிகழாத வண்ணம் பார்த்துக்கொண்டார். நடந்தவை குறித்து, சர்ச் அதிகாரிகளுக்கு அநாமதேயக் கடிதம் எழுதினேன். ஆனால் எதுவும் நடக்கவில்லை' என்றார்.

### புனிதத்துக்கும் வேட்டையாடலுக்கும் இடையில்...

கத்தோலிக்க வரலாறு முழுவதும் பெண்கள் தங்களுடைய புனிதத் தன்மையைக் காத்துக் கொள்வதற்காக, தியாகிகளாக மாறி உயிர் துறந்த சம்பவங்களால் நிரம்பியிருக்கிறது.

புனிதர் அகதா, திருமணம் செய்துகொள்ள மறுத்ததால், மார்பகங்களைக் கிழித்துக் கொல்லப்பட்டார். தனது புனிதத்தன்மையைக் காத்ததற்காக புனிதர் லூசி, உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டார். பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற ஒருவரால் புனிதர் மரியா கொரேட்டி, 11 வயதில் கொல்லப்பட்டார்.



'இது புனிதத்துக்கும் வேட்டையாடலுக்கும் இடையிலான போராட்டம்' என்கிறார் டெல்லியைச் சேர்ந்த தத்துவவியல் அறிஞர் ஷாலினி மூலக்கல்.

### ஏன் கன்னியாஸ்திரிகள் புகார் அளிப்பதில்லை?

பாதிரியாருக்கு எதிராகப் புகார் கொடுப்பது என்றால் தேவாலய நிர்வாகத்தில் நமக்கு மேலாக இருப்பவர் மீது குற்றம் சமத்துவது. இது ஏராளமான வதந்திகளுக்கும் தேவாலய அரசியலுக்கும் வழிவகுக்கும். இது உங்களின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கலாம்.

அதுமட்டுமல்லாமல் மத ரீதியான அரசியல், பெண்கள் என்றாலே குறைச்சலாக மதிப்பிடும் நம்பிக்கை உள்ளிட்டவை கன்னியாஸ்திரிகளின் அமைதிக்கு ஊக்கம் அளித்துவிடுகின்றன. இன்னும் சில கன்னியாஸ்திரிகளோ, தங்களது புகார், தாங்கள் சார்ந்துள்ள தேவாலயத்தின் பெயரைக் குலைக்கும் என்றும் இந்துத்துவ அமைப்புகளின் விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டும் எனவும் அஞ்சுகின்றனர்.

குடிபோதையில் இருந்த பாதிரியாரை எதிர்கொண்ட கன்னியாஸ்திரி, ''நான் உண்மையைச் சொன்னால், தனிமைப்படுத்தப் படுவேனோ என்ற பயம்தான் வெளியே சொல்லாததற்கு முக்கியக் காரணம். பாதிரியார்களுக்கு எதிராகப் புகார் அளிக்கும்போது, தங்களின் சொந்த மதத்தினரையே, தங்களின் மத உயரதிகாரிகளையே எதிர்க்க வேண்டி வருகிறது' என்கிறார்.

கன்னியாஸ்திரி ஷாலினி மூலக்கல் மேலும் கூறும்போது,'நாங்கள் கன்னியாஸ்திரிகளாகவே இருந்தாலும் கூட, அமைதியாக இருக்கவே முயற்சிக்கிறோம். பாலியல் அனுபவங்களை எதிர்கொள்ளும் பெண், அதை மறைத்து எல்லாம் சரியாக இருக்கிறது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தவே முயல்கிறாள்' என்றார்.

இவ்வாறு ஏபி மேற்கொண்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எங்களுக்கு பாடம் எடுக்காதீர்கள்: அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை

ஏவுகணை சோதனைகள் மற்றும் உற்பத்தி தொடர்பாக அமெரிக்கா எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமத் ஜாவத் சாரிப் கூறும்போது, அமெரிக்கா கூறுவது போல் ஈரானின் ஏவுகணை சோதனைகள் மற்றும் விண்வெளி தொடரான சோதனைகள் ஆபத்தானவை அல்ல. அமெரிக்கா விதிமீறல் நடவடிக்கையை மீறும் இடத்தில் இருந்து கொண்டு, எந்த ஒரு நாட்டுக்கும் பாடம் எடுக்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

முன்னதாக அமெரிக்கா வெளியுறவுத் துறை அமைச்சர் மை பாம்பியோ வியாழக்கிழமை ஈரானின் ஏவுகணை சோதனைகள் குறித்து கூறும்போது, ''ஈரான் ஏவுகணை உற்பத்தியை நிறுத்த வேண்டும். பொருளாதாரம் மற்றும் அரசியல் ரிதீயான தனிமைப்படுத்துதலை தவிர்கக ஈரான் ஏவுகணை உற்பத்து மற்றும் சோதனைகளை நிறுத்த வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் இதற்கு தற்போது ஈரான் வெளியுறவு அமைச்சர் முகமத் ஜாவத் பதில் அளித்திருக்கிறார்.

ஈரானுடன் அமெரிக்கா செய்து கொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கடந்த வருடம் தெரிவித்தார்.

ஆனால், ட்ரம்ப்பின் மிரட்டலைச் சிறிதும் பொருட்படுத்தாத அந்நாட்டு அதிபர் ஹசன் ரவுஹானி ஈரான் ஆக்கப்பூர்வமான செயல்களுக்கு அணு ஆயுத சோதனையைப் பயன்படுத்தும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஈரான் மீது அமெரிக்கா தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை விதித்ததுடன் அந்நாட்டுடன் எந்த நாடும் கச்சா என்ணெய் ஏற்றுமதி செய்யக்கூடாது என்றும் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.



ஞாயிற்றுக்கிழமை 06.01.2019
இல. 146,டோசன் வீதி, கொழும்பு2
தொலைபேசி: 0114369412 பக்ஸ்: 0114641294
மின்னஞ்சல்: thamilthanthi@gmail.com

## நாடு பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்

இலங்கையில் சுமார் இரண்டு மாதங்கள் நீடித்த அரசியல் குழப்ப நிலை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தைக் கலைத்தது அரசியல் அமைப்புக்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புடன் முடிவுக்கு வந்துவிட்டது என்றதொரு தோற்றப்பாட்டை சில அரசியல் கட்சிகளும் பெரும்பாலான ஊடகங்களும் உருவாக்கி வருகின்றன.ஆனால் உண்மை அதுவல்ல. ஒரு பெரும் யுத்தத்தில் ஒரு கள நடவடிக்கைதான் (One Field Operation) முடிந்துள்ளது என்பதுதான் கள நிலவரம். ஏனெனில், இந்த விடயம் ஜனாதிபதி மைத்திரி நாடாளுமன்றத்தைக் கலைத்ததுடன் சம்பந்தப்பட்டது மட்டுமானது அல்ல. அதனால் அது 225 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றத்தில் பல கோடி ரூபா பெறுமதியில் ஆட்களை விலைக்கு வாங்கி பெரும்பான்மையை நிரூபிப்பதாலோ அல்லது 2 கோடி சனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் ஏழு நீதிகள் வழங்குகின்ற ஒரு தீர்ப்பினாலோ முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை என்பதே உண்மை.

அதற்குக் காரணம், நாட்டின் உண்மையான எஜமானர்களாகவும், ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகவும், தமது உடன் பிறப்பான இறையாண்மையைப் பிரயோகிப்பவர்களாகவும் திகழ்கின்ற இலட்சோப இலட்சம் மக்களின் கருத்துக்களை கணக்கில் எடுக்காமல், விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் நாடாளுமன்றத்தினதும், சட்டப் புக்ககங்களினதும் தயவில் தங்கி நின்று எடுக்கும் முடிவுகளையே அதிகார வர்க்கம் முதலும் முடிவுமாகக் கொள்ளும் ஒரு போக்கு முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தில் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. முதலில் இந்த அரசியல் நெருக்கடி எதனால் ஏற்பட்டது என்பதை ஆராய்ந்து பார்த்தால்தான் நோய்க்கான வைத்தியத்தைச் செய்ய முடியும். அப்படிப் பார்த்தால் 2015 ஜனவரி 8இல் உள்நாட்டு - வெளிநாட்டு பிற்போக்கு சக்திகளின் பின்னணியுடன் எதிரெதிரான கொள்கைகளைக் கொண்ட இரண்டு அணிகள் இணைந்து ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ததில்தான் இந்தக் குழப்பம் ஆரம்பமாகிறது. நாட்டு நலன் கருதி இவ்வாறான ஒரு ஏற்பாட்டைச் செய்திருந்தால் அதை ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அப்படியில்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தமது வல்லாதிக்க நோக்கங்களை ஈடேற்றுவதற்காகவே சர்வதேச - பிராந்திய வல்லாதிக்க சக்திகள் அந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டன. அடுத்ததாக, அதே வருடம் ஓகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலைத் தொடர்ந்து அதே எதிரும் புதிருமான இரண்டு கட்சிகளும் சேர்ந்து அமைத்த 'நல்லாட்சி' அல்லது 'தேசிய அரசாங்கம்' என்பது இன்னொரு பொருந்தாக் கலியாணமாகும். ஜனாதிபதித் தேர்தலின் தொடர்ச்சியாகவே இது மேற்கொள்ளப்பட்டது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் இலங்கை மக்களின் உண்மையான நலன்களைப் புறந்தள்ளி மேற்கொள்ளப்பட்ட அரசியல் சதி சூழ்ச்சி நடவடிக்கைகளாகும். இந்த சூழ்ச்சியில் பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டது சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், அதன் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேனவுமாகும். அது எப்படி நடந்தது?

பிரதமர் ரணில் தனது அதிகார வரம்புக்கு அப்பால் சென்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைத் தனது கையில் எடுத்து தன்னிச்சையாக பிரயோகிக்கத் தொடங்கினார். அதே நேரத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கும் வகையிலும், எதிர்காலத்தில் இலங்கையில் ஐ.தே.க. எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசாங்கம் ஒன்று பதவிக்கு வர முடியாத வகையிலும் அரசியல் அமைப்பில் 19ஆவது திருத்தச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தனர். இந்த நடவடிக்கைகள் எல்லாம் அரசாங்கத்தில் அங்கம் வகித்த இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையிலும் நாளுக்குநாள் மோதல் போக்கை வளர்த்துச் சென்றது. மறுபக்கத்தில் ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் இத்தகைய மக்கள் விரோத - தேச விரோத செயற்பாடுகள் நாட்டு மக்கள் மத்தியில் பெரும் கோபாவேசத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்தது. மக்கள் தமது வெறுப்பை அரசாங்கத்தால் இழுத்தடிப்புச் செய்யப்பட்டு பின்னர் 2018 பெப்ருவரி 10இல் நடத்திய உள்ளூராட்சி தேர்தலில் வெளிப்படுத்தினர். இந்தத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்தின் இரண்டு பங்காளிக் கட்சிகளான ஐ.தே.கவையும், சுதந்திரக் கட்சியையும் தோற்கடித்து, புதிதாக உருவான சிறீலங்கா பொதுஜன பெரமுனவை அமோகமாக வெற்றிபெற வைத்தனர். பொதுஜன பெரமுனவின் இந்த அமோக வெற்றி, ஐ.தே.கவும் அதனது சர்வதேச எசமானர்களும் எதிர்பார்க்காத ஒன்று. எதிர்காலத்தில் எந்தத் தேர்தல் நடந்தாலும் அரசின் பங்காளிக் கட்சிகள் இரண்டையும் தோற்கடித்து பொதுஜன பெமுரனதான் வெற்றிவாகை சூடும் என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. அதே நேரத்தில் இந்த வளர்ச்சிப் போக்குத்தான் ஜனாதிபதியினதும் அரசுடன் இணைந்திருந்த ஒருபகுதி சுதந்திரக் கட்சியினரதும் கண்களையும் திறக்க உதவியது. அதாவது அரசியல்வாதிகள் செய்ய முடியாத மாற்றத்தை மக்கள் சக்தியே உருவாக்கியது.

ஒரு தனி மனிதனின் கையில் இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தை விட, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருக்கும் சட்டவாக்க அதிகாரத்தை விட, விரல் விட்டெண்ணக்கூடிய நீதிபதிகளின் சட்ட வியாக்கியான அடிப்படையிலான தீர்ப்புகளை விட, இலங்கையின் இரண்டு கோடி மக்களினால் ஜனநாயக முறைப்படி நடத்தப்படும் தேர்தல் ஒன்றில் வழங்கப்படும் தீர்ப்புதான், ஜனநாயக ரீதியானதும், இறையாண்மை மிக்கதும், தேசப்பற்று மிக்கதுமாகும். எனவே, 'நாடு பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும்' என அனைத்து மக்களும் ஏகோபித்து குரல் எழுப்ப வேண்டும்.

# மலர்ந்துள்ள புத்தாண்டில் சபதங்களை முன்னெடுத்து

## சவால்களை வென்றெடுப்போம்

புத்தாண்டை வரவேற்கும் முகமாக புதிய நாட்காட்டிகள் வீடுகளில் மாற்றப்பட்டுவிட்டன. கடந்தவற்றை நினைவில் கொள்ளவும் எதிர்கொள்ள வேண்டியதை திட்டமிடவும் மலர்ந்துள்ள புத்தாண்டு நமக்கு புதிய செய்திகளை கற்றுத்தருகின்றது. இலங்கைத் தமிழ் மக்களுக்கு கடந்த நல்லாட்சி ஏற்பட்டும் மூன்றரை வருடங்களுள் இடம்பெற்ற பிரச்சினைகள் ஏராளமாகும். தமிழரின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட தமிழ்தேசிய கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் போட்டிகள் சச்சரவுகள் அதிகாரப்போட்டிகள் என்பன இன்றுவரை முடிந்தபாடில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பினர் இன்றுவரையும் இலங்கையின் எதிர்கட்சி தலைவர் பதவி நாட்காலியை தக்க வைக்க நடாத்தும் கூட்டாட்டத்தை முழு உலகமும் வேடிக்கை பார்க்கின்றது. இது ஒருபுறமிருக்க இடைக்கால அரசியல் வரைவில் வட கிழக்கு இணைவு உள்ளிட்ட தமிழ் மக்களின் காத்திரமான அரசியல் பிரச்சினைகளும் பிரதான இடம் கொடுக்காத அரசியல் நகர்வுகளால் தமிழ்




மக்களே மேலும் மேலும் வெறுப்படைந்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அரசியல் கைதிகளின் விடுதலை, காணிப்பிரச்சினை மீள்குடியேற்றப்படாத மக்கள தொடர்பான அகிம்சை வழிப்போராட்டங்கள் என மக்களின் பிரச்சினைகள் தீர்வில்லாமல் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றன. இதனை கருத்தில்கொண்டு ஆட்சியாளர்கள் உட்பட தமிழ்தேசிய கூட்டமைப்பினரும் விரைந்து செயற்படுமாறு காட்சிகளும் தென்படவில்லை. இதனை தடுக்க

**காலம் காலமாக தமிழ் மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை ஏமாற்றப்பட்டே வருகின்றனர். இவர்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்டு வருவதற்குப் பிரதான காரணம் மிகச்சரியாக மக்களுக்குச் சேவை செய்யக்கூடிய நேர்மையான அரசியல் தலைமைகளை மக்கள் தேர்ந்தெடுக்கத் தவறியமையேயாகும்**

வேண்டுமென பேரினவாத அரசாங்கம் தமிழ்தேசிய கூட்டமைப்பை பயன்படுத்தும் விதமும் தமிழரின் எதிர்கால அரசியலை இன்றும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இலங்கையில் தற்போதுள்ள பயங்கரவாத தடைச்சட்டமானது மனித உரிமை மீறலுக்கான சூழ்நிலையை ஏற்படுத்தி வருவதாகவும் அரசியல் விமர்சகர்கள் வலியுறுத்தி வருகின்றனர் அதனை மாற்றியமைப்பது தொடர்பில் எவ்விதசட்ட முன்நகர்த்தல்களும் இடம்பெறவில்லை. மனித உரிமைச்சட்டங்களை நாட்டில் வலுப்படுத்துவது அவசியமாகும்.

வடகிழக்கில் காணாமல்போன உறவுகளை தொடர்ந்து ஏமாற்றுவது உட்பட மனித உரிமை மீறல்கள் கடந்த காலங்களைப்போலவே இன்றுவரையும் தொடர்கின்றன. இலங்கையில் பிறந்தவர்கள் என்ற ரீதியில் தமது உரிமைகளுக்காகவும் வேதன உயர்வைக்கோரியும் ஆண்டு முழுவதும் தொழிற்சங்கப்போராட்டங்கள் சிறுபான்மையினரால் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்றே வருகின்றன. ஆனால் தொழிலாழிகளுக்கு வாக்குறுதிகள் மட்டும் வழங்கப்பட்டதே தவிர எவ்வித பயனுள்ள முன்னேற்றங்களும் ஏற்படவில்லை. அத்துடன் வடக்கு கிழக்கில் உள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான தொழில் நியமனங்களும் உரிய முறையில் இடம்பெறாது பாராபட்சத்துடனேயே வழங்கப்பட்டுள்ளன. தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்திலேயே ஜனநாயக போராட்டங்களை தமிழ்மக்கள் பலத்துடன் முன்னெடுத்தனர் என அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டு வருகின்றனர். இதனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு பலமான கட்சியாகவும் அக்காலத்தில் விளங்கியது. இன்று தமிழ்தேசிய கூட்டமைப்பு பிரிந்து பிளவுபட்டுள்ளது. இதனால் எதிர்வரும் தேர்தல் காலங்களில் தமிழ்தேசிய கூட்டமைப்பு தனது சுயத்தையே இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் வடக்கு கிழக்கு பகுதிகளில் பல கொலை, கொள்ளை சம்பவங்கள் ஆலய உடைப்புக்கள் துப்பாக்கிசூடுகள், வாள்வெட்டுக்கள் போன்ற நாசகார செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை பொலிஸாரால் கட்டுப்படுத்துவதும் பகிரபிரயத்தனமாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக எதிர்வரும் காலங்களிலாவது மேற்கூறப்பட்ட நாசகார செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் வடக்கு கிழக்கு பகுதியில் வன்முறையற்ற சூழலை பிறந்துள்ள புத்தாண்டில் உருவாக்க வேண்டிய தேவைப்பாடுகள் அரசியல் அதிகாரிகளிடம் அதிகமாகவே உள்ளன. அதேபோன்று கடந்த ஆண்டில் பல அத்தியவாசியமான பொருட்க



ளின் விலைகள் உயர்ந்துள்ளன. ஆனால் மதுபான வரிமட்டும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் யுத்தத்திற்கு பின்னரான சூழலில் இன்றுவரையும் பொருளாதார நெருக்கடியே நிலவுகின்றது. தனிநபர் வருமானம் குறைவாகவே உள்ளது. யுத்ததினால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரணங்கள் அபிவிருத்திகள் கூட சரியாக கவனிக்கப்படவில்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும் முன்னாள போராளிகளும் பலதரப்பட்ட வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதோடு விரக்தி நிலையையும் அடைந்துள்ளன. கடந்த 2017ம் ஆண்டில் சூடுபிடித்திருந்த மத்திய வங்கி பிணை முறி விவகாரத்துக்கூட இதுவரையும் சரியான தீர்வு கிடைக்கவில்லை. இந்நிலையில் பலதரப்பட்ட அரசியல் சமுக,சமய பொருளாதார சவால்களுடனே 2019ம் ஆண்டும் மலர்ந்துள்ளது. புத்தாண்டில் தமிழர்களின் அபிலாசைகளை வென்றெடுக்க தமிழ்தேசிய கூட்டமைப்பினர் சபதங்களை எடுத்து சவால்களை வென்று புதுமை நிலை படைக்க வேண்டும். இல்லாவிடின் கூட்டமைப்பின் மீது மக்கள் கொண்டுள்ள எச்சசொச்ச நம்பிக்கையையும் கூட்டமைப்பினர் இழந்து விடுவார்கள் என்பது திண்ணம் சர்வதேச அழுத்தங்களோடு தமிழர் இன விவகாரத்துக்கு சரியான தீர்வை முன்வைக்க வேண்டிய காலகட்டமும் இதுவாகும். புதிய ஆண்டு இலங்கை தமிழ் மக்களின் மேற்கூறிய சவால்களுக்கு தீர்வை பெற்றுத்தரவேண்டியது தமிழ் அரசியல் தலைமைகளினதும் அரசியல்வாதிகளினதும் தலையாய கடமையாகும். அறிவியல், புதுமைகள் நிறைந்த 21ம் நூற்றாண்டில் சவால்களை வென்று புதிய சுபீட்சமான சிறுபர்மை சமுகத்தினரின் அபிலாசைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணத்தில் சிறுபான்மை அரசியல் தலைமைகள் காணப்படுகின்றனர்.

கடந்த காலங்களில் தமிழர் பிரதேசங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்த போரின் கொடுரத்தினையும், காத்திருக்கும் பேராபத்தினையும் ஓடப்போகும் இரத்த ஆறையும் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுமாறு தமிழ் மனித உரிமை செயற்பாட்டாளர்களும், மனிதநேய பணியாளர்களும் தாயகத்தில் இருந்தும் புலம்பெயர்தேசங்களில் இருந்தும் தொடர்ச்சியாக வேண்டுகோளும் விடுத்திருந்தனர். எனினும் அவர்

சரணியா சுப்ரமணியம்
B.A (Hons)
பேராதனை பல்கலைக்கழகம்

களின் எச்சரிக்கைகளுக்கு பதில் கிடைக்கவில்லை. ஆயினும் கடந்த 2009ம் ஆண்டு இறுதி யுத்தம் மௌனிக்க செய்யப்பட்டதாக அரசு அறிவத்ததது. அதனைத்தொடர்ந்து இப்பிரதேசங்களில் மாற்றங்களை காணலாம் என விளையும் போது அவற்றிற்கான வாய்ப்புக்கள் அக்கால கட்டத்தில் மிகக்குறைந்தளவாகவே காணப்பட்டன. எனினும் மாற்றத்திற்கான பயணத்தில் தமிழ்பேசும் மக்களின் வாக்குபலத்தினால் வெற்றிகண்ட ரணில் - மைத்திரி கூட்டாட்சி ஆட்சிபீடம் ஏறி மூன்றரை வருடங்களை கண்டுள்ளது. எனினும் ஆட்சிமாறி தலைமைகள் மாறி தங்களின் அடிப்படைத் தேவைகள் பூரணப்படுத்தப்படும் என எதிர்பார்த்திருந்த மாற்றத்திற்குப்பதிலாக தமிழ்பேசும் மக்களுக்கு ஏமாற்றம் என்பதே விதியாகிப்போயியுள்ளது.

கடந்த காலங்களில் இன அழிப்பு போரில் கொடுரத்தினை அனுபவித்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள் சர்வதேச சமுகம் தன்னை காப்பாற்றும் என்ற நம்பிக்கையில் இருந்தனர். தாயகத்தில் வாழும் தமிழ் மக்கள் உட்பட குரலற்ற மக்களின் குரலாக உலகின் பல்வேறு நாடுகளிலும் தொடர்ச்சியான போராட்டங்களில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களும் ஈடுபட்டனர். தமிழர்களின் அவலக்குரல் கணிசமான அளவு சர்வதேச மயப்படுத்தப்பட்டாலும் கூட இன்றளவும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு முற்றுமுழுதான தீர்வை சர்வதேசம் வழங்கவில்லை என்பதே நிதர்சனம். அத்துடன் யுத்தம் நிறைவுக்கு வந்தும்கூட சொந்த நாட்டிலேயே அடிப்படை தேவைகள் பூரணப்படுத்தப்படாத அரசியல் பிரச்சினைக்கான தீர்வுகள் இன்றிய தமது எவ்வித பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் உட்பட தமிழ் அரசியல் தலைமைகளால் கூட முழுமையான தீர்வை பெறமுடியாத சமுகமாகவே தமிழ்சமுகம் வாழ்ந்து

II ஆம் பக்கம் பார்க்க....

# தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கையை நியாயப்படுத்திய ஆளுநர் நியமனம்

தற்போது இலங்கை யில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப காரணமாக பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே உள்ளது.

உரிமைகளைப் பெறுவதை விட தாம் தற்போது அனுபவிக்கின்ற சலுகைகளைப் பெறுவதில் தீவிர அக்கறையுள்ள ஒரு வர்க்கத்தின் கையில் தமிழ் தேசியக் கருத்தியல் இன்று சிக்கிக் கொண்டிருக்கிறது. இதன் ஒரு வெளிப்பாடுதான் கருணா என்ற மனிதன். சிங்கள மேலாண்மை மற்றும் மேலைத் தேய ஏகாதிபத்தியச் சுரண்டல் என்பவற்றுக்கெதிராக தனது அடையாளத்தையும், தனது மொழி, கலாசார சுயமரியாதையையும் பேணுவதில் எந்த அக்கறையுமின்றிக் கிடக்கும் ஒரு படித்த நகர்ப்புற நடுத்தரவர்க்கத்தின் தயவில் தமிழ் தேசியக் கருத்தியல் தங்கியிருக்க நேரிடுமாயின் நமது கதி அதோகதியாகும். எதிர்காலத்தில் சிங்கள பௌத்த மேலாண்மையின் ஒடுக்கு முறையை சந்திக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும்போது எமது மக்களை அணி திரட்டக் கூடிய வலுவை இன்று தமிழ்த் தேசியம் இழந்து வருகிறது.

மேல் நிலையாக்கமடைந்து வரும் நமது நடுத்தர வர்க்கங்கள் தமது குழந்தைகளுக்கு வைக்கும் கோமாளித்தனமான அர்த்தமற்ற பெயர்களும், சன் டி.வி. கலாசாரமும் தமிழ்த் தேசியத்தின் எதிர்கால நெருக்கடியை எதிர்வு கூறி நிற்கின்றன. இப்படியாக தமிழ்த் தேசியக் கருத்தியல் வலுவிழந்து வரும் சூழலில் சாதி, மதம், பிராந்தியம் போன்ற பிரிவுகள் தலைதுக்குகின்றன. (அண்மையில் புலிகளைச் சார்ந்த ஒருவர் வெளியிட்டதுலொன்றில் அவருடைய சாதி பேசப்படுமளவிற்கு நிலைமை போயுள்ளது).

தமிழ்த் தேசியத்தை கடுமையான மறுபரிசீலனைக்குட்படுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அதை நாம் செய்யாவிடின் வரலாறு எம்மைக் கவிழ்த்து விடும்.

அந்த வகையில் தமிழர்களை பிரதிநிதித்துவ படுத்தும் கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பு பல சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களுக்கு ஒரு முகத்தையும் அரசியல் தலைமைகளுக்கு இன்னும் ஒரு முகத்தையும் காட்டி கொண்டிருப்பதை சிறு பிள்ளை முதல் பெரியோர் வரைக்கும் இன்று அறிந்துள்ளனர்.



ஆயுத போராட்டம் முதல் அரசியல் வரைக்கும் தமிழர்களிடையே காட்டி கொடுப்பும் சகோதர படுகொலையும் இருந்த வண்ணமே உள்ளது இதன் பிரதிபலனாக உரிமை சார்ந்த விடயங்களில் சிங்கள பேரினவாதம் பல தடவை பணம் கொடுத்து முடக்கியமை வரலாற்று சான்றுகளாக இருந்து கொண்டே இருக்கின்றது .

அரசியல் யாப்பு புதிய கருமம் அரசியல் தீர்வு என்று இன்று அல்ல கடந்த 70 வருடங்களுக்கு மேலாக ஏமாற்றும் சமூகமாக சிங்கள பெரும்பாண்மை சமூகமும் ஏமாறிக் கொண்டிருக்க தமிழ் சிறு பான்மை சமூகமும் ஏப்பம் விடும் தமிழ் அரசியல் தலைமையாகவுமே இருந்து கொண்டிருப்பது தமிழர்களின் தலை விதி என்றுதான் கூறவேண்டியுள்ளது.

ஆசியாவில் பிரித்தானியாவின் கடல் மேலாதிக்கத்திற்கு அன்று இலங்கை அடித்தளமாக இருந்தது. இரண்டாம் உலகப் போரின்போது தென்கிழக்காசியாவினூடாக ஜப்பான் தென்னாசியாவை நோக்கி மேற்கொண்ட பெரும் படையெடுப்பை எதிர்கொள்ளவென நிறுவப்பட்ட பிரித்தானிய அமெரிக்க கூட்டுக் கடற்படைத் தலைமையகம் திருமலையிலேயே அமைந்திருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். தென்கிழக்காசியாவின் வளங்கள், கடற்பிராந்தியங்கள் பாதைகள் என்பவற்றின் மீதும் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவற்றின் மீதும் தனது பிடியை வைத்திருப்பதற்கு இலங்கையில் தனது படைத்தளங்களும் பெரும் எரிபொருட்களஞ்சியங்களும் தொடர்ந்து பேணப்படவேண்டும் என்பதில் பிரித்தானியா கவனமாக இருந்தது. இதன் காரணமாக இலங்கையைத் தனது காலனியாதிக்கத் தலையினின்றும் விடுவிப்பதாயின் அதற்கு முழு இறைமையைக் கொடுப்பதில்லை என்பதிலும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் உறுதியாயிருந்தது.

இதன் காரணமாக இலங்கைக்கு பகுதித் தன்னாட்சி வழங்கும் வகையில் செய்யப்படவிருந்த அரசியல் யாப்பு வரைபு முயற்சிகளுக்கு இன்றியமையாத அடித்தள நிபந்தனைகளாக பாதுகாப்பு வெளி அலுவல்கள் என்பவற்றை வரையறுத்து 1943ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் நாள் பிரித்தானியாவின் இராஜாங்க அமைச்சர் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார். 1943இரண்டாம் உலகப் போர் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். பிரித்தானிய அமெரிக்க ஆதிக்கத்தை முறியடித்து கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஜப்பானிய படைகள் தென்னாசியாவை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருந்தன. எனவே இலங்கையில் தனது

**பு.சசிகரன்**

ஆதிக்கத்திற்குச் சவாலாக அமைந்திடக்கூடிய எவருடைய கையிலும் அரசியல் அதிகாரம் குறுங்காலத்திலோ நீண்டகாலத்திலோ போய்விடக் கூடாது என்பதில் பிரித்தானிய ஏகாதிபத்தியம் அப்போது கவனமாக இருந்ததில் வியப்பில்லை.

இலங்கையில் பிரித்தானிய காலனியாதிக்கத்தை முற்றாக ஒழித்திட வேண்டும் என அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாத்திரமே குரலெழுப்பப்பட்டது. தென்னிலங்கையில் தீவிர இடதுசாரிகள் மாத்திரமே இக்கருத்தைக் கொண்டிருந்தனர். 1927 இலிருந்து குடாநாடெங்கும் கிளைவிட்டுப் பரவிய யாழப்பாண இளைஞர் காங்கிரஸ் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை இலங்கையிலிருந்து முற்றாக விரட்டியடித்து இலங்கையில் முழு இறைமையுள்ள தன்னாட்சி நிறுவப்பட வேண்டுமென தீவிரமாகச் செயலில் இறங்கிற்று. 1930 ஆம் ஆண்டு இலங்கையில் அன்று எவரும் செய்யப் பயந்து நடுங்கிய ஒரு செயலை அது செய்தது. அவ்வாண்டு ஜூன் மாதம் பிரித்தானிய மன்னரின் பிறந்த நாள். இலங்கையிலுள்ள குடிமக்கள் அனைவரும் அதைக் கொண்டாடி தமது அரச விசுவாசத்தை வெளிப்படுத்திடும் நாளாகும்.

தற்போது தமிழ் பேசும் மக்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள விகிதாசார அடிப்படையில் வைத்து பார்க்கின்ற போது தமிழ் பேசும் முஸ்லீம் சமூகத்தின் வளர்சசி இன்று தமிழ் மக்களுக்கு ஒரு சவால் என்று கூட சொல்ல முடியும் .

கடந்த 30 வ்ருடங்களில் ஆயுத போராட்டம் என்ற தமிழர்களின் உரிமை போராட்டம் மூலம் பல உயிர் இழப்புகளையும் உடமைகளையும் இழந்த ஒரு சமூகமாகவும் மாறாக அரசியல் தமிழ் தலைமைகளால் ஏமாற்ற பட்டுமே இருந்து கொண்டு இருக்கின்றனர்.

ஆனால் அதற்க்கு எதிர் மாறாக முஸ்லீம் சமூகம் அரசியல் சலுகைகளை பெற்று கொண்டு தமிழர்களின் பூர்விக இடங்களை அபகரித்த அரசியல் முதல் அதிகார வர்க்கம் வரைக்கும் முன்னேற்றம் அடைந்து இன்று சிறுபாண்மை இனமாக கருதப்படும் தமிழ் இனம் 3ம் நிலைக்கு தள்ளப்பட்டு 2ம் நிலைக்கு முஸ்லீம் சமூகம் வளர்ச்சி அடைந்துள்ளமை என்பது எமது அரசியல் வாதிகளின் காட்டி கொடுப்பும் அரசியல் சோரம் போவதுமே காரணம்.

தமிழர்கள் ஆயுதம் ஏந்தி கண்டது என்ன ?இழப்புகள் யாருக்கு ?முன்னேறியது யார் ?எமது போராட்டம் போன்று இன்னும் ஒரு ஆயுத போராட்டம் முஸ்லீம் சமூகம் முன்னெடுக்கும் போது தமிழீழம் என்ற கனவு சிதைக்கப் பட்டு கிழக்கிஸ்தான் எனும் ஒரு முஸ்லீம் உருவாகும் அதற்க்கு தமிழ் தலைமைகள் செய்தது போன்று காட்டி கொடுப்போ சகோதர படுகொலையோ நடைபெறாது மாறாக தமிழ் மக்கள் எதிர் பார்த்த தமிழீழம் மறைந்து கிழக்கிஸ்தான் என்ற நாடு உருவாகும் என்பது உண்மை.

# தோற்றுப்போன இராஜதந்திரம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒருமுறை தனது ஏகாதிபத்திய சார்பு விசுவாசத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பு வர்க்க விசுவாசத்தையும் வெளிக்காட்டியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.க. அரசு அமைவதற்கு 14 தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் எழுத்து மூல ஆதரவினை வழங்கியதன் மூலம் இது வெளிப்பட்டிருக்கிறது.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் முதலாக, தமிழ் மக்களுக்குத் தலைமைதாங்கிய எல்லாத் தமிழ் தலைமைகளுமே ஏதோ ஒரு வகையில் பிற்போக்கு வலதுசாரிக் கட்சியான ஐ.தே.கவுடன் கைகோர்த்தே செயல்பட்டு வந்திருக்கின்றன. எனவே தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து கொண்டமை ஒன்றும் ஆச்சரியகரமான விடயமல்ல. ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், முன்பு இருந்த தமிழ் தலைமைகள் மூடி மறைத்து ஐ.தே.கவுடன் செய்த கொடுக்கல் வாங்கல்களை இப்பொழுதுள்ள தலைமை எந்தவித தயக்கமுமின்றி, வெட்கமுமின்றி பகிரங்கமாகவே செய்கின்றது.

அதற்குக் காரணம், தற்போதைய தமிழ் தலைமையும் முன்னைய ஐ.தே.க. சார்புத் தமிழ்த் தலைமைகளின் தொடர்ச்சி என்பது ஒருபுறமிருக்க, தற்போது தலைமையில் இருக்கும் இரா.சம்பந்தன் திரிகோணமலையில் பிரபல்யமான ஐ.தே.க. சார்பு குடும்பம் ஒன்றைச் சார்ந்தவராக இருப்பதும், அவருக்கு அடுத்த ஸ்தானத்தில் இருக்கும் எம்.ஏ.சுமந்திரன் நீண்டகால ஐ.தே.க. நண்பர் என்பதுமாகும். (சுமந்திரனை ஐ.தே.கதான் திட்டமிட்டு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் அனுப்பியதாகவும் ஒரு பலமான அபிப்பிராயம் உண்டு)

தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்காக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெறுவதற்காகவே தாம் ஐ.தே.க. அரசை ஆதரிப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமை கூறுகிறது. முன்னரும் கூறியது. 2015 ஜனவரி 08இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், பின்னர் அதேயாண்டு ஒகஸ்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐ.தே.க. தலைமையிலான வேட்பாளர்களை எந்தவிதமான நிபந்தனையும் இன்றி ஆதரித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதன் பின்னரான மூன்றரை வருட காலத்தில் ஐ.தே.க. தலைமையிலான அரசை எதிர்க்கட்சி ஆசனத்தில் இருந்துகொண்டு தொடர்ச்சியாக ஆதரித்து வந்துள்ளது. இவ்வளவத்தையும் செய்தும் தமிழ் மக்களின் பிரச்சினைகளில் ஒன்றைத்தன்னும் ஐ.தே.க. அரசைக் கொண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பால் நிறைவேற்ற முடிந்ததா?

சுதந்திர இலங்கையில் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்தது, மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது, 1958, 1977, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழர்களுக்கெதிரான இனவன்முறைகளை முன்னின்று நடத்தியது, இனப்பிரச்சினைத் தீர்வுக்காக 1957




இல் செய்யப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்தையும், 1987இல் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், 2000ஆம் ஆண்டில் சந்திரிக அரசு கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தப்பட விடாமல் குழப்பியது, அரசியல் ரீதியாகத் தீர்க்கப்பட வேண்டிய இனப்பிரச்சினையை யுத்தமாக மாற்றியது என்பன ஐ.தே.க. காலத்துக்குக்காலம் செய்த தமிழர் விரோத நடவடிக்கைகளில் சில.

ஐ.தே.கவின் இந்த தமிழர் விரோத பழைய வரலாறுகள் ஒருபுறமிருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் பதவிக்கு வந்த தற்போதைய ஐ.தே.க. அரசு, கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் - அவற்றில் சில உடனடிப் பிரச்சினைகளாக இருந்தபோதிலும் - தீர்த்து வைத்ததா என்றால், பதில் இல்லை என்பதுதான். அப்படியிருக்க, எப்படி கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை ஏதுமின்றி ஐ.தே.க. அரசு அமைய ஆதரவளித்ததோ, அவ்வாறே தற்போதும் ஐ.தே.க. அரசு அமைவதற்கு நிபந்தனை ஏதுமின்றி எழுத்து மூல ஆதரவை அளித்துள்ளது.

தமிழ்த் தலைமை தமிழ் மக்களுக்குச் செய்துள்ள இந்தத் துரோகம், வரலாற்றில் இதுதான் முதல் தடவை அல்ல.

1965இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளில் ஒன்றுக்காவது ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கவில்லை. ஆனால், சிறீலங்கா சுதந்திரக் கட்சியை விட, ஐக்கிய தேசியக் கட்சி சற்றுக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருந்தது. (2015 பொதுத் தேர்தல் முடிவுகள் போல) தமிழரசு, தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் ஆதரவில்லாமலும் ஐ.தே.கவால் வேறு சில சிறிய கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருக்க முடியும். ஆனால் நாடாளுமன்றத்தில் ஐ.தே.க. அரசாங்கம் ஏதாவதொரு மசோதாவைக் கொண்டு வந்து அதை பிரதான எதிர்க் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்து, அதனுடன் தமிழரசு - தமிழரசுக் கட்சிகளும் சேர்ந்து எதிர்த்தால் அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டு அரசு கவிழும் நிலை இருந்தது.

ஆனால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அவ்வாறானதொரு நிலை இருக்கவில்லை. தமிழ் கட்சிகள் இரண்டும் ஆதரித்தால் மட்டுமே அக்கட்சியால் ஆட்சியமைத்திருக்க முடியும். இந்த நிலை அன்றைய காலகட்டத்தில் தமிழரசுக் கட்சித் தலைமை சொல்லி வந்த, ‘பிரதான கட்சிகளுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாத போது நிபந்தனையுடன் பேரம் பேசி ஆட்சியமைக்க ஆதவளிப்பதன் மூலம் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்’ என்ற தந்திரோபாயத்தைக் கையாள்வதற்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமாக எல்லோராலும் பார்க்கப்பட்டது.

ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு வழங்கும்படி சுதந்திரக் கட்சியின் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் அழைப்பும் விடுத்தார். தமிழ் கட்சிகள் முன்வைக்கும் நிபந்தனைகள் சிலவற்றை ஏற்பதற்கும் தயாராக இருந்தார்.

ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைகள் சிலவற்றைத்தன்னும் தீர்ப்பதற்கு கிடைத்த அந்த அரிய சந்தர்ப்பத்தை தமிழரசு - தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இரண்டும் ஊதாசீனம் செய்துவிட்டு, ஐ.தே.க. கொடுத்த மாவட்ட சபைகள் அமைக்கப்படும் என்ற போலி வாக்குறுதியை ஏற்று ஐ.தே.க. அரசில் ஆர்.ஜீ.சேனநாயக்க, கே.எம்.பி.ராஜரத்தன போன்ற தீவிர சிங்கள இனவாதிகளுடன் இணைந்து ஐ.தே.க. தலைமையிலான ஏழுகட்சி கூட்டரசாங்கத்தில் இணைந்து கொண்டன. ஆனால், இறுதியில் ஐ.தே.க. வாக்குறுதி கொடுத்த மாவட்ட சபையைப் பெற முடியாமல் நான்கரை ஆண்டுகள் கழித்து தமிழரசுக் கட்சி அரசிலிருந்து வெளியேறியது.

தமிழரசுக் கட்சி அன்று தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொண்ட இந்தத் துரோகம் காரணமாகவும், தமிழரசக் கட்சியும் அங்கம் வகித்த ஐ.தே.க. அரசாங்கம் தமிழர்களை வேறுபடுத்திக் காட்டுவதற்காகக் கொண்டு வந்த ஆள் அடையாள அட்டை மசோதாவை எதிர்த்துமே அன்று அக்கட்சியின் ஊர்காவற்றுறை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வி.நவரத்தினம் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறி தமிழர் சுயாட்சிக் கழகம் என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். (ஆனால் இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் அப்படியான கொள்கைப்பற்றுள்ள ஒருவரையாவது காண முடியவில்லை)

அதுமாத்திரமின்றி, தமிழரசுக் கட்சி செய்த இந்த இரண்டக வேலை காரணமாகவே, 1970இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது தமிழ் கட்சிகளின் தயவில்லாமல் ஒரு ஆட்சியை அமைக்கும் வண்ணம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணிக்கு நாட்டு மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றியை ஈட்டிக் கொடுத்தனர்.

ஏறத்தாழ 53 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த அரசியல் நிலைமை போன்ற ஒரு நிலை அண்மையிலும் உருவாகியது. 2018 ஒக்டோபர் 26இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைப் பதவி நீக்கம் செய்த பின்னர், நாடாளுமன்றத்தில் மீண்டும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ரணில் தரப்பினரும், மகிந்த தரப்பினரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை நாடினர்.

ரணில் தரப்பினரை விட, மகிந்த தரப்பினருக்கு சற்றுக் குறைவான நாடாளுமன்ற ஆசனங்கள் இருந்ததால், அவர்கள் ஆட்சியமைக்க ஆதரவு வழங்குவதாக இருந்தால், வலுவான கோரிக்கைகளை முன்வைத்து பேரம் பேசும் வாய்ப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தது. ஆனால் தமிழ்த் தலைமை இந்தத் தடவையும் அந்த வாய்ப்பை ஊதாசீனப்படுத்தி, ஐ.தே.க. மீது இருந்த வர்க்க பாசம் காரணமாகவும், ஏகாதிபத்திய எஜமானர்களின் ஆலோசனைப்படியும் செயற்பட்டு, ரணில் தலைமையிலான ஐ.தே.க. அரசு அமைய ஆதரவு கொடுத்துள்ளது.

இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைமைக்கு தமிழ் மக்களின் நலன்களை விட, தமது வரக்க சகாக்களான ஐ.தே.கவினதும், ஏகாதிபத்திய எஜமானர்களினதும் நலன்களே முக்கியம் என்பது மீண்டுமொருமுறை நிரூபணமாகியுள்ளது. எதிர்காலத்திலும் தமிழ் மக்களுக்கு இந்த வகையான பிற்போக்கு இனவாத சக்திகள் தலைமை தாங்கும் வரையும் இவ்வாறானதொரு நிலையே தொடரப்போகின்றது.

இங்கே விழித்துக் கொண்டு செயற்பட வேண்டியவர்கள் தமிழ் மக்கள்தான். செய்வார்களா? அல்லது தொடர்ந்தும் கண்ணை மூடிக்கொண்டு இந்த வங்குரோத்துப் பாதையில் சென்று செத்து மடியப் போகிறார்களா என்பதே அவர்கள் முன்னாலுள்ள கேள்வி.

நன்றி: இணையம்



# தீர்வு வருரும்ம்ம்..! ஆனால்...

**தமிழர்களுக்கு தீர்வு இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும் போன்ற வசனங்கள் பண்டிகைகள், புதுவருடம் வந்தால் தமிழ் தலைமைகளிடமிருந்து வெளிவரும் வெற்று வார்த்தைகளாக மாத்திரம் இருக்கின்றன. இதனால் வார்த்தைக்கும், தலைமைக்கும் மதிப்பற்றுப் போய்விட்ட சூழல் உருவாகியுள்ளது**

## முனையூரான்

இலங்கையில் தமிழ்மக்கள் தமக்கான உரிமைகளை கோரி ஆரம்பத்தில் அகிம்சை வழி போராட்டத்தினை முன்னடுத்தனர். அகிம்சை வழி போராட்டங்களுக்கு தீர்வில்லாத நிலையிலும், தொடர்ந்து தமிழர்கள் புறக்கணிக்கப்பட்ட தருணத்தில் ஆயுதப்போராட்டமாக மாற்றமடைந்தது. மூன்று தசாப்தங்களையும் கடந்து இப்போரட்டம் இடம்பெற்றமையினால் பலவற்றினை தமிழ் மக்கள் இழந்திருக்கின்றனர். கல்வி, பொருளாதாரம், உடமை, உயிரிழப்பு, அங்கங்களின் இழப்புயென பல இழப்புக்களை சந்தித்திருக்கின்றனர். இன்றும் வடக்கு, கிழக்கு மாகாணத்திலே தமது கணவர்களை இழந்து விதவைகளாக பல பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். தற்கால பொருளாதார சுமையின் கீழும், தமது பிள்ளைகளுக்கு தந்தையாகவும், தாயாகவும் இருந்து மனதிக்குள்ளே வலிச்சுமைகளை தாங்கி குடும்பத்தினை வழிநடத்திச் செல்லுகின்றனர்.

ஒரு கண்ணை, இருகண்களை, ஒரு கால், இரு கால்களை, ஒரு கை, இரு கைகளை இழந்தும், உடலிலே காயங்களை கொண்டும் எத்தனையோ தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். மற்றவர்களின் உழைப்பில் தங்கியும், தொழிலின்றியும், வாழ்வாதாரத்தினை மேம்படுத்த முடியாதநிலையிலும் வாழ்வை தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கே என்று தெரியாமல் 8வருடங்களாக இன்னும் சிலர் தேடிக்கொண்டிருக்கின்றனர். தமது உறவுகளை கண்டுபிடித்து தம்மிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கத்தினை வலியுறுத்தி வீதியோரங்களிலே இருந்து கொண்டிருக்கின்றனர். வீதிகளே வாழ்விடமாகவும் மாறியிருக்கின்றன. இன்னும் சிலர் சிறைகளிலே அடைத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களை விடுவிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபடுவதுடன், அரசாங்கத்திடமும் கூறிவருகின்றனர். இன்றுவருவார், நாளை வருவார் என்ற எதிர்ப்பார்ப்புகளுடனும், ஏக்கங்களுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மூன்று தசாப்தங்களை கடந்த ஆயுதப்போராட்டம் 2009ல் மௌனிக்க செய்யப்பட்டது. 2009ம் ஆண்டுக்கு பின் தமது உரிமைகளை பெற்றுக்கொள்வதற்காக அரசியல் ரீதியாக தமிழ் மக்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். மகிந்த ராஜபக்ச முன்னாள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. அவரது ஆட்சிக் காலத்தில் பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தமிழ் மக்கள் சுதந்திரமாக பேசுவதற்கு, வெளியில் செல்வதற்கு அஞ்சினர். வெள்ளைவேன் கடத்தல்கள், தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டமை, புலனாய்வாளர்களின் அதிகரிப்பு போன்ற செயற்பாடுகளே இதற்கு காரணமாயின. இதனால் தமிழ் மக்கள் மத்தியிலே இடம்பிடிக்க முடியாதவராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ப கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்தார்.

மகிந்த ராஜபக்சவின் தோல்வியை தொடர்ந்து, 2015ம் ஆண்டு ஜனவரியில் ஜனாதிபதியாக மைத்திரிபாலசிறிசேன நாட்டைப் பொறுப்பேற்றார். தமிழ் மக்கள் மத்தியில் இருந்த அச்ச உணர்வு நீங்கியது. நல்லாட்சி என்ற நாமம் உச்சரிக்கத் தொடங்கியது. இன்று நல்லாட்சி என்ற நாமமே நாவிலிருந்து நழுவியிருக்கின்றது.

மைத்திரிபாலசிறிசேன ஆட்சியிலேதான், தமிழ் பிரதேசங்களிலே பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து வழங்க வேண்டும். முப்படைகளினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் விடுவிக்க வேண்டும். அரசியல் சிறைக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். கொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதி வழங்க வேண்டும். தமக்கான தீர்வினை வழங்க வேண்டும் என்று கோரிய போராட்டங்களை குறிப்பிட முடியும்.

இது ஒருபுறமிருக்க, தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற சான்றோர் சொன்ன வாக்கானது, தமிழர்களின் காதுகளிலே அதிகம் பேசும் வாக்கு. நம்பிக்கை கொண்டவாக்கு: ஆனால் இன்று எல்லாம் நம்பிக்கையற்ற வாக்காகி விட்டது. ஏமாற்றம், எதிர்பார்ப்பு தமிழர்களோடு கலந்துவிட்ட சொற்களாகிவிட்டன. அது இவ்வாட்சியிலும் நீடிக்கும் சொல்லாகிவிட்டது. தமிழர்களுக்கு தீர்வு இன்று கிடைக்கும், நாளை கிடைக்கும், நாளை மறுதினம் கிடைக்கும் போன்ற வசனங்கள் பண்டிகைகள், புதுவருடம் வந்தால் தமிழ்த் தலைமைகளிடமிருந்து வெளிவரும் வெற்று வார்த்தைகளாக மாத்திரம் இருக்கின்றன. இதனால் வார்த்தைக்கும், தலைமைக்கும் மதிப்பற்று போய்விட்ட சூழல் உருவாகியுள்ளது.

புதிய ஆண்டு பிறந்தும் தமிழர்களின் வாழ்வில் ஒளியில்லை. அரசியல் கைதிகள் தம்முறவுகளுடன் இணைந்து இருக்கமுடியாமால் சிறைகளிலே இருந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் வாழ்வு எப்போது ஒளிமயமாகப்போகின்றது என்ற ஏக்கத்துடன் அவர்களும், அவர்களது உறவுகளும் வாழ்கின்றனர். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த சமஸ்டி முறையிலான அதியுச்ச அதிகாரப்பகிர்வு வேண்டும். கலப்பு நீதிமன்றத்தை உருவாக்கி பாரதூரமான குற்றங்களை விசாரிக்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி மற்றும் இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். நடந்தேறிய சித்திரவதைகளும் படுகொலைகளும் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றபவற்றையே தமிழ்மக்கள் அனைவரும் தொடர்ச்சியாக கேட்டுக்கொட்டிருக்கின்றனர். அரசும் பல்வேறான பகட்டுக் கருத்துக்களை பதிலாக கூறி நாட்களை நகர்த்துகின்றனர்.

தமிழ் தலைமைகளும் தீர்வுகுறித்த காலப்பகுதியை நீட்டித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் தீர்வாக ஒன்றுமே நடந்தபாடில்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆக்கபூர்மான முன்னேற்றங்கள் எதையும் அரசாங்கத்திடம் காணவில்லை. யுத்தத்தின் பின்பும் இடம்பெற்ற ஆட்சி காலங்களில்; பாரதூரமான துன்பங்களை தமிழ் மக்கள் அனுபவித்தனர். அதற்காக சிறுபான்மையினத்தினரின் பலத்தினால்; 2015ல் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிபீடம் ஏறினார். இதன் பயனாக தேசிய ஒற்றுமைக்காக நல்லிணக்க அரசாங்கம் உருவாக்கப்பட்டது. நல்லிணக்கத்திற்கும் மீள நிகழாமைக்குமென எடுக்கப்பட்ட உத்தேச நடவடிக்கைகளுக்கு தமிழ் தலைமைகளும் ஒத்துழைப்பை வழங்கினர். ஆனால் தற்போதைய சூழலில், ஜனாதிபதியிடத்தில் வெளிப்படைத்தன்மையும், நம்பிக்கையையும் காணமுடியாதுள்ளது.

நாட்டிலே நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் பொருட்டு நல்லிணக்க பொறிமுறை தொடர்பான கருத்தறியும் செயலணியால் பல்வேறான கருத்துக்கள் மக்களிடமிருந்து பெறப்பட்டது. அக்கருத்துக்களை உள்ளடக்கி அறிக்கை ஒன்றினை அரசிடம் குறித்த குழு வழங்கியது. அவ்வறிக்கைகளில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது. இச் செயலணியின் அறிக்கையின் பரிந்துரைகளில் நீதியும் உண்மையும் நிலைநாட்ட வேண்டும்

11 ஆம் பக்கம் பார்க்க....



# புத்தாண்டும் புதிய அரசியல் அமைப்பும்



புதிய அரசியல் அமைப்பினை மேலெழுந்தவாரியாக பார்க்காமல் உள்ளார்ந்து ஆழமாகப் பார்த்து முடிவு செய்யுங்கள்! என அரசியல் அமைப்பு நிபுணர் ஜெயம்பதி விக்ரமரத்ன அவர்கள் அண்டியில் லண்டனில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது தெளிவாக குறிப்பிட்டிருந்தார். அவரது உரையானது தற்போது நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பினை புதியயோசனைகளுடன் ஒப்பீடு செய்து புதியமாற்றங்களை புகுத்தும் பொருட்டே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் நடைமுறையிலிருந்த அரசியல் அமைப்புகளின் வரலாறுபற்றி நோக்கும் போது, சோல்பரி அரசியல் அமைப்பு பிரித்தானியரால் திணிக்கப்பட்ட ஒன்றாகவே நோக்கப்படுகின்றது. அதன் பின்னர் நடைமுறைக்கு வந்த முதலாவது குடியரசு யாப்பு ஐக்கிய முன்னணி அரசின் அதிகளவு பாராளுமன்றப் பலத்தின் காரணமாகவும், ஐ தே. கட்சியின் தோல்வியின் பின்னணியில் உருவானதால் ஐக்கிய முன்னணியில் செயற்பட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி, லங்காசம சமாஜக் கட்சி, கம்யூ. கட்சி ஆகியவற்றின் யாப்பாகவே கொள்ளுதல் பொருத்தமானது எனவும் குறிப்பிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஐ தே கட்சியின் ஐந்தில் நான்கு பெரும்பான்மைப் பலத்தின் பின்னணியில்தான் இரண்டாவது குடியரசு யாப்பு அதாவது தற்போது நடைமுறையிலுள்ள யாப்பினைக் கருதவாய்ப்புள்ளது. இவ் வரலாற்றின் பின்னணியில் தற்போது விவாதிக்கப்படும் யாப்பு முற்றிலும் புதிதான அரசியல் பின்னணியில் தயாரிக்கப்பட வேண்டும் என்றே ஜெயம்பதி விக்ரமரத்ன விளக்கினார். கடந்த கால யாப்புத்

**அரசியல் அமைப்புக் குறித்து மக்களிடம் ஆலோசனைகள் கேட்டபோது சிங்கள மக்களில் பெரும்பாலானோர் சமஷ்டியை ஏன் எதிர்க்கிறார்கள் என வினவப்பட்டபோது அது பிரிவினையை ஏற்படுத்திவிடும் எனத் தெரிவித்த அம் மக்கள், அதிக அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கவில்லை. அதேபோல ஒற்றை ஆட்சியை ஏன் எதிர்க்கிறீர்கள் என தமிழ் மக்களிடம் வினவியபோது வழங்கிய அதிகாரங்களைப் பறிக்கும் வாய்ப்பு உண்டு எனக் கருத்துகள் வெளிப்படுகின்றன**

தயாரிப்பின் போது ஒருவகையில் திணிக்கப்பட்ட ஒன்று எனத் தெரிவித்த அவர் அதன் காரணமாகவே தந்தை செல்வா அரசியல் அமைப்பு விவாதங்களில் கலந்துகொள்ளாமல் விலகிய சம்பவம் ஏற்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்நின்று கணிக்குமிடத்து, தற்போது மக்களிடம் பரவலான அபிப்பிராயங்கள் பெறப்பட்டதோடு, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் முழுமையான ஆதரவோடு பாராளுமன்றம் அரசியல் அமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டுள்ளது. கடந்தகாலத்தில் ஒன்றை ஒன்று எதிர்த்து அரசியலை நடத்திய பிரதான அரசியல் கட்சிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சி, ஐ தேசியக் கட்சி என்பன ஒரே அரசாங்கத்தில் இணைந்து அக் கட்சிகளே தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இக் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்புத் தொடர்பான வழிகாட்டுக் குழுவின் பிரதான யோசனைகளை பலமுக்கியகட்சிகள் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழிகாட்டுக் குழுவின் அறிக்கையை ஐ தேகட்சி முழுமையாக ஏற்றுள்ளது. அதேபோல மைத்திரி தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி சில திருத்தங்களை மட்டுமே முன்வைத்துள்ளதாகவும், அவ் அறிக்கையின் பிரதான பகுதிகளை தமிழர் தேசியக் கூட்டமைப்பு, ஈபி டி பி, மலையககட்சிகள், முஸ்லிம் காங்கிரஸ், அரசிற்கு வெளியில் செயற்படும் கம்யூ. கட்சி ஆகியன ஆதரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில் விசேட அம்சமாக, 13வது திருத்தத்தினை அதாவது அதிகார பரவலாக்கத்தினை எதிர்த்து வந்த ஜே வி.பி இனர் தற்போது பின்வரும் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரிக்கத் தீர்மானித்துள்ளனர். அதாவது

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சியை ஒழித்தல்.

தேர்தல் முறையை மாற்றுதல்.

அதிகாரபரவலாக்கத்தினை நடைமுறைப்படுத்தல்.

மேற்குறித்த மூன்று நிபந்தனைகளையும் சமகாலத்தில் நிறைவேற்ற அரசு முயற்சிக்குமாயின் அவற்றை ஆதரிக்கத் தயாராக இருப்பதாக இக் கட்சி தெரிவித்துள்ளது. மகிந்த தரப்பான இணைந்த எதிர்க்கட்சியினர் தவிர்ந்த ஏனைய கட்சிகள் (ஜாதிகெல உறுமய உட்பட) பெரும்பாலான கட்சிகள் இதனை ஆதரிக்க முடிவுசெய்திருப்பது மிக வரலாற்றுச் சிறப்புமிக்க சந்தர்ப்பமாகும் எனவும் அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறான வாய்ப்பினை நழுவவிட்டால் இதேபோன்ற வாய்ப்பு எதிர்காலத்தில் கிட்டுமா? என்பது சந்தேகமே எனவும் சில தரப்புக்களால் கூறப்படுகின்றன. தற்போதுள்ள அரசியல் புறச்சூழலில் கிடைத்த வாய்ப்பை நழுவவிடாமல் மேலும் பேசி கிடைப்பதைப் பெற்று மேலும் அழுத்தங்களைப் பிரயோகித்து உரிமைகளை பெற கூட்டமைப்பினருக்கு அதிகம் வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் அமைப்பின் சில முக்கிய பகுதிகளின் சாராம்சங்களை விக்ரமரத்ன விபரிக்கும் போது, குறிப்பாக ஒற்றை ஆட்சியா, சஷ்டியா, பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள முன்னுரிமை, அதிகாரப் பரவலாக்கம், காணி அதிகாரம் என்பன குறித்து விளக்கியமை, இது தொடர்பான பூரண தெளிவை வழங்குகின்றது.

### அரச கட்டுமான வியாக்கியானம்

இவ் அரசகட்டுமானம் பற்றிய உரையாடலின் போது ஜனாதிபதி மைத்திரி அவர்கள் தெரிவித்த கருத்தினை ஆதாரமாக வைத்தே அம் மாற்றங்கள் குறித்து விளக்குகிறார். அதாவது தெற்கில் வாழும் மக்கள் சமஷ்டி என்றால் அச்சப்படுகிறார்கள். அதே போலவே வட கிழக்கில் வாழ்பவர்கள் ஒற்றை ஆட்சி எனில் சந்தேகம் தெரிவிக்கிறார்கள். எனவே மக்கள் அச்சப்படாத புதியமொழிப் பிரயோகத்தை, புதிய அர்த்தத்தை வழங்குதல் அவசியம் என்றார்.

அதேபோல அரசியல் அமைப்புக் குறித்து மக்களிடம் ஆலோசனைகள் கேட்டபோது சிங்கள மக்களில் பெரும்பாலோர் சமஷ்டியை ஏன் எதிர்க்கிறார்கள் என வினவப்பட்டபோது அது பிரிவினையை ஏற்படுத்திவிடும் எனத் தெரிவித்த அம் மக்கள், அதிக அதிகாரங்களை வழங்குவதை எதிர்க்கவில்லை. அதேபோல ஒற்றை ஆட்சியை ஏன் எதிர்க்கிறீர்கள் என தமிழ் மக்களிடம் வினவியபோது வழங்கிய அதிகாரங்களைப் பறிக்கும் வாய்ப்பு உண்டு கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

ஆங்கில மொழி மாற்ற மூலமாகக் கூறப்படும் ஒற்றை ஆட்சி என்ற பதத்தை விலக்குமாறு கோரிய மக்கள் பிரிக்கப்படாத, பிரிக்க முடியாத இலங்கை என்பதை ஏற்றுள்ளனர். எனவே இதற்கான சரியான உரையாடல் அவசியம் என உணரப்பட்டதாக தெரிவித்தார். அதன் காரணமாகவே தற்போது அரசகட்டுமானம் குறித்து பயன்படுத்தும் ஒற்றை ஆட்சி என்பது நாட்டின் ஒட்டு மொத்த ஒருமித்த தன்மையை விளக்கவில்லை எனக் குறிப்பிடுகிறார். ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் ருணவையசல ளவயவந என்பது அரசகட்டுமானத்தின் உள்ளார்ந்த தன்மையை விளக்காது அது ஒற்றைத் தன்மையை அதாவது மத்திய அரசின் அதிகாரத்தை உணர்த்துவதாகவே புரிந்து கொள்ளப்படுவதால் சிங்களத்தில் அரசகட்டுமானம் எது? என்பது சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் 'எக்கய ராஜ்ய' எனவும், தமிழில் 'ஒருமித்த நாடு' எனக் கருதப்படும் விதத்தில் மொழிப் பதத்தினை பயன்படுத்தியுள்ளதாகவும், இச் சொற் பிரயோகத்தினைப் பெரும்பாலான கட்சிகள் ஏற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

இறைமை அதிகாரம்

இறைமை அதிகாரம் என்பது மக்களிடமே தொடர்ந்து இருக்கும் எனத் தெரிவித்த அவர், சிலநாடுகளில் குறிப்பாக பாகிஸ்தானில் அந்த அதிகாரம் இறைவனிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார். மக்களே எஜமானர்கள் என்பதால் அந்த அதிகாரம் அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத ஒன்று என்றார். தற்போது இறைமை அதிகாரம் என்பது பிரிக்க முடியாதது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார். இது பிரிவினையைத் தடுப்பதற்கான மேலதிக பாதுகாப்பு என்றார்.

### இரண்டாவது சபை அல்லது செனட்சபை

இச் சபையின் அங்கத்தவர்கள் மாகாணசபைகளிலிருந்து சபைக்கு ஐவர் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட, பாராளுமன்றம் 10 உறுப்பினர்களை நியமிக்கும் என்றார். அரசியல் அமைப்பை மாற்றுவதாயின் இரண்டு சபைகளிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறவேண்டும். இதனையும் இணைந்த எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனையோர் ஆதரித்துள்ளனர்.

மத உரிமை

தற்போது நடைமுறையிலுள்ளவாறே பௌத்த மதத்திற்கு மிகமுக்கிய ஸ்தானம் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, இதர மதங்கள் கௌரவத்துடனும், பாகுபாடற்ற அந்தஸ்தும் வழங்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இங்கு 'பாகுபாடற்ற' என்ற வார்த்தைப் பிரயோகம் குறித்து சிங்கள தேசியவாதிகள் தெரிவிக்கையில் அதுவும் மறைமுகமாக சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதாக கவலைப்படுவதாக தெரிவித்து வருவதாக குறிப்பிட்டார். சமத்துவம் தொடர்பான பகுதியில் அதாவது பாகுபாடு என்பது சாதி, இனம், பால், பிறப்பு என்பவற்றின் அடிப்படையில் இடம்பெறக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இது பாகுபாட்டை மேலும் தடுக்கும் ஒரு பகுதியாக உள்ளதாகக் கூறினார்.

### வடக்கு, கிழக்கு இணைப்பு

இது குறித்து பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளதாகவும், அதில் தற்போது இருக்கும் நிலையைத் தொடர்ந்து வைத்திருப்பது, மாகாண இணைப்பு அவசியமெனில் பாராளுமன்றம் தனியான சட்டத்தை இயற்றுவது, கூட்டமைப்பினர் இணைப்பு அவசியம் எனத் தெரிவித்துள்ளனர். சிலர் இணைப்புத் தேவையாயின் சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறினார். தற்போதுள்ள சூழலில் வடக்கு, கிழக்கு இரண்டாக இருக்குமாயின் செனட் சபைக்கு மேலும் இரட்டிப்பு உறுப்பினர்களைப் பெற வாய்ப்பு உண்டு என்றார்.

இச் சந்தர்ப்பத்தில் மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பாக நாட்டின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள 7 மாகாணசபைகளின் முதலமைச்சர்களின் யோசனைகளை மேற்கோள் காட்டி பல விபரங்களைத் தெரிவித்தார்.

மாகாணசபைகளின் அதிகாரம் தெளிவாக வரையறுக்கப்படவேண்டும்.

ஒருமுறை மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டால் அவை மீள மத்திய அரசால் பெறப்படமுடியாது.

ஒற்றை ஆட்சி என்ற பதம் பயன்படுத்த முடியாது.

தேசியக் கொள்கைகள் உருவாக்கப்படின் அவற்றை நடைமுறைப்படுத்த மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

அவற்றை மத்திய அரசு மீளப் பெறமுடியாது.

அதிகார பிரிப்பு தெளிவானதாகவும், சந்தேகத்திற்கு இடமற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

தேசியக் கொள்கைகள் தயாரிக்கும் போது மந்திரிசபையில் மட்டும் விவாதிக்காமல் வெளிப்படையாக விவாதித்தல் அவசியம். சுற்றுநிருபங்கள் மூலம் கொள்கை மாற்றங்களை அறிவிக்க முடியாது. மாகாணசபைகளுடன் கலந்துரையாடுவதும், மாகாணசபைகளுக்கு பகுதிகள் வழங்கப்பட்டால் அவற்றை மத்திய அரசு மீளப் பெறமுடியாது.

### மாகாண ஆளுநர்

இப் பதவி தொடர்ந்து இருப்பது அவசியம். ஏனெனில் அவரே மாகாணஅரசு- மத்தியஅரசுடன் தொடர்பு கொள்வதற்கான இணைப்பாக செயற்படுவார். ஆனால் அவரது அதிகாரங்கள் அதாவது மாகாண பொதுநிர்வாகத்தில் தலையிடுவது நிறுத்தப்பட்டு, மாகாணங்களுக்கான பொதுநிர்வாக ஆணைக்குழு உருவாக்கப்பட்டு அதுவே இடமாற்றம் போன்ற காரியங்களை நிறைவேற்றும். ஆனால் இவை அரசியல் அமைப்புச்சபையின் அனுமதியுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அப்பதவி பெயரளவில் மட்டுமே உள்ளதாகும்.

### காணி அதிகாரம்

தற்போது காணி அதிகாரம் மாகாணசபைகளுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இக் காணிகள் தொடர்பான விவகாரங்களைத் தேசியகாணி ஆணைக்குழுவே கையாளும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ் ஆணைக்குழுவிற்கு அங்கத்தவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக நியமிக்கப்படவில்லை. அதுவே பல பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்தது.

தேசியகாணி ஆணைக்குழுவிற்குச் சம அளவான பிரதிநிதிகள் மத்தியிலிருந்தும், மாகாணத்திலிருந்தும் நியமிக்கப்படுவார்கள். அவர்களே காணிகள் தொடர்பான தேசியக் கொள்கைகளை வகுப்பார்கள். மாகாணசபைகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்களை மத்திய அரசு கோருமாயின் மாகாணஅரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திப் பெறவேண்டும். அது சாத்தியப்படாவிடில் நீதிமன்றத்திற்குச் செல்லவேண்டும். அவசிய தேவைக்காக உடனடியாக காணி தேவைப்படின் வர்த்தமானி அறிவித்தலுடன் நிலத்தைப் பெறலாம். ஆனால் அவை நீதித்துறையின் மீளாய்விற்கு உட்படுத்தப்படும்.

காணிகளை வழங்குதல் அல்லது குடியேற்றங்களை அமைப்பதாயின் பின்வரும் ஒழுங்கில் முதன்மை வழங்கப்படுதல் வேண்டும்.

முதலாவது முன்னுரிமை அம் மாவட்டத்தின் பிரிவுக் காரியாலய எல்லைக்குள் வாழும் நிலமற்ற மக்கள்.

இரண்டாவது அம் மாவட்டத்திற்குள் வாழும் நிலமற்ற மக்கள்.

மூன்றாவது அம் மாகாணத்தின் நிலமற்ற மக்கள்.

நான்காவதே அப்பிரதேசத்திற்கு வெளியில் உள்ள நிலமற்ற மக்களாகும்.

இவ்வாறு புதிய அரசியல் அமைப்பு யோசனைகள் குறித்து அவரது விளக்கங்கள் அமைந்திருந்தன. இப் புதிய சூழலைப் பயன்படுத்தி மேலும் பல வாய்ப்புகளை ஏற்படுத்தி கடந்த 30 வருட காலமாக யுத்த சூழலில் துவண்ட தமிழ் மக்களுக்கு எதிர்வரும் நாட்களிலாவது அவர்களது வாழ்வில் நல் மாற்றத்தை காண கூட்டமைப்பினர் முதலில் தங்களுக்குள் இணைந்து பின்னர் ஒருமித்து அரசிற்கு அழுத்தங்களை பிரயோகிக்கும் முகமாக செயற்படவேண்டும் என்பதே புதுவருடத்தில் மக்களது எதிர்ப்பார்ப்பாக உள்ளது.

# ஒரே குட்டையில் ஊறிய இரு மட்டைகள்

இலங்கையின் முதல் தமிழரான சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி,( சட்ட சபையில் ஊர்காவற்றுறை உறுப்பினர் 1936-1947). பாராளுமன்றத்தில் உப-சபாநாயகர் முருகேசு சிவசிதம்பரம் (உடுப்பிட்டி தொகுதி எம்.பி 1966-1970 ). ஆனால் அந்த பதவிகளை விட எதிர்க்கட்சித்தலைவர் பதவி என்பதே மிகவும் முக்கியமானதொரு பதவி.சில நாடுகளில் எதிர்கட்சித்தலைவர்களே அடுத்த தேர்தலில் பிரதமர்களாகவும்வந்துள்ளனர். இலங்கையிலும் அவ்வாறு எதிர்க்கட்சி தலைவர்கள் பிரதமர்களாக வந்துள்ளனர்.

**எதிர்க்கட்சித்தலைவர் பதவி**

உதாரணமாக டட்லி சேனநாயக்கா,சிறிமாவோ பண்டாரநாயக்கா,ஜே.ஆர்.ஜெயவர்த்தனா,ரணில் விக்ரமசிங்கா.மகிந்த ராஜபக்ஸ போன்றவர்கள் எதிர்க்கட்சித்தலைவர்களாக பதவி வகித்தனர்.பின்னர் பிரதமர் பதவிகளையும் வகித்துள்ளனர்.இந்த எதிர்க்கட்சித்தலைவர் பதவியானது



இரு தமிழர்களுக்கு கிடைத்தது. முதலில் (1)அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், பின்னர் (2.)இராஜவரோதயம் சம்பந்தர் ஆகியோருக்கு கிடைத்தது.

ஒரு நாட்டுக்கு வருகின்ற வெளிநாட்டு தலைவர்.அல்லது ஒரு முக்கிய பிரமுகர் அந்த நாட்டினது எதிர்க்கட்சித்தலைவரை சந்தித்து பேசுவது என்பது மிக முக்கியானதொரு விடயமுமாகும். அந்தளவுக்கு அவர் மதிக்கப்படுகிறார். கிட்டத்தட்ட ஒரு பிரதமருக்கு உள்ள அந்தஸ்து அவருக்கு உள்ளது என கூறலாம்.பிரத்தியேக அலுவலகம்,பாதுகாப்பு,தனியான வீடு என பலதரப்பட்ட சலுகைகள் அவருக்கு வழங்கப்படுகிறது.வெளிநாடுகளிலும் இந்த முறை.

உலக நாடுகளில் பாராளுமன்றங்களில் எதிர்கட்சித்தலைவர்கள் எவ்வாறு செயற்பட்டு வருகிறார்கள் என்பது பலருக்கு தெரிந்த விடயமாகும்.

ஒரு அரசின் சில செயற்பாடுகளை எதிர்த்து பேசுவது,எதிராக வாக்களிப்பது கண்டிப்பது இவர்களின் முக்கிய பணிகளாகும்.லங்கையிலும் அவ்வாறே எதிர்கட்சித்தலைவர்கள் கடந்த காலங்களில் பணியாற்றியுள்ளனர்.

இலங்கை பாராளுமன்றத்தில் சிங்களவர்களான எதிர்க்கட்சித்தலைவர்களைப்போலவே முதலாவது தமிழரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் 1977 தேர்தலின் பின் அப்பதவி கிடைத்த பின் பணியாற்றினார்.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையிலான ஐ.தே.க. அரசின் பல நடவடிக்கைகளை எதிர்த்து அவர் பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.எதிராகவும் வாக்களித்தார். ஆளும் கட்சி எம்.பிக்களின் விமர்சனங்கள்,கண்டனங்களையும் பொருட்படுத்தாமல் துணிவுடன் பேசினார்.

ஜெயவர்த்தனாபுர கோட்டே புதிய பாராளுமன்ற கட்டட திறப்புவிழா 1982 இல் இடம்பெற்றபோது எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில்,ஆளும் தரப்பினர்களுடன் கலந்துகொண்டார். ஜனாதிபதி ஜே.ஆர்.இதனை திறந்து வைத்தார்.வெளிநாடுகளின் தூதுவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அதனை அன்றைய தமிழ் இளைஞர்கள் சிலர் விமர்சித்தனர்.

குறிப்பாக சிறுபான்மை இனத்தவர்களுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் சட்டங்கள்,செயற்பாடுகளுக்கு எதிராக பாராளுமன்றத்திலும்,வெளியிலும்குரல் எழுப்பியே வந்தார் என்பதை எவருமே மறுக்கமுடியாது. அதுமட்டுமல்ல சுதந்திரக்கட்சி தலைவி திருமதி சிறமாவோ பண்டாரநாயக்காவுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட குடியுரிமையை பறிக்கும் தீர்மானத்தை எதிர்த்து நீண்ட உரையாற்றியதுடன் எதிர்த்தும் வாக்களித்தவர்.

1977 இல் எதிர்க்கட்சி தலைவரான அவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை ஆளும் ஐக்கிய தேசிய கட்சி எம்.பிக்கள் சபையில் கொண்டு வந்தபோதும் அதற்கு அஞ்சாது விவாதித்தவர்.

பாராளுமன்ற ஹான்சாட் அறிக்கைகளில் அவரது உரைகள் காணப்படுகின்றன.அன்றைய தமிழ்,சிங்கள, ஆங்கில பத்திரிகைகளில் மட்டுமல்ல, வெளிநாடுகளின் பத்திரிகைகளிலும் அவரின் இந்த உரைகள் வெளிவந்துள்ளன.அரசின் கொள்கைகள், திட்டங்கள், தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட பணிகள் குறித்து வெளிநாட்டு ஊடகங்களுக்கு அளித்த பேட்டிகள் பல உள்ளன.

**சம்பந்தருக்கும், அமிர்தலிங்கத்துக்கும் உள்ள ஒற்றுமை,வேற்றுமை.**

இலங்கையின் தமிழரான இரண்டாவது எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தர் அ.அமிர்தலிங்கத்தின் செயல்களுக்கு மாறாகவே இன்றும் நடந்துகொள்வதாக தமிழ் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

**ரூபன்**
**ஈச்சிலம்பற்று**

குறிப்பாக இனப்பிரச்சினை விடயத்தில் அவர் அமிர்தலிங்கம்போல நடந்துகொள்வதில்லை என சில தமிழ் கட்சிகளும்,தமிழர் அமைப்புகளும் கூறுகின்றன.

★ இருவரும் சட்டத்தரணிகள்.★இருவரும் தமிழரசு கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்கள்.

(1) 1977 தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி 18 இடங்களை கைப்பற்றியதால் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற 140 இடங்களுக்கு

அடுத்து அதிக எம்.பிக்கள் என்ற முறையில் தமிழர் விடுதலக்கூட்டணியின் சார்பில் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சி தலைவராக 4 ஆகஸ்ட் 77 இல் தெரிவானார்.சுதந்திரக்கட்சி இத் தேர்தலில் 8 இடங்களைப்பெற்றதால் எதிர்க்கட்சித்தலைவர் பதவி அக்கட்சிக்கு கிடைக்கவில்லை.

அமிர்தலிங்கம் அந்த பாராளுமன்ற முடிவு காலத்திற்கு முன்னர் 1983 ஆடி கலவரத்தையடுத்து இந்தியாவுக்கு சென்றுவிட்டார்.

அதனால், அவர் மூன்று மாதங்களாக பாராளுமன்றத்திக்கு வராததால் அரசியல் அமைப்பின்படி தனது எம்.பி பதவியை இழந்தார். அதனைத்தொடர்ந்து அவரின் எதிர்க்கட்சி தலைவர் பதவியும் பறிபோனது.

(2) சம்பந்தர் 1977 தேர்தலில் முதல் முறையாக திருகோணமலை தொகுதியில் தமிழர் விடுதலைக்கூட்டணியில் போட்டியிட்டு வென்றார்.

1983 இனக்கலவரத்தால் 3 மாதங்கள் பாராளுமன்றத்துக்கு வாராத காரணத்தால் எம்.பி.பதவியை இழந்தார்.

★ 1989 ,1994 பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வி,2001 மூதூர் முதல்வர் எஸ் .தங்கத்துரையின் மறைவையடுத்து திருகோணமலை மாவட்ட எம்.பியானார்.

1961 தமிழரசுக்கட்சியின் சத்தியாக்கிரக போராட்டத்தால் கைதாகி,பனாகொட இராணுவ முகாமில் அமிர்தலிங்கத்துடன் இளைஞரான இவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்.

அமிர்தலிங்கம் 6 மாதங்கள் சிறையில் இருந்தார். ஆனால்,சம்பந்தர் சட்டத்தரணி பணியை மேற்கொள்ள வேண்டும் எனக்கூறி சிறையில இருந்து விடுவித்துக்கொண்டார்.

★ அமிர்தலிங்கம் 1970 தேர்தலில் வட்டுக்கோட்டை தொகுதியிலும், 1989 தேர்தலில் மட்டக்களப்பிலும் தோல்வியடைந்தார்.

★ அமிர்தலிங்கம் அடுத்த தைப் பொங்கல் தமிழ் ஈழத்தில் என்று கூறி வந்தார்.

★ சம்பந்தர் அடுத்த தீபாவளிக்கு முன் அரசியல் தீர்வு என்று கூறிவந்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் அமிர்தலிங்கம்.சர்வகட்சி மாநாடு,திம்பு பேச்சு வார்த்தைகளில் பங்குபற்றி இனப்பிரச்சினை தீர்வை வலியுறுத்தினார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு1 ஐ.தே.க.அரசின் தமிழர் மீதான வன்முறைகள் குறித்தும் இந்தியா மற்றும் உலக தலைவர்களிடம் எடுத்துக்கூற



வெளிநாடுகள் சென்றார்.

★ சம்பந்தர் எதிர்க்கட்சித்தலைவராக வெளிநாடுகளுக்கு சென்று தமிழர் பிரச்சினையை பேசவில்லை.

★ சம்பந்தர் வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் கொழும்பில் பேச்சுவார்த்தை.

★ எதிர்க்கட்சி தலைவரான அமிருக்கு எதிராக ஐ.தே.க அரசால் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டது.(1977)

★ சம்பந்தருக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வேண்டும் என ஐ.தே.க அரசு கோரிக்கை. (2018)

★ அமிர்தலிங்கம் சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோவுக்கு எதிராக ஐ.தே.க.அரசு கொண்டுவந்த குடியுரிமையை பறிக்கும் தீர்மானத்தை எதிர்த்து பாராளுமன்றத்தில் பேசினார். எதிர்த்து வாக்களித்தார்.(1980)

★ சம்பந்தர் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில்,பிரதமரை ஆதரித்து வாக்களித்தார்.

★ சம்பந்தர் மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிர்க்கட்சி பதவி வழங்குவதை எதிர்த்து பேசினார்.(2018)




# புதிய ஆளுநர்கள் நியமனமும் கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநரும்





**தந்திமகன்**

கடந்த வெள்ளிக்கிழமை நாட்டின் ஐந்து மாகாணங்களுக்கான புதிய ஆளுனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதில் இரண்டு முஸ்லிம்களுக்கு ஆளுநர் பதவிகள் கிடைத்துள்ளமை பாராட்டுக்குரியது. குறிப்பாக கிழக்கு மற்றும் மேல்மாகாணங்களுக்கே இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளன. மேல்மாகாணத்தைப் பொறுத்தளவில் கௌரவ ஆசாத்சாலி அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் மேல்மாகாணத்தினைச் சேர்ந்தவர். ஆகவே அவருக்கு அது பொருத்தமான பதவியாகும். அதேபோலவே கிழக்கு மாகாணத்திற்கும் கிழக்கு மகாணத்தினைத் சேர்ந்த முன்னாள் அமைச்சர், பிரதியமைச்சர், ராஜங்க அமைச்சர் என்று பல வருடங்களாக பாராளுமன்றத்தை அலங்கரித்த மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி மண்ணின் மகிந்தனுக்கு இப்புதிய பதவி கிடைத்திருக்கிறது. வாழ்த்துக்கள். இன்று இப்பதவியானது ஜனாதிபதி அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்ததன் பிரகாரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆளுநர் எம்.எல்.ஏம். ஹிஸ்புல்லா அவர்களுக்கு முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சராக இருந்து முன்னாள் அமைச்சர் அதாஉல்லாவுடன் கருத்து முரண்பாடுகள் காரணமாக தற்போது பிரிந்துள்ள எம்எஸ். உதுமாலெவ்வை அவர்கள் வாழ்த்தினைத் தெரிவித்திருக்கின்றார். ஒரு காலகட்டத்தில் ஆளுநர் ஹிஸ்புல்லா அவர்களும், முன்னாள் மகாடண அமைச்சருமான உதுமாலெவ்வை அவர்களும் மறைந்த தலைவர் வாழ்ந்த காலத்தில் ஒரே கட்சியில் தன்னை இருப்பாக்கியவர்கள். இன்று அந்தக் கட்சியிலிருந்து விலகி புதிய புதிய கட்சிகளுடன் இணைந்திருந்தனர். இருப்பினும் ஆளுநர் ஹிஸ்புல்லா சுதந்திரக்கட்சியாகவே மாறிவிட்டார். முன்னாள் மாகாண அமைச்சரான எம்.எஸ். உதுமாலெவ்வை அவர்களும் தேசிய காங்கிரஸாக இருந்த போதிலும் அவர்களும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆதரவான சுதந்திரக் கட்சியாளர்களே. அந்த வகையில் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றார் எனக் நாம் கூறலாம். இப்போது நாட்டின் தேசிய கட்சியில் தன்னை இணைத்துள்ளதன் பிரகாரம் தனது கட்சிக்காரர் என்பதாலும், அதே மாகாணத்தைச்சேர்ந்த உரித்துடையவருமான ஹிஸ்புல்லா அவர்களுக்கு வழங்கப்பட்ட இப்பதவி பொருத்தமானதாக இருக்கலாம் என்பது நமது கணிப்பு.

அதிலும் ஹிஸ்புல்லா அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் சொற்ப வாக்குகளால் தோல்வியடைந்தார். தேசியப் பட்டியல் ஊடாக மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகி, பிரதியமைச்சராகினார். கடந்தாண்டின் இறுதியில் ஏற்றபட்ட பாராளுமன்ற அமளிதுமளியில் முழு அமைச்சரானார். ஒருமாதகாலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அவர்களுடைய அமைச்சரவையில் இருந்தார். பின்னர் அது பறிபோன நிலையில் புதிய அமைச்சரவையில் சுதந்திரக்கட்சிகாரன் என்பதால் அமைச்சுப்பதவி வழங்கப்படவில்லை. இந்நிலையில்;தான் மிகவும் ஆளுமையுள்ள, அபிவிருத்திகளை தைரியமாக முன்னெடுக்கின்ற ஒருவருக்கு ஜனாதிபதி சரியான தெரிவினை மேற்கொண்டு ஹிஸ்புல்லா அவர்களை நியமித்திருக்கிறார். இதேவேளை இத்தெரிவில் முகாவினர் மடிச்சுக்கட்டிக் கொண்டு குழப்பியிருப்பர். ஏனெனில் அவர்கள் ஐக்கியதேசியக் கட்சிக்குள் சங்கமித்துள்ளதால் இதில் கையடிக்க முடியாமல் போனதாக மக்கள் கூறுகின்றனர்.

இதேவேளை கிழக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா ஒருவகையில் செயல்மிக்க அபிவிருத்தியின் முன்னோடியாவார். தனது ஊரை அரபு நாடுகள் போன்று மாற்றியமைத்திருக்கிறார். சொந்த ஊரின் அபிவிருத்தியில் கனிசமான பங்கினை அவர் வகித்திருக்கிறார். தன்னுடைய மக்களின் அனைத்து விடயதானங்களிலும் ஊடுருவி சென்று அரபு நாடொன்றின் உதவியுடன் பல்கலைக்கழகம் ஒன்றையே கட்டி முடித்திருக்கிறார். மட்டக்களப்பில் குறிப்பாக மிகவும் நெருக்கடியாக வாழ்ந்து வரும் காத்தான்குடி மக்களை மாவட்டத்தின் எல்லைகளுக்குள் குடியேற்றி வாழச் செய்து வருகின்றார். காத்தான்குடி தென்னாசியாவிலேயே மிகவும் நெருக்கமாக வாழ்கின்ற ஒரு நகரமாக கணிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் தன்னுடைய மக்களின் இருப்பினை தக்கச் செய்வதற்காக தன்னை தியாசம் செய்து வருகின்ற ஒரு அரசியல்வாதி. இவருக்கும் எதிர்ப்பலைகள் இல்லாமலும் இல்லை. இவருடைய அரசியல் பயணத்தில் சிம்ம சொப்பனமாக இருக்கின்றனர் நல்லாட்சிக்கான கட்சி, (எம்.எப்.ஜி.ஜி), முஸ்லிம் காங்கிரஸ் போன்றவர்கள் எதிர்த்த போதெல்லாம் பொங்கியெழுந்து தன்னை உறுதிப்படுத்துவதில் மாகா கெட்டிக்காரர் ஆளுனர் ஹிஸ்புல்லா அவர்கள் தன்னுடைய சேவையை கிழக்கு மாகாணம் முழுவதும் செய்வதற்கு இறைவன் ஒரு வரத்தை வழங்கியிருக்கின்றான்.

அந்த வகையில் புதிய ஆளுநர் இலங்கையில் இதுவரை காலமும் நியமிக்கப்பட்டிருந்த ஏனைய சமூகத்தவர்களாவாவர்கள். இம்முறை இரண்டு புதியவர்களான முஸ்லிம்களை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் கல்வி, சுகாதாரம், காணி, கடல் அரிப்பு, விவசாயம், போன்ற பல பிரச்சினைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்ற ஒரு மாகாணமாகும். குறிப்பாக நாம் கூறுவதானால் கிழக்கு மாகாணத்தின் கல்வி ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு ஒன்பதாவது இடத்தில்தான் இருக்கிறது. அதனை மேம்படுத்தும் நடவடிக்கைகளை புதிய மகாடணக் கல்விப் பணிப்பாளர் திருவாளர் எம்.கே.எம். மன்சூர் அவர்கள் பல முன்னோடித்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார். அவர் இவ்வருடம் முதல்நாளே பாடசாலைகளில் பாடங்கள் நடைபெறவேண்டும் என்று சுற்றுநிருபம் அனுப்பி அதனை செயலில் காண்பித்திருந்தார். அனேகமான பாடசாலைகளில் முதல்நாள் பாடங்கள் அனைத்தும் நடைபெற்றமை பெற்றோர் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றதொரு செயலாகும். இதுபோலவே கிழக்கு மாகாணத்தின் ஏனைய விடயங்களும் துயர் நிறைந்தாக இருந்து வருகின்றமை புதிய ஆளுனருக்குத் தெரியாத விடயமல்ல. இருப்பினும் சற்று தொலைவிலுள்ள குறி;ப்பாக கல்முனைக்கு அடுத்ததாக காணப்படுகின்ற பொத்துவில் வரையான பிரதேசத்தில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதனையும் ஆளுனர் அவர்கள் கவனத்திற் கொண்டு தீர்க்க வேண்டும் என்பதே நமது எதிர்பார்ப்பு.

கல்முனை கல்வி வலயத்தில் நிறைந்த ஆசிரியர் வளம் உள்ளது. அந்த ஆசிரியர் வளத்தை வைத்துக் கொண்டு கல்முனை கல்வி வலயம் கிழக்கில் முதல் வலயமாகவோ, நாட்டின் முன்னிலை வலயமாகவோ எழவில்லை. ஆனால் ஆசிரியர்கள் நிறைந்திருக்கின்றனர். அக்கரைப்பற்று போன்ற கல்வி வலயங்களில் ஆசிரியர் தட்டுப்பாடு நிறைந்து காணப்படுகின்றது. அதனை நிவர்த்தி செய்யும் முகமாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இடமாற்ற முறையொன்றை அமுல்படுத்தியிருந்தார். அது முழுமைப்படுத்தப்படவில்லை. அரசியல்வாதிகளின் ஆதரவுள்ள சில ஆசிரியர்கள் தன்னுடைய ஆதரவாளரான ஹிஸ்புல்லா அவர்களைத் தொடர்புகொண்டு அரசியல் அழுத்தங்களால் இடமாற்றம் நடைபெறாமல் போகுமாக இருந்தால் அக்கரைப்பற்று மட்டக்களப்பு மேற்கு, திருக்கோவில் கிண்ணியா போன்ற வலயங்கள் மிகுந்த கவலையடையும் என்பதை புதிய ஆளுநர் அறிந்து கொள்வது சிறந்தாகும்.

அதுபோலவே பொத்துவிலுக்கான புதிய கல்வி வலயத்தை முன்னெடுக்க வேண்டிய பாரியதொரு பொறுப்பும் புதிய ஆளுநர் அவர்களுக்கு உண்டு. உண்மையில் பொத்துவில் கல்விப் பிராந்தியம் அக்கரைப்பற்று கல்வி வலயத்துடன் இணைந்திருந்தால் பொத்துவிலில் உப கல்வி வலயம் ஒன்று சில வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது பெயரளவில் மாத்திரம்தான் இயங்குகின்றது. அதனை முழுமைப்படுத்தி அக்கரைப்பற்றிலிருந்து வேறாக்கி அதனை அபிவிருத்தி செய்வதற்கும், தனித்துவமாக இயங்குவதற்கும் புதிய ஆளுநர் உதவவேண்டும் என்பதும் நமது அவாவாகும். மேலும் பொத்துவில் பிரதேசம் கடுமையாக கல்வியில் பின்னிலையில் காணப்படுகின்றது. காரணம் அதிகமான ஆசிரியர்கள் கல்வியை விட்விட் அரசியல் வாதிகளுடன் இணைந்து அரசியல் செய்கின்றவர்களாகவும் மாறியிருக்கின்றார்கள். அங்குள்ளவர்களில் பலர் இவ்வாறு காணப்படுவதும் பொத்துவில் கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது இல்லாமலாக்கப்படுவதற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதும் நமது அவா.

இதுபோல் பல ஆயிரமாயிரம் பிரச்சினைகளும், முரண்பாடுகளும், அரசியல் பின்புலங்களும் உரித்துக் கொண்டாடுவதன் காரணமாக கல்வி வீழ்ச்சியடைந்து வருவதை ஆய்வுகள் ரீதியாக காணமுடியும். எனவேதான், புதிய ஆளுனர் தன்னுடைய பணியில் அதிகூடிய கவனமெடுப்பீர்கள் என்கிற நம்பிக்கையும் கல்வியில் அக்கரைகொண்டுள்ளவர்களிடம் காணப்படுகின்றது. ஏனெனில் ஆளுனர் அவர்கள் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பேராதனை பல்கல்லைக்கழகத்தில் தன்னுடைய பட்டத்தைப் பெற்றவர். அதனால்தான் என்னவோ, காத்தான்குடிப் பிரதேசத்தில் மாத்திரமன்றி மட்டக்களப்பு எங்கும் கல்வி அபிவிருத்திக்கு கூடுதலான பங்களிப்பினை மேற்கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும்.

ஆகவேதான் இது போன்ற விடயங்களில் ஆளுநர் ஹிஸ்புல்லா அவர்கள் ஆழமாக உடூருவார் என்பதையும் திடமாக நம்பலாம். ஏனைய அரசியல் வாதிகளைப்போல அல்லாது சாதிக்கப்பிறந்தவர் ஹிஸ்புல்லா. அதன் காரணமாக அபிவிருத்திகளை இலகுவாக மாகாணம் முழுவதும் செய்வார் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதாக கிழக்கு வாழ் மக்கள் கூறுகின்றனர்.

இதேபோன்று அங்குள்ள தமிழ் மக்களுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டிருந்தார். இது சில நபர்களுக்கு பீடிக்காமையினால் யாருக்கு நஷ்டம் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இதேபோன்றுதான் ஆளுநர் ஹிஸ்புல்லா அவர்களுக்கு மேலும் சில தகவல்களை வழங்க வேண்டியிருக்கிறது. கிழக்கில் குறிப்பாக கல்முனையை அடுத்துள்ள பொத்துவில் வரையான பிரதேசங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகளை இங்கு தொட்டுக்காண்பிக்கலாம் என எண்ணுகின்றேன். பெரும்பாண்மை இனமாக முஸ்லிம்களைக் கொண்ட இந்தக் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அரசியல் கட்சிகள், தலைமைகள், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் இருந்தபோதும் இதுவரைக்கும் அவர்களால் நிறைவேற்றப்படாத பல திட்டங்கள் இருக்கின்றன. மக்களிடமருந்து அநீதியான முறையில் பறிக்கப்பட்ட உரிமைகளும் உடமைகளும் உள்ளன. இதனை எந்த அரசியல்வாதியும் இதுவரை தீர்த்து வைத்ததில்லை. இனியும் தீர்ப்பார்கள் என்ற நம்பிக்கையும் இல்லை.

மூன்று இனமும் சுமூகமாக வாழும் இந்த மாகாணத்தில் இனவாத கருத்துக்களையும், செயற்பாடுகளையும் மேற்கொண்டு இனங்களுக்கிடையில் சுமூகமற்ற உறவை ஏற்படுத்தி தங்களின் அரசியல் இலாபத்திற்காக செயற்படும் அற்ப அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள். இதனால் அனைத்து இன மக்களும் துன்பமடைந்திருக்கிறார்கள். ஆகவே இருக்கும் அரசியல்வாதிகளைத் தவிர்த்து புதிய ஆளுனராக பதவியேற்றிருக்கும் நீங்கள் தீர்த்;து வைப்பீர்கள் என எண்ணுகி;ன்றோம். அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இதுவரை மக்களிடம் கையளிப்படாமல் நுரைச்சோலை வீடமைப்புத் திட்டம், இதுவரை தீர்க்கப்படாத அக்கரைப்பற்று வட்டமடு விவசாய காணிப் பிரச்சினை, இதுவரை தீர்வு கொடுக்கப்படாத அக்கரைப்பற்று நுரைச்சோலை வேளாண்மைக் காணிப்பிரச்சினை, ஒலுவில் துறைமுகத்தினால் ஒலுவில் பாலமுனை பிரதேச மக்களுக்கு ஏற்படும் மண்ணரிப்பு பிரச்சினை, பொத்துவில் பிரதேசத்தில் நீண்டகாலமாக காணப்படும் குடிநீர்ப் பிரச்சினை, இறக்காமம் பிரதேசத்தில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட மாயக்கல்லி சிலைப் பிரச்சினை, சம்மாந்துறை பிரதேசத்திற்குட்பட்ட அபகரிக்கப்பட்ட காணிப்பிரச்சினை, ஒலுவில் அஷ்ரப் நகர் பிரதேச காணிப் பிரச்சினை என்று அடுக்கிக்கொண்டே செல்ல முடியும். அம்பாறை மாவட்டத்தில் 43 வீதமிருக்கும் முஸ்லிம்களின் கையில் 12 வீதமான நிலம் மட்டுமே இருக்கும் ஒரு துயரை யாரும் அறியாமலில்லை. அப்படியாக திட்டமிட்டு வேண்டுமென்றே பல்லாயிரக்கணக்கான காணிகள் எம்மக்களிடமிருந்து அரசியல்வாதிகளால் காலாகாலமாக பறிக்கப்பட்ட அநீதிகளும் உண்டு.

எனவே மக்கள் நம்பிக்கையிழந்த அரசியல்வாதிகளினால் தீர்த்து வைக்கப்படாத இந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைக்குமாறு இந்த மாகாணத்தின் ஆளுநராக பதவியேற்றிருக்கும் உங்களிடம், தமிழ்பேசும் சமூகத்தை நேசிக்கக்கூடியவர் என்கிற அடிப்படையில் இவற்றை முன்னிலைப்படுத்தி அடுத்த ஆளுனர் ஒருவர் நியமிக்கும் வரையான காலத்திற்குள் நிரந்தரமான சேவைகளை வழங்குவீர்கள் என்பதை மக்கள் விரும்புகின்றனர் அதுதான் எமது எதிர்பார்ப்பும். பொறுத்திருந்து பார்ப்போம். புதிய ஆளுனரின் சேவைகளையும், அர்ப்பணிப்புக்களையும்?

# குரோதங்களை விடாதவரை சமாதானம் என்பது எட்டாக்கனி

**சத்தார் எம் ஜாவித்**

மனிதன் மனிதனாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இதற்கு அவன் மற்றவர்கள் மீது கொண்டுள்ள குரோதங்களை மறந்து அவர்களை மதிக்கக் கூடியவனாக வாழ வேண்டும். தன்னிடமுள்ள சிறந்த குணாதியங்கள் மூலம் மற்றயவர்களைப் புரிந்து கொள்ளக் கூடியவனாகவும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இந்தப் பண்புகளை கடைப்பிடிக்கப்படாத சந்தர்ப்பங்களில்தான் சமுகத்தில் அமைதியற்ற குழப்ப நிலைமைகள் ஏற்படுகின்றன.

இன்றைய சூழ் நிலையில் இலங்கையில் அரசியல் ரீதியாக ஒருவகையான குழப்ப நிலைமைகள் தோற்றம் பெற்று மக்களின் அமைதி வாழ்விற்கு பாரியதொரு சவாலான விடயமாக இருக்கின்றது. இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் ரீதியான பிரச்சினைகள் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி அது மக்களை மிகவும் மோசமான பின்னடைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. இந்த நிலைமைகள் இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பாரியதொரு சவாலாக உள்ளமையையும் இங்கு குறிப்பிடலாம்.

மானிட வாழ்வு என்பது ஒவ்வொருவருக்கும் கிடைத்துள்ள இறைவனின் அருக்கொடையாகும். இதனை அவன் மனிதன் என்ற வகையில் சரியான முறையில் கடைப்பிடித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இந்த நிலையில் இருந்து அவன் மாறுபட்டு மற்றவர்களை அல்லது மற்றய சமுகத்தினை குரோத மனங்கொண்டு பார்ப்பவனாக இருந்தால் அங்கு அமைதியையோ அல்லது சமாதானத்தையோ கண்டு கொள்ள முடியாது. மாறாக அது பாரிய குழப்ப நிலைமைகளை தோற்று வித்து வன்முறைக் கலாசாரத்திற்கு வித்திடும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும் இந்த நாட்டில் வாழ்பவர்கள் பல்லின சமுக, பல்சமய இயல்புகளைக் கொண்டவர்களாகவும், மொழி அடிப்படையிலும் வேறுபட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவ்வாறான பல்லின சமுகக் கட்டமைப்புக்குள் வாழும் மனிதன்; ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் வாழும்போது எதிர் கலாத்தில் ஒரு சிறந்த சமுகக் கட்டமைப்பைக் கொண்ட மனிதர்களை உருவாக்கலாம்.

ஆனால் இன்றைய நிலையில் இலங்கையை எடுத்துக் கொண்டாள் ஒருவரை ஒருவர் விரோதிகளாகவும், குரோத மனப்பாங்குடனும் நோக்கும் ஒருவகையான துர்ப்பாக்கிய நிலைமைகளே உருவாகியுள்ளது. இதன் காரணமாகவே இந்த நாட்டில் பலவாறான வன்முறைக் கலாசாரங்கள் தலைவிரித்தாடுவதுடன் நாட்டின் ஜனநாயக கோட்பாடுகள் முற்றாகவே மழுங்கடிக்கப்பட்டு மற்றவர்களை தீய எண்;ணங் கொண்டு பார்க்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள இனவாத செயற்பாடுகளுக்கு சமய மற்றும் அரசியல் ரீதியான இரு காரணங்களே மேலோங்கி நிற்கின்றன. இவை இரண்டுமே இன்று இந்த நாட்டின் தலைவிதியை தீர்மாணிக்கும் சக்திகளாக காணப்படுவதுடன் தீய எண்ணங் கொண்டுள்ள ஒருசில குழுக்களும், சமயப் போதகர்களும் சிறுசிறு அற்பக் காரணங்களை வைத்துக் கொண்டு சிறுபான்மை மக்களை இலக்கு வைத்து வன்முறைகளுக்கு தூபமிடும் கபடத்தனங்களே அதிகம் இடம் பெற்று வருகின்றது. மேற்படிச் செயற்பாடுகள் இந்த நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் மக்கள் மத்தியில் ஒருவகையான வெறுப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

அதிகமான பிரச்சினைகளுக்கு ஒருசில அரசியல் வாதிகளே பின் நின்று உரமூட்டுவதால் இந்த நாட்டில் அமைதிக்குப் பதிலாக சண்டைகளும், போட்டித் தன்மைகளுமே காணப்படுகின்றன. இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமைகள் சகல இன மக்களையும் தேவையற்ற வகையில் குழப்ப நிலைமைகளுக்கு உள்ளாக்கி ஒருவரை ஒருவர் கர்வத்துடனும், எதிரிகலாகவும் கண்டு கொள்ளும் சந்தர்ப்பங்களையே ஏற்படுத்தி வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் அவ்வளவு ஆக்கபூர்வமான விடயங்களாக அமையாது.

கடந்த காலங்களில் இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் உடல், உள ரீதியாகவும், சமய ரீதியாகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக தற்போதைய அரசாகவோ அல்லது முன்னயை அரசாகவோ இருக்கட்டும் அவர்களின் காலங்களில் இனவாதம் என்ற அரக்கன் சிறுபான்மை மக்களான முஸ்லிம்களையும், தமிழ் மக்களையும் கடுமையான முறையில் பாதித்துள்ளது. முக்கியமாக அது வடக்காக இருக்கலாம், கிழக்காக இருக்கலாம் அல்லது மேற்காக இருக்கலாம் நாட்டின் எல்லாத் திசைகளிலும் இனவாதம் தலைவிரித்தாடுவதுடன் இலங்கை வாழ் முஸ்லிம்கள் மீது இனவாதச் செயற்பாடுகள் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதுடன் அடிக்கடி அமைதியற்ற நிலைமைகளும், குழப்பங்களும்கூட இடம் பெற்று வருகின்றமையும் அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் அரசியலை எடுத்துக் கொண்டால் அது இன்று ஒரு வகையான போட்டித் தன்மைகளில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில்


II ஆம் பக்கம் பார்க்க....

# சூடு பிடிக்கும் எதிர்க்கட்சி தலைவர் விவகாரம்

தனிப்பட்ட வாழ்வில் பொய்களை எவரும் கொண்டாடுவதில்லை. அது வெறுக்கத்தக்க ஒரு விடயமாகவே கணிக்கப்படுகிறது.

ஆனால் அரசியலில் அப்படியல்ல. பொய்கள் ரசிக்கப்படுகின்றன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கொண்டாடப்படுகின்றன.

இன்று உயிர்வாழ்பவர்களில் சர்வதேச உறவுகள் துறையில், குறிப்பிடத்தகு அறிவாளிகளில் ஒருவரான ஜோன் மியசைமர் எழுதிய 'தலைவர்கள் ஏன் பொய் சொல்கிறார்கள்' (WHY LEADERS LIE & The Truth about Lying in International Politics) - என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்க தலைவர்கள் எவ்வாறு தங்களுடைய சொந்த மக்களுக்கும் உலகத்திற்கும் பொய்களை கூறினார்கள், என்பதை ஆதாரபூர்வமாக மியசைமர் அந்த நூலில் விபரித்திருக்கின்றார்.

இந்த பொய்கள் இரண்டு பிரதான இலக்குகளை கொண்டிருக்கும். ஒன்று சொந்த நலன்களுக்கானது.

இரண்டு நாட்டின் நலன்களுக்கானது. அதனை நூலின் ஆசிரியர் மூலோபாய பொய்கள் (Strategic lies) என்கிறார். அந்த பொய்கள் சர்வதேச ராஜதந்திர உறவுகளில் எப்போதுமே தவிர்க்க முடியாதவை.

சர்வதேச அரசியலும் பொய்களும் ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் போன்றவை. அவை பிரிக்க முடியாதவை.

ஒரு மூத்த மனிதர், வாழ்வில் சாதிப்பதற்கும் அனுபவிப்பதற்கும் வயதில்லாதவரான இரா.சம்பந்தன், அந்த கதிரையின் மீதுள்ள அடங்காத ஆசையின் காரணமாக எந்தளவிற்கு பொய்களை சொல்பவராக மாறியிருக்கிறார் என்பதை காண முடிந்தது.

உண்மையில் அவரது பொய்கள் தமிழ் மக்களின் நலனுக்கானது எனில், அந்த பொய்கள் தொடர்பில் பேச வேண்டிய தேவையில்லை.

இந்தப் பத்தியாளருக்கு அதில் முரண்பாடும் இல்லை ஏனெனில் அது மக்களுக்கானது. ஆனால் சம்பந்தன் தனது ஆசைகளுக்காக, தொடர்ந்தும் பொய்களை கூறிவருவதுதான் தவறானது. கடந்த மூன்று வருடங்களாக சம்பந்தன் பொய்களை தவிர எதனையும் கூறவில்லை.

எந்தவொரு பொய்யும் மக்களுக்கானதாக இருக்கவில்லை. தமிழ் அரசியல் சூழலில் சொல்லப்பட்டுவரும் பெரும்பாலான அரசியல் பொய்கள் மக்களது நலன்களை முன்னிறுத்தி சொல்லப்படுபவை அல்ல மாறாக, அரசியல்வாதிகளின் சொந்த அரசியல் நலன்களுக்காகவே அவை சொல்லப்படுகின்றன.

இந்தப் பொய்களை தரம்பிரித்து அறியும் ஆற்றல் மக்கள் மத்தியில் வளராதவரையில் அந்தப் பொய்கள் மக்களால் ஏதேவொரு வகையில் ரசிக்கப்படலாம்.

உதாரணமாக தமிழ் சூழலில் சிலர், தங்களுக்கு பிடிக்காதவர்களை உளவுத்துறைகளோடும், ஏனைய நாடுகளோடும் தொடர்புபடுத்தி பிரச்சாரங்களை மேற்கொள்வதும் கூட, சொந்த அரசியல் நலன்களுக்கான பொய்கள்தான்.

1977ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில், 18 ஆசனங்களை பெற்றதன் மூலம், அன்று தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி, நாட்டின் பிரதான எதிர்க்கட்சியாக மாறியது.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். அதன் பின்னர் 2015இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 16 ஆசனங்களை பெற்றதன் மூலம், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு அவ்வாறானதொரு வாய்ப்பு கிடைத்தது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம். 2015இல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு கூட்டரசாங்கத்திற்கான உடன்பாட்டை செய்து கொண்டதன் பின்னணியில்தான், கூட்டமைப்பு பிரதான எதிர்க்கட்சியாக வரமுடிந்தது.

அந்த அடிப்படையில் சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவரானார். தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவரான இரண்டு சந்தர்ப்பங்களிலும் தமிழர் தரப்பு, ஒரு தனிக்கட்சியாக பாராளுமன்றம் சென்றிருக்கவில்லை என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக பதவிவகித்த காலமும், சம்பந்தன் பதவிவகித்த காலமும் ஒன்றல்ல. இரண்டுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுண்டு.

சம்பந்தன், இந்த பதவியை பொறுப்பேற்ற போது, அது தொடர்பில் சில விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

இன்றைய சூழலில் சம்பந்தன் இந்தப் பொறுப்பை தவிர்ப்பதே நல்லது என்றவாறும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அதற்கு மாறாக, இந்தப் பதவியைக் கொண்டும் தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய முடியுமெனின் அதனை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை என்றவாறும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் கடந்த மூன்றுவருட காலமாக, ஒரு எதிர்க்கட்சித் தலைவர் என்னும் வகையில் சம்பந்தன் என்ன செய்தார் என்று ஒரு கேள்வியை கேட்டால், அவர் ஏன் இந்தப் பதவியை எடுத்தார் என்பதற்கான பதில் கிடைக்கும்.

அந்தளவிற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்னும் கதிரையை தன்னுடைய சொந்த அதிகார ஆசைகளுக்காகவே சம்பந்தன் பயன்படுத்தியிருந்தார்.

ஆகக் குறைந்தது ஒரு நல்ல எதிர்க்கட்சித் தலைவராகக் கூட அவரால் செயற்பட முடியவில்லை.

அவ்வாறானதொரு பதவியை தக்கவைப்பதற்காகத்தான், இன்று சொந்த மக்களுக்கு புதிய கதைகள் சொல்லப்படுகின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சரவையில் இடம்பெறுவதால், எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டமைப்புக்குரியது என்றவாறு சுமந்திரன் ஒரு புதிய கதை சொல்கிறார்.

அவ்வாறாயின், ஏன், சந்திரிக்கா குமாரதுங்க காலத்தில், எதிர்க்கட்சியை கூட்டமைப்பு கோரவில்லை? அப்போதும் பாராளுமன்றத்தில் இப்போது உள்ளது போன்றதொரு நிலைமைதானே காணப்பட்டது!

தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையும் இல்லாத இந்தப் பதவிக்காக ஏன் இப்படி, அடிபட வேண்டும்? ஆகக் குறைந்தது இந்தக் கேள்விக்காவது பதில் இருக்கிறதா?

இன்று மகிந்த ராஜபக்சதான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட, எதிர்க்கட்சி அலுவலகத்தைவிட்டு சம்பந்தன் இதுவரை வெளியேறவில்லை.

ஜனநாயகம் என்று நோக்கினால் கூட, பாராளுமன்றத்தில் இரண்டாவது நிலையிலிருக்கும் மகிந்த தரப்பிடம் தானே எதிர்க்கட்சித் தலைவர் பதவி செல்ல வேண்டும்.

கடந்த இரண்டு மாதங்களாக ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகவே தாம் ரணில்விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக செயற்பட்டுவந்ததாக சம்பந்தன் கூறி வந்தார்.

ஜனநாயகம் தெரிந்த ரணில் எவ்வாறு தவறான முடிவை எடுத்திருப்பார்? ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக துணைநின்ற ஒரு சபாநாயகர் எவ்வாறு தவறான முடிவை எடுத்திருப்பார்? இவ்வாறான கேள்விகளுக்கு சம்பந்தன்; - சுமந்திரன் தரப்பின் பதில் என்ன?

ஒரு வேளை அவர்கள் இப்போது ஜனநாயக விரோதமாக செயற்பட்டிருக்கின்றார்கள், என்று சம்பந்தன்- சுமந்திரன் தரப்பு, கூற முற்பட்டால், கடந்த இரண்டு மாதங்களாக ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக நீங்கள் துணைநின்றதாக கூறுவதில் என்ன உண்மையிருக்க முடியும்?

எதிர்க்கட்சி விவகாரத்தில் சம்பந்தன் தவறான முடிவில் பயணிக்கின்றார் என்னும் அப்பிராயம், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மத்தியில் மட்டுமல்ல, பெரும்பாலான தமிழரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் உண்டு.

அவர்கள் இந்தப் பத்தியாளரிடம் பேசுகின்ற போது, தங்களது அதிருப்திகளை பகிர்ந்து கொண்டனர்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான டெலோவின் செயலாளரும் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவருமான சிறிகாந்தா, இந்தப் பத்தியாளரிடம் பேசுகின்ற போது, தனது அதிருப்தியை மிகவும் வெளிப்படையாகவே பகிர்ந்துகொண்டார்.

இந்த நாட்டுக்குள் ஒரு அரசியல் தீர்வை பெறுவதுதான் கூட்டமைப்பின் இலக்கு என்றால், தேவையில்லாமல் மகிந்த ராஜபக்சவை சீண்டும் வகையில் செயற்படுவது சரியான ஒன்றல்ல.

பிரதமர் விடயத்தில் நாங்கள் ஒன்றாக நின்றோம் அதில் ஒரு நியாயம் இருந்தது. ஆனால் எதிர்க்கட்சி விவகாரம் அப்படியல்ல.

இதில் ஜனநாயம் மகிந்த தரப்பின் பக்கம்தான் இருக்கிறது. மகிந்தவை இறுக்க வேண்டிய இடத்தில் நாங்கள் இறுக்கத்தான் வேண்டும்.

அதனை நாங்கள் கைவிடப்போவதில்லை ஆனால் தேவையற்ற வகையில் நாம் செயற்படுவது தவறானது.

எனவே சம்பந்தன், எதிர்க்கட்சி விடயத்தில் இவ்வாறு முட்டுப்பட்டுக் கொண்டிருப்பது சரியானதல்ல என்பதே தங்களின் நிலைப்பாடு என்றார்.

அரசியல் முடிவுகளில் தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புகளுக்கும் ஒரு கணிசமான பங்குண்டு.

நமது தமிழ்நிலை அரசியல் ஆய்வுகளில் இந்த விடயம் பெரியளவில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.



எதிர்க்கட்சி விடயத்தில் சம்பந்தனை வழிநடத்துவது அவரது தனிப்பட்ட ஆர்வங்கள்தான்.

அதாவது அவரது சொந்த நலன்கள். சம்பந்தன் எப்போதுமே தனது பதவிநிலை அந்தஸ்த்து, அதிகாரம் என்பவற்றில் கண்ணும் கருத்துமான ஒருவர். அதற்காக எவருடனும் சமரசம் செய்து கொள்ளக் கூடிய ஒருவர்.

அந்த அடிப்படையில்தான் அமிர்தலிங்கத்திற்கு பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமரும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

ஆனால் திடீர் அரசியல் குழப்பநிலையின் காரணமாக, அந்தப் பதவியில் தொடர்ந்தும் நீடிக்க முடியாமல் போனதை சம்பந்தனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பதவி மோகமும், அதனால் ஏற்பட்ட தடுமாற்றமும்தான் அவரை அலைக்கழிக்கிறது. ஆனால் ஒரு எதிர்கட்சித் தலைவராக தன்னால் என்ன செய்ய முடிந்தது என்னும் கேள்வியை ஆகக் குறைந்தது அவருக்குள்ளாவது, அவர் கேட்பாராக இருந்தால், அந்தக் கதிரைக்காக இந்தளவு இறங்கிப் போவது தொடர்பில், தன்னை எண்ணி, அவருக்கே ஒரு அருவருப்பு ஏற்படலாம்.

ஆனால் அதிகார போதையில் தன்னை மறந்திருக்கும் மனிதர்கள் தங்களை நோக்கி சிந்திப்பார்களென்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

**நன்றி: இணையம்**

## குரோதங்களை...

10 ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்போதைய காலகட்டம் பாரிய மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்ற ஒரு காலகட்டம் என்றே கூறலாம். குறிப்பாக அரசியலமைப்புக்கு மாற்றமான செயற்பாடுகளும்கூட அடிக்கடி இடம் பெற்று வருவதுடன் முக்கியமாக ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதற்கும், தமது கட்சிகளை வளர்த்துக் கொள்வதற்குமான வகையிலுமே மேற்படி நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டு வருகின்றமையையும் காண முடிகின்றது.

மேற்படி நிலைமைகள் மக்களின் வாழ்க்கையில் அதிகம் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. அரசியல் வாதிகளினதும், ஆட்சியாளர்களினதும் தற்போதைய செயற்பாடுகளில் மக்கள் விஷனங்கொண்டுள்ளனர் என்ற விடயமும் இங்கு முக்கியமான விடயமாகும். இவாகள்; அனைவருமே தத்தமது அரசியல் இருப்புக்களைத் தக்கவைத்துக் கொள்ளும் வகையில் சுயநலக் கொள்கைகளுடன் செயற்படுவதும் மக்கள் மத்தியில் கவலை கொள்ளச் செய்துள்ளது.

இந்த நாட்டின் அமைதிக்கும், சமாதானத்திற்கும் விருப்பமுள்ள மக்களின் நலன்களுக்காக பாடுபடும் சர்வமத அமைப்புக்கள், மற்றும் சமுகச் செயற்பாட்டாளர்கள் மத்தியில் தற்போதைய அரசியல் மாற்றங்களும், அதன் காய் நகர்த்தல்களும் பாரிய கவலையை ஏற்படுத்தியுள்ளதுடன் மேற்படி நிலைமைகள் இவர்களின் சமாதானச் செயற்பாடுகளுக்கு பாரிய குந்தகத் தன்மைகளை ஏற்படுத்தி உள்ளது. இவர்கள்; சமாதானச் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதிலும் விடயத்தில் பாரிய இடர்களை எதிர் கொள்ளும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

எந்தவொரு அரசியல் செயற்பாடுகளும் மக்கள் நலன்களுக்காகவே அமைய வேண்டும், அதுவே ஜனநாயகச் செயற்பாடுகளும்கூட ஆனால் இந்த விடயங்கள் இலங்கையின் அரசியலில் இருக்கின்றனவா? என்றால் அது விடயத்தில் மறைநிலைமைகளே காணப்படுகின்றன. மக்கள் விரும்பும் அரசியல் செயற்பாடுகள் இல்லாதுபோய் அரசியல் வாதிகள் விரும் அரசியல் செயற்பாடுகளே இன்று மேலோங்கி வருகின்றன. இது ஒரு ஆபத்தானதும், சவாலானதுமான விடயமாகவே இருக்கின்றது.

அதிகமான அரசியல் வாதிகள் மக்கள் நலன்களை மறந்து விட்டு தமது பதவிகளுக்கும், அரசியல் இருப்புக்களுக்கும் விலைபோகும் ஒருவகையான மாயைகளுக்குள் மூழ்கி இருப்பதும் மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமைகள் இந்த நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு சவாலான விடயமாகவும், முட்டுக் கட்டையான விடயங்களுமாகவுமே இருக்கின்றன. இவர்களின் இவ்வாறான குறுகிய மனநிலைமைகள் நாட்டின் பொருளாதாரத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தி பொருட்களின் விலைமட்டங்கள் பண்மடங்கு அதிகரிப்பதற்கும் மக்கள் தமது வாழ்வாதாரத்தில் பின்னடைந்து செல்வதற்கும் வித்திட்டுள்ளது.

ஆட்சியில் இடம் பெறும் அரசியல் மாற்றங்களும், குழப்பங்களும் மக்களின் இயல்பு வாழ்வில் அல்லது அவர்களின் நாளாந்த செயற்பாடுகளிலும் அவர்களின் வாழ்வாதாரத்திலும் மாற்றங்கள் ஏற்படும் வகையில் இடம் பெற்று விடக்கூடாது என்பதே பொதுவான எதிர்பார்ப்பாகும். ஆனால் இந்த விடயங்கள் இன்று எல்லை மீறி மக்களையே பாதிக்கும் வகையில் இடம் பெற்று வருகின்றமையே கவலைக்குரிய விடயமாகும். இதற்குக் காரணம் அரசியல் போட்டித் தன்மைகளாகும்.

அரசியல் வாதிகளாக இருக்கட்டும், மதத்த தலைவர்களாக இருக்கட்டும் அல்லது பொதுமக்களாக இருக்கட்டும் ஒருவருக் கொருவர் புரிந்துணர்வுடனும் ஒற்றுமையாகவும் இருக்க வேண்டும். தமக்குள் இருக்கும் குரோதங்களை களைந்து சமாதானத்துடனும், ஒற்றுமையாகவும் வாழும் நற்பண்புகளை கடைப்பிடிக்க வேண்டுமே தவிர அற்ப அரசியல் இலாபங்களுக்காக ஒட்டுமொத்த சமுகத்தினையும் குழப்பத்திற்குள்ளும், பிரச்சினைகளுக்குள்ளும் ஆக்கும் வகையில் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் இருந்து விலகிக் கொள்வதன் மூலமே சிறந்ததொரு சமுகக் கட்டமைப்பை இலங்கையில் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

எனவே அனைவரும் நமாதானத்திற்காக தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டுமே தவிர தமக்குள் குரோதங்களை வளர்த்துக் கொள்ளக்கூடாது. குரோத மனப்பாங்குகளே இந்த நாட்டில் கடந்த காலங்களில் பல பிரச்சினைகளுக்கு வித்திட்டிருந்ததையும் அதன் மூலம் பல அழிவுகளையும் ஏற்படுத்தியிருந்தது என்பதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## தீர்வு..

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

என்பதே மக்களின் அபிலாசைகளாக காணப்படுகின்றது. 2015ம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மாநாட்டிலும் இந்த பரிந்துரைகளை போன்றே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று கண்காணிப்பகம் குறிப்பிட்டிருந்தது. அரசு இவற்றினை முழுமையாக நிறைவேற்றவில்லை.

கடந்த காலத்தில் சர்வதேசத்திற்கு வழங்கிய உறுதிமொழியினை நிறைவேற்றதா தற்போதைய அரசாங்கம் நாளுக்கொரு அமைச்சர்களையும், நாளுக்கொரு ஆளுனர்களையும் நியமிப்பதும், நிராகரிப்பதையுமே செய்து வருகின்றது. தமிழ் மக்களால் ஆட்சிபீடம்ஏறியதனை மறந்து செயற்படுவதனை போல் ஜனாதிபதியின் செயற்பாடும் அமைந்துள்ளது. கிழக்கு மாகாணத்திற்கான ஆளுனராக சகோதர சிங்கள இனத்தினைச்சேர்ந்தவரை கடந்த காலங்களில் நியமித்திருந்தமையுடன் தற்போது முஸ்லிம் இனத்தினைச்சேர்ந்த, தற்போதைய ஆட்சியில் இராஜாங்க அமைச்சராக இருந்த மட்டக்களப்பு காத்தான்குடியைச் சேர்ந்த எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாவை ஆளுனராக ஜனாதிபதி நியமித்துள்ளார். இவ்வாறான புதிய ஆளுனர் நியமனம் கட்சியினது இருப்பினை தக்கவைப்பதற்காக, வளர்ச்சிக்காக செய்யப்பட்டதாக பலரும் கூறிகொண்டிருக்கின்றனர். இதன்மூலம் மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளும் கட்சியை வளர்ப்பதான செயற்பாடாக அமையுமா? என்ற வினாவிருக்கின்ற அதேவேளை அவ்வாறு அமைகின்றபோது, மாகாணம் உரிய அபிவிருத்தியினை அடையாதுதெனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்போதைய சூழலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்காது ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கியமையினால், தமிழ்தேசிய கூட்டமைப்பின் சிபார்சுகளோ, எதிர்கோரிக்கைகளோ கவனத்தில் கொள்ளப்படுமா? என்பது பலரிடத்தில் சந்தேகமாகியுள்ளது. இதனால் தற்போதைய கிழக்கு மாகாண ஆளுனர் தமிழ்தேசிய கூட்டமைப்பின் முன்மொழிவுக்கு ஆதரவு வழங்குவாரா? என்பதும் சந்தேகத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது. எவ்வாறெனினும், கிழக்கு மாகாணத்தில் வசிப்பவர் என்ற ரீதியில், கிழக்கு மாகாணத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்காக வேலை செய்யக்கூடிய ஆளுனராக புதிய ஆளுனர் செயற்பட வேண்டும்.

## மலர்ந்துள்ள...

05 ஆம் பக்கத் தொடர்ச்சி

வருகின்றது. இக்கருத்துக் வலுச்சேர்க்கும் வகையிலேயே தமிழ் மக்கள் தங்களின் அடிப்படை தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை ஏமாற்றப்பட்டு வருகின்றனர். என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சமத்துவம் சமுநீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்திருந்தார். இவரது கருத்திற்கிணங்க ஆராயுமிடத்து தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் பிரதிநிதிகள் உட்பட தமிழ் தலைமைகளின் இவ்வாறான அசமந்த போக்குகளினாலேயே இன்று வடகிழக்கு மக்கள் வீதிக்கு வந்துள்ளனர். அவ்வகையில் காலம் காலமாக தமிழ் மக்கள் தங்களின் அடிப்படை தேவைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இவ்வாறு இவர்கள் ஏமாற்றப்பட்டு வருவதற்கு பிரதா காரணம் மிகச்சரியான மக்களுக்கு சேவை செய்யக்கூடிய நேர்மையான அரசியல் தலைமைகளை மக்கள் தேர்ந்தெடுக்க தவறியமையேயாகும். தேர்தல் காலங்களின் தங்கள் விஞ்ஞாபனம் மூலம் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முற்றிலும் முரணான முறையில் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். பெரும்பாலான தமிழ் மக்களின் வாக்குகள் எதிர்காக வழங்கப்பட்டதோ அதற்கு மாறாக வாக்குக்களை பெற்றுக்கொண்டவர்கள் செயற்பட்டு வருகின்றனர். மக்களை இவ்வாறு தொடர்ந்தும் ஏமாற்ற முடியாது. மக்கள் விழித்தெழும் காலம் மேலெழுந்துள்ளது. எனவே மக்களின் அடிப்படை தேவை முதல் அரசியல் உரிமை வரை வெளிப்படை தன்மையுடன்செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு காலம் காலமாக பொய்யான வாக்குறுதிகளை மட்டுமே நம்பி ஏமாற்றப்பட்டு வருகின்ற சமுகமான தமிழ் சமுகம் உட்பட பல சிறுபான்மையின புத்திஜீவிகள் அனைவரும் எதிர்காலத்தில் சிந்தித்து செயற்பட வேண்டும் என்பதே புத்தாண்டில் நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய புதிய சபதமாகும்.

# பாடசாலைகளில் தரம் ஒன்றில்

## பிள்ளைகளை அறிதலும் வித்தியாரம்ப நிகழ்வுகளும்

**எதிர்வரும் 2019 ஜனவரி 17ம் திகதியன்று தேசிய மட்டத்தில் இடம்பெறுகின்ற தரம் ஒன்று மாணவர்களை பாடசாலைகளோடு இணைத்துக்கொள்ளும் வித்தியாரம்ப நிகழ்வினை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

எதிர்வரும் 17ம் நாள் பாடசாலைகளில் தரம் ஒன்று மாணவர்களின் வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெறவிருக்கிறது. பாடசாலைக்குள் புதிதாக இணைந்துகொள்கின்ற இளம் துளிர்களை வரவேற்று ஏடுதொடக்கப் படுகின்ற நிகழ்வு அவனது வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக அமைய வேண்டும் என்கிற திட்டத்திற்கு அமைவாக வருடந்தோறும் இடம்பெறுவது வழமையான விடயமாகும். இருப்பினும் அதற்கு முன்னரான இருவார காலத்தில் அந்த மாணவன் பாடசாலைக்குள் வருகை தந்து பாடசாலையைப் பற்றிய எண்ணக்கருவினை அவனது மட்டத்தில் விளங்கிக் கொள்ளவும், அவனுடைய ஆரம்ப நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதை ஆசிரியர் அறிந்து கொள்ளும் வகையிலும் சில முன்னெடுப்புக்களை விளையாட்டு வீடு என்கிற வீட்டினுள் அவன் ஓடியாடி விளையாடக் கூடியவகையில் குட்டி வீட்டினைத் தயார்செய்து அங்கு அவனது நடவடிக்கைகள், அவனது விருப்பு வெறுப்புக்கள், புதிய நண்பர்களது உறவு, ஆசிரியருடனான தொடர்புகள் போன்ற பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கும் இன்றைய புதிய ஆரம்பக்கல்விக்கான கலைத்திட்டம் மகிழ்ச்சிகரமான ஆரம்பமாக இதனை முன்னெடுத்து வருகின்றமை முக்கியமாகும். ஆகவேதான் ஒரு பிள்ளையில் பாடசாலை புகுதலானது மாணவரினதும், பெற்றோரினதும் எதிர்காலத்தின் சிறந்த விளைநிலமாகி வளர்ந்து நாட்டுக்கும், அவனுக்கும், சமூகத்திற்கும் சிறந்தவனாகவும், பொருத்தப்பாடுடையவனாகவும், சிறந்த தலைவனாகவும் ஆக்குவதற்குரிய கைங்கரியத்தை ஆரம்பிக்கின்ற ஒரு நிகழ்வாகவும் வித்தியாரம்பம் காணப்படுகின்றது.

**அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்**

பாடசாலைக் கல்வியில் தரம் ஒன்றில் கற்கும் மாணவப்பருவம் மிக முக்கியமான ஒரு பருவமாகும். காலத்திற்குக்காலம் பாடசாலைக் கல்வியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அனைவரும் அறிவோம். அந்த வகையில் 2016ம் ஆண்டுமுதல், தரம் ஒன்றுக்கான கலைத்திட்ட மாற்றங்கள் ஏற்பட்டு அதன் பிரகாரம் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில், 1998 கல்விச் சீர்திருத்தங்க



ளின் கீழ் செயற்படுத்தப்பட்டுவந்த பிள்ளைகளை இனங்காணல் நிகழ்ச்சித்திட்டம் சார்ந்ததாக நடைபெறும் அபிவிருத்தி என்கிற நிகழ்ச்சிக்குப் பதிலாக பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் எனும் செயற்பாடு பல மாற்றங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

இது கடந்த வருடத்திலிருந்து பாடசாலையில் தரம் ஒன்றில் புதிதாக பிரவேசிக்கின்ற மாணவர்களை அடையாளம் காண்பதற்காகவும், மாணவர்களின் நிலைமைகளை அறிந்து கொள்ளவும், தொடர்ச்சியாக பாடசாலைக் கலைத் திட்டத்திற்குள் உள்வாங்கவும் இச்செயற்பாடு முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகின்றது. இது தொடர்பாக தேசிய கல்வி நிறுவகம் நாட்டிலுள்ள சகல வலயங்களிலும் சேவையாற்றுகின்ற ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு செயலமர்வுகளை நடாத்தியிருந்தது. அதனை தமது வலயங்களிலுள்ள தரம் ஒன்று கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்குப் பயிற்றுவித்து அதனை பாடசாலைகளில் செற்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாக பார்க்கின்றகல்வியின் நோக்கம் முழுமையான தனிநபர் விருத்தியின் ஊடாக சமூக விருத்தியினை உறுதி செய்வதாகும். நாட்டில் தேசிய கல்விக் கொள்கையினை உருவாக்கும் போது அவ்வவ் நபர்களின் முன்னேற்றங்கள், பல்வேறுபட்ட சமூகக் குழுக்கள் உட்பட முழுமையான சமூகத்தினால் நிறைவேற்றுவதற்காக எதிர்பார்க்கப்படும் தேசிய நோக்கங்களை எட்டக் கூடியதாக இருக்க வேண்டும். அபிவிருத்தி மற்றும் சிந்தனைகள் ஒரே திசையினைக் கொண்டதன்று பல்வேறுபட்;ட இணைப்புக்களைக் கொண்டதாகும். அத்துடன் பௌதீக, அறிவு, கலாச்சாரம், விழுமியத்தினைப் போன்று நேர் உள்ளீட்டினை தழுவக் கூடியவாறு இருக்க வேண்டும். எனவே பொதுக் கல்வியின் அடிப்படைக் கொள்கையினை வகுக்கின்றபோது நபர்களின் இணைந்த அபிவிருத்தியினைக் கேந்திரமாகக் கொண்டிருக்க வேண்டும்.

ஆரம்பப் பாடசாலைப் பருவம் தொடக்கம் பிள்ளையின் இயலுமைச் சக்தியினை இனங்கண்டு பொருத்தமானவாறு அவற்றை விருத்தி செய்யக் கூடியவாறு ஆரம்பக் கல்வியின் கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும். கல்வியின் ஊடாக பிள்ளைகளின் மனோநிலை மற்றும் உடல் உள விருத்திக்கு உயர்ந்தபட்சம் கவனம் செலுத்தி முழுமையான ஆளுமை விருத்திக்கு காரணமாக அமையக் கூடியவாறு செயற்பாட்டுக் கொள்கைகளினை வகுப்பது கட்டாயத் தேவையாகும். அதற்கான உறுதிப்படுத்துதல்களை வெளிக்கொரணரும்



டன் தொடர்புபடுகின்றது. இதனையும் கவனத்திற் கொண்டு மாணவர்களது செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும். அதாவது பேரியக்கத் திறன்கள், நுண் இயக்கத் திறன்கள், புரிகைத் திறன்கள், சமூகத் திறன்கள், மொழித் திறன்கள், இரசனைத் திறன்கள், தனிப்பட்ட சுகாதாரமும் பழக்கங்களும் கற்றலுக்கான திறன்கள்: என்ப வகையிலான செயற்பாடுகளை இவை கொண்டிருக்கின்றமை கண்கூடு. அந்தவகையில் பாடசாலைச் சூழலுக்குப் பிரவேசிக்கின்ற பிள்ளைகளிடம் இருக்க வேண்டிய தயார் நிலையை பிரதானமான இரண்டு இயல்புகளுடன் தொடர்புபடுத்தப் படுகின்றது.

குறிப்பாக, பிள்ளைகளிடம் இயல்பாகவே வளர வேண்டிய இசைவாக்கம், தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதும் ஆகிய இரண்டு இயல்புகளையும் மூன்று பரிமாணங்களில் நோக்கப் படுகின்றது. அதாவது, பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார்நிலை, பாடசாலையில் பிள்ளைகளுக்குள்ள தயார் நிலை, குடும்பத்தின் அல்லது பெற்றோரின் தயார்நிலை ஆகியவற்றுடன், பிள்ளையிடமுள்ள பாடசாலைக்கான தயார்நிலையைக் கண்டறிதலை அடிப்படையாகக்கொண்டு இச்செயற்பாடுகளை முறையாகவும், ஆய்வு ரீதியாகவும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கான திட்டமிடல்களை உள்ளடக்கிய கையேடு ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை வாசித்தறிந்து, ஆசிரியர்கள் உரிய முறையில் புதிய மாணவர்களை கையாள்கின்றனரா? செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா? என்பதை பாடசாலைகளின் அதிபர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்பார்வையிட்டு அறிக்கைப்படுத்தப்படுவதும் அவசியமானதாகும்.

மேற்படி இந்நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்வதன் அடிப்படையான நோக்கமாக கருதப் படுவது யாதெனில், முன்பள்ளியிலிருந்து பாடசாலைக்கு இடம்மாறும் போது பிள்ளையிடம் நிகழ வேண்டிய மாற்றங்களை இலகுபடுத்தவும், பிள்ளைகளிடம் எந்தளவு அடிப்படை அனுமதித் திறன்கள் விருத்தியடைந்துள்ளது என அறிந்து கொள்ளவும், பிள்ளைகளின் ஆற்றல் மற்றும் ஆற்றலின்மைகளினதும் இயல்புகளை இனங்காணவும், சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அதன்மூலம் வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை எளிதாக்கிக் கொள்ளவும் ஏதுவாக அமைகின்றது. மேலும், இச்செயற்பாடுகளின் பெறுபேறுகளை முதலாம் தரத்தின் நாளாந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைத்து, பிள்ளைகளின் ஒட்டுமொத்த விருத்தியையும் இலக்காகக் கொண்ட செயற்பாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. இதனை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஆரம்பக்கல்வியில் தரம் ஒன்றில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பொறுப்பாகக் கொள்ளப்படுகின்றது.

பாடசாலைக்கு வருகின்ற பிள்ளைகள் பொதுவாக முன் பள்ளிகளில் கற்றும், கற்காமலும், கிராமம், நகரச் சூழல்களிலிருந்தும், வசதி, வசதியற்ற வீடுகளிலிருந்தும் வருகை தருவர். இவ்வாறு பல்வேறு தரப்புடையவர்களும் ஒன்று சேர்கின்ற போது வேறுபாடுகள் காணப்படக்கூடிய சாத்தியங்கள் காணப்படலாம். அவ்வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு அவற்றை குறைவாக்க நடவடிக்கை எடுத்து பொதுவான ஒரே பாடவிதானத்தைக் கற்க பிள்ளைகளை வழிப்படுத்துவதுற்கும், இப்பணியை எளிதாக்கிக் கொள்ளவும், பிள்ளைகளின் இயலுமைகளை சரியாக திசைகோட்படுத்துவதற்கும், பலவீனங்களுக்கு பரிகாரம் காண்பதற்கும் சிறு பராயத்திலேயே தலையிட வேண்டுமெனவும், அவ்வாறு தலையிடுவது வெற்றிகரமான பெறுபேறுகளை வழங்கும் என்பதனாலும், பொருத்தமான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுப்பதும் இச்செயற்பாடுகளினது மற்றொரு நோக்காகவும் கொள்ளப்படுகின்றது.



மேற்படி மாணவர்களுக்கு இச்செயற்பாடுகள் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களும், ஆசிரியர்களினால் பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும், செயற்பாடுகளை அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும். அந்தவகையில் பின்வரும் விடயங்கள் முக்கியத்துவமிக்கதாகக் காணப்படுகின்றது. உதாரணமாக தரம் ஒன்றில் 30 மாணவர்கள் இணைந்துள்ளார்கள் என்றால் அவர்களை மூன்று குழுக்களாக்கி பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம் எனும் செயற்பாட்டில் இணைக்கப்பட்டுள்ள பதினாறு செயற்பாடுகளையும் வித்தியாரம்ப நிகழ்வுக்கு முதல்நாள் முடிவுறுத்தப்படவேண்டும். இவ்வாண்டு (2019) வித்தியாரம்ப நிகழ்வுகள் ஜனவரி 17ஆந்திகதி நடைபெறவிருப்பதால் இதுதொடர்பான செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டியது அவசியமாகும். அதற்காக அரச பாடசாலைகளில் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக பத்துநாட்கள் இச்செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

விளையாட்டு வீடு - விளையாடுவோம், ஓடுவோம் பாய்வோம் ஏறுவோம், பகுதிகளை இணைப்போம், கதைப் புத்தகம் பார்ப்போம், சித்திரம் வரைவோம், வெட்டி ஒட்டுவோம், செவிமடுப்போம், எண்ணுவோம், ஆடுவோம் பாடுவோம், ஆக்கம் செய்வோம், நிகழ்வை அல்லது கதையை கட்டியெழுப்புவோம், கடதாசியை உருண்டையாக்குவோம், கோலங்களை இனங்காண்போம், தாள் கிழிப்போம் பூக்கள் செய்வோம், மகிழ்ச்சியடைவோம் மற்றும் மாணவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து சுகாதாரப் பழக்க வழக்கங்களும் கற்றலுக்கான திறன்களும் போன்ற பதினாறு செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். இச்செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோது இவை தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அவதானிப்பு படிவங்களிலுள்ள ஐம்பது விடயங்களை அவதானித்து அறிக்கைப்படுத்திக் கொள்வதும் அவசியமான ஒன்றாகும்.

தரம் ஒன்றில், பாடசாலைக் கல்விக்கு எந்தளவு ஆயத்தமாக உள்ளார்கள் என்பதை இனங்கண்டு கொள்ளவதற்கான மேற்கூறப்பட்டுள்ள 16 செயற்பாடுகளை பின்வரும் ஏழு பிரதானமான துறைகளுதாக இவை தரப்பட்டுள்ளன.

இன்றைய நாட்களில் தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளைகளுக்கான செயற்பாடுகளில் முதலாவதாக காணப்படுகின்ற விளையாட்டு வீடு - விளையாடுவோம் என்கிற தலைப்பிலான செயற்பாட்டினை சிறந்தமுறையில் அமுல்படுத்துவதற்கு விளையாட்டு வீடுகள் பாடசாலைகளில் அமைக்கப்படுதல் அவசியமாகும். பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விளையாட்டு வீடுகள் இயலுமான வகையில் இயற்கைப் பொருட்களைப் பாவித்து அமைக்கப்படல் வேண்டும். புதிய சூழலுக்குப் பிள்ளைகளை பழக்கப்படுத்தும் வகையில் போதியளவு காலம் இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமானதாகும். இச்செயற்பாடானது சமூகத்திறனை வளர்ப்பதற்கு உதவும். இங்கு பல்வேறு விளையாட்டுப் பொருட்கள் வைக்கப்பட்டு மாணவர்கள் சுயமாக விளையாடுவதற்கு ஆசிரியரும் இணைந்து குறித்த சில திறன்களைப் பெறும் ஆற்றலை வளர்ப்பதற்கு உதவுதல் முக்கியமாகும்.

இவ்வாறு இன்றைய புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பில் கொண்டுவரப்பட்டுள்ள தரம் ஒன்றில் பிரவேசிக்கும் குழந்தைகளை பாடசாலைக் கல்விக்குள் நுழைப்பதற்கு உளரீதியான சிறந்த மனப்பக்குவத்தை மேம்படுத்துவதற்கு இதுபோன்ற பதினாறு செயற்பாடுகளும் உதவுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆரம்பக் கல்வி வகுப்புக்களைக் கொண்டுள்ள பாடசாலைகளிலும் விளையாட்டு வீடுகள் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை சிறப்பானதாகும். கடந்தவருடத்தைப்போல இம்முறையும் மாணவர்களின் உளக்கிளர்ச்சியை ஏற்படுத்தி, சிறந்த கற்றலுக்கான தயார்நிலையை தரம் ஒன்றிலிருந்து மேற்கொள் கல்வியமைச்சு வழங்கியுள்ள சுற்றுநிருப மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்றவிதமான முறையில் முடியுமானளவு விளையாட்டு வீடுகள் அமைக்கப்பட்டு இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

நன்றி - கல்வியமைச்சின் பாடசாலக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்



# அதிரவைத்த ஒற்றை ட்வீட்

புத்தாண்டுக்கு முந்தைய நாள், அமெரிக்காவின் அணுசக்தி தளவாடங்களை மேற்பார்வையிடும் அமெரிக்க மூலோபாய கட்டளையகம், நியூ யோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில் உள்ள 'பெரும்பந்தை' (big ball) விட மிக மிகப் பெரிய, ஏதாவதொன்றை வீச' அது தயாராக இருப்பதை அறிவித்து ஓர் ட்வீட் செய்தி வெளியிட்டது.

அமெரிக்க இராணுவம் அணுஆயுதங்களைக் கொண்டு மக்களைப் படுகொலை செய்ய மூன்றாவது முறையாக தயார் நிலையில் உள்ளது என்பது மட்டுமல்ல, ஆனால் ஆர்வமாகவும் உள்ளது என்பதே அந்த ட்வீட் சேதியின் உள்நோக்கமாகும்.

வெளியிடப்பட்டு ஒருசில மணி நேரங்களுக்குள் அழிக்கப்பட்ட அந்த ட்வீட், அதைத் தொடர்ந்து பின்வருமாறு ஒரு சேதியால் பிரதியீடு செய்து: நமது முந்தைய NYE ட்வீட் சேதி மோசமான ரசனை என்பதுடன், நமது மதிப்புகளைப் பிரதிபலிக்கவில்லை. நாங்கள் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறோம். நாங்கள் அமெரிக்காவினதும் கூட்டாளிகளினதும் பாதுகாப்பிற்காக அர்ப்பணித்துள்ளோம். என்றதில் குறிப்பிட்டது.

முதலில் வெளியிட்ட பதிப்பு பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது, டைம்ஸ் சதுக்க பாரம்பரியம், புத்தாண்டில் பெரும்பந்து வீசியதன் மூலமாக ஒலிக்கிறது ... எப்போது அவசியமானாலும், அதை விட மிகப் பெரிய ஒன்றை வீச நாங்கள் தயாராக உள்ளோம்.

இந்த ட்வீட் சேதி மில்லியன் கணக்கானவர்களைக் கொல்வது குறித்து 'நகைச்சுவையாக'குறிப்பிடுகிறது

மில்லியன் கணக்கானவர்களைப் பாரபட்சமின்றி கொல்வது குறித்து அச்சுறுத்தும் இந்த ட்வீட் சேதியை, குண்டுகள் வீசுவது குறித்த 'நகைச்சுவை'என்று வாஷிங்டன் போஸ்ட் உதறிவிட்டது.

நிச்சயமாக, அந்த சேதி ஒரு நகைச்சுவை கிடையாது. உண்மையில் அது அமெரிக்க இராணுவ கொள்கைக்கும் மற்றும் இராணுவம் 'இந்த இரவே சண்டையிட' தயாராக இருக்கிறது என்று தளபதிகளின் தொடர்ச்சியான மீள்-வலியுறுத்தலுக்கும் ஒத்திசைந்துள்ளது.

சீனா மற்றும் இந்தியா உட்பட ஏனைய அணுஆயுத சக்திகளைப் போலன்றி, அமெரிக்கா அணுஆயுதங்களை முதலில் பிரயோகிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. இழிபெயரெடுத்த மூர்க்கமான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்'ஏதாவதொன்றை வீசுவதற்கு'முடிவெடுத்தால், நடைமுறையளவில், அங்கே உள்நாட்டுக்குள் எந்த கட்டுப்பாடும் இல்லை என்பதே இதன் அர்த்தமாகும்.

வெறுமனே ஜனாதிபதி மட்டுமல்ல. முன்னாள் அமெரிக்க இராணுவ ஆராய்ச்சியாளரும் அணுசக்தி திட்ட வகுப்பாளரும், 1971 இல் நியூ யோர்க் டைம்ஸிற்கு பென்டகன் ஆவணங்களைக் கசிய விட்டவருமான டானியல் எல்ஸ்பேர்க், சமீபத்திய அவரின் நூலில், அணுஆயுத தாக்குதல்களைத் தொடங்குவதற்கான அதிகாரம், தசாப்தங்களுக்கு முன்னரே, அமெரிக்க ஜனாதிபதிக்கு அப்பாற்பட்டு எண்ணற்ற இராணுவ தளபதிகளின் பிரதிநிதிகள் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெளிவுபடுத்தினார். இந்த பிரதிநிதிகள் குழு இந்நாள் வரையில் தொடர்ந்து வருவதாக எல்ஸ்பேர்க் ஓர் உறுதியான வாதத்தை முன்வைக்கிறார்.



ஜனவரி 8, 2018 இல் குவாமின் ஆண்டர்சன் விமானப்படை தளத்தில் ஓர் அமெரிக்க போர்விமானம் B-2 Spirit படைப்பிரிவு. பசிபிக் விமானப்படை பிரிவு

உலகின் பேரழிவுக்கு இட்டுச் செல்கின்ற ஒரு குண்டுவீச்சு தாக்குதலை ஒரு சித்தபிரமை பிடித்த விமானப்படை தளபதி உத்தரவிடுவதைப் பற்றிய ஸ்டான்லே குப்ரிக்கின் (Stanley Kubrick) 1964 திரைப்படமான ஈணூ. Strangelove, மனிதயினத்திற்குப் பேரழிவை ஏற்படுத்தக்கூடிய, வேண்டுமென்றே மற்றும் 'தற்செயலாக'இரண்டு விதத்திலும், பாரிய அணுஆயுத போர் அபாயங்கள் குறித்த ஓர் 'ஆவணப்படம்' ஆகும் என்று எல்ஸ்பேர்க் அவரது நூலில் வாதிடுகிறார்.

நியூ யோர்க் டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட் மற்றும் ஏனையவற்றிலும் சுருக்கமான சில வரி செய்திகளுக்கு அப்பாற்பட்டு, ஊடகங்கள் அந்த சம்பவத்தைப் புறக்கணித்துள்ளன. அந்த ட்வீட் சேதியும், அது திரும்பப் பெறப்பட்டது குறித்த மிகச் சிறிய விபரங்களும், மற்றும் அந்த ட்வீட் சேதியுடன் வெளியான ஒரு காணொளியில் போர் விமானம் ஒன்று அணுஆயுதமல்லாத வெடிகுண்டுகளை வீசுவதைக் காட்டுவதாக பென்டகனின் நல்லெண்ண அறிவிப்புகள் குறித்த செய்திகளுக்கும் அப்பாற்பட்டு அங்கே வேறெந்த செய்திகளும் இல்லை. அங்கே எந்த கருத்துரையும் இல்லை. அந்த பிரச்சினை, வெள்ளை மாளிகையின் அல்லது ஏனையவற்றின், எந்தவொரு பத்திரிகையாளர் சந்திப்பிலும் அறிவிக்கப்படவில்லை.

பென்டகன் பத்திரிகையாளர் சந்திப்பில் ஒரு அக்கறைமிக்க பத்திரிகையாளர் அந்த சம்பவம் குறித்து சில கேள்விகள் கேட்டிருந்தால், அதில் பின்வருவன இருந்திருக்கும்:

★ அதை ட்வீட் செய்தவர் உத்தியோகப்பூர்வ கட்டுப்பாட்டில் இருப்பவரா?

★ அதை ட்வீட் செய்தவர் நெறிமுறைகள் அல்லது ஒழுங்குமுறைகளை மீறினாரா? ஏதேனும் கீழ்ப்படியாமை சம்பந்தப்பட்டிருந்ததா?

★ அவ்வாறென்றால், அணுஆயுத படைக்குப் பொறுப்பான அமெரிக்க இராணுவ கட்டளையகத்தில் பரந்தளவில் கட்டுப்பாடு முறிந்திருப்பதை இது குறிக்கிறதா?

ஆனால் நிச்சயமாக, அதுபோன்ற கேள்விகள் கேட்கப்படவில்லை என்பதுடன், ஒட்டுமொத்த விடயத்தையும் எந்தளவுக்கு சாத்தியமோ அந்தளவுக்கு விரைவாக நசுக்கி அழிப்பதற்கே ஊடகங்களின் முக்கியத்துவமாக உள்ளது.

இதில், ஊடகங்கள் கடந்த ஜனவரியில் எடுத்த அதே அணுகுமுறையை எடுத்து வருகின்றன, அப்போது, சுமார் 1.5 மில்லியன் பேருக்கு, எந்தவித விளக்கமும் இல்லாமல், ஹவாய் தொலைதூர ஏவுகணை அச்சுறுத்தலில் உள்ளது. உடனே பாதுகாப்பு முகாம்களுக்கு செல்லவும். இதுவொரு ஒத்திகை அல்ல, என்று குறிப்பிட்ட ஓர் அவசர தொலைபேசி எச்சரிக்கை செய்தி சென்றது.

அந்த விடயத்திலும், ஊடகங்கள் அந்த சம்பவம் குறித்த எந்தவொரு கருத்துரையோ அல்லது விசாரணைப் பின்தொடர்வோ இல்லாமல், சர்வசாதாரணமாக உதறிச் சென்றன.

அமெரிக்கா அதன் அணுஆயுதங்களைப் புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கவும் பாரியளவில் 1.3 ட்ரில்லியன் டாலர் திட்டத்திற்கு மத்தியில் இருக்கையில், மற்றும் பெரிதும் அனேகமாக போர்களில் பயன்படுத்தத்தக்க சிறிய ஆயுதங்களைக் கட்டமைப்பதன் மீது ஒருமுகப்பட்டிருக்கையில் தான், அமெரிக்க மூலோபாய கட்டளையகத்திலிருந்து இந்த அச்சுறுத்தல் வருகிறது. அமெரிக்கா அணுஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடிய மற்றும் அவற்றை 'முதலில் பிரயோகிக்கும்' அதன் உரிமையை நிலைநிறுத்தக் கூடிய சூழ்நிலைகளைக் கூடுதலாக விரிவாக்கும் ஓர் அணுசக்தி நிலைப்பாட்டு மீளாய்வை, வெள்ளை மாளிகை இம்மாத தொடக்கத்தில் வெளியிட்டது.

இந்த அணுசக்தி நிலைப்பாட்டு மீளாய்வே கூட கடந்த ஆண்டின் தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தில் உச்சரிக்கப்பட்ட 'வல்லரசு மோதல்' கட்டமைப்பின் பாகமாக உள்ளது, அது அமெரிக்க இராணுவத்தின் முக்கிய முன்னுரிமையாக இருப்பது 'பயங்கரவாதம் மீதான போர்' அல்ல, குறிப்பாக அணுஆயுதமேந்திய ரஷ்யா மற்றும் சீனாவுடனான மோதல் என்று சித்தரிக்கிறது.

# ட்ரம்பின் அறிவிப்பும்
## ஐரோப்பாவின் எதிர்வினையும்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சிரியாவிலிருந்து அமெரிக்கத் துருப்புக்களை மீளப் பெற்றது, அதனைத் தொடர்ந்து பாதுகாப்புத்துறைச் செயலர் ஜேம்ஸ் மாட்டிஸ் இராஜினாமா செய்தது போன்றவை ஐரோப்பிய தலைவர்களிடமிருந்து கடுமையான பதிலிறுப்புக்களைத் தூண்டியுள்ளன. இது குறித்து, ஐரோப்பிய ஆளும் உயரடுக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சியடைந்து, பின்னர் பெரும்பான்மையாக இன்னும் கூடுதலான சுயாதீனமான ஐரோப்பிய வெளியுறவு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளுக்கான அழைப்புடன் தமது பிரதிபலிப்பை காட்டின. குறிப்பாக ஜேர்மனியில், முன்னணி அரசியல்வாதிகளும் ஊடகங்களும், ஒருவரையொருவர் விஞ்சிக்கொண்டு, ஜேர்மன் இராணுவத்தின் (Bundeswehr) இன்னும் விரைவான மறுஇராணுவமயமாக்கத்திற்கும், ஒரு ஐரோப்பிய இராணுவப் படையை கட்டியெழுப்புவதற்கும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

ஐரோப்பிய அரசாங்கங்களை முற்றிலும் அதிர்ச்சியில் ஆழ்த்தும்வகையிலேயே ட்ரம்பின் இந்த முடிவு வெளியாகியது. அவர்களது உத்தியோக பூர்வ அறிக்கைகளில், இந்த முடிவை அவர்கள் கடுமையாகக் கண்டித்து, சிரியாவில் இஸ்லாமிய அரசு (IS) என அழைக்கப்படுவதை எதிர்த்து தொடர்ந்து போரிட வலியுறுத்துகின்றனர். வெள்ளை மாளிகையின் இந்த முடிவு கவலையளிப்பதாக உள்ளது, என்று ஜேர்மன் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு அறிக்கை தெரிவிக்கிறது. IS என்பது பிராந்திய அளவில் கட்டுப்பாட்டில் உள்ளது, ஆனால் எந்த வகையிலும் தோற்கடிக்கப்படவில்லை. அமெரிக்கர்கள், ஒரு அதீத அவசரமான முறையில் அதை திரும்பப் பெறமாட்டார்கள், மாறாக அவர்களது சொந்த மற்றும் ஏனைய துருப்புக்களின் பொறுப்புக்களை அவர்கள் நன்கறிவர் என்று ஒருவர் நம்பலாம்.

கடந்த வாரம், ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் ஹெய்கோ மாஸ் (சமூக ஜனநாயக கட்சி) ஈராக்கிற்கு விஜயம் செய்து, அராபிய நாடுகளில் ஜேர்மனியின் பெரும் இராணுவ மற்றும் பொருளாதார தலையீட்டுக்கான பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்த சமயத்தில், அவரிடமிருந்தும் அதையொத்த பதில் தான் வந்தது. ஜேர்மனிக்கு மட்டுமல்லாது இந்த திடீர் மாற்றம் அமெரிக்க பக்கத்திற்கும் அதிர்ச்சியூட்டுவதாகவே இருந்தது. இந்த முடிவின் விளைவு ஐகு க்கு எதிரான போராட்டத்திற்கு தீங்கிழைக்கும் என்பதுடன், ஏற்கனவே எட்டியிருந்த சாதனைகளையும் சீர்குலைக்கும் எனும் ஆபத்து உள்ளது. ஐகு க்கு எதிரான போராட்டம் என்பது, இராணுவரீதியாகவும் மற்றும் சிவில் வழிமுறையாகவும் கூட நீண்டகாலத்திற்கானது: ஸ்திரத்தன்மையை கொண்டுவருவதற்கு எதிர்காலத்திலும் பின்பற்றக்கூடியதான பாதுகாப்பு மற்றும் அரசியல் ஒழுங்கு தேவைப்படுகிறது. என்றார்.

லண்டன் மற்றும் பாரிஸ் அரசாங்கங்களும் கூட ட்ரம்பின் திட்டங்களை கண்டித்து, சிரியாவில் அவர்களது இராணுவத் தலையீடு கட்டாயம் தொடர வேண்டும் என்று அறிவித்தன. வியாழனன்று, பிரெஞ்சு வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பின்வருமாறு தெரிவித்தார்: பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் என்பது பிரான்சுக்கு ஒரு முன்னுரிமை வாய்ந்ததாக உள்ளது. டேயிஸ் (IS) இன் பூகோள அச்சுறுத்தலுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்த ஒரு நீண்டகால கடமையாகவுள்ளது. பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் டோபியாஸ் எல்வுட், ட்ரம்பின் இந்த முடிவுடன் தனது கடுமையாக உடன்பாடின்மை. தெரிவித்தார் அத்துடன் தனது டுவிட்டுரையில், ஐகு ஆனது ஏனைய வடிவங்களிலான தீவிரவாதத்திற்கு மாறியுள்ளதேயன்றி, அது குறித்த அச்சுறுத்தல் இன்னும் மிகுந்த உயிர்ப்புடன் தான் உள்ளது, என்றும் அவர் தெரிவித்தார்.

ட்ரம்பின் இந்த மீளப்பெறும் ஆணை குறித்து கடுமையான ஐரோப்பிய எதிர்வினைக்கு பல காரணங்கள் உள்ளன. சிரியாவில் இருந்து அமெரிக்கத் துருப்புக்கள் மீளப்பெற்றமை குறித்து, ஐரோப்பிய சக்திகள், முதலாவதாக அவர்களது சொந்த போர் திட்டங்களும் அதனால் ஆபத்திற்கு உள்ளாகுமே என்றுதான் கோபமடைகின்றன. 2003 ல் ஈராக்கிய படையெடுப்பு மற்றும் 2011இல் லிபியப் போர் ஆகியவற்றை போலல்லாமல், சிரியாவிற்கு எதிரான ஏகாதிபத்திய தாக்குதலைப் பொறுத்தவரையில், அனைத்து முக்கிய ஐரோப்பிய சக்திகளும் ஆரம்பத்தில் இருந்தே அதில் பங்கெடுத்துள்ளன. மேலும், பஷார் அல்-அசாத்தின் ஆட்சியை தூக்கியெறிந்து அதற்கு பதிலாக ஒரு மேற்கத்திய சார்பு கைப்பாவை அரசாங்கத்தைக் கொண்டு அதை பதிலீடு செய்வதற்கான நோக்கத்திற்கும் அவர்கள் ஆதரவளித்தனர். 2012 ல், ஜேர்மன் குநிக சிந்தனைக் குழாமுடன் இணைந்து ஜேர்மன் வெளியுறவு அலுவலகம், சிரிய எதிர்ப்பின் ஒரு பகுதியுடன் இணைந்து, அந்த நாளுக்குப் பின்னர் என்ற திட்டத்தை தொடங்கியதுடன், அசாத்துக்குப் பிந்தைய ஒழுங்குமுறை குறித்த பார்வை என்ற ஒன்றையும் வெளியிட்டது.

ஐரோப்பிய சக்திகள், அசாத்தின் வெற்றி தொடர்பாகவும், அதனை தொடர்ந்து அவரது கூட்டாளி நாடுகளான மாஸ்கோ மற்றும் தெஹ்ரான் பற்றியும் தற்போது அஞ்சுகின்றன. குர்திஷ் இராணுவக்குழுக்கள் அல்லது சிரிய ஜனநாயக சக்திகள் என்றழைக்கப்படுபவை, சக்கரங்களுக்கு இடையில் சிக்கியுள்ளன என்ற யதார்த்தமான நிலையில், அசாத்தும் அவரது அரசாங்கமும் பலப்படுத்தப்பட்டு வருகின்றனர், என்று SWP இன் இயக்குநர் வொல்கர் பெர்த்தேஸ் வானொலிக்கு அளித்த ஒரு பேட்டியில் எச்சரித்தார். வடக்கு சிரியாவில் இருந்து அமெரிக்கத் துருப்புக்கள் திரும்பப் பெறப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கில் உள்ள குர்திஷ் மற்றும் அரேபியர்களின் கூட்டாளிகள் அதிகளவில் டமாஸ்கஸின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். அதாவது, சிரிய அரசின் டமாஸ்கஸின் கொடி, கிழக்கில் குர்திஷ் மாகாணங்களில் விரைவில் மீண்டும் பறக்கும் என்பதாகும்.

ஐரோப்பிய சக்திகளின் கோபத்திற்கான மற்றொரு காரணம் உள்நாட்டு அரசியல் கவலைகளில் இருந்து எழுகின்றன. அமெரிக்க ஆளும் வர்க்கத்தை ஒத்ததாக, ஐரோப்பிய அரசாங்கங்களும் கூட, ஜனநாயக உரிமைகளை இல்லாதொழித்து வெளிப்படையான பொலிஸ் அரசுகளை ஸ்தாபிக்க பயங்கரவாதத்தின் மீதான போர் என்ற போர்வையை பயன்படுத்தியுள்ளன. சிரியாவில் ஏகாதிபத்தியத் தலையீடு, இறுதியில் பயங்கரவாத வலைபின்னலை முன்கொண்டுவந்துள்ளதுடன், அது ஜனநாயக உரிமைகள் மீதான நீண்டகால விளைவுகளைக் கொண்ட தாக்குதல்கள் குறித்த ஒரு போலிச்சாட்டிற்கு சேவை செய்தது. ஐரோப்பா எங்கிலும் சமூக மற்றும் அரசியல் எதிர்ப்பு வளர்ந்து வரும் நிலைமைகளின் கீழ், பாரிஸ், லண்டன் மற்றும் பேர்லின் போன்றவை இந்த பிற்போக்குத்தன பிரச்சாரத்தை தீவிரப்படுத்த விரும்புகின்றன. சிரியாவில் IS தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்ற ட்ரம்பின் கூற்று இந்த திட்டங்களை கீழறுக்கிறது.

மிக அடிப்படையான மட்டத்தில், வாஷிங்டனின் சமீபத்திய அபிவிருத்திகள் மீதான ஐரோப்பிய பதிலிறுப்பானது அட்லாண்டிக் கடலுக்கு இடையிலான உறவுகளில் ஏற்பட்டுள்ள ஒரு ஆழ்ந்த பிளவை அம்பலப்படுத்தியுள்ளது. சிரியாவிற்கு அப்பாலும் சேதம் தொடர்கிறது, என்று பாரம்பரிய அமெரிக்க சார்பு தினசரி நாளிதழ் ஈடிஙு ஙிஙுடூஞ குறிப்பிடுகிறது. குர்திஷ் போன்ற நீண்டகால கூட்டாளிகள் ஒரே இரவில் தியாகம் செய்யப்படுகிறார்கள் என்றால், அமெரிக்காவை யார் நம்ப முடியும்? எந்தவித அமைதிக்கு அமெரிக்கா உத்தரவாதம் அளிக்க முடியும்? மேலும், எந்த ஆக்கிரமிப்பாளரை அது தடுக்க முடியும்?

மேலும், Suddeutshe Zeitug பத்திரிகை பின்வருமாறு கருத்து தெரிவிக்கிறது: அமெரிக்க ஜனாதிபதி, சிரியாவில் இருந்து துருப்புக்களை மீளப் பெற்றதுடன் சேர்த்து, உலகெங்கிலுமான அவரது கூட்டாளிகளையும் காட்டிக்கொடுத்துள்ளார். மேலும், அசாதாரண ஆற்றலுடன் கூடிய கூட்டாளிகளைக் கொண்டு தற்போது ஐரோப்பிய தூண் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், அத்துடன் ஐரோப்பிய வெளியுறவுக் கொள்கையின் திறனை செயல்படுத்தும் வகையிலான மேம்பாடுகளையும் உருவாக்க வேண்டும். அதற்கு பெரும் தொகையான பணமும் இன்னும் கூடுதலான அரசியல் உறுதியும் தேவைப்படும். அங்கு அவை இரண்டுமே மிகக் குறைவாக இருக்கின்றன. என்று குறிப்பிட்டது.

ஆளும் மற்றும் எதிர் கட்சிகள் இரண்டின் முன்னணி வெளியுறவுக் கொள்கை அரசியல்வாதிகளும் மேலதிக மறுஆயுதமயமாக்கத்திற்கு கோரிக்கை விடுக்கின்றனர். ஒன்றியத்தின் (கிறிஸ்துவ ஜனநாயக ஒன்றியம் மற்றும் கிறிஸ்துவ சமூக ஒன்றியம்) வெளியுறவுக் கொள்கை செய்தித் தொடர்பாளரான, ஜூர்கன் ஹார்ட், மாட்டிஸின் இராஜினாமா வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கையில் ஏற்பட்டுள்ள ஒரு திருப்பமாக உள்ளது என்று விவரித்தார். தற்போது, Bundeswehr இல் முதலீடு செய்ய வேண்டும் என்பதுடன், 2024 இல் இரண்டு சதவிகித இலக்கு எட்டப்பட வேண்டும் என்பதை -அதாவது வருடத்திற்கு குறைந்தபட்சம் 75 பில்லியன் யூரோக்கள் என்ற அளவிற்கு இராணுவ செலவினங்களை அதிகரிப்பது- தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும், இது ஏன் அவசியமானது என்று பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்றும் அச்சுறுத்தும் வகையில் அவர் சேர்த்து கூறினார்.

பசுமைக் கட்சிக்கான பாராளுமன்ற பாதுகாப்புக் குழுவில் அமர்ந்துள்ள Agnieszka Brugger கூட, மத்திய கிழக்கில் அதிகரிக்கப்பட்ட ஐரோப்பிய தலையீட்டிற்கு அழைப்பு விடுத்தார். மிகப்பெரிய வெளியுறவுக் கொள்கை குழப்பத்தை ஏற்படுத்துகின்ற ஒரு இழிவான ஆச்சரியமாக ட்ரம்பின் பின்வாங்கல் உள்ளது. ஐரோப்பாவால் என்ன முடியும், அல்லது அது என்ன செய்ய வேண்டும்? ஐரோப்பாவிற்கு அதற்கான ஒரு வாய்ப்பு உள்ளதா? ஜேர்மனிக்கு அதற்கான ஒரு வாய்ப்பு உள்ளதா? என்றெல்லாம் நிருபர் கேட்டபோது, அவர் இவ்வாறு பதிலிறுத்தார்: ஐரோப்பிய ஒன்றியம் இறுதியாக அதன் உறக்கத்தில் இருந்து விழித்தெழுந்து, சிரியாவில் இன்னும் செயலூக்கமிக்க ஒரு பாத்திரமேற்க வேண்டும். எவரும் இந்த கடினமான விவாதத்தில் இருந்து தப்பிவிட முடியாது.

பேர்லினில் உள்ள அமெரிக்காவின் ஜேர்மன் மார்ஷல் நிதியத்தின் ஐரோப்பிய வேலைத் திட்டத்தின் தலைவரான Jan Techau எழுதிய ஒரு சமீபத்திய கட்டுரை, ஆளும் வர்க்கத்தின் பேராசை கொண்ட பெரும் திட்டங்கள் பற்றி பொதுமக்களின் முதுகுக்கு பின்னால் விவாதிக்கப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. மூலோபாயத் திறன் மற்றும் உலக வலி. 2030ம் ஆண்டு வரை ஜேர்மனிய வெளியுறவுக் கொள்கை என்ற தலைப்பிட்ட கட்டுரையில், ஜேர்மன் அதன் அளவு, ஆற்றல் மற்றும் ஐரோப்பாவிற்கான அதன் முக்கியத்துவம் போன்றவற்றை அடையாளம் கண்டு தாழ்மையுடன் அவற்றை ஒத்துக்கொள்ள வேண்டும். மேலும், ஒரு முன்னணிப் பாத்திரத்தை அது ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும் இதையும் தெரிவிக்கிறது: ஒழுங்கை பராமரிப்பதற்கு அதிகபட்ச முயற்சியையும், மற்றும் பெரும் செலவினங்களையும் இன்றியமையாததாக்கும். இவையனைத்தும், அரசியல்வாதிகளின் பதவிகளுக்கு ஆபத்தானவை என்றாலும் கூட, அவர்களால் பொதுமக்களுக்கு அவை மீண்டும் மீண்டும் விவரிக்கப்பட வேண்டும். அதற்கு மக்கள் செல்வாக்குள்ளதாக இல்லை என்றாலும், முன்னணி அரசு பிரமுகர்கள் தங்கள் அரசியல் வாழ்க்கையை அதற்காக பணயம் வைக்க வேண்டும். இதுவே ஜேர்மன் இராணுவத்தின் நிதி மற்றும் மனித வளங்களுக்கும் பொருந்தும். இரண்டு சதவிகித பாதுகாப்புச் செலவுகள் என்பது ட்ரம்பிற்காக தேவையில்லை, மாறாக அவருக்கு எதிரானது, ஏனென்றால், இப்படியான முதலீடுகள், அவர் ஒழிக்க விரும்பும் பல்முனைப்பட்ட அமைப்பு அடிப்படையிலான ஒழுங்கை திட்டவட்டமாக பலப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

ட்ரம்பிற்கு சில வகைகளிலான ஒரு முற்போக்கு பதிலாக ஜேர்மன் இராணுவவாதத்தின் மலர்ச்சியை சித்தரிக்க கூனுஞிடச்த முயற்சிப்பது என்பது முற்றிலும் பாசாங்குத்தனமானது. இருபதாம் நூற்றாண்டின் இரு உலகப் போர்களிலும் ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின் கொடூரமான குற்றங்களைப் பற்றி அனைவரும் அறிவர். கடந்த இரண்டு தசாப்த காலங்களின் போக்கில், அமெரிக்காவின் சட்டவிரோதமான ஆக்கிரமிப்புப் போர்களில் ஜேர்மன் ஆளும் வர்க்கம் செயலூக்கத்துடன் ஈடுபட்டு வந்துள்ளது, என்றாலும் வெள்ளை மாளிகையில் தீவிர வலது பில்லியனரின் சிரிய கொள்கையை முக்கியமாக தற்போது வலதில் இருந்து விமர்சித்து வருகிறது. இந்த அபாயகரமான அபிவிருத்தியை தடுத்து நிறுத்த ஒரேயொரு வழி தான் உள்ளது: அது என்னவென்றால், தொழிலாள வர்க்க அடித்தளத்திலான ஒரு சர்வதேச போர் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவதும், மற்றும் ஒரு சோசலிச வேலைத் திட்டத்திற்காக போராடுவதும் ஆகும். இதற்கு, ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள முதலாளித்துவ வர்க்கத்தின் அனைத்து கன்னைகளுக்கும் எதிரான, ஐரோப்பிய மற்றும் அமெரிக்க தொழிலாளர்களின் புரட்சிகர ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

**நன்றி: உலக சோசலிச இணையத்தளம்**



# யூதர்கள் ஏன் அதிசாமர்த்தியசாலிகள்?



தொழில்நுட்பம், இசை, விஞ்ஞானம் என்று எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் யூதர்கள் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை எவருமே மறுக்க முடியாது.

உலக வர்த்தகத்தில் கிட்டத்தட்ட 70% யூதர்களின் கைவசமே உள்ளது.

அழகு சாதனங்கள், நாகரிக உடைகள், உணவுப் பொருட்கள், ஆயுதங்கள், சினிமாத் துறை (ஹாலிவுட் மற்றும் பல) என்று பலவற்றிலும் யூதர்கள் சிறந்து விளங்குவது நிஜம்.

நான் இஸ்ரேல் நாட்டில் சுமார் 3 ஆண்டுகள் சில மருத்துவ மனைகளில் உள்ளகப் பயிற்சிக்காக கழிக்க நேர்ந்தபோதுதான் ஏன் யூதர்கள் அதி சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள் என்பது பற்றி ஆராயும் எண்ணம் வந்தது.

ஏன் கடவுள் அவர்களுக்கு மட்டும் இந்த திறமையைக் கொடுத்தார்? இந்த திறன் தற்செயலாக வந்ததா? அல்லது ஒரு தொழிற்சாலையில் நாம் நமக்கு வேண்டிய வடிவில் ஒரு பொருளை உற்பத்தி செய்கிறோமே, அதுபோல இந்த திறமையை மனித முயற்சியால் சிருஷ்டி பண்ணிக் கொள்ள முடியுமா? இந்தக் கேள்விகள் எனது 2 ஆம் ஆண்டில் அதாவது 1980 டிசம்பரில் நான் கலிபோர்னியா திரும்ப வர இருந்தபோது என் மனதில் தோன்றிக் கொண்டே இருந்தன.

எனது ஆய்வறிக்கைக்காக யூதர்கள் உட்கொள்ளும் உணவு, கலாச்சாரம், மதம், கர்ப்பிணி தன்னை தயார் செய்துகொள்ளும் விதம் என்று எல்லா விவரங்களையும் ஒன்று விடாமல் துல்லியமாக சேர்ப்பதற்கு 8 ஆண்டுகள் பிடித்தன. இந்த விவரங்களை மற்ற இனங்களுடன் ஒப்பிட்டு பார்க்க முடிவு செய்தேன்.

தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை ஒரு மேதாவியாக இருக்கவேண்டும் என்பதற்காக ஒரு கர்ப்பிணி முதலிலிருந்தே தன்னை தயார் செய்து கொள்ளுகிறாள். அவள் எப்போதும் பாடிக்கொண்டும் பியானோ வாசித்துக் கொண்டும் இருப்பாள். கணவனுடன் சேர்ந்து சிக்கலான கணித வினாக்களை விடுவிக்க முயற்சி செய்வாள். தான் போகுமிடமெல்லாம் கணக்குப் புத்தகத்தை எடுத்துச் செல்வாள். சில சமயம் நான் அவளுக்கு கணக்குப் போட உதவி செய்வேன். அப்போது அவளிடம், இதெல்லாம் உன் குழந்தைக்காகவா? என்று கேட்பேன். ஆமாம், கருவிலிருக்கும் போதே பயிற்சி கொடுத்தால் பிறகாலத்தில் மேதையாக ஆகும், இல்லையா? என்பாள். குழந்தை பிறக்கும் வரை விடாது கணித புதிர்களை விடுவித்துக் கொண்டே இருப்பாள்.

கர்ப்பிணியின் உணவும் விசேஷமானது: பாலில் பாதாம்பருப்பு முதலான கொட்டை வகைகளையும், பேரீச்சையையும் கலந்து உண்கிறாள். மதிய உணவுக்கு தலை துண்டிக்கப்பட்ட மீன், பிரெட், பாதாம்பருப்பும், மற்றைய கொட்டை வகைளும் (nuts) சேர்த்த பச்சைக் காய்கறிக் கலவை (salads) ஆகியவற்றை உண்ணுகிறாள். மீன் குழந்தையின் மூளை வளர்ச்சிக்கு நல்லது என்று நம்புகிறார்கள். ஆனால் மீனின் தலை மூளைக்கு நல்லதில்லையாம் கர்ப்பிணி பெண் மீன் எண்ணெய் உட்கொள்ளுவது யூத இனத்தின் வழக்கம். மீனின் சதைப் பாகத்தையும், எலும்பு இல்லாத பகுதிகளையும் மட்டுமே சாப்பிடுகிறார்கள். இறைச்சி சாப்பிடுவதில்லை. இறைச்சி மீன் இரண்டையும் ஒன்றாக சாப்பிடுவது நம் உடலுக்கு எந்த விதத்திலும் பயனளிக்காது என்று நம்புகிறார்கள்.

உணவு உண்ணுவதற்கு முன் பழங்கள் சாப்பிடுகிறார்கள். முதலில் பிரெட், சாதம் போன்றவற்றை சாப்பிட்டால் தூக்கம் வரும். அதனால் பள்ளியில் சொல்லித் தரும் பாடங்கள் சரிவர புரியாது என்கிறார்கள்.

சிகரெட்டில் இருக்கும் நிகோட்டின் நமது மூளையின் முக்கியமான திசுக்களை அழித்து, மரபணுக்களையும் DNA வையும் பாதிக்கும். இதன் காரணமாக அடுத்த தலைமுறை அறிவற்றவர்களாகவும் மூளை வளர்ச்சி குன்றியவர்களாகவும் உருவாகக்கூடும். இதனால் இஸ்ரேல் நாட்டில் சிகரெட் புகைப்பது விலக்கப்பட்ட ஒன்று. இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? உலகின் மிகப் பெரிய சிகரெட் தயாரிப்பாளர். யார் என்று உங்கள் ஊகத்திற்கே விட்டுவிடுகிறேன்!

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் உண்ணும் உணவில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்கள். பெற்றோர்களின் மேற்பார்வையிலேயே குழந்தைகளின் உணவும் அமைகிறது.

முதலில் பழங்கள், பாதாம்பருப்பு, பின் மீன் எண்ணெய் என்ற வரிசையில்தான் குழந்தைகள் உணவு உட்கொள்ளுகிறார்கள்.

என் மதிப்பீட்டின் படி ஒவ்வொரு யூதக் குழந்தையும் 3 மொழிகள் - ஹீப்ரு, அரபிக் மற்றும் ஆங்கிலம் அறிந்தவர்களாக இருக்கிறார்கள். குழந்தைப் பருவத்திலிருந்து பியானோ, வயலின் முதலிய இசைக் கருவிகள் இசைக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டியது ஒரு கட்டாயம்.

இசைக்கருவி வாசிக்கும் பழக்கம் குழந்தைகளின் IQ (intelligence quotient) வை அதிகரித்து, அவர்களை மேதைகள் ஆக்கும். இசை அதிர்வுகள் மூளையை தூண்டிவிட்டு அதன் திறன்பாட்டை அதிகரிப்பதால்தான் யூதர்களிடையே மேதைகள் அதிகம் என்கிறார் ஒரு யூத விஞ்ஞானி.

முதல் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்புவரை குழந்தைகள் வணிகக் கணிதவியலை படிக்கிறார்கள். விஞ்ஞானப் பாடம் முன்னுரிமை பெறுகிறது கலிபோர்னியா குழந்தைகளையும் யூதக் குழந்தைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் கலிபோர்னியா குழந்தைகள் 6 வருடம் பின் தங்கி இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

யூதக்குழந்தைகள் வில்வித்தை, துப்பாக்கி சுடுதல் ஆகிய உடல், மனம் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். இவ்விரண்டு விளையாட்டுக்களும் மனதை ஒருமுகப்படுத்தி துல்லியமான, நுட்பமான முடிவு எடுக்க உதவுகின்றன.

உயர் நிலைப் பள்ளியில் மாணவர்கள் விஞ்ஞானம் படிக்க அதிகம் விழைகிறார்கள்.

போர்த்தளபாடங்கள், மருத்துவம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் செயலாக்கங்கள், (projects) புதிதாக பொருட்கள் செய்வது (product creation) என்று பல்வேறு முறைகளில் தாங்கள் படித்தவற்றை நடைமுறைப்படுத்துகிறார்கள். இந்தத் திட்டங்கள் உயர் கல்வி நிறுவனங்களிலும், பல்தொழில்நுட்ப கழகங்களிலும் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

வணிகம் சொல்லித்தரும் ஆசிரியருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. வணிகவியல் படிக்கும் மாணவர்கள் கடைசி வருடம் ஒரு செயல் முறை திட்டத்தை நடைமுறைப் படுத்தி காட்ட வேண்டும். 10 பேர்கள் அடங்கிய அவர்களது குழுமத்திற்கு இந்த செயல்முறை திட்டத்தில் 10 மில்லியன் யு.எஸ். டாலர் லாபம் கிடைத்தால் தான் அவர்கள் தேர்வு பெறுவார்கள்.

இந்தக் காரணத்தினாலேயே உலக வர்த்தகத்தில் பாதிக்கும் மேல் யூதர்கள் வசம் இருக்கிறது உலகப் புகழ்பெற்ற லீவாய்ஸ் (Levis) பொருட்கள் இஸ்ரேல் பல்கலைக்கழக வர்த்தகம் மற்றும் புதிய பாணி உடை வடிவமைப்பு (business and fashion) ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

யூதர்கள் பிரார்த்தனை செய்யும்போது கவனித்து இருக்கிறீர்களா? எப்போதும் தலையை அசைத்து அசைத்துப் பிரார்த்தனை செய்வார்கள். இப்படிச் செய்வதால் மூளை தூண்டிவிடப்பட்டு மூளைக்கு அதிக ஆக்ஸிஜன் கிடைக்குமாம்.

இவர்களைப் போலவே ஜப்பானியர்களும் சிரம் தாழ்த்தி வணங்குபவர்கள். சுஷி உணவை (புதிதாகப் பிடிக்கப்பட்ட மீன் உணவு) விரும்பி உண்பார்கள். இந்த இரண்டு இனங்களுக்கும் பல ஒற்றுமை இருப்பதை தற்செயல் என்று சொல்லலாமா? நியுயார்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனம் அவர்களுக்குப் பலவகையில் உதவுகிறது. யாருக்காவது பயன்தரும் வர்த்தக யோசனை இருந்தால் வட்டி இல்லாக் கடன் கொடுத்து, அவர்களது வர்த்தகம் தழைக்க எல்லா வகையிலும் உதவுகிறது. இதனாலேயே ஸ்டார்பக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ்,கோகோகோலா, DKNY, ஆரக்கிள், லீவாய்ஸ், டன்கின் டோனட், ஹாலிவுட் படங்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான வர்த்தகங்கள் இவர்களது ஆதரவில் நடை பெறுகின்றன.

யூத மருத்துவ பட்டதாரிகள் நியுயார்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனத்தின் வட்டியில்லாக் கடனைப் பெற்று தனியாக டாக்டர் தொழில் நடத்தலாம். இதனால் நியுயார்க், கலிபோர்னியா நகரங்களில் மருத்துவ மனைகளில் போதுமான டாக்டர்கள் இருப்பதில்லை. 2005 இல் சிங்கப்பூர் போயிருந்த போது ஒரு விஷயம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. இங்கு சிகரெட் பிடிப்பவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாகவே பார்க்கிறார்கள்.

இஸ்ரேல் நாட்டைப் போலவே இங்கும் சிகரெட் பிடிப்பது தீய பழக்கம் என்று கருதப்படுகிறது.

ஒரு சிகரெட் பெட்டியின் விலை 7 யு.எஸ். டாலர்கள்! அரசாங்கமும் இஸ்ரேல் நாட்டு அரசாங்கம் போலவேதான்.

சிங்கப்பூர் மிகச்சிறிய நாடு. மன்ஹாட்டன் அளவே இருந்தபோதும் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக் கழகங்கள் இங்கு இருக்கின்றன.

இந்தோனேஷியாவைப் பாருங்கள். ஒரு பாக்கெட் சிகரெட்டின் விலை வெறும் 0.70 யு.எஸ். டாலர்தான்.

எங்கு பார்த்தாலும் மக்கள் சிகரெட் பிடித்துக் கொண்டு இருப்பார்கள்.

பலன்?

லட்சக்கணக்கான மக்கள் தொகை இருந்தும் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் பல்கலைக் கழகங்கள். பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய தொழில் நுட்பமோ, தயாரிக்கும் பொருட்களோ எதுவுமே இல்லை அவர்களிடம்! அவர்களது மொழியைத் தவிர வேறு மொழி தெரியாது. ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள எத்தனை சிரமப் படுகிறார்கள். இவையெல்லாம் சிகரெட் பிடிப்பதால் தான். சிகரெட் பிடிப்பவர்களின் அடுத்த தலைமுறை அறிவற்றதாகத்தான் இருக்கும். சற்று சிந்தித்துப் பாருங்கள். என்னுடைய ஆய்வறிக்கையில் நான் இனத்தையோ, மதத்தையோ குறிப்பிடவில்லை.

நம்மால் யூதர்களைப் போன்ற புத்திசாலி தலைமுறையை உருவாக்க முடியுமா?

**நன்றி:நெருடல்**

# வருகிறான் குளோனிங் மனிதன்

**ஆலையடிவேம்பு என்.ஹரன்**

குளோனிங் பற்றிய ஆராய்ச்சிகள் உலக அரங்கில் பெரிய அளவில் இன்றும் தொடர்ந்துக் கொண்டேதான் இருக்கின்றன.

இதற்கிடையில் தற்போது உலகில் பேசப்படுவது வடகொரியாவின் ஏவுகனை சோதனை உலகில் இன்று விஞ்ஞானத்தில் வழர்ச்சி அடைந்த நாடுகளுக்கு இனையாக இவ் நாடு இருப்பது இன்று உலகின் பார்வையினை தன் பால் ஈர்த்துள்ளது

குளோனிங் தொடர்பில் டாலி தவிர காப்பி கேட் என்றழைக்கப்படும் பூனை, டியூவி என்றழைக்கப்படும் மான், ஸ்நூபி என்றழைக்கப்படும் நாய் உள்ளிட்ட பல்வேறு மிருகங்களை இதுவரை குளோனிங் முறையில் உருவாக்கியிருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

குளோனிங் என்றவுடன் நினைவுக்கு வருவது என்ன? ஜுராசிக் பார்க் தொடங்கி நிறைய ஹாலிவுட் படங்கள் மற்றும் டாலி என்றழைக்கப்படும் செம்மறி ஆடு?

**எப்படி செய்கிறார்கள் குளோனிங்?**

கலவியில்லா இனப்பெருக்கம் (A sexual Reproduction) குறித்து விலங்கியல் பாடத்தில் நாம் நிறையவே படித்திருப்போம். இதுதான் குளோனிங் முறைக்கு அடிப்படை. பொதுவாக குளோனிங் மூன்று வகையில் செய்யப்படுகிறது. ஜீன் குளோனிங் (Gene Cloning), இனப்பெருக்க குளோனிங் (Reproductive Cloning) மற்றும் சிகிச்சைமுறை குளோனிங் (Thera-peutic Cloning). இதில் ஜீன் குளோனிங் என்பது வெறும் ஜீன்களையும், DNA கூறுகளையும் பிரதி எடுப்பது. இனப்பெருக்க குளோனிங் என்பது ஒரு முழு மிருகத்தை அப்படியே பிரதி எடுப்பது. சிகிச்சைமுறை குளோனிங் என்பது பல்வேறு நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைமுறை.

குளோனிங் என்பது ஏதோ ஏறமுடியாத மலையளவு விஞ்ஞான கோட்பாடுகளைக் கொண்டது என்றெல்லாம் எண்ணத் தேவையில்லை. அடிப்படை அறிவியலில் அதன் எளிமையான விளக்கம் இதுதான்! இனப்பெருக்கத்திற்காக குளோனிங் செய்யப்படவேண்டிய மிருகத்திலிருந்து இரண்டு செல்கள் எடுப்பார்கள். ஒன்று முதிர்ந்த சீமாடிக் உயிரணு (Matured Somatic Cell) மற்றொன்று DNA கூறுகள் நீக்கப்பட்ட முட்டை செல் (DNA removed Egg Cell). இதில் சீமாடிக் உயிரணுவில் இருக்கும் DNA கூறுகளை முட்டை செல்லுக்குள் செலுத்தி மரபணு ஒத்த தாய் மிருகம் ஒன்றினுள் உட்பொருத்திவிடுவார்கள். அது உருவாக்கும் குட்டி, இரண்டு செல்களைத் தானமளித்த மிருகத்தைப் போன்றே இருக்கும்.

**குளோனிங் மனிதர்கள் எப்போது வருவார்கள்?**

சரி, இந்த குளோனிங் ஆராய்ச்சியின் உச்சமான மனிதர்களைக் குளோனிங் செய்வது சாத்தியமா?

இப்போது அந்த அசாத்திய மைல்கல் எட்டிவிடும் தூரத்தில்தான் இருப்பதாகக் கூறி ஆச்சர்யத்தில் ஆழ்த்துகிறார்கள் அறிவியலாளர்கள்.

தற்போது சிகிச்சைமுறை குளோனிங் எனப்படும் Therapeutic Cloning கொண்டு மரபணு நோய்கள், வயதானால் வரும் தீவிர பிரச்னைகள் போன்றவற்றை சரி செய்கிறார்கள்.

இந்தாண்டின் தொடக்கத்தில் ஜப்பானில் ஒரு பெண்மணிக்கு வயதானவர்களுக்கு ஏற்படும் கண்தசை சீர்கேடு (Macular Degeneration எனும் பார்வை குறைபாடு) வந்தபோது அவரின் தோல் செல்கள் கொண்டே Therapeutic Cloning முறையில் விழித்திரையை சரி செய்திருக்கிறார்கள்.

‘குளோனிங்பாக்ட்ரி’ என்றழைக்கப்படும் சீனாவின் போயாலைஃப் (Boya-Life) என்ற நிறுவனம் தற்போது வீடுசார்ந்த விலங்குகள் மட்டுமல்லாது பந்தயக் குதிரைகள், மோப்ப நாய்கள் என விலங்குகளையும் தயாரிக்கும் முயற்சியில் உள்ளது. இதே முக்கியத்துவம் உலகம் முழுவதும் குளோனிங் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு இருக்கும்பட்சத்தில் 2020ம் ஆண்டுக்குள் ‘குளோனிங் மனிதன்’ நிச்சயம் சாத்தியம் என அடித்துச் சொல்கிறார்கள் அறிவியலாளர்கள்.

# வரதராஜன் பற்ற வைத்த பட்டாசு



**2010**-ம் ஆண்டில் போயஸ் கார்டன் வீட்டில் ஜெயலலிதாவைக் கொல்ல முயற்சி நடந்ததாக அதிர்ச்சிகரமான தகவல்களை வெளியிட்டுள்ளார் துப்பறியும் நிபுணர் வரதராஜன்



‘2010-ல் ஜெயலலிதா எந்த அரசுப் பதவியிலும் இல்லை. அவரது போயஸ்கார்டன் வீட்டில் அமைதியாக காலங்கழித்து வந்தார். திடீரென ஒரு நாள்.. என்னுடைய ஆபீஸ் போனில் அழைப்பு வந்தது. எதிர்முனையில் அ.தி.மு.க. தலைமைக்கழக பொறுப்பாளர் மகாலிங்கம் பேசினார். ‘உங்களை அம்மா அழைக்கிறார். உடனே வாருங்கள்’ என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நேரில் சென்றேன். ‘எனக்காக ஒரு விஷயத்தைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டும். முடியுமா?’என்று கேட்டார். நானும் நிச்சியமாகச் செய்கிறேன் என்றேன்.

அப்போது அவர் என்னிடம் ‘நான் இரவில் படுக்கப்போகும்முன் பால் குடிப்பேன். அதுபோலத்தான், இந்த டம்ளரை கையில் எடுத்தேன். முகத்தருகே கொண்டு சென்றபோது, பயங்கர அதிர்ச்சி. பாலில் இருந்து ஏதோ புதுவித வாடை வந்தது. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மூட்டு வலி தைலத்தின் வாடை என்பதைப் புரிந்துகொண்டேன். உடனே, அந்த தைல பாட்டிலை எடுத்துப் பத்திரப்படுத்தினேன். அதில் ஏதாவது விரல்ரேகை இருக்கிறதா? என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்’ என்றார்.

அதையடுத்து, நான் தடய அறிவியல் கருவிகளை வரவழைத்தேன். அவற்றின் உதவியுடன் தைலப் பாட்டிலின் வெளிப்புறம் பதிந்திருந்த விரல் ரேகைகளைப் பதிவு செய்தேன். அதேநேரம், அவரது அறைக்கு அடிக்கடி சென்று வரும் சின்ன வயதுக்காரர்களான நான்கு பணியாட்களின் விரல்ரேகை பதிவுகளை ஜெயலலிதா என்னிடம் கொடுத்தார். இவர்களின் விரல் ரேகைகளுடன் அந்த தைலப் பாட்டிலில் இருந்த ரேகையும் ஒத்துப்போகிறதா? என்று பார்த்துச் சொல்லுங்கள் என்றார்.

இதை நான் செய்ய லேப்புக்கு செல்ல வேண்டும். விரல் ரேகைகளை எடுத்துச் செல்லட்டுமா? என்று கேட்டேன். அப்போது, அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் மறுத்தார். ஆனாலும், அவரையும் மீறி என்னை வெளியே எடுத்துச் செல்ல ஜெயலலிதா அனுமதித்தார். நானும் சின்ஸியராக செக்கப் பண்ணினேன். ரிசல்ட்டை சொன்னேன். ஜெயலலிதா சந்தேகப்பட்ட நான்கு பேர்களின் விரல்களுடன் ஒத்துப் போகவில்லை என்றேன். அதைக்கேட்ட ஜெயலலிதா, சற்று யோசித்தார். ‘ஓ.கே. இதை இதோடு விட்டுவிடுங்கள்’ என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.

அந்த நேரத்தில் அங்கே இருந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர்தான் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டார்’’ - இந்த தகவலை நம்மிடம் சொன்னவர்.. வரதராஜன்! சென்னை செனாய் நகரில் ஆபீஸ் நடத்தி வரும் வரதராஜனை நாம் சந்தித்தபோது, அவர் சொன்னதைத்தான் மேலே சொன்னோம்.

தமிழக காவல் துறையில் 25 வருடங்கள் பணிபுரிந்தவர். இன்ஸ்பெக்டர் ரேங்கில் இருந்தபோது, விருப்ப ஓய்வில் வெளியே வந்தவர். பிறகு, சன் டிடெக்ட்டிவ் என்கிற துப்பறியும் நிறுவனத்தை ஆரம்பித்து இன்று வரை நடத்தி வருகிறார். இவர் கண்டுபிடித்த பல சென்சிஸ்டிவ்வான விவகாரங்கள் பற்றி மீடியாக்களில் எழுதி பிரபலமானவர். அவள் விகடனில் கூட இவரது தொடர் வெளிவந்தது. காவல் துறைக்கு ஆதரவாக தற்போது டி.வி. விவாதங்களில் கலந்துகொண்டு வருகிறார். இவர் கண்டுபிடித்த ஒரு கதையை பிரபல சினிமா டைரக்டர் ஒருவர் ஃபேஸ்புக்கில் படித்து பிரமித்து நடிகர் அமிதாப்பச்சன், நடிகை ஐஸ்வர்யா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்களை நடிக்க ஏற்பாடு செய்து வருகிறார். இத்தனை இருந்தாலும், தினமும் சென்னை உயர்நீதிமன்றத்திற்குச் சென்று வக்கீலாகவும் பணிசெய்கிறார். அடிப்படையில் இவர் ஒரு ஜெயலலிதா விசுவாசி. அ.தி.மு.க -வின் விசுவாசி. ராமநாதபுரம் மாவட்டத்தைப் பூர்வீகமாக கொண்டவர்.

தற்போது ஜெயலலிதா மரணத்தில் சந்தேகம் இருப்பதாக ஆறுமுகசாமி ஆணையத்தில் காரசாரமான விவாதங்கள் நடந்து வருகின்றன. இந்த நிலையில், வரதராஜன் கூறிய தகவல்கள் பகீர் ரகமாக இருக்கின்றன.

போயஸ் கார்டனுக்கு வந்துபோன பிறகு, வரதராஜனுக்கு அ.தி.மு.க -வில் அடுத்தடுத்த சரிவுகளை சந்தித்தாராம். 2009 -ம் வருடம் நடந்த எம்.பி தேர்தலில் ராமநாதபுரம் மக்களவை தொகுதியில் சீட் கேட்டு விண்ணப்பித்திருந்தாராம் வரதராஜன். நேர்காணலுக்குப்போயிருந்தபோது, வரதராஜனின் பின்னணியைக் கேட்டு ஆச்சர்யப்பட்டு அவரது டைரியில் குறிப்பு எடுத்துக்கொண்டாராம். சீட் கிடைக்கவில்லை. அதற்கு அடுத்த வருடம். போயஸ் கார்டனில் கொலை முயற்சி நடந்தபோது, ஜெயலலிதா அவரது டைரியை தேடியிருக்கிறார். அது கிடைக்கவில்லையாம். ஆனாலும், விடாமல், ராமநாதபுரத்தில் நிற்க சீட் கேட்டு பயோ-டேட்டா கொடுத்தார். அந்த ஃபைலை தேடிப்பிடித்து கேட்டு வாங்கி அதிலிருந்த ஒரு போன் எண்ணை வைத்து அவரை அழைத்து வரச் சொன்னாராம். அதன்பிறகு, ராஜ்யசபா தேர்தல் வந்தபோதும் சரி, சட்டமன்றத் தேர்தல் வந்தபோதும் சரி முதுகுளத்தூரில் வரதராஜனை நிற்க வைக்க ஜெயலலிதா விரும்பினாராம். ஆனால், அவரது எண்ணம் திடீரென சிலரால் திசைதிருப்பிவிடப்பட்டதாம். இதையெல்லாம் பார்த்து நொந்துபோன வரதராஜன், ‘வேண்டாம்..இந்த அரசியல்’ என்று பெரிய கும்பிடு போட்டுவிட்டு மற்ற பணிகளில் ஈடுபட ஆரம்பித்துவிட்டார்.

பட்டாசை பற்றவைத்துவிட்டார் வரதராஜன்! அடுத்த என்ன நடக்கப்போகிறது? என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# குடும்பத்துக்காகவா? ஸ்டாலினுக்காகவா?

திருவாரூர் இடைத்தேர்தலில் போட்டியிடுவது குறித்து மு.க.அழகிரி தரப்பிலிருந்து எந்தத் தகவலும் அதிகாரபூர்வமாக வெளியாகவில்லை. ‘அப்பா வென்ற தொகுதியில் தி.மு.க தோல்வியடைந்தால், அது மிகப் பெரிய கேள்விக்குறியாகிவிடும். எனவே, தேர்தலில் போட்டியிட வேண்டாம்’ என அழகிரிக்கு வேண்டுகோள் வைத்துள்ளனர் குடும்ப உறுப்பினர்கள்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி மறைவுக்குப் பிறகு,‘மீண்டும் தி.மு.க-வில் இணைவார் அழகிரி’ என அவரது ஆதரவாளர்கள் பேசி வந்தனர். ஆனால், அவரை கட்சிக்குள் சேர்க்காமல் ஒதுக்கிவிட்டார் ஸ்டாலின். இதையடுத்து, குடும்ப உறுப்பினர்கள் மூலமாகவும் ஸ்டாலினிடம் சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்தன. ‘கருணாநிதி எடுத்த முடிவில் உறுதியாக இருக்கிறேன். மீண்டும் அவரை கட்சிக்குள் சேர்க்கும் எண்ணம் இல்லை’ எனத் தெளிவுபடுத்திவிட்டார். இதனால் கோபமடைந்த அழகிரி, கடந்த ஆண்டு செப்.5-ம் தேதி, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கருணாநிதி சமாதியை நோக்கி அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினார்.

இதன்பின்னர், திண்டுக்கல்லில் கருணாநிதி நினைவஞ்சலி நிகழ்ச்சியையும் நடத்தினார். ‘திருவாரூர் தொகுதிக்குத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டால், ஸ்டாலினைத் தோற்கடிக்கும் வகையில் வியூகம் அமைப்பார் அழகிரி’ என அவரது ஆதரவாளர்கள் தகவல் தெரிவித்தனர். இதன் ஒருகட்டமாக, திருவாரூரில் உள்ள பாட்டி அஞ்சுகத்தம்மாளின் நினைவிடத்துக்கும் அவர் சென்றுவந்தார். இந்த நிலையில், கடந்த சில நாள்களாக திருவாரூரில் போட்டியிடுவது தொடர்பாக அழகிரி தரப்பினர் விவாதித்துவருகின்றனர். இதில், துரை தயாநிதியை வேட்பாளராக நிறுத்தவும் சிலர் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

## அழகிரி கொந்தளிப்பு!

அழகிரி குடும்பத்துக்குள் நடக்கும் பேச்சுவார்த்தைகளை அறிந்து, அதிர்ச்சியில் உள்ளனர் தி.மு.க முன்னணி நிர்வாகிகள். ‘இடைத் தேர்தலில் போட்டியிடாமல் அழகிரி ஒதுங்கியிருப்பதே நல்லது’ என குடும்பத்தினர் மத்தியிலும் விவாதம் நடந்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, நேற்று அழகிரியிடம் பேசியிருக்கிறார் குடும்பத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர். அவர் பேசும்போது, ‘தேர்தலில் போட்டியிட வேண்டாம். ஆளும் கட்சி தரப்பில் ஒவ்வொரு சாதிச் சங்கத் தலைவர்களையும் ஒவ்வொரு சாதி அமைச்சர்களையும் களமிறக்கி நமக்கு நெருக்கடி கொடுக்க இருக்கிறார்கள். நீங்கள் போட்டியிட்டால், அது தி.மு.க-வின் வெற்றிவாய்ப்பை பாதித்துவிடும். குடும்பத்துக்கும் தேவையில்லாத சிரமம் ஏற்படும். இடைத்தேர்தலை நாம் எதிர்பார்க்கவில்லை’எனக் கூற, என்ன சொல்ல வருகிறாய்?’ என அழகிரி கேட்டிருக்கிறார்.

இதன்பின்னர், தொடர்ந்து பேசிய அந்த உறுப்பினர், ‘ திருவாரூர் இடைத்தேர்தலில் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்பு தி.மு.க-வுக்கு இருக்காது என நினைத்துக்கொண்டு, தங்கமணியும் வேலுமணியும் மத்திய அரசையும் தேர்தல் ஆணையத்தையும் பார்த்துவிட்டுத் தேர்தலை சந்திக்க வருகிறார்கள். இந்தத் தேர்தலில், குறைந்தபட்சம் 100 கோடி ரூபாயை செலவழிக்கவும்



அவர்கள் தயங்க மாட்டார்கள். ஆளும்கட்சியின் நடவடிக்கைகளை எதிர்த்து யாரும் கேள்வி கேட்க மாட்டார்கள். இந்த முறை தி.மு.க-வுக்கு கடுமையான நெருக்கடிகளை ஆளும்கட்சி தரும். அப்பா வென்ற தொகுதியில் நாம் தோற்றுவிட்டால், அது நம்மீது மிகப் பெரிய கேள்விக்குறியை ஏற்படுத்திவிடும்’ எனப் பொறுமையாக விளக்கியிருக்கிறார்.

இதற்குப் பதில் அளித்த அழகிரி,‘ஆர்.கே.நகர் தேர்தலில் பிரசாரம் செய்ய ஸ்டாலின் உனக்கு அழைப்புவிடுத்தாரா. அன்று உன்னையும் சேர்த்துத்தான் அவர் அவமானப்படுத்தினார். நீ சொன்ன நபருக்கு அவர் சீட் கொடுத்தாரா... உன்னையே அவர்கள் ஏமாற்றப் பார்க்கிறார்கள். அவர் சொன்னார் என என்னிடம் வந்து பேசுகிறாயா. கட்சியை வழிநடத்த அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?’என கோபத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். இதற்குப் பதில் கொடுத்த அந்த குடும்ப உறுப்பினர், ‘நீங்கள் தேர்தலில் போட்டியிடக் கூடாது, அவ்வளவுதான்’என வேண்டுகோள் வைத்திருக்கிறார். அதன்பின்னர் தொடர்ந்து பேசிய அழகிரி, ‘எனக்குக் கிடைத்துள்ள இந்தப் பிடியை விட்டுவிட்டால் எனக்கு என்ன பயன். நீ சொல்லும் வார்த்தைகளை எல்லாம் ஸ்டாலின் மதிக்க மாட்டார். குடும்பத்துக்காக பேசுகிறாயா...ஸ்டாலினுக்காகப் பேசுகிறாயா’ எனச் சாடியிருக்கிறார்.

‘குடும்ப உறுப்பினரின் கோரிக்கைக்கு அழகிரி செவிசாய்ப்பாரா என்பது அடுத்த சில நாள்களில் தெரிந்துவிடும்’ என்கின்றனர் அழகிரி ஆதரவாளர்கள்.

# ஆர்.கே.நகரை மனதில் வைத்து சதி செய்கிறார்கள்

திருவாரூர் தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக இன்று நடக்கவிருந்த அ.தி.மு.க ஆட்சி மன்றக் கூட்டம் த்திவைக்கப்பட்டுவிட்டது. ‘யார் வேட்பாளர் என்பதைத் தாண்டி தொகுதிக்குள் சமூகரீதியான பலத்தை ஆராயத் தொடங்கியுள்ளன தி.மு.க-வும் அ.தி.மு.க-வும். மோடியின் கணக்கைத் தோற்கடிக்க வேண்டும் என்பதுதான் தி.மு.க-வின் வியூகம்’ என்கின்றனர் அரசியல் விமர்சகர்கள்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி மறைவுக்குப் பிறகு, காலியாக உள்ள திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு வரும் 28-ம் தேதி தேர்தல் நடத்தப்பட உள்ளது. தொகுதியில் வரைவு வாக்காளர் பட்டியலின்படி 1,27,500 ஆண் வாக்காளர்களும் 1,31,169 பெண் வாக்காளர்களும் 18 திருநங்கைகளும் உள்ளனர். மொத்தம் 2,58,687 வாக்காளர்களில் ஆண்களைவிட 3,669 பெண் வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர். ஆர்.கே.நகரைத் தொடர்ந்து திருவாரூரிலும் வெற்றி பெற வேண்டும் என்பதில் முனைப்பாக இருக்கிறார் அ.ம.மு.க துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரன். அவரது கட்சி சார்பாக திருவாரூர் மா.செ எஸ்.காமராஜ் நிறுத்தப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. கடந்த சில நாள்களாக தேர்தல் பிரசார வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் காமராஜ். அ.தி.மு.க தரப்பிலோ யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பதில் இருவேறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன.



‘திருவாரூர் தொகுதியில் தினகரனைக் காலி செய்ய வேண்டும் என்றால், அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை வேட்பாளரைப் போட வேண்டும்’ என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார் ஓ.பன்னீர்செல்வம். இந்தக் கருத்தில் உடன்படாத முதல்வர் எடப்பாடி பழனிசாமி, ‘முக்குலத்தோர் வாக்குகள் பிரிவது வெற்றியைக் கொடுக்காது. எனவே, தொகுதிக்குள் பெரும்பான்மையாக இருக்கும் சமூகத்தைச் சேர்ந்தவரை வேட்பாளராகப் போட்டால் அது ஸ்டாலினுக்கு எதிரான வியூகமாக இருக்கும். கருணாநிதியின் சொந்தத் தொகுதியாக இருப்பதால், அந்த சமூகத்து வேட்பாளருக்கே வெற்றி வாய்ப்பு இருக்கும்’ என நினைக்கிறார்.‘முதல்வர் இப்படிச் சொல்வதற்குக் காரணம், தொகுதியில் சசிகலாவின் சொந்த சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தினகரன் நிறுத்தும் வேட்பாளருக்குத்தான் ஓட்டு போடுவார்கள். அந்தத் தொகுதியில் 9 சதவிகிதம் அளவுக்கு முக்குலத்தோர் வாக்குகள் உள்ளன. இதில், சசிகலா சமூகத்துக்குக் குறைவான வாக்குகளே உள்ளன. இதை மனதில் வைத்துத்தான் வேட்பாளர் தேர்வில் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தார் எடப்பாடி பழனிசாமி’ என்கின்றனர் அ.தி.மு.க வட்டாரத்தில்.



அதேசமயம், திருவாரூர் தொகுதியில் உறுதியாக வெற்றி பெற்றுவிடுவோம் என நினைக்கிறார் மு.க.ஸ்டாலின். இதைப் பற்றி நம்மிடம் பேசிய தி.மு.க முன்னணி நிர்வாகி ஒருவர், “ இந்தத் தேர்தலில் தி.மு.க-வுக்கான வெற்றி வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அதேநேரம், அதிக லீடிங்கில் வெற்றி பெற முடியாது என்பதையும் அறிவோம். தொகுதியில் தி.மு.க அணிக்கு 65 சதவிகித வாக்குகள் உள்ளன. ஆர்.கே.நகரைப் போல திருவாரூரிலும் ஸ்டாலின் டெபாசிட் இழப்பார் என நம்புகிறார் மோடி.‘இந்தத் தேர்தலே பா.ஜ.க செய்கின்ற சதிதான்’ என்பதை ஸ்டாலின் அறிவார். அந்தச் சதியை முறியடித்து வெற்றி பெற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்.

இந்தத் தேர்தலில் மோடி எதிர்ப்பு வாக்குகளை தி.மு.க பக்கம் கொண்டு வரும் வேலையில் கம்யூனிஸ்ட்டுகளும் காங்கிரஸும் முனைப்புடன் செயல்படத் தொடங்கிவிட்டன. ஆர்.கே.நகர் ரிசல்ட்டுக்குப் பிறகும் கூட்டணிக் கட்சிகள் எதுவும் ஸ்டாலினை விட்டு விலகவில்லை. அவர்கள் அனைவரும் ஸ்டாலின் தலைமையில் உறுதியாக நிற்கின்றனர். இந்தக் கட்சிகளின் அடிப்படை வாக்குகள் எதுவும் அ.தி.மு.கவுக்கோ தினகரனுக்கோ செல்லப் போவதில்லை. கருணாநிதி வென்ற தொகுதியை, ஸ்டாலின் தக்கவைத்துக் கொள்வார்’ என்றார்.

# தோனியின் சாதனையை முறியடித்த ரிஷப் பந்த்: 10 சுவாரஸ்ய தகவல்கள்



ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னியில் நடந்து வரும் 4-வது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த் 159 ரன்கள் அடித்து பல முக்கிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். அது குறித்த முக்கிய சுவாரஸ்ய தகவல்கள்

1. ஆஸ்திரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டித் தொடரில் 200 ரன்களுக்கு மேல் குவித்த ஆசிய அணியைச் சேர்ந்த முதல் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த்.

2. ஒரு டெஸ்ட் தொடரில் 20 கேட்சுகளைப் பிடித்து, 200 ரன்களுக்கு மேல் சேர்த்த ஆசிய நாடு அணிகளின் முதல் விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த்.

3. ஆஸ்திரேலியாவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகச் சதம் அடித்த முதல் இந்திய விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த். இதற்கு முன் இந்திய விக்கெட் கீப்பரின் அதிகபட்சம் 1967-ம் ஆண்டில் பரூக் இஞ்சினியர் சேர்த்த 89 ரன்களாகும். அதை ரிஷப் பந்த் முறியடித்துள்ளார்.

4. வெளிநாடுகளில் சென்று இந்திய அணி விளையாடிய டெஸ்ட் போட்டிகளில் 150 ரன்களுக்கு மேல் குவித்து தோனியின் சாதனையை முறியடித்துள்ளார். 150 ரன்களுக்கு மேல் குவித்த முதல் விக்கெட் கீப்பரும் ரிஷப் பந்த். தோனி பாகிஸ்தானில் அதிகபட்சமாக 148 ரன்கள் மட்டுமே சேர்த்திருந்தார்.

5. இரு வெளிநாடுகளில் சென்று சதம் அடித்த முதல் இந்திய விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த். இங்கிலாந்திலும், ஆஸ்திரேலியாவிலும் ரிஷப் பந்த் சதம் அடித்துள்ளார். இதற்கு முன் இதேபோல வெளிநாடுகளில் சென்று சதம் அடித்த விக்கெட் கீப்பர் மே.இ.தீவுகள் விக்கெட் கீப்பர் ஜெப் டியூஜான் ஆவார்.

6. 21 வயது 91நாட்கள் மட்டுமே ஆகும் ரிஷப் பந்த், மிகக் குறைந்த வயதில் டெஸ்ட் கிரிக்கெட்டில் 150 ரன்கள் சேர்த்த இளம் விக்கெட் கீப்பர் ஆவார். இதற்கு முன் ஜிம்பாப்வே விக்கெட் கீப்பர் ததேந்தா தைபு 21 வயது 245 நாட்கள் ஆகியபோது, வங்கதேசத்துக்கு எதிராக 153 ரன்கள் சேர்த்திருந்தார்.


7. ஆசியக் கண்டதைத் விட்டு வெளிநாடுகளில் சென்று அதிகபட்ச தனிநபர் ஸ்கோரை பதிவு செய்த விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த். இதற்கு முன் வங்கதேச விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹீம் அதிகபட்சமாக ஸ்கோர் செய்துள்ளார்.

8. ஆஸ்திரேலியத் தொடரில் இதுவரை ரிஷப் பந்த் 350 ரன்கள் சேர்த்துள்ளார். இதன் மூலம் தோனியின் கடந்த கால ஆஸிக்கு எதிரான 348 ரன்கள் சாதனையையும் ரிஷப் பந்த் முறியடித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் தற்போது நடந்துவரும் டெஸ்ட் தொடரில் ரன்குவிப்பில் புஜாராவுக்கு அடுத்த இடத்தில் ரிஷப் பந்த் உள்ளார்.

. 7-வது விக்கெட்டுக்கு ரவிந்திர ஜடேஜாவுடன் சேர்ந்து 204 ரன்களுக்கு மேல் ரிஷப் பந்த் சேர்த்துள்ளார். இது ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஸ்திரேலயாவில் 7-வது விக்கெட்டுக்கு சேர்த்த அதிகபட்ச ஸ்கோராகும்.

10. வெளிநாட்டு அணிகளின் விக்கெட் கீப்பர்கள் ஆஸ்திரேலியாவில் அதிகபட்ச ஸ்கோரை பதிவு செய்த வகையில் தெ ஆப்பிரிக்க விக்கெட் கீப்பர் டி வில்லியர்ஸ் முதலிடத்தில் உள்ளார். கடந்த 2012-ம் ஆண்டு நவம்பரில் பெர்த்தில் ஆஸிக்கு எதிராக 169 ரன்கள் சேர்த்தார். அதற்கு அடுத்த இடத்தில் ரிஷப் பந்த் 159 ரன்கள் சேர்த்துள்ளார்.

# 8 ஆண்டுகளுக்குப்பின் வருகிறார் பீட்டர் சிடில்



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டது. அதில் 8 ஆண்டுகளுக்குப் பின் ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் தொடரில் வேகப்பந்துவீச்சாளர் பீட்டர் சிடில் இடம் பெற்றுள்ளார்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டிவிட்டது. அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் வரும் 15-ம் தேதி தொடங்க உள்ளது. இதற்கான 14 வீரர்கள் கொண்ட ஆஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

டெஸ்ட் போட்டிஇந்திய அணி வீரர்களைப் பந்துவீச்சில் மிரட்ட முடியவில்லை. மெல்போர்ன், சிட்னி டெஸ்ட்களில் 400 ரன்களுக்கு மேல் குவித்து ஆஸ்திரேலிய அணியை மிரளவைத்தனர். இதனால் ஒருநாள் தொடரில் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற நோக்கில் பந்துவீச்சிலும், பேட்டிங்கிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி ஒருநாள் தொடருக்கு கேப்டனான ஆரோன் பிஞ்ச் நியமிக்கப்பட்டுள்ளார். பந்தைச் சேதப்படுத்தும் விவகாரத்தையடுத்து துணைக் கேப்டன்களாக இருவர் நியமிக்கப்பட்டுள்ளனர். மிட்ஷெல் மார்ஷ், அலெக்ஸ் கேரே ஆகியோர் துணைக் கேப்டன்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 8 ஆண்டுகளாக ஆஸ்திரேலிய ஒருநாள் அணியில் இடம் பெறாமல் இருந்த அனுபவமிக்க வேகப்பந்துவீச்சாளர் பீட்டர் சிடில் 2010-ம் ஆண்டுக்குப்பின் இப்போது திரும்ப அழைக்கப்பட்டுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடிய சிடில் 64 டெஸ்ட்களில் 214 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். 17 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 15 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

மேலும், உஸ்மான் கவாஜா, நாதன் லயன், ஆகியோரும் திரும்ப அழைக்கப்பட்டுள்ளனர்.

தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்குப்பின் லயன் தேர்வு செய்யப்படாமல் இருந்த நிலையில், இப்போது அணிக்கு அழைக்கப்பட்டுள்ளார். கடந்த 2ஆண்டுகளாக ஒருநாள் அணியில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த கவாஜாவும் திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை கருத்தில் கொண்டு, வேகப் பந்துவீச்சாளர்கள் மிட்ஷெல் ஸ்டார்க், ஜோஸ் ஹேசல்வுட், பாட் கம்மின்ஸ் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

பேட்ஸ்மேன்களான டிராவிஸ் ஹெட், டார்கே ஷார்ட், கிறிஸ் லின் ஆகியோர் சமீபகாலமாக ஒருநாள் தொடரில் மோசமாக செயல்பட்டதால், அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். வேகப்பந்துவீச்சாளர் நாதன் கோல்டர் நீல் காயம் காரணமாக அணியில் இடம் பெறவில்லை.

ஆஸ்திரேலய அணியின் தேர்வுக் குழுத்தலைவர் டிரிவோர் ஹான்ஸ் கூறுகையில், எதிர்வரும் உலகக்கோப்பையைக் கருத்தில் அணியைத் தேர்வு செய்துள்ளோம். தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் தொடரில் மோசமாக விளையாடியது ஆஸ்திரேலிய அணி.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர், ஐக்கிய அரபு நாடுகள் தொடர் அடுத்து மிக முக்கியமானதாகும் எனத் தெரிவித்தார்.

முதல் ஒருநாள் போட்டி வரும் 15-ம் தேதி அடிலெய்டிலும், 2-வது போட்டி 18-ம் தேதி மெல்போர்னிலும் நடக்கிறது.

**ஆஸ்திரேலிய அணி விவரம்:**

ஆரோன் பிஞ்ச்(கேப்டன்), உஸ்மான் கவாஜா, ஷார் மார்ஷ், பீட்டர் ஹேண்ட்ஸ்கம்ப், கிளென் மேக்ஸ்வெல், மார்கஸ் ஸ்டோய்னிஸ், மிட்ஷ் மார்ஷ், அலெக்ஸ் கேரே, ஹேய் ரிச்சார்ட்ஸன், பில்லி ஸ்டான்லேக், ஜேஸன் பெஹரன்டார்ப், பீட்டர் சிடில், நாதன் லயன், ஆடம் ஜம்பா.

# இரண்டாமிடத்துக்கு முன்னேறியது டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரின் புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடத்துக்கு டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் முன்னேறியுள்ளது.

எவெர்ற்றன், போர்ண்மெத் அணிகளுக்கெதிரான போட்டிகளில் வென்றமையைத் தொடர்ந்து முன்னேறிவந்த டொட்டென்ஹாம் ஹொட்ஸ்ட்பர், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸ் அணியிடம் கடந்த சனிக்கிழமை தோல்வியைத் தழுவியிருந்ததன் மூலம் பின்னடைவைச் சந்தித்திருந்தபோதும் கார்டிப் சிற்றி அணியின் மைதானத்தில் நேற்றிரவு இடம்பெற்ற அவ்வணியுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடத்துக்கு முன்னேறியுள்ளது.

இப்போட்டியின் ஆரம்பத்தில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் நட்சத்திர முன்கள வீரர் ஹரி கேன், சக வீரர் கெய்ரான் ட்ரிப்பியரிடம் கொடுத்த பந்தை அவர் உதைய அது கார்டிப் சிற்றியின் பின்கள வீரர் சீன் மொரிசனிடம் வந்தபோதும் அவர் உதைய அது ஹரி கேனின் முழங்காலில் பட்டு கோலாக போட்டியின் மூன்றாவது நிமிடத்திலேயே டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் முன்னிலை பெற்றது.

இந்நிலையில், அடுத்த ஒன்பதாவது நிமிடத்தில் டொட்டென்ஹாமின் முன்கள வீரரான சண் ஹெயுங் மின், சக வீரர் கிறிஸ்டியன் எரிக்சனிடம் கொடுத்த பந்தை அவர் கோலாக்க தமது முன்னிலையை இரட்டிப்பாக்கிய டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், 26ஆவது நிமிடத்தில் ஹரி கேன் கொடுத்த பந்தை சண் ஹெயுங் மின் கோலாக்கியதோடு இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் இடம்பெற்ற புல்ஹாம் அணியுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் அணி வென்றது. ஆர்சனல் சார்பாக, கிரனிட் ஸாகா, அலெக்ஸான்ட்ரே லகஸ்ரே, ஆரோன் றம்சி, பியரி எம்ரிக் அபுமெயாங்க் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். புல்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை அபுபக்கர் கமரா பெற்றிருந்தார்.

அந்தவகையில், குறித்த வெற்றியின் மூலம் 41 புள்ளிகளைப் பெற்றுள்ள ஆர்சனல், புள்ளிகள் பட்டியலில் 43 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் காணப்படும் செல்சியை நெருங்கியுள்ளது. இதில், ஆர்சனலை விட செல்சி ஒரு போட்டியில் குறைவாக விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடக்நாத் கோழி சாப்பிடுங்கள் கோலி!- விஞ்ஞானி பரிந்துரை

கடக்நாத் கோழியை சாப்பிடுமாறு கிரிக்கெட் வீரர் கோலிக்கு விஞ்ஞானி ஒருவர் பரிந்துரை கடிதம் எழுதியிருக்கிறார்.

இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கு க்ரில்டு சிக்கன் என்றால் பிரியம் ஆனால் அதில் கொழுப்பு அதிகம் என்பதால் அதைவிடுத்து சைவ உணவு உண்டு வருவதாக இணையதளத்தில் படித்த விஞ்ஞானி ஒருவர் கோலிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் ப்ராய்லர் கோழிக்கு பதிலாக கடக்நாத் வகை நாட்டுக் கோழியை சாப்பிடுமாறு அவர் பரிந்துரைத்திருக்கிறார்.

மத்தியப் பிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவை கடக்நாத் கோழிகள். இவற்றிற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வகை கோழிகளின் நிறம் மட்டுமல்ல தசை, எலும்பு என எல்லாமே கறுப்பு நிறமாகவே இருக்கும் என்பதே இதன் தனிச்சிறப்பு. இதில் நிறைய மருத்துவ குணங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், விராட் கோலி கோழி இறைச்சியை தவிர்த்துவிட்டதாக இணையத்தில் படித்த ஜப்புவா மாவட்டத்தி க்ரிஷி விக்யான் கேந்த்ராவின் முதன்மை விஞ்ஞானி டாக்டர் ஐ.எஸ். தோமர், கடக்நாத் கோழியை பரிந்துரைத்து கோலிக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தி இந்துவிடம் கூறும்போது, ‘‘கோலிக்கு க்ரில்டு சிக்கன் என்றால் பிடிக்கும். ஆனால் அதில் கொழுப்பு சத்து அதிகமாக இருப்பதால் சிக்கனை விடுத்து அவர் சைவ உணவு சாப்பிடுவதாகக் கேள்விப்பட்டேன். இந்திய அணியினர் அனைவரும் சைவ உணவை பின்பற்றுவதாகவும் கேள்விப்பட்டேன். அதனால் அவருக்கு கடக்நாத் கோழியின் சிறப்பு பற்றி கடிதம் எழுதினேன்.

கடக்நாத் வகையிலான கறுப்புக் கோழிகள் ஜப்புவா மாவட்டத்தின் ஆதிவாசிகளால் வலர்க்கப்படுகிரது. இதற்கு கடந்த ஆண்டு அரசாங்கம் புவிசார் குறியீடு வழங்கியது.

இவ்வகைக் கோழிகளின் இறகுகள் மட்டுமல்ல சதை, எலும்பு எல்லாமே கறுப்பாகத்தான் இருக்கும். இவற்றில் கொழுப்பின் விகிதம் 0.73-1.05% மட்டுமே. ஒப்பீட்டு அளவில் மிகக் குறைவு. வழக்கமான வெள்ளை ப்ராய்லர் கோழிகளில் 13-25% அலவுக்கு கொழுப்பு இருக்கும்.

அதுமட்டுமல்லாமல் கடக்நாத் கோழிகளில் அதிகளவில் புரதம், இரும்புச் சத்து, அமினோ அமிலம் உள்ளன. இதன் இறைச்சியை சாப்பிடுவதால் புதிய தெம்பும் உற்சாகமும் கிடைக்கும் என மக்கள் நம்புகின்றனர். நான் இந்தவகை கோழிகளை 15 ஆண்டுகளாக ஆய்வு செய்திருக்கிறேன். இவற்றின் ஆரோக்கிய பலன் உறுதியானது.

கடக்நாத் சிக்கனுக்கு மாறுவதால் இந்திய அணி சைவ உணவுக்கு மாற வேண்டிய அவசியம் இருக்காது. ஆனால், கிரிக்கெட் அணி உணவு செலவினம் அதிகரிக்கும். காரணம் நாங்கள் கடக்நாத் சேவல்களை ரூ.800-க்கும் கடக்நாத் கோழிகளை ரூ.700-க்கு விற்கிறோம்.

வியாபாரிகள் இவற்றை சேவலுக்கு ரூ.1500, கோழிக்கு ரூ.1200 என விற்கின்றனர். விலை அதிகமாக இருந்தாலும்கூட இதற்கான மவுசு குறையவில்லை. நாங்கள் எப்போதும் 1000 கோழிகளை இருப்பு வைத்திருப்போம். ஆனால், காத்திருப்போர் பட்டியல் என்னவோ மூன்று, நான்கு மாதங்கள் வரை நீளும்.

கடக்நாத் கோழிகள் பற்றி கோலிக்கும் பிசிசிஐ-க்கும் கடிதம் அனுப்பியிருக்கிறேன். கோலி சிட்னி டெஸ்டில் இப்போது பிஸியாக இருப்பதால் அது முடிந்தவுடன் பதில் அளிப்பார் என எதிர்பார்க்கிறேன். எனது வேலை தகவலைத் தெரிவிப்பது மட்டுமே என்றார்.

# சேரீனாவின் அமெரிக்காவை பெடரரின் சுவிற்ஸர்லாந்து வென்றது



அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் இடம்பெற்ற ஹொப்மன் கிண்ணத் தொடரின் லீக் சுற்றுப் போட்டியில் 23 கிரான்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற செரீனா வில்லியம்ஸின் ஐக்கிய அமெரிக்காவை 20 கிரான்ட் ஸ்லாம் பட்டங்களை வென்ற ரொஜர் பெடரரின் சுவிற்ஸர்லாந்து வென்றிருந்தது.

செரீனா, பிரான்ஸெஸ் டியபோ இணையை 4-2, 4-3 (5-3) என்ற செட் கணக்கில் பெடரர், பெலின்டா பென்சிச் இணை வென்று 2-1 என்ற ரீதியில் லீக் சுற்றுப் போட்டியில் வெற்றியை நிலைநாட்டியது. இப்போட்டிகளுக்கு முதல் தத்தமது தனிநபர் போட்டிகளில் பெடரரும் செரீனாவும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அன்டி மரேக்கு வெற்றி மீள்வருகை



பிறிஸ்பேஸ் சர்வதேச டென்னிஸ் தொடரில், இடம்பெற்ற முதலாவது சுற்றுப் போட்டியொன்றில் அவுஸ்திரேலியாவின் ஜேம்ஸ் டக்வேர்த்தை எதிர்கொண்ட உலகின் முன்னாள் முதல்நிலை வீரரான அன்டி மரே, 6-3, 6-4 என்ற நேர் செட்களில் வென்றார். கடந்தாண்டு செப்டெம்பருக்குப் பின்னர் மரே பங்கேற்ற முதலாவது போட்டியாக இது அமைந்தது.

இதேவேளை, இத்தொடரின் பெண்களுக்கான முதலாவது சுற்றுப் போட்டியொன்றில், உலகின் ஆறாம் நிலை வீராங்கனையான ஐக்கிய அமெரிக்காவின் சொலனி ஸ்டீவன்ஸை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் ஐக்கிய இராச்சியத்தின் ஜொஹன்னா கொன்டா வென்றிருந்தார்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.

# சத்தியப்பிரமாண நிகழ்வுடன் கடமைகள் பொறுப்பேற்பு





**உ.உதயகாந்த்**

புதிய ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்கள் கடமைக்கான சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு சகல திணைக்களங்கள்,அரச நிறுவனங்களில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிரதான சத்தியப்பிரமாண நிகழ்வு மட்;டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் போதைப்பொருள் அற்ற நாட்டையும் சமூக விழுமியங்களையும் பொருளாதார வளம்கொண்ட சமூகத்தினையும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டத்தினை வலுவூட்டுவதற்காக அரச உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையினை வழங்கும் வகையில் சத்தியப்பிரமான நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தேசிய கொடியேற்றப்பட்டு நாட்டில் உயிர் நீர்த்த பாதுகாப்பு தரப்பினர் மற்றும் அரச உத்தியோகத்தர்களுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து 2019ஆம் ஆண்டுக்கான அரச உத்தியோகத்தர்களுக்கான பிரகடனம் வாசிக்கப்பட்டு அரச உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மேலதி அரசாங்க அதிபர்கள்,உதவி அரசாங்க அதிபர்கள்,திணைக்களங்களின் தலைவர்கள்,உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கடந்த ஆண்டு சிறப்பாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.




# திருமலை பத்ரகாளி அம்பாள் ஆலய இலட்சார்ச்சனை நிகழ்வு

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான 70வது விசேட இலட்சார்ச்சனை நிகழ்வு எதிர்வரும் மார்கழி மாதம் 24ம் நாள் 08.01.2019 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அன்றிலிருந்து தினமும் பகல் இரவு விசேட அபிசேகமும் ஆராதனைகளுடனான அர்ச்சனை நடைபெறும்.5ம் நாளிலிருந்து மாலை 4.00 மணிக்கு மேருயந்திர ஸ்ரீ சக்கர பூஜை ஆரம்பமாகி 10ம் நாள் பூர்தியாகும்.

11ம் நாளாகிய தைமாதம் 4ம் நாள் 18.01.2019 வெள்ளிக்கிழமை ரோகிணி நட்சத்திரம் அம்பாளின் கும்பாபிசேக தினம் அன்று காலை 5.00 மணிக்கு அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிசேகத்திற்கான கிரிகைகள் ஆரம்பமாகி சங்காபிசேகமும் பூஜையும் இடம்பெற்று அன்றிரவு ஊஞ்சலும் தண்டிகை உற்சவமும் நிகழவுள்ளது.

# 38 வருடகால அரச சேவையிலிருந்து ஓய்வு



ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிவந்த ஏ.தர்மதாஸ தனது 38 வருட அரச சேவையிலிருந்து கடந்த மாத இறுதியில் ஓய்வு பெற்றார்.

முன்னைநாள் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தராகக் கடமையாற்றியிருந்த ஈ.குலசேகரனின் ஓய்வுக்குப் பின்னர் கடந்த 2014 ஆம் ஆண்டில் சேவை மூப்பின் அடிப்படையில் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இவர் கடந்த 5 வருடங்களாகச் சிறப்பான முறையில் தனது கடமைகளை முன்னெடுத்திருந்த நிலையில் தனது 60 ஆவது வயதுப் பூர்த்தியுடன் ஓய்வு பெற்றுள்ளார்.

அக்கரைப்பற்று - 7 ஆம் பிரிவில் வசித்துவந்த ஆரியதாஸ - ரஞ்சிதம் தம்பதியினரின் தலைமகனாகக் கடந்த 1958 ஆம் ஆண்டில் பிறந்த இவர் தனது பாடசாலைக் கல்வியை அக்கரைப்பற்று இராம கிருஸ்ண மிசன் மகா வித்தியாலயத்தில் கற்றிருந்தார். அவ்வேளையில் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் விளையாட்டுக்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக விளங்கி, பாடசாலை மட்டம் மற்றும் கழக மட்டங்களில் நடாத்தப்பட்ட உள்ளூர், வெளியூர் போட்டிகளில் திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

தனது 23 ஆவது வயதில் (1981) அரச சேவையில் இணைந்த இவர் தனது முதலாவது அரச பணியான விசேட சேவைகள் உத்தியோகத்தராக 7 வருடங்கள் கடமையாற்றிய நிலையில் கடந்த 1987 ஆம் வருடம் கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்றார். அன்றிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை 27 வருடங்கள் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அனைத்து (22) கிராம அலுவலர் பிரிவுகளிலும் காலத்துக்குக் காலம் சிறப்பாகச் சேவையாற்றியிருந்த நிலையிலேயே சேவை மூப்பின் அடிப்படையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கான நிருவாக உத்தியோகத்தராகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தார்.

கடந்த காலங்களில் இவர் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் அக்கரைப்பற்று பிரதேசத்துக்கான பிரதி தலைவராகவும், தோணிக்கல் மேல் கண்ட விவசாய அமைப்பின் தலைவராகவும், அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், ஆலையடிவேம்பு இந்துமா மன்றத்தின் நிருவாக சபை உறுப்பினராகவும், அக்கரைப்பற்று அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் மஹா தேவஸ்தானத்திற்குட்பட்ட சங்கரப்பத்தான் குடி மக்களின் வண்ணக்கராகவும், கோளாவில் அருள்மிகு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய பரிபாலன சபையின் நிருவாக சபை உறுப்பினராகவும் பல பதவிகளை அலங்கரித்து தமிழ்த் தேசிய சிந்தனைகளுடன் விவசாய அபிவிருத்தி, கல்வி மேம்பாடு உள்ளிட்ட சமூக சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிறப்பாகச் செயற்பட்டிருந்தார்.

அண்மையில் அகில இலங்கை சமாதான நீதவானாக நியமனம் பெற்றுக்கொண்ட திரு. ஆரியதாஸ தர்மதாஸ அவர்களது பாரியார் திருமதி. பவானி தர்மதாஸ கடந்த காலங்களில் விஞ்ஞான ஆசிரியையாக இருந்து தற்போது அக்கரைப்பற்று செின். ஜோன் வித்தியாலயத்தின் பிரதி அதிபராகக் கடமையாற்றுகிறார். இவரது மகளான திருமதி. வினித்தா லோகநாதன் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராகப் பணியாற்றி வருவதுடன், மகனான தர்மதாஸ கிரிஷாந்த் அம்பாறை ஹாடி தேசிய உயர் தொழிநுட்பக் கல்லூரியில் ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியைப் பயின்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு புதிய உதவிப்பணிப்பாளர் நியமிப்பு

**க.விஜயரெத்தினம்**



மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவிற்கு புதிய உதவிப் பணிப்பாளராக வாழைச்சேனையைச் சேர்ந்த சின்னையா கோகுலராஜா கடமைகளைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

ஏற்கனவே மட்டக்களப்பில் கடமையாற்றிய எம்.றியாஸ் அம்பாறை மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை(24) கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னையா கோகுலராஜா கிழக்குப் பல்கலைக்கழகத்தில் புவியியல் சிறப்பு கலைமாணிப்பட்டத்தையும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அனர்த்த முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக தற்காலிக விரிவுரையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த வேளை 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது தொண்டராக செயற்பட்டார்.

பின்ன சர்வதேச தொண்டு நிறுவனமான ஒக்ஸ்பார்ம், ஐக்கிய நாடுகளுக்கான கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனம், இலங்கை செஞ்சிலுவை சங்கம் என்பவற்றில் அனர்த்த சார் அதிகாரியாகக் கடமையாற்றினார்.

2012ம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மாவட்ட நிவாரண இணைப்பாளராக முல்லைத்தீவு மாவட்டத்திலும், அனர்த்த முகாமைத்துவ தலைமைக்காரியாலயத்தில் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவில் உடவிப் பணிப்பாளராக கடமையாற்றி தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

# மண்டூரிலிருந்து மருத்துவத்துறைக்கு மாணவன் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்

**மண்டூர் நிருபர்**



இம்முறை வெளியாகியுள்ள க.பெ.த.உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகளில் அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய 15 ஆம் கிராமத்தில் இருந்து மருத்துவத்துறைக்கு மாணவன் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முருகமூர்த்தி கிரிசாந் எனும் மாணவனே மருத்துவத்துறைக்கு தெரிவாகியுள்ளார். இவர் 2ஏ, பி சித்திகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் 13 ஆம் நிலையில் இடம் பிடித்துள்ளார்.

15 ஆம் கிராமத்தில் ஏழை விவசாயக் குடும்பமான முருகமூர்த்தி புஸ்பராணி தம்பதிகளின் இரண்டாவது புதல்வன் மாணவன் கிரிசாந். இவர் தனது ஆரம்பக் கல்வியை 15 ஆம் கிராமம் விவேகானந்தா மகா வித்தியாலயத்தில் கற்றுள்ளதுடன் க.பொ.த.சாதாரணப் பரீட்சையில் ஒன்பது படங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் தனது உயர்கல்வியை துறைநீலாவணை மகா வித்தியாலயத்தில் கற்றுள்ளார். அங்கு 2016 இல் முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றியவர் மூன்று பாடங்களிலும் பி சித்திகளைப் பெற்றுள்ளார்.

இரண்டாவது தடவையாக 2017 இல் பரீடசைக்கு தோற்றியவர் ஏ.2வீ சித்திகளைப்பெற்று மாவட்டத்தில் 49 நிலையில் சித்தியடைந்திருந்தார்.

அதன் பின்பு மூன்றாவது தடவையாக 2018 இல் பரீட்சைக்குத் தோற்றியவர் இம்முறை ஏ. 2வீ சித்திகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் 13 ஆம் நிலையில் இடம் பிடித்துள்ளார்.

முயற்சி திருவினையாக்கும் என்பதற் இணங்க வைராக்கியம், அயராத உழைப்பு, பெற்றோரின் ஊக்குவிப்பு ஆகியவற்றுக்கு இடையில் படித்து வைத்தியராக வரவேண்டும் என்ற தனது சிறுவயது கனவை நனவாக்கியுள்ளதாக மாணவன் கிரிசாந் கூறுகின்றார்.

குடும்பக் கஷ்டத்தையும், சிறுவயது கனவு இலட்சியத்தையும் மனதில் சுமந்து வைராக்கியத்துடன் படித்து இலக்கை எட்டியதில் மகிழ்சியடைகின்றார்.

ஒரு விவசாயின் மகன் இன்று அக் கிராமத்தின் முதல் வைத்தியராக வைத்தியத்துறைக்குள் நுழைவது 15 ஆம் கிராம மக்களையும் பெருமைப்பட வைத்துள்ளமையினால் அம் மாணவனுக்கு பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் குவிந்து வருகின்றன.



**கடற்றொழில் நீரியல் வளங்கள் மற்றும் கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் போரதீவுப்பற்று செயலகப் பிரிவுக்குட்பட்ட காவேரி மகளிர் சங்கத்திலுள்ளோரின் சுயதொழில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கால்நடைஉற்பத்தி மற்றும் பால் விற்பனை செய்யும் 69 பயனாளிகளுக்கு பால் கொள்கலனும் சிகையலங்காரத் தொழில் செய்யும் 20 யுவதிகளுக்கு சிகையலங்கார உபகரணங்கள் ஆகியன பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகியினால் அண்மையில்வழங்கி வைக்கப்பட்டது.**

# நெற்செய்கை பாதிப்பு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் , குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 06 வயல் பிரதேசங்களில் சுமார் 775 ஏக்கர் காணியில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையை அரக்கொட்டியான் சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

சமுளங்குளப் பிரதேசத்தில் 153 ஏக்கரும் செஞ்சாலி பகுதியில் 180 ஏக்கரிலும், இலுப்பைக்குளப் பகுதியில் 155 ஏக்கரிலும், குயவனாறு பிரதேசத்தில் 160 ஏக்கரிலும், பொய்கை குளப் பகுதியில் 112 ஏக்கரிலும், நாவுலாறு பகுதியில் 15 ஏக்கரிலும், இம்முறை பெரும்போக நெற்செய்கை பண்ணப்பட்டிருக்கிறது.

இதில் சிலருடைய வயல்கள், அரக்கொட்டியான் தாக்கத்தால் முழுமையாகவும் சிலருடைய வயல்கள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டிருப்பதோடு, மேலும் சிலருடைய வயல்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டும் வருகின்றன.

இன்னும் இரு வாரங்களில் அறுவடை செய்யக் காத்திருக்கின்ற நேரத்தில் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்த விவசாயிகள் அதிர்ச்சி தெரிவிக்கின்றனர்.

அரக்கொட்டியான் தாக்கத்தில் இருந்து நெற்கதிர்களைப் பாதுகாப்பதற்காக பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து, பூச்சி நாசினிகளைப் பலமுறை தெளித்தும் அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது போயுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாத இறுதிப் பகுதியில் தொடராகப் பெய்த அடைமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாகவே, இந்த அரக்கொட்டியான் தாக்கம் ஏற்பட்டிருப்பதாக, குஞ்சவெளி கமல நல சேவைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே இதனை ஓர் இயற்கை அனர்த்தமாகக் கருதி, பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு உரிய நிவாரணத்தைப் பெற்றுக்கொடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புதுக்குடியிருப்பில் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைப்பு

**பெரியகல்லாறு நிருபர்**

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் புதுக்குடியிருப்பில் எரிபொருள் நிரப்பு நிலையம் (ஈஎம்எஸ்) சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மட் மாவட்ட அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா ஓய்வு நிலை வங்கி முகாமையாளர் சிவஞானம் ஆகியோரால் திறந்து வைக்கப்படுவதையும் விநியோகம் நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.



இந் நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை உறுப்பினர் சண்முகம் கணேசநாதன். முன்னாள் பெரியகல்லாறு சர்வார்த்த ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வண்ணக்கர் க.சீவரெத்தினம்,. கல்லாறு கழகங்களின் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

சம்பிரதாயபூர்வமாக பால்காய்ச்சி விநாயகர் வணக்கத்துடன் திறப்பு விழா இடம்பெற்றது.

# பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வாகனங்கள் அகற்றல்

**சேனையூர் நிருபர்**

திருகோணமலை நகர எல்லைக்குள் உள்ள வீதியில் இரு பக்கமும்,பாவனைக்குதவாத வாகனங்கள் மற்றும் கட்டிடப்பெருட்கள் ( மணல் , கல்) போன்றவை பாதை ஓரத்தில் போடப்பட்டுள்ளதால் பாதசாரிகளுக்கும் வாகனங்களுக்கும் இடையூறாக இருக்கின்றது. எனவே அவற்றை உடனடியபக அகற்ற) முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் நா.இராஜநாயகம் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற போக்குவரத்து ஆலோசனைக்குழு கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டு இப்பொருட்களை உடனடியாக அகற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

பாதையில் இருபக்க ஓரத்திலும் போடப்பட்ட பொருட்கள் யாவும் நகராட்சி மன்றத்தால் அகற்றப்பட்டு பாதையை அகலமாக்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

எனவே வீதி ஓரத்தில் மேற்குறித்த பொருட்களை வைத்துள்ளோர் அதனை உடனடியாக தமது ஆதனத்திற்குள் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிள்றேன்.

இவ் அறிவித்தலின் பின்னரும் தாங்கள் நடவடிக்கை எடுக்காவிடின் பாதையிலுள்ள பொருட்கள் யாவும் உாிமை கோராத பொருட்களாக கருதி அகற்றப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன் என திருகோணமலை நகராட்சி மன்றத் தலைவர் நா.இராஜநாயகம் தெரிவித்தார்.




# காரைதீவில் எல்லை கோபுரம் அமைக்கப்படுவதற்கு பின்னால் ஏராளமானவர்களின் பங்களிப்பு உள்ளது

## பிரதேச சபை உறுப்பினர் பூபாலரட்ணம் கூறுகிறார்

**காரைதீவு நிருபர்**

காரைதீவு எல்லையில் வரவேற்பு கோபுரம் அமைக்கப்பட வேண்டும் என்பது காரைதீவு பிரதேச மக்களின் நீண்ட கால அபிலாசை ஆகும், இந்நீண்ட கால அபிலாசை அமைச்சர் மனோ கணேசன் மூலமாக கைகூட பெறுகின்றது என்று காரைதீவு பிரதேச சபையின் காரைதீவு மகா சபை சுயேச்சை குழு உறுப்பினர் ஆறுமுகம் பூபாலரட்ணம் தெரிவித்தார்.

இவரின் காரைதீவு இல்லத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து அமைச்சர் மனோ கணேசனுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

காரைதீவு தெற்கு எல்லையில் வரவேற்பு கோபுரம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்ட மகத்தான வேலை திட்டத்துக்கு பின்னால் பொதுநல செயற்பாட்டாளர்கள் ஏராளமானோரின் உழைப்பும், அர்ப்பணிப்பும், பங்களிப்பும் உள்ளன. தவிசாளர் ஜெயசிறில் பிழைகள் விடுகின்றபோதெல்லாம் அவருக்கு பிடிக்காத உறுப்பினர்களின் தலையில் முழுமையான பழியையும் போட்டு விடுவார். இவருடைய இது வரையிலான தவிசாளர் பதவி காலத்தில் ஜெயசிறில் சாதித்து இருக்க கூடிய ஒரேயொரு காத்திரமான நல்ல விடயம் வரவேற்பு கோபுரம் அமைக்க அமைச்சர் மனோ கணேசன் மூலமாக நிதி ஒதுக்கீடு பெற முடிந்ததே ஆகும். ஆனால் இதன் மூலமான முழுமையான பெருமைக்கும் ஜெயசிறில் உரிமை கோருவது அறியாமை ஆகும்.

தம்பி ஜெயசிறிலுக்கு வரலாறு தெரியாமல் இருக்கலாம். காரைதீவுக்கு தனியான முதலாவது பிரதேச சபை உருவான காலம் தொட்டே காரைதீவு எல்லைகளில் வரவேற்பு கோபுரங்கள் அமைப்பதற்கு தீவிரமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. முதலாவது தவிசாளர் நடராசா ஜீவராசா, முதலாவது பிரதி தவிசாளர் வீரகத்தி கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை இத்தருணத்தில் நான் நன்றி அறிதலுடன் நினைவு கூருகின்றேன். அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பொடியப்பு பியசேனவை அணுகி காரைதீவு எல்லைகளில் வரவேற்பு கோபுரங்கள் அமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருந்தனர். ஆயினும் துரதிஷ்டமாக வரவேற்பு கோபுரங்களை அமைக்க முடியாமல் போனது.

பிற்பாடு தவிசாளராக வந்த செல்லையா இராசையாவும் இதற்கான முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டார். அப்போது அமைச்சராக இருந்த சுவாமிநாதனின் கொழும்பு அலுவலகத்துக்கு நேரில் சென்று வரவேற்பு கோபுரங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு தர கோரினார். நானும் அவருடன் உடன் சென்று இருந்தேன். ஆயினும் அப்போது வருட கடைசியாக இருந்ததால் நிதி ஒதுக்கீட்டை பெற முடியாமல் போனது.

காரைதீவு முச்சந்தியில் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் சிலையை திறந்து வைக்க அப்போதைய அமைச்சர் சுவாமிநாதன் வந்தபோது காரைதீவு இந்து சமய அபிவிருத்தி குழுவால் இதே கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஆயினும் நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை.

அமைச்சர் மனோ கணேசனின் நற்பார்வை காரைதீவு மக்களுக்கு கிடைத்து உள்ளது. தவிசாளர் ஜெயசிறில் அணுகி கேட்டபோது தவறாமல் 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி தந்து உள்ளார். ஆக, முதலாவது தவிசாளர் காலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகளும், முன்னெடுப்புகளும் ஒரு அஞ்சல் ஓட்டம் போல தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு தற்போதைய தவிசாளரின் காலத்தில் நிறைவு பெறுகின்றன என்பதே உண்மை ஆகும். அமைச்சரின் நிதியில் வரவேற்பு கோபுரத்தை காரைதீவு தெற்கு எல்லையில் அமைக்க காரைதீவு பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏக மனதாக அனுமதி கொடுத்து இருந்தோம். இதற்காக சகோதர முஸ்லிம் உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன். இதே நேரம் இவ்வரவேற்பு கோபுரத்தை அமைக்க எல்லா உறுப்பினர்களின் சம்மதத்தையும் பெற்று கொண்ட தவிசாளர் ஜெயசிறில் சபையின் வரவு - செலவு திட்டத்தை ஆதரித்து இராத உறுப்பினர்களையும், சகோதர முஸ்லிம் உறுப்பினர்களையும் வரவேற்பு கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவுக்கு அழைக்காமல் புறக்கணித்தது சிறுபிள்ளைத்தனமான வேலை ஆகும்.

காரைதீவு பிரதேச மக்களின் நீண்ட கால அபிலாசையை நிறைவேற்றி தருகின்ற அமைச்சர் மனோ கணேசனுக்கு காரைதீவு மக்கள் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

# பிரதேச மட்டக் கண்காட்சி

**துறைநீலாவணை நிருபர்**



மாதர் தையல் பயிற்சி மாணவர்களின் பிரதேச மட்டக் கண்காட்சி ,வெல்லாவெளி மாதர் அபிவிருத்தி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தே.நடராசா தலைமையிலான நிகழ்வில், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் இ.ராகுலநாயகி பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

போரதீவுப்பற்று உதவி பிரதேச செயலாளர் சி.புவனேந்திரன்,மாவட்ட தையல் போதனாசிரியர் திருமதி நி.ரவிச்சந்திரன், ஆகியோரும் இதன்போது கலந்துகொண்டனர்.



காரைதீவு ஸ்கந்தலய பண்ணிசை மன்றத்தின் வருடாந்த கலை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதையும், கவிஞர் காரையன் கதன் சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதையும், பிள்ளைகளின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

படம்: காரைதீவு நிருபர்

# கிண்ணியா தள வைத்தியசாலைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை



**கந்தளாய் நிருபர்**

கிண்ணியா தள வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜெயசிங்க அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின் போது திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா வைத்தியசாலையின் குறைபாடுகள் தேவைகள் மற்றும் நோயாளர் விடுதிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இதன் போது கிண்ணியா தள வைத்தியசாலையின் அத்தியட்சகர் மசூதூடனும் தொலைபசி மூலம் பணிப்பாளர் நாயகத்தை உரையாடவைத்து அவசரமாக செய்யப்பட வேண்டிய வேலைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் தேவைகள், குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருவதாகவும் வாக்குறுதி அளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் தௌபீக் தெரிவித்தார்.

# கடிகாரங்களை புனரமைக்க கோரிக்கை

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை மாவட்ட சேருவில பிரதேச சபை எல்லைக்குட்ட சேருநுவர பிரதான வீதியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுரத்திலுள்ள மணிக்கூடுகள் நீண்டகாலமாகப்புனரமைக்கப்படாது இயங்காது செயலிழந்து காணப்படுகின்றன

இவ் மணிக்கூட்டுக்கோபுரத்தினை புனரமைத்து மணிக்கூட்டினை இயங்கச்செய்ய உரிய பகுதியினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென பொது மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவ் மணிக்கூட்டு கோபுரமானது ஏ 15 மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியிலும் சேருவில - கந்தளாய்க்குச்செல்லும் பிரதான வீதியிலும் இது அமைந்துள்ளதனால் இவ் மணிக்கூட்டுக்கோபுரம் மக்களுக்கு சரியான ந்ரத்தினை அறிந்து செயற்பட மிகவும் முக்கியமானது

இவ் மணிக்கூட்டுகோபுரம் அமைந்துள்ள இடத்திற்கு அருகில் சந்தைகள் வங்கிகள் பிரதேச சபை பிரதேச செயலகம் வர்த்தக நிலையம் என்ன அமைந்திருப்பதால் இது எப்போதும் சனநடமாட்டமுள்ள இடமாகும் எனவே இவ் மணிக்கூட்டு கோபுரம் புனரமைப்பது முக்கியமானது. இதனை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே உருக்கமான கோரிக்கையாகும்,

# அபிவிருத்தி திட்டங்களுக்கு ஜனாதிபதி மீண்டும் தடை ஏற்படுத்தின் முதலில் ஜனாதிபதி தேர்தலே நடைபெறும்; இம்ரான் எம்.பி

**கிண்ணியா நிருபர்**

அபிவிருத்தி திட்டங்களுக்கு ஜனாதிபதி மீண்டும் தடை ஏற்படுத்தின் முதலில் ஜனாதிபதி தேர்தலே நடைபெறும் என ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் தெரிவித்தார். கிண்ணியாவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்களாகிய நாம் முதலில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கும் முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் நன்றி கூறவேண்டும். கடந்த ஐம்பது நாட்களாக இவர்கள் அரசியல் அமைப்புக்கு மாற்றமாக செய்த வேலைகளால் ஐக்கிய தேசிய கட்சியின் பலம் அதிகரித்துள்ளது. தூங்கிகொண்டிருந்த யானைகளை இவர்கள் தட்டி எழுப்பி விட்டார்கள்.

கடந்த மூன்று வருடங்களாக நல்லாட்சி என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஸவின் விசுவாசிகளே அமைச்சர்களாக இருந்தனர். இவர்களே நல்லாட்சியின் செயற்பாடுகளுக்கு தடையாக இருந்தனர். உதாரணமாக எமது மாவட்டத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் வெற்றிக்காக உழைத்த நாங்கள் பாராளுமன்ற உறுப்பினராகவும் ஜனாதிபதிக்கு எதிராக உழைத்தவர் பிரதி அமைச்சராகவும் இருந்தார்.

இவ்வாறான நிலை நாடு முழுவதும் காணப்பட்டதனால் எமக்கு மக்களுக்கு திருப்திகரமான சேவையை செய்ய முடியவில்லை. திருடர்களை பிடிக்க முடியவில்லை, அரசியல் பழிவாங்கல் வழங்க முடியவில்லை, வேலை வாய்ய்ப்பு வழங்கமுடியவில்லை, பட்டதாரிகள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு நியமனம் வழங்க முடியவில்லை.

இதற்கு துணையாக ஜனாதிபதி இருந்ததை கடந்த ஐம்பது நாள் மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிட்டது.

தற்போது ஐக்கிய தேசிய முன்னணியின் தனி அரசாங்கம் அமைக்கப்பட்டு எமக்கு எதிராக செயற்பட்ட கறுப்பாடுகள் துரத்தப்பட்டுள்ளார்கள்.



எனவே ஜனவரி மாதத்தில் இருந்து நாடு முழுவதும் பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கவுள்ளோம். இந்த பணிகளுக்கு ஜனாதிபதி தடைகளை ஏற்படுத்தினால் அடுத்த வருடம் முதலில் நடைபெறுவது ஜனாதிபதி தேர்தலாகவே இருக்கும். ஜனாதிபதி தேர்தலை நடாத்தி ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதியை கொண்டு அந்த பணிகளை முன்னெடுப்போம் என தெரிவித்தார்.



அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்ற மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்த 35 மாணவர்களுக்கு தலா 1200 ரூபா பெறுமதியான பாடசாலை காலணிகளை அட்டாளைச்சேனை Y2K அமைப்பினால் அல் அர்ஹம் வித்தியாலயத்தில் வழங்கி வைக்கப்பட்டது. இதனை Y2K அமைப்பின் தலைவர் ஜே.நிசார், ஊடக இணைப்பாளர் கே.ஏ.ஹமீட், ஆலோசகர் ஏ.எல்.ஜனுபர் மற்றும் பாடசாலை அதிபர் ஐ.இத்ரீஸ் ஆகியோரினால் வழங்கி வைக்கப்படுவதை படங்களில் காணலாம்.

படம்: மீனோடைக்கட்டு நிருபர்

# எரியொருள் நிரப்பு நிலையம் அமைக்கக் கோரிக்கை!

**தோப்பூர் நிருபர்**

திருகோணமலை.மாவட்ட மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தோப்பூரில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித்தருமாறு இப்பிரதேசத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் உரிய உரிய பகுதியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தோப்பூர் மற்றும் இதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் சுமார் 20 ஆயிரத்திற்கும் அதிகமான பொது மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று இல்லாமையால் தங்களின் வாகனங்களுக்குத்தேவையான தரமான எரிபொருளை உரிய விலையில் கொள்வனவு செய்வதிலும் மற்றும் மீனவர்கள் மண்ணெண்ணையை வாங்குவதிலும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகக்கூறுகின்றனர்.

இதனால் இங்குள்ள வாகன சாரதிகளும் மற்றும் பொதுமக்களும் நீண்டதூரத்திற்கு அப்பாலுள்ள மூதூர்.. சேருவில மற்றும் கிண்ணியா ஆகிய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்குச்சென்றே எரிபொருளை வாகனங்களுக்கு நிரப்பவேண்டியுள்ளது. இதனால் இங்குள்ள பொதுமக்கள் வீண் செலவினத்தையும் பெரும் அசௌகரியங்களயும் எதிர்கொள்வதாக கூறுகின்றனர். மேலும் இப்பகுதிகளில் எரிபொருள் நிரப்பு நிலையம் இன்மையால் தனியாரிடம் அதிக விலை கொடுத்துமக்கள் எரிபொருளை வாங்கவேண்டிய அவலநிலையே காணப்படுகிறது.

மேலும் தோப்பூர் பிரதேசத்தினூடாக நாளாந்தம் அதிகளவான உள்ளூர் சுற்றுலாப்பிரயாணிகள் சேருவில. லங்காப்பட்டுன ஆகிய இடங்களுக்குச்செல்கின்றனர்

இவர்கள் இவ் வழியூடாக பயணிக்கும் போது அவசர நிலைமையில் கூட வாகனங்களுக்குத்தேவையான எரிபொருளை நிரப்பிக் கொள்வதற்கு எரிபொருள் நிரப்பு நிலையம் இன்றி பல்வேறு இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

இங்கு எரிபொருள் திரப்பு நிலையம் ஒன்றை அமைப்பதன் மூலம் இப்பிரதேசங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பல்லின மக்களும் பெரிதும் நன்மை பெறுவார்கள்

உரிய பகுதியினர் கவனம் செலுத்தி தோப்பூரில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அமைத்துத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதே பொதுமக்களது கோரிக்கையாகும்.

# சாய்ந்தமருது தைபா அரபுக் கல்லூரி மாணவிகள் அனைவரும் சித்தி

**சாய்ந்தமருது நிருபர்**

இம்முறை (2018) க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு தோற்றிய சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரி மாணவிகள் 07 பேரும் அனைத்து பாடங்களிலும் திறமையாக சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்று அக்கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு உயர்தர பரீட்சைக்கு தோற்றிய முன்னைய இரு தொகுதி மாணவிகள் அனைவரும் இவ்வாறு சித்தியடைந்து பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியிருந்தனர் எனவும் தொடர்ச்சியாக எமது மாணவிகள் சிறந்த பெறுபேறுகள் பெற்று வருகின்றமையானது கல்லூரி நிர்வாகத்தினருக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியுள்ளதுடன் ஏனைய மாணவிகளுக்கும் பெற்றோருக்கும் இக்கல்லூரி மீதான ஆர்வத்தை அதிகரிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இக்கல்லூரியில் அல்ஆலிம் கற்கை நெறி போதிக்கப்படுவதுடன் ஜீ.சி.ஈ. உயர் தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர்.

இங்கு பயிலும் மாணவிகள் மூன்றாம் வருடத்தில் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதுடன் நான்காம் வருடத்தில் அரசாங்க அல்ஆலிம் பரீட்சைக்கு தோற்றி மௌலவியாக்களாக வெளியேறுகின்றனர். இதுவரை இக்கல்லூரியில் இருந்து 09 மாணவிகள் மௌலவியா பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் கட்டிடம் ஒன்றில் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் இயங்கி வந்த இக்கல்லூரி, பொலிவேரியன் நகரில் விடுதி உட்பட அனைத்து வசதிகளுடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டிடக் தொகுதியில் தற்போது இயங்கி வருகிறது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# கல்முனை தமிழ் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

**சாய்ந்தமருது நிருபர்**

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் கல்முனை தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான கலந்துரையாடல் கூட்டம் இராஜாங்க அமைச்சர் ஹரீஸின் ஏற்பாட்டில் கல்முனை மாநகர முதல்வர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கல்முனை மாநகர சபை முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப், பிரதி முதல்வர் காத்தமுத்து கணேஷ், கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான நடராசா நந்தினி, ஏ.ஆர். செலஸ்டினா, கே. புவனேஸ்வரி, சுமித்ரா ஜெகதீசன் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சரின் பொதுசன தொடர்பு அதிகாரி எம்.எஸ். அலிகான் ஸாபி, இணைப்புச் செயலாளர் நௌபர் ஏ.பாவா ஆகியோர்



கலந்துகொண்டனர்.

இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி தமிழ் பிரதேசங்களில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் அபிவிருத்திப் பணிகளை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் அந்தவகையில் கல்முனை தமிழ் பிரதேசத்தின் அபிவிருத்தி தேவைப்பாடுகளை இனங்கான வேண்டியுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஹரீஸ் அவ்வபிவிருத்திகளை இனம்காண்பதற்காகவும் அவற்றை சிறப்பாக செயற்படுத்துவதற்காகவும் குழு ஒன்றை அமைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

அதற்கமைவாக கோவில் தர்ம கர்தாக்கள், கல்விமான்கள் மற்றும் இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் பிரதிநிதிகளான கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட 25 பேர் கொண்ட குழு ஒன்றை விரைவாக அமைத்து தமிழ் பிரதேசங்களில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி பணிகளை முன்மொழியுமாறு இராஜாங்க அமைச்சர் கேட்டுக்கொண்டார்.




## சுனாமி பேரலை தாக்கத்தின் 14 வருட நிறைவை முன்னிட்டு ஞாபகர்த்த நிகழ்வுகள்





**மூதூர் நிருபர்**

சுனாமிப் பேரலை ஏற்பட்டு அன்று 14 வருடங்கள் கடந்த நிலையில் அதனை நினைவு கூரும் முகமாக திருகோணமலை மாவட்ட நீர்ப்பாசன பணிமனையினால் விசேட மத நிகழ்வுகளும், சிறமதான நிகழ்வும் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி. ஏ.எல்.ஜௌபர் அவர்களின் தலைமையில் மாவட்ட நீர்ப்பாசன பணிமனையில் நடைபெற்றது.

இதில் திருகோணமலை மாவட்ட ஜய சுமனராம விகாராதிபதி வணக்கத்துக்குரிய பண்துவச் நுவர தம்ம சோபித்த தேரர், இந்துக்குருக்கள் சு.கிருஸ்னகுமார், திருகோணமலை அநுராதபுர சந்தி ஹுலூர் ஜும்ஆ பள்ளி பேஷ் இமாம்எம்.எம்.றதீம் மௌலவி மற்றும் திருகோணமலை உவர்மலை குழந்தை ஏசு ஆலய அருட் தந்தை சுகுனேந்திரன் குருஸ் அடிகளார் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு கடந்த சுனாமிப் பேரலையினால் உயிரிழந்த அனைத்து உறவு களுக்குமாக ஆசியும், சிறப்பும் வேண்டி இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலியும், விசேட சமைய நிகழ்வுகளும் நடை பெற்றதோடு கலந்து கொண்ட சமையத் தலைவர்களுக்கு விசேட நினைவுப் பொதிகளும் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளரின் தலைமையில் மாவட்ட பணிமனையினை சூழ உள்ள பகுதிகளில் சிரமதான நிகழ்வும் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## குடும்ப வறுமை கல்விக்கு தடையல்ல

**கிண்ணியா நிருபர்**

க.பொ.த.உயர் தரப் பரீட்சை 2018 ல் தோற்றி அண்மையில் வெளியான பரீட்சை முடிவுகளின் பிரகாரம் தொழில் நுட்பப் பிரிவில் திருகோணமலை மாவட்ட மட்டத்தில் கிண்ணியாவை சேர்ந்த அப்துல் வதூத் முஹம்மட் சப்ராஸ் இரண்டாம் நிலையை அடைந்துள்ளார்.

கிண்ணியா மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவன் முஹம்மது சப்ராஸ் தனது கல்வி அடைவின் முன்னேற்றம் தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்;

தனது பெரும் முயற்சியும் சுய கற்றலில் அதிக ஈடுபாடுமே தனது பரீட்சையின் முடிவுக்கு சிறந்த வெற்றியாகும்.

தனது தந்தையின் அன்றாட கூலித் தொழில் மூலமான பொருளாதார நிலையையும் பொருட்படுத்தாது கற்றலில் அதிக ஆர்வமுடன் செயற்பட்டேன்.

எதிர்காலத்தில் எனது துறை இது தொடர்பான உயர் பட்டம் தொழில் வாண்மை துறைகளை தேர்ந்தெடுக்க எண்ணியுள்ளேன் என்றார்.

## புனரமைக்கப்பட்ட கட்டிடங்கள் கையளிப்பு

**தோப்பூர் நிருபர்**

பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சின் நிதியின் ஊடாக தோப்பூர் பிரதேச சபை மற்றும் மின்சார சபை கட்டிட புனர் நிர்மாணப்பனிகளுக்காக பத்து இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்த வேலைத்திட்டம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதம அதீதியாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் அவர்களும் மூதூர் பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.தாஜூத்தின் தோப்பூர் மத்திய குழு உறுப்பினர்களும் கட்சியின் ஆரம்ப கால தொண்டர்களும் கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டார்கள்.

## கல்முனையின் பாரிய அபிவிருத்திக்கு மாநகர சபை ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பங்காற்ற வேண்டும்; மாநகர ஆணையாளர்

**சாய்ந்தமருது நிருபர்**

கல்முனை மாநகரின் பாரிய அபிவிருத்தி முன்னெடுப்புக்கு எமது மாநகர சபை ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் பங்காற்ற தயாராக வேண்டும் என்று கல்முனை மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார் தெரிவித்தார்.

மக்களின் வரிப்பணத்தில் சம்பளம் பெறுகின்ற அரசாங்க ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்ற போதே அம்மக்கள் தமக்கான சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் நாடும் எமது பிராந்தியமும் முன்னேற்றமடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்முனை மாநகர சபையின் புதுவருட வரவேற்பும் ஊழியர் சத்தியப்பிரமாண நிகழ்வும் இன்று முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை மாநகர சதுக்கத்தில் நடைபெற்றபோது தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அவர் இவற்றைக் குறிப்பிட்டார்.





இங்கு மாநகர ஆணையாளர் அன்சார் மேலும் கூறியதாவது;

போதைப்பொருட்களற்ற, சுற்றாடல் நேயமிக்க மற்றும் பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புதல் என்பதே இப்புதுவருடத்தின் தொனிப்பொருளாக அமைந்துள்ளது. இது விடயத்தில் எமது மாநகர சபை மிகக்கரிசனையுடன் செயற்படும் என்று உறுதி பூணுகின்றோம்.

எமது பிரதேசம் ஒரு மாநகரமாகும். அதனால் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது. அதற்காக எமது மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் தமது கடமைகளையாற்ற வேண்டிய பாரிய பொறுப்பை சுமந்திருக்கிறோம். கடந்து சென்ற வருடத்தில் அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய ஊழியர்களையே சிறந்த ஊழியராக தேர்ந்தெடுத்து சான்றிதழ் வழங்கி கௌரவிக்கின்றோம். இது இவ்வூழியர்களை மாத்திரமல்லாமல் ஏனைய ஊழியர்களையும் ஊக்குவிக்கின்ற ஒரு நடவடிக்கையாக பார்க்கின்றோம்.

எமது மாநகர சபைக்கு விவேகமும் ஆற்றல், ஆளுமையும் நிறைந்த முதல்வர் கிடைத்திருக்கிறார். இந்த மாநகர அபிவிருத்தி தொடர்பில் தூரநோக்கு சிந்தனையுடன் எமது முதல்வர் செயலாற்றி வருகின்றார். அவர் பதவியேற்று குறுகிய காலத்தினுள் திண்மக்கழிவகற்றல் சேவையில் எதிர்நோக்கப்படுகின்ற சவால்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்காக சில மூலோபாய திட்டங்களை வகுத்து, செயற்படுத்த கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு நாம் அனைவரும் முதல்வருக்கு பக்கபலமாக இருக்க வேண்டும்.

அதேவேளை, இப்போது எமது மாநகர சபையையும் இப்பிராந்தியத்தையும் அபிவிருத்தி செய்யக்கூடிய பொறுப்பு வாய்ந்த, நிறைவான அமைச்சுப் பதவியொன்று எமது தொகுதிக்கு கிடைத்திருக்கின்றது. அதனூடாக பல அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கிருக்கிறது என்பதை எமது மாநகர சபை ஊழியர்கள் மனதிற்கொண்டு செயலாற்ற தயாராக வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கின்றேன்.

ஓர் அரசாங்க திணைக்களத்தை பொறுத்தமட்டில் தலைமை அதிகாரிகளினால் மாத்திரம் எல்லாவற்றையும் செய்து விட முடியாது. அவை சிறப்பாக நிறைவேற்றப்படுவதற்கு எல்லா மட்டங்களிலும் கடமையாற்றுகின்ற அனைத்து ஊழியர்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும். அந்த வகையில் எமது மாநகரத்தை சுத்தம், சுகாதாரத்துடன் கூடிய பசுமையான எழில்மிக்க மாநகரமாக கட்டியெழுப்புவதற்கு கைகோர்த்து செயற்படுவோம் என்று அனைத்து ஊழியர்களும் இப்புதுவருட தொடக்கத்தில் திடசங்கற்பம் பூணுவோம் என்று மாநகர ஆணையாளர் அன்சார் வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக், செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப், மிருக வைத்திய அதிகாரி வட்டப்பொல உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் பங்கேற்றிருந்தனர். இதன்போது கடந்த வருடத்தில் மிகச்சிறப்பாக கடமையாற்றிய ஊழியர்கள் பலர் ஆணையாளரினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.





**அறுகம்பே சமூக அபிவிருத்தி அமைப்பின் ஊடாக இராஜாங்க அமைச்சர் இவற்றை நேற்று அக்குடும்பங்களுக்கு வழங்கி வைத்தார். பொத்துவில் பிரதேச செயலகத்தில் பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.நசீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அறுகம்பே சமூக அபிவிருத்தி அமைப்பின் தலைவரும் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினரும் இராஜாங்க அமைச்சர் பைசல் காஸிமின் பொத்துவில் பிரதேச இணைப்பாளருமான எம்.எச்.ஏ.ரஹீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.**

## கட்டாக்காலி மாடுகளுக்கு தலா 2500 ரூபா தண்டம்!



**சாய்ந்தமருது நிருபர்**

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி மாடுகளை கைப்பற்றும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு, மாடு ஒன்றுக்கு தலா 2500 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்படும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை பொதுச் சந்தை வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மாநகர சபை முதல்வர் செயலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், கணக்காளர் ஏ.எச்.தஸ்தீக், சுகாதாரப் பிரிவு தலைமை உத்தியோகத்தர் ஏ.ஏ.எம். அஹ்சன், கல்முனை பொதுச் சந்தை மேற்பார்வையாளர் ஏ.எல்.எம்.இன்சாட், சந்தை வர்த்தகர் சங்கத் தலைவர் ஏ.பி.ஜமாலதீன், செயலாளர் ஏ.எல்.கபீர் உட்பட சங்கப் பிரதிநிதிகளும் சந்தை வியாபார குத்தகைக்காரர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது பொதுச் சந்தை ஒழுங்குபடுத்தல் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் வியாபார செயற்பாடுகள், வாகனத் தரிப்பிட ஒழுங்குகள், போக்குவரத்து நடைமுறை, வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஏற்படுகின்ற இடையூறுகளை நிவர்த்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு, தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றை நடைமுறைப்படுத்துகின்ற விடயத்தில் மாநகர சபையும் வர்த்தகர் சங்கமும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவது எனவும் இணக்கம் காணப்பட்டது.

அதேவேளை கட்டாக்காலி மாடுகளின் தொல்லைகளினால் சந்தை வியாபாரிகளும் நுகர்வோரும் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் முதல்வரிடம் சுட்டிக்காட்டிய வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட முதல்வர், சந்தை உட்பட வீதிகள் மற்றும் பொது இடங்களில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகளை கைப்பற்றும் நடவடிக்கையை தீவிரப்படுத்துமாறு அதிகாரிகளைப் பணித்ததுடன் பிடிக்கப்படும் ஒரு மாட்டுக்கு 2500 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடுமாறும் அது தரித்து வைக்கப்படும் மேலதிக நாள் ஒன்றுக்கு 3000 ரூபா வீதம் அறவிடுமாறும் உத்தரவிட்டார்.

## மிகவிரைவில் மக்கள் வங்கியின் தன்னியக்கச் சேவை இயந்திரம் கிண்ணியாவில் நிறுவப்படும்

**கிண்ணியா நிருபர்**

மிக விரைவில் கிண்ணியா ஒறிகன் பாலத்திற்கு அன்மையில் மக்கள் வங்கியின் சகல வசதிகளையும் கொண்ட தன்னியக்க வங்கிச் சேவைஒன்று நகர சபையின் ஒத்துழைப்புடன் நிறுவுவதற்கு பிராந்திய முகாமையாளருடன் பேசி முடிவு செய்யப்பட்டுள்ளது.



கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.நளீம் அவர்களின் தலைமையில் கிண்ணியா மக்கள் வங்கி முகாமையாளர் நியாஸ் உட்பட பிராந்திய முகாமையாளரும் இதன்போது குறித்த இடங்களை பார்வையிட்டு கலந்தாலோசனை செய்தனர்.

கிண்ணியாவின் நீண்ட கால தேவை கருதிய வங்கிச் சேவை எதிர்பார்க்கப்படுகின்றமையும் மக்களால் அங்கலாய்க்கப்படுகிறது.

இதனால் 24 மணி நேரமும் பணம் வைப்புகள், மீளப் பெறல் நடவடிக்கைகள், இலகுவாக்கப் படுவதோடு வியாபாரிகளின் பணப் பரிமாற்ற செயற்பாடுகள் துரிதமாக நடக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளமையும் எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளிச்சத்தில் பிரகாசிக்கும் கிண்ணியா பாலம்

**கிண்ணியா நிருபர்**

நீண்ட காலத்தேவையாக இருந்து இருளில் மூழ்கியிருந்த கிண்ணியா பாலத்திற்கான மின் விளக்குகள் ஒளிரத் தொடங்கியிருக்கின்றன.



கிண்ணியா நகர சபையின் பிரதித் தவிசாளர் ஐயூப் நளீம்(சப்ரின்) அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அவர்களின் முயற்சியினால் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும் நகரத் திட்டமிடல், நீர் வழங்கள் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான றவூப் ஹக்கீம் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம். நளீம் அவர்களுடைய ஒத்துழைப்புடனும் மின் விளக்குகள் ஒளிர்வடையச் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த விடயத்தில் கிண்ணியா நகர சபையின் முன்னாள் செயலாளர் என்.எம். நௌபீஸ் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக இருளில் மூழ்கிய கிண்ணியா கடல் மேல் பாலத்துக்கு தற்போது விடிவு கிடைத்தமைக்கு பயணிகள் சந்தோசமடைகின்றமையும் குறிப்பிடத்தக்கது.




## பன்னிரண்டு வருடங்களாக புனரமைக்கப்படாத ஒந்தாச்சிமடம் காளிகோயில் வீதி



**க.விஜயரெத்தினம்**

மண்முனை தென் எருவில்பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஒந்தாச்சிமடம் காளிகோயில் வீதியானது சுமார் 12வருடங்களாக எதுவித புனரமைப்பு வேலைகளுமின்றி குன்றும்,குழியுமாக காணப்படுவதாக பொதுமக்கள்,பாதசாரிகள்,கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வீதியானது ஒந்தாச்சிமடம் பிரதான வீதி சந்தியிலிருந்து வடக்குப்பக்கமாக சுமார் 1500 மீற்றர் நீளமுடையதாக காணப்படுகின்றது. இவ்வீதியானது சுமார் 12வருடங்களாக மீள்புனரமைப்பு வேலைகள் செய்யாத காரணத்தினால் வீதியில் பாரிய குன்றுகளும்,குழிகளுமாக காணப்பட்டு தற்போது பெய்கின்ற அடைமழை காரணமாக குழிகளில் தண்ணீர் தேங்கி பொதுமக்கள்,பாதசாரிகள் போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் அல்லல் படுகின்றார்கள்.வீதியில் மழைநீர் தேங்கியிருப்பதால் நுளம்புகள் உருவாகுவதற்கு வாய்ப்புள்ளது.நுளம்புகளின் உருவாக்கத்தினால் சிறுவர்கள்,வயோதிபர்கள்,குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.இக்கிராமத்தில் உள்ள சமூக நிறுவனங்கள் எழுத்துமூலம் வீதியை புனரமைத்து தருமாறு கோரிக்கை முன்வைத்தும் அலட்சியப்போக்கை உயர் அதிகாரிகள் கடைப்பிடிப்பதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான தார்வீதியானது இக்கிராமத்தில் உள்ள 2600 குடும்பங்களைச் சேர்ந்த 10500 பொதுமக்கள் நாளாந்தம். பயன்படுத்தி வருகின்றார்கள்.இவ்வீதியில் பிரசித்தி பெற்ற ஒந்தாச்சிமடம் வடபத்திரகாளியம்மன் ஆலயம் இருப்பதால் ஆலயதரிசனத்துக்கு செல்லும் அடியார்கள்,பக்தர்கள் மிகுந்த அசௌரியங்களுக்கு உட்படுத்தப்பட்டு வவருவதாக பொதுமக்கள் ஆழ்ந்த கவலையுடன் தெரிவிக்கின்றார்கள்.

இவ்விவீதியின் அவநிலையை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர்,வீதி அபிவிருத்தி அதிகாரசபை மாவட்ட பொறியியலாளர்,களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் போன்றோர்கள் துரித கவனமெடுக்க வேண்டும் என ஒந்தாச்சிமடம் கிராம மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றார்கள்.

## மாகாணசபைத் தேர்தலைத் தள்ளிப்போடும் திரைமறைவு முயற்சிகள்; கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்

**க.விஜயரெத்தினம்**

மாகாணசபைத் தேர்தலைத் தள்ளிப்போடும் திரைமறைவு முயற்சிகள் இடம்பெற்று வருவதாக, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில், அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ஜனநாயகத்தைக் காப்பாற்றிவிட்டோம் - நீதி நிலைநாட்டப்பட்டுவிட்டது எனக் கொக்கரிப்பவர்கள், மக்களின் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையில், மாகாண சபைத் தேர்தலைத் தள்ளிப்போடச் செய்யும் திரைமறைவு முயற்சிகளை மேற்கொள்ள முனைகின்றனரெனக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனொரு அம்சமே, சகல மாகாணசபைத் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்த வேண்டுமென்ற அரசாங்கத்தின் அறிவிப்பென்றும் கடந்த காலத்தில், நல்லாட்சி அரசாங்கம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட ஆட்சியின்போது எவ்வாறு தேர்தல்கள் தள்ளிப்போடப்பட்டனவோ அதே பாணியில், புதிய அரசாங்கமும் செயற்பட முன்வந்துள்ளதா என்ற ஐயம் ஏற்பட்டுள்ளதென்றும் அவர் கூறியுள்ளார்.



ஏற்கெனவே, ஆறு மாகாண சபைகள் கலைக்கப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் வகையில் தேர்தல் பிற்போடப்பட்டு உள்ளதென்றும் மேலும் மூன்று மாகாண சபைகளின்; ஆட்சிக் காலம், அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் முடிவடைய உள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் முதலமைச்சர், உடனடியாக அந்த மூன்று சபைகளின் ஆட்சிகளையும் கலைக்க முடியாதென்றும் அப்படிச் செய்வது, ஜனநாயக விரோதம் என்றே பொருள் கொள்ளப்படுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், எல்லா சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவது நிச்சயமாக காலதாமதம் செய்வதற்கான ஒரு வழிமுறையாகவே பார்க்க வேண்டியுள்ளது என்றும் எனவே, கலைக்கப்பட்டுள்ள ஆறு மாகாண சபைகளுக்குமான தேர்தலை காலதாமதமின்றி நடத்த, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள நஸீர் அஹமட், தவறும் பட்சத்தில், மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை வெற்றெடுப்பதற்கான போராட்டத்தில் சகல வழிகளை நாடவும் அவர்கள் தயங்க மாட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

## மட்டக்களப்பில் வசதி குறைந்த குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது

மட்டக்களப்பு, தன்னாமுனை பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர்வுணவு பொதிகளும், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை 29ஆம் திகதி மட்டக்களப்பு, தன்னாமுனை மெதடிஸ்த திருச்சபை வளாகத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபை ஏஞ்சல் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும், மாணவர்களின் கல்வி நடவடிக்கையினையும் மேம்படுத்தும் முகமாக பல அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது அதில் ஓர் அங்கமாகவே இந் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது, தன்னாமுனை மெதடிஸ்த திருச்சபை ஏஞ்சல் சிறுவர் அபிவிருத்தி திட்டத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான திட்டத்தினை சிறப்பிக்கும் வகையில் தன்னாமுனை பகுதியில் வாழ்கின்ற வசதி குறைந்த குடும்பங்களுக்கு சத்துணவை





வழங்கும் வகையிலும், மாணவர்களின் கல்வி கற்றல் நடவடிக்கையினை மேம்படுத்தும் முகமாகவும், உலர்வுணவு பொருட்களும் மாணவர்களுக்கு துவிச்சக்கர் வண்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு கோட்டமுனை மெதடிஸ்த திருச்சபையின் போதகர் டெரன்ஸ் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் எம். உதயகுமார் ,சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி செயலாற்றுப் பணிப்பாளர் எஸ். சசிகரன் ,ஆகியோர் கலந்துகொண்டு இவற்றை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் தன்னாமுனை மெதடிஸ்த திருச்சபையின் அருட்பணியாளர்கள் , மெதடிஸ்த திருச்சபையின் ஏஞ்சல் சிறுவர் அபிவிருத்தி திட்ட பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## வாழைச்சேனையில் ஸ்மாட் சமூக வட்டம் அங்குரார்ப்பணம்

**வாழையூர் ந.குகதர்சன்**

வாழைச்சேனை கோறளைப்பற்று பிரதேச செயலகத்திற்கான ஸ்மாட் சமூக வட்டம் அங்குரார்ப்பண நிகழ்வும், பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி.நிருபா பிருந்தன், மாவட்ட செயலக சிரேஷ்ட மேம்பாட்டு உத்தியோகத்தர் எஸ்.ராஜசுரேஸ், திட்ட இணைப்பாளர் க.சுமன், பிரதேச செயலக தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ம.சுரேஸ்குமார், கிராம சேவை உத்தியோகத்தர்கள், ஸ்மாட் சமூக வட்ட உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாழைச்சேனை தமிழ், கண்ணகிபுரம், புதுக்குடியிருப்பு, கல்மடு, கல்குடா ஆகிய கிராமங்களுக்கான ஸ்மாட் சமூக வட்டத்திற்கான முகநூல் அங்குரார்ப்பணம் அதிதிகளால் செய்து வைக்கப்பட்டது.

இதில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து ஐந்து கிராம சேவகர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்பட்டு வருகின்றது.







**பெரியகல்லாறு இந்துகலாசார மண்டபத்தில் கல்லாறு மத்திய விளையாட்டுக ;கழகத்தின்எற்பாட்டில் ஏ.அகிலன் தலைமையில் அதன் 11வது வருட கழகநாளை முன்னிட்டுசந்திரசேகரன் மனோன்மணி குடும்பம் மற்றும் சுதாகர் கலிஸ்கா அனுசரணையில் 30ஞாயிறன்று காலை உதிரம்கொடுத்து உயிடகாப்போம் இரத்ததான முகாம் மட்டக்களப்புபோதனா வைத்தியசாலையின் டாக்டர் ஜி.மனோடுசாந்தன் தலைமையிலான குழுவினரால் நடாத்தப்படுவதைப் படங்களில் காணலாம். படம்: பெரியகல்லாறு நிருபர்**

## கம்ரலிய வேலைத் திட்டத்தின் மூலம் 100 மில்லியன் நிதி ஒதுக்கீடு

**வாழையூர் ந.குகதர்சன்**

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனினால் கம்ரலிய வேலைத் திட்டத்தின் மூலம் 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 101 வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதில் 24 வீதிகள் புனரமைப்புக்கு இரண்டு மில்லியன் வீதம் 48 மில்லியனும், 21 பாடசாலைகளின் மைதானம் புனரமைப்புக்கு ஒரு மில்லியன் வீதம் 21 மில்லியனும், 6 பாடசாலைகளில் மலசலகூடம் அமைப்பதற்கு ஒரு மில்லியன் வீதம் 6 மில்லியனும், 50 ஆலயங்கள் புனரமைப்பு மற்றும் கட்டட வேலைகளுக்கு ஐந்து இலட்சம் வீதம் 25 மில்லியனுமாக 100 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் 250 இலட்சம் ரூபா நிதியில் அபிவிருத்தித் திட்டங்களாக வீதி புரமைப்புக்கு 100 இலட்சம், பாடசாலை மைதானங்கள் புனரமைக்க 50 இலட்சம், ஆலயங்கள் புனரமைக்க 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மாங்கேணி சென்றல் தேவாலய வீதி முதலாம் இரண்டாம் குறுக்கு வீதி, வாகரை வடக்கு மதுரங்கேணி வீதி, புச்சாக்கேணி கதிர்காமர் வீதி, தட்டுமுனை பாடசலை வீதி, பால்சேனை நாககன்னி வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களான ஆலம்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், வட்டுவான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், காயாங்கேணி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம், மாவடியோடை ஸ்ரீ மகா விஸ்ணு ஆலயம், வாகரை ஸ்ரீ மாரியம்மன் ஆலயம், புச்சாக்கேணி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், அம்பந்தானவெளி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், புளியங்கண்டலடி மாரியம்மன் ஆலயம், வாகரை மத்தி நாகதம்பிரான் ஆலயம், புனிச்சங்கேணி செந்தூர் முருகன் ஆலயம், பெரியதட்டுமுனை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், வாலமன்கேணி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், குகனேசபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், ஆண்டாங்குளம் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், கண்டலடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், மாங்கேணி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இறாலோடை சித்தி விநாயகர் ஆலயம், ஒமடியாமடு விநாயகர் ஆலயம், மதுரங்கேணிகுளம் சித்தி விநாயகர் ஆலயம், புனானை புகையிரத சந்தி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் என்பவற்று புனரமைப்பு



ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளான காயாங்கேணி சரஸ்வதி வித்தியாலயம், மதுரங்கேணிகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கண்டலடி அருந்ததி வித்தியாலயம், கதிரவெளி விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், கட்டுமுறிவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றுக்கு மைதான புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் 265 இலட்சம் ரூபா நிதியில் அபிவிருத்தித் திட்டங்களாக வீதி புரமைப்புக்கு 160 இலட்சம், பாடசாலை மைதானங்கள் புனரமைக்க 50 இலட்சம், பாடசாலைகளின் மலசல கூடங்கள் அமைக்க 20 இலட்சம், ஆலயங்கள் புனரமைக்க 35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் புதுக்குடியிருப்பு மாரியம்மன் வீதி, புதுக்குடியிருப்பு கலைவாணி அரங்கு முன் வீதி, பேத்தாழை கிருஸ்ணன் கோவில் வீதி, நாசிவந்தீவு காளி கோவில் வீதி, கண்ணன்கிராமம் தாமரைக்குளம் வீதி, கல்குடா காளி கோவில் வீதி, கிண்ணையடி விஸ்னு கோவில் வீதி, கும்புறுமூலை பன்னை வீதி என்பன 160 இலட்சம் ரூபாய் நிதியில் புனரமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வாழைச்சேனை கைலாயபிள்ளையார் கோவில், வாழைச்சேனை திரேசா தேவாலயம், மருதநகர் பிள்ளையார் கோவில், புதுக்குடியிருப்பு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், கண்ணகிபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கண்ணகிபுரம் ஸ்ரீ கணேஸ பெருமாள் ஆலயம்;, விநாயகபுரம் பேச்சியம்மன் ஆலயம் என்பவற்றுக்கு 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன

வாழைச்சேனை இந்துக்கல்லூரி, கறுவாக்கேணி விக்னேஸ்வரா கல்லூரி, மீறாவோடை தமிழ் சக்தி வித்தியாலயம், சுங்காங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மயிலங்கரைச்சை வித்தியாலயம் என்பவற்றின் பாடசாலை மைதான புனரமைப்புக்கு 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் கருங்காலிசோலை ஸ்ரீ கிருஸ்ணா வித்தியாலயம், கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் மலசலகூட அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் 240 இலட்சம் ரூபா நிதியில் அபிவிருத்தித் திட்டங்களாக வீதி புரமைப்புக்கு 120 இலட்சம் ரூபாவும், பாடசாலை மைதானங்கள் புனரமைக்க 50 இலட்சம் ரூபாவும், பாடசாலைகளின் மலசல கூடங்கள் அமைக்க 20 இலட்சம் ரூபாவும், ஆலயங்கள் புனரமைக்க 50 இலட்சம் ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டது.

இதில் சந்திவெளி வைத்தியசாலை முன் வீதி, கோரகல்லிமடு முருகன் கோவில் முதலாம் குறுக்கு, கிரான் கிழக்கு விஸ்னு கோவில் வீதி, முள்ளிவெட்டுவான் வீதி, புணாணை மேற்கு மயிலந்தனை வீதி, வடமுனை ஊத்துசேனை பிரதான வீதி ஆகிய வீதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

திகிலிவெட்டை ஸ்ரீ மகா விஸ்ணு ஆலயம், கிரான் மேற்கு நாககன்னி ஆலயம், பாலையடித்தோனா ஸ்ரீ முருகன் ஆலயம், தேவாபுரம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், புலிபாய்ந்தகல் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சின்ன வெம்பு கிரான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், குடும்பிமலை மலை முருகன் ஆலயம், மயிலந்தனை ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம், வாகனேரி ஸ்ரீ மகா விஸ்ணு ஆலயம், பூலாக்காடு ஸ்ரீ பெரியமுத்து மாரியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வாகனேரி கோகுலம் வித்தியாலயம் பறங்கியாமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, முறக்கொட்டான்சேனை ஆர்.கே.எம். வித்தியாலயம், முறுக்கந்தீவு சிவசக்தி வித்தியாலயம், புலிபாய்ந்தகல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலை மைதான புனரமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு முறுத்தானை ஸ்ரீ முருகன் வித்தியாலயம், பொண்டுகள்சேனை கணபதி வித்தியாலயம் என்பவற்றுக்கு மலசலகூடம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 245 இலட்சம் ரூபா நிதியில் வீதி புரமைப்புக்கு 100 இலட்சம் ரூபாவும், பாடசாலை மைதானங்கள் புனரமைக்க 60 இலட்சம் ரூபாவும், பாடசாலைகளில் மலசல கூடங்கள் அமைக்க 20 இலட்சம் ரூபாவும், ஆலயங்கள் புனரமைக்க 65 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் சித்தாண்டி 4 மணல் துறை வீதி, களுவங்கேணி 1 நெடியாமடு பாடசலை வீதி, செங்கலடி சந்தை வீதி, கொம்மாதுறை காந்தி வீதி, மாவடிவேம்பு 2 மாணிக்கவாசகர் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளது.

இலுக்கு ஈரளக்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், வந்தாறுமூலை மாரியம்மன் ஆலயம், மயிலவெட்டுவான் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், களுவங்கேணி -1 ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கரடியனாறு குசலானமலை முருகன் ஆலயம், களுவங்கேணி -1 ஸ்ரீ அரசடி கண்ணகி அம்மன் ஆலயம், சின்னபுல்லுமலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், குமாரவேலியார் கிராமம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஏறாவூர் - 01 அரசடி பிள்ளையார் ஆலயம், மாவலையாறு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பலாச்சோலை ஸ்ரீ மகா காளியம்மன் ஆலயம், தளவாய் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கொம்மாதுறை மேற்கு ஸ்ரீ மகா பெரியதம்பிரான் ஆலயம் ஆலயங்களான ஆலயம் என்பவற்று புனரமைப்பு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளான வந்தாறுமூலை மகா வித்தியலயம், செங்கலடி மத்திய கல்லூரி, களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம், மாவடிவேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், இலுப்படிச்சேனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு மைதான புனரமைப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு செங்கலடி விவேகானந்தா வித்தியாலயம், வந்தாறுமூலை கனேஷா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு மலசல கூடம் அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு நிறைவு பெற்றுள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

# நாம் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவு வழங்குவோம்

கிளிநொச்சி முல்லைத்தீவு சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்களிற்கும், பா ம உறு'ப்பினர் சிறிதரனிற்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சியில் இடம் பெற்றது. குறித்த சந்திப்பு கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலடியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.குறித்த சந்திப்பில் சிவில் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், பா ம உறுப்பினர் சிறிதரன், வ.மா சபை முன்னால் உறுப்பினர்களான குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் முன்பள்ளிகளை படையினர் நடார்த்த கூடாது என்ற விடயத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் இடம்பெற்றகலந்துரையாடலில் தெரிவித்தமையால் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் உள்ள அனைத்து முன்பள்ளிகளையும் விட்டு எதிர்வரும் மார்ச் மாதத்திற்கிடையில் வெளியேற வேண்டும் என்ற விடயம் காரணமாக இங்கு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக பணியாற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் வடமாகாண ஆளுனராக இருந்த குரே அவர்கள் இதற்கு காரணம் கூட்டமைப்பினர் என தெரிவித்த விடயம் உண்மையா என சிவில் பாதுகாப்பு திணைக்களம் சார்பில் சிறிதரனிடம் வினவப்பட்டது.

இதற்கு பதில் அளித்த சிறிதரன்;

அந்த கலந்துரையாடலில் சிவில் இராணுவத்தினரால் முன்பள்ளிகள் நடார்த்த கூடாது என தெரிவிக்கப்பட்ட விடயம் உண்மை எனவும், அவர்களை சிவில் பாதுகாப்பு திணைக்கள ஆசிரியர்களாக இல்லாது, அவர்களை முன்பள்ளி ஆசிரியர்களாக அதே சம்பளத்துடன் கல்வி அமைச்சின் கீழோ அல்லது மத்திய அரசின் கீழ் உள்வாங்க வேண்டும் என தாம் கோரியதாக அவர் தெரிவித்தார். இதேவேளை ஆசிரியர்கள் இராணுவ பயிற்சி பெறுவதல், முன்பள்ளி சிரார்கள் படையணி சீருடைகளை அணிதல், முன்பள்ளிகளில் படையணி கொடிகள் ஏற்றப்படுதல் போன்ற விடயங்கள் தொடர்பிலும் பல தடவை சுட்டிக்காட்டியதாகவும் தெரிவித்த சிறிதரன், இந்த நிலையில் இருந்து அவர்களையும், எமது சிறார்களையும் பாதுகாக்கவே இவ்வாறு தான் அங்கு பேசியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த சி.பா உத்தியோகத்தர், நீங்கள் குறிப்பிட்ட விடயம் அனைத்தும் நல்ல விடயம். ஆனால் இவற்றை காலம் கடந்து குறிப்பிட்டுள்ளீர்கள். 2 வருடமாக எமது முன்பள்ளி ஆசிரியர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. இந்த நேரம் இவ்வாறு அரசாங்கத்திற்கு நீங்கள் கூறியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். இப்புது நீங்கள் கூறிய விடயங்கள் நிறைவேறும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை என அவர்கள் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது, கட்த காலங்களில் முன்னால் போராளிகளிற்கு பணி புரியும் இடங்களில் கிடைக்கும் சம்பளத்தை விட பத்தாயிரம் ரூபா அரசு வழங்கும் என தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது இன்றுவரை அவர்களை சென்றடையவில்லை. அவ்வாறு இது வரை பயன்பெறவில்லை எனவும் சிறிதரன் குறிப்பிட்டிருந்தார்.

இந்த சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பில் நாம் கலந்துரையாடினோம். எனினும் அவர் குறிப்பிட்ட விடயங்கள் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை என அவர் தெரிவித்தார்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தால் நடார்த்தப்படும் முன்பள்ளி ஆசிரியர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் அவரிடம் வினவிய போது,

அவர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. அவர்களிற்கு வழங்கப்படும் பயிற்சி இராணுவ பயிற்சி அல்ல. தலைமைத்துவ பயிற்சியே அது. அங்கு தலைமைத்துவம் தொடர்பில் பல்வேறு விடயங்களே கற்றுக்கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு பயிற்சி பெற்றும் அவர்கள் போதிய ஊதியத்துடன் முன்பள்ளி ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றார்கள் என்பது தொடர்பில் மகிழ்ச்சியடைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் சிறிதரன் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

முன்பள்ளிகளை இராணுவம் நடார்த்தக்கூடாது என்பது தொடர்பில் பல தடவை நாம் வலியுறுத்தி வந்ததாகவு'ம, அவ்வாறு ஆசிரியர்களாக உள்ளவர்களை மாகாண சபை அல்லது மத்திய அரசின் கீழ் உள்வாங்கப்பட வேண்டும் என தாம் வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

வடமாகாண சபையில் இவ்விடயம் தொடர்பில் நதீர்மானம் எடுக்கப்பட்டமை, பாராளுமன்றில் விவாதித்தமை தொடர்பிலும் அவரிடம் வினவியபோது, அவ்வாறான தீர்மானம் வடமாகாணசபையில் நிறைவேற்றப்பட்டதுடன. நியதி ட்டமும் உருவாக்கப்பட்டது, தற்போது மாகாணசபை முடிவடைந்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.

கலந்துரையாடலில் முன்னால் போராளிகளிற்கு அரசினால் பத்தாயிரம் வழங்கப்படும் என தெரிவித்த அரசு அதை வழங்கவில்லை என குறிப்பிட்டிருந்தீர்கள். அந்த அரசாங்கதிற்கும், அதை தொடர்ந்து வந்த அரசாங்கதிற்கும் நிபந்தனை இல்லாத ஆதரவை வழஙிகினீர்கள் என வினவியபோது,

வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவு வழங்கியது பத்தாயிரம் சம்பளத்திற்கு அல்ல. அரியல் தீர்வு உள்ளிட்ட பல விடயங்களை கவனத்தில் கொண்டே ஆதரவு வழங்கப்பட்டதாக தெரிவித்தார்.

இம்முறையும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவீர்களா என வினவியபோது, கட்டாயம் வழங்குவோம். நாம் கொண்டுவந்த அரசாங்கம் ஆதரவு வழங்கதானே வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வவுனியாவிற்கு விஜயம் செய்த ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்குள்ள நிலமைகள் தொடர்பாக ஆராய்வு

**வவுனியா நிருபர்**



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான வில்லியம் டார்ட்மவுத் மற்றும் ஜியோஃப்ரே வான் ஓர்டன் ஆகியோர் வவுனியா மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்ததுடன், மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இடங்களையும் பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஐ.எம். ஹனீபா தலைமையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்கள், யுத்தத்திற்கு பின்னரான நிலமைகள் தொடர்பாக பார்வையிட்டு வருகின்றனர். அந்தவகையில் வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக கேட்டறியும் கலந்துரையாடலில் கலந்து கொண்டு பிரதேச செயலாளர், திணைக்களத் தலைவர்களை சந்தித்து மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிகள் தொடர்பாக கேட்டறிந்தனர்.

இக் கலந்துரையாடலை முடித்துக்கொண்டு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட சிதம்பரநகர் பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு அக்குள்ள மக்களைசந்தித்து நிலமைகளை ஆராய்ந்தனர்.

# வடக்கு தந்தி

## தேசிய ரீதியில் உற்பத்தி திறனில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முதலிடம்





உற்பத்தி திறன் போட்டியில் தேசிய ரீதியில் கிளிநொச்சி மாவட்ட செயலகம் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமையினை முன்னிட்டு வாழ்த்துகள் தெரிவிப்பதற்காகவும் உற்பத்தி திறன் செயற்பாடுகளை பார்வையிடுவதற்காகவும் இரத்தினபுரி மாவட்ட செயலக அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் உத்தியோகத்தர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு வருகைதந்து அலுவர்களுடன் கலந்துரையாடியதுடன் முதலாம் இடத்தினை பெற்றுக்கொண்டமைக்காக வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

## மக்களின் காணியில் இராணுவத்தினரின் விவசாய பண்ணை: விடுவிக்க கோரி போராட்டம்



**வவுனியா நிருபர்**

வவுனியா, செட்டிகுளம், இராமியன் குளத்தில் மக்களின் காணிகளை கையகப்படுத்திய இராணுவத்தினர் விவசாயம் செய்து வருவதாகவும் அதனை உடன் விடுவிக்க கோரியும் பாரியளவிலான ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

வவுனியா, செட்டிகுளம், ஆண்டியாபுளியங்குளம் பள்ளிவாசல் முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மதவாச்சி மன்னார் வீதியில் ஆண்டியாபுளியங்குளத்தில் மதிய நேர தொழுகையின் பின்னர் ஒன்றுகூடிய இஸ்லாமிய மக்கள் தமது பூர்வீக காணிகளை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும் என கோசங்களை எழுப்பியதுடன் பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

இதன்போது 'எங்கள் மூதாதையரின் காணியில் இராணுவம் விவசாயம் செய்கின்றது உடன் விடுவிக்கவேண்டும்', 'டிசம்பர் 31 இற்கு முன் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என தெரிவித்த ஜனாதிபதியின் சொல் பொய்', அரசே எமது விவசாய நிலங்களை விட்டு விடு, விவசாய நிலங்களையும் மேச்சல் நிலங்களையும் விட்டு வெளியேறு போன்று வாசகங்கள் எழுதிய பதாதைகளையும் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது ஆர்ப்பாட்ட இடத்திற்கு வருகை தந்த செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகன் அவர்களிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜரொன்றினையும் கையளித்ததுடன் இராணுவத்தினர் தமது காணியில் விவசாய பண்மையினை நடத்தி வருவதாகவும் அங்கு விளையும் பொருட்களை தமக்கே கடை அமைத்து விற்பனை செய்து வருவதாகவும் சுட்டிக்காட்டியதுடன் விவசாய பொருட்கள் கடையையும், விவிசாய பண்ணை பெயர்ப் பலகையையும் சுட்டிக் காட்டியிருந்தனர். இந்நிலையில் சுமார் 2 மணிநேரமாக இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தின் பின்னர் ஆர்ப்பபாட்டக்காரர்கள் களைந்து சென்றிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ஆண்டியா புளியங்குளம் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட இராமியன்குளம் பகுதியில் உள்ள காணிகள் கடந்த 1965ஆம் ஆண்டு தொடக்கம் எம்மால் விவசாயம் மேற்கொண்டு பராமரிக்கப்பட்டு வந்துள்ளது. போர்சூழலால் வெளியேற்றப்பட்ட பின்னர் மீண்டும் தமது சொந்த நிலங்களில் குடியேறியிருந்தனர்.

கடந்த 2009ம் ஆண்டு இறுதி யுத்தம் இடம்பெற்ற காலத்தில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்காக இடைத்தங்கல் முகாம்கள் அமைக்க அதிகளவிலான நிலங்கள் தேவைப்பட்டன. இதனையடுத்து அரசியல்வாதிகளும், அரசாங்க அதிகாரிகளும் இராமியன்குளம் பகுதி நிலத்தை விட்டுத் தருமாறும் இந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதும், அவர்களது நிலம் மீண்டும் கையகப்படுத்தப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனாலும் கடந்த 2013ம் ஆண்டளவில் அகதிகளாக்கப்பட்ட மக்கள் மீள்குடியமர்த்தபட்ட போதும் இராணுவத்தினர் குறித்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டதுடன் இதுவரை குறித்த நிலங்கள் விடுவிக்கப்டவில்லை எனவும் தெரிவித்தனர்.

# குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் 92ஆவது ஜெயந்தி தினம்



மனித வாழ்வுக்கு சிறப்பாக நாம் வாழ வழிகாட்டியாக ஒரு சிறந்த குருவின் தேவை எமக்குஅவசியமாகிறது! சைவசமயத்தில் அதுவும் யாழ்ப்பாணத்தில் பிறந்த அடியேனுக்கு ஈழத்துச் சித்தர்பரம்பரையில் யாழ்ப்பாணத்து கடையிற்சுவாமிகள் விசர்ச் செல்லப்பா சுவாமிகள் சிவயோகசுவாமிகள்வரிசையில் யோகர்சுவடமியால் கொழும்புத்துறையில் ஆட்கொள்ளப்பட்டு சுப்பிரமுனி என்னும்தீட்சாநாமம் பெற்ற றொபர்ட் ஹன்சன் என்பவர் குருவாக கிடைத்தது மிகப்பெரிய வரப்பிரசாதமே!அவரை அடியேன் குருவாகப் பெற உதவியவர் அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் சைவசித்தாந்த திருச்சபையின் அமைச்சராக இருந்த சிவத்திரு. சோ.சண்முகசுந்தரம் அவர்களாவார்.அளவெட்டி ஆச்சிரமத்தில் குருதேவருடைய பிறந்த நாளான 05.01.1985ல் திருச்சபையின் அங்கத்துவப்படிவத்தை நிரப்பியும், கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் சத்தியப் பிரமாணஞ் செய்தும் அவர்களது வழியை ஏற்றுக்கொண்டேன்.

குருதேவரை கொழும்பில் 2 தடவைகள் நேரடியாகத் தரிசனம் செய்து அவரது ஆசியைப்பெற்றுக்கொண்டபின் கடந்த 27.02.2018 அன்று தற்போதைய ஆதீன முதல்வர் சற்குரு போதிநாத வேலன்சுவாமிகளை அளவெட்டியில் குருதேவரால் பிரதிட்டை செய்யப்பட்ட ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஆலயத்தில்பாதபூஜை செய்யும் பாக்கியம் பெற்றேன்.

அளவெட்டி ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தையும், அமெரிக்க ஹவாய்தீவில் சைவசித்தாந்த திருச்சபையையும், கடவுள் நடராஜர் கோவிலையும் ஸ்தாபித்த பெருமைக்குரியவர். குருதேவரின் பாரிய முயற்சியில் சன்மார்க்க இறைவன் கோவில் பெரிய சிவாலயமாக கட்டப்பட்டுவருவதும் இந்துசமயம் இன்று என்ற ஆங்கில மாதாந்த சஞ்சிகைடியைப் பிரசுரித்துவருவதும் குறிப்பிடத்தக்கது.

மறைந்திட மூடிய மாய இருளை அறம், பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி ... எம்மிடத்தேவெளிப்பட்டும் மறைந்தும் இருக்கின்ற மாயா இருளாகிய மலங்களை அழித்து, எளியேன் அறம்,மறம் என்பவற்றைப் பயின்று, அறஞ் செய்தலினால் விருப்பமும், மறம் செய்தலில்வெறுப்புமுடையவனாகி, அந்நல்வினை தீவினைகளை ஒத்த பண்பினவாக்கிக் குரு தரிசனம்பெற்றுத் தன் திருவடிக் காட்சி பெற்று, ஆனந்தத்தில் மூழ்கிய விதத்தைத் தம் நாவினால் செப்புகிறார் மணிவாசகர்.

இன்றைய நன்னாளில் மகாசமாதியடைந்த குருதேவரை மனதாரப் பிரார்த்தித்து அவரது கருணையைஅனைவரும் பெற்றுக்கொள்ள பிரார்த்திப்போமாக!

**தங்க.முகுந்தன்- மூளாய்**







**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு பல்கலைக்கழக மாணவர்களால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 1000 பாடசாலை மாணவர்களிற்கு இவ்வாறு யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் உதவி வழங்கி வைக்கப்பட்டது. லண்டனில் உள்ள யாழ்பல்கலைக்கழகத்தின் மாணவர்களின் உதவியுடன் குறித்த உதவிகள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த உதவிகள் 75 முன்பள்ளி மாணவர்கள் மற்றும், தரம் ஒன்று முதல் உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவர்களிற்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடதக்கதாகும். முறிகண்டி தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் 100 மாணவர்களிற்கு இவ்வாறு ம வழங்கி வைக்கப்பட்டதுடன், ஏனைய தெரிவு செய்யப்பட்ட கிராமங்களிலும் இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்களால் உதவிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடதக்கது.**




## வவுனியா நகரில் ஆறு கடைகளில் தொடர் திருட்டு



**வவுனியா நிருபர்**

வவுனியா நகரப் பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள 6 வியாபார நிலையங்களில் தொடர் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா, இலுப்பையடி பகுதியில் அமைந்துள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத் தொகுதிக்குள் அமைந்துள்ள 6 கடைகளின் கூரைகளைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் அங்கு உள்ள காசுப் பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்த பணங்களைத் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். சீசீடீவி கமரா பொருத்தப்பட்டிருந்த கடைகளில் நுழைந்த திருடர்கள் அவற்றை செயிழக்கச் செய்த பின் திருட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த தொகுதியில் 35 வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாக அமைந்துள்ள நிலையில் பிற்பகல் 7 மணியளவில் பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களின் கூரைகளே பிரிக்கப்பட்டு திருடர்கள் உள்நுழைந்துள்ளனர். இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற போது அத் தொகுதியில் உள்ள சில கடைகள் திறந்து காணப்பட்டுள்ளது. குறித்த கடைகளில் இருந்தவர்கள் கடைகள் உடைக்கப்பட்டதை அவதானித்து கடை உரிமையாளருக்கு தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் இது தொடர்பாக வவுனியா பொலிசகில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டையடுத்து சீசீடீவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ் கடைகளில் இருந்த சுமார் 60 ஆயிரம் ரூபாய் வரையிலான பணமே இவ்வாறு திருடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு!



**வவுனியா நிருபர்**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருக்கு எதிராக வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புக்கலை சங்கத்தின் தலைவர் எஸ். நந்தகுமார் தலைமையில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் பல பதக்கங்களை பெற்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்த பத்து வூசூ குத்துச்சண்டை வீர, வீராங்கனைகள் வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருக்கு எதிராக கையெழுத்திட்டு முறைப்பாடு மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 26-12-2018 அன்று நடைபெற்ற ஊழியர்கள் ஒன்று கூடல் நிகழ்வில் வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்கள் கௌரவிப்பு நிகழ்வில் வவுனியா ஏழாம் அறிவு தற்காப்புகலை சங்கத்தை சேர்ந்த வீரர்கள் புறக்கணிக்கப்பட்டமை மற்றும் கடந்த மூன்று வருடங்களாக அரசாங்கத்தினால் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் விளையாட்டு உபகரணங்கள், சலுகைகள் மற்றும் தேசிய ரீதியில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகள் குறித்த அறிவித்தல்களை தெரிவிப்பதில்லை என தெரிவித்தே மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருக்கு எதிரான விளையாட்டு வீரர்களின் முறைப்பாட்டை வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் எம்.ஆர்.பிரியதர்சன பெற்றுக்கொண்டார்.

## கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தினரால் கிணறுகள் சுத்தம் செய்யும் பணிகள்



வெள்ள நீர் உட்சென்ற பொது மக்களின் கிணறுகளை சுத்தம் செய்யும் பணிகளை கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கம் முன்னெடுத்து வருகிறது.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளம் அனர்த்தம் காரணமாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள பொது மக்களின் கிணறுகள் முழுமையாக வெள்ளத்தினால் மூடப்பட்டு வெள்ள நீர் உட்சென்றதன் காரணமாக மக்களின் நீர்த்தேவைக்கு பாவிக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனை கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கமானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் இயந்திர சாதனங்களை கொள்வனவு செய்து பொது மக்களின் கிணறுகளை சுத்தம் செய்யும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சங்கத்தின் தலைவர் பசுபதி உமாகாந்தன் தலைமையில் தற்போது பணிகள் தருமபுரம்புதுக்காடுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இப்பணி தொடர்ந்து பல பகுதிகளிலும் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் மாற்று வலுவுள்ளோர் சங்கம் அறிவித்துள்ளது

இதேவேளை வெள்ள பாதிப்புக்களுக்கு உள்ளான மக்களுக்கும் மாணவர்களுக்கும் இச் சங்கமானது புலம் பெயர் உறவுகளின்உதவியுடன் தொடர்ந்தும் உதவிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கழிவுகளை அலட்சியம் செய்யும் நகரசபை



வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்டார் மைதானத்திற்கு அருகே காணப்பட்ட குப்பைகளுக்கு நடுவில் நகரசபையினரே எங்களையும் ஏற்றிச் செல்லுங்கள் என எழுதப்பட்ட பாதாதையொன்று வைக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையின் கழிவகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக்காலமாக பலராலும் விமர்சிக்கப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக நகரில் கூட கழிவுகளை சீராக அகற்றவில்லை குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் இந்த பதாதை வைக்கப்பட்டுள்ளது.

வைரவபுளியங்குளம் வீதி , கதிரேசன் வீதி , வைரவர் கோவில் அருகே போன்ற பகுதிகளில் கடந்த சில நாட்களாக நகரசபையினரால் குப்பைகள் அகற்றப்படாமையினால் குப்பைகள் வீதி முழுவதும் சிதறிக்கிடப்பதினை காணக்கூடியதாகவுள்ளது.

## ஓமந்தையில் வீதி புனரமைப்புப்பணிகள் ஆரம்பித்து வைப்பு



வவுனியா ஓமந்தை அரசமுறிப்பு வீதி புனரமைப்புப்பணிகள் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை உறுப்பினர் அஞ்சலா கோகிலகுமாரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஓமந்தை அரசமுறிப்பு ஒரு கிலோ மீற்றர் நீளமான வீதி புனரமைப்பிற்கு வன்னி மாவட்ட நாடாளுமனற் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் கிராமத்தின் அபிவிருத்தி கம்பெரலியா வேலைத் திட்டத்தின் குறித்து ஒதுக்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா நிதியில் வவுனியா தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமாரின் வேண்டுகோளிற்கு அமைவாக இன்று ஓமந்தை அரசமுறிப்பு வீதிப்புனரமைப்புப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. கிராமத் தலைவர்கள், கிராம மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

## புதுவருட சத்தியபிரமாணத்துடன் கடமைகளை ஆரம்பித்த வவுனியா பொலிசார்





வவுனியா பொலிசார் புதுவருட சத்திய பிரமாணத்தையடுத்து புதிய ஆண்டுக்கான தமது கடமைகளை ஆரம்பித்தனர்.

குறித்த நிகழ்வு வன்னி பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலய வளாகத்தில் இடம்பெற்றது.

2019 ஆம் ஆண்டுக்கான முதலாவது வேலை நாள் இன்றாகும். சகல அரச திணைக்களங்கள் மற்றும் அரச, அரசார்பற்ற அலுவலங்களில் புதுவருட உறுதியுரையுடன் வேலைகள் ஆரம்பித்தன. அந்தவகையில் வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலயத்திலும் இந்த வருடத்திற்கான அரசாங்கத்தின் சத்திய பிரமாணத்துடன் வேலைகள் ஆரம்பமாகின.

முன்னதாக தேசியக் கொடி ஏற்றப்பட்டு அதனைத் தொடர்ந்து பொலிஸ் கொடி ஏற்றப்பட்டு தொடர்ந்து பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றதுடன் தமது புதுவருட வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.அனுர அபயவிக்கிரம, பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம். எஸ்.எம்.தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.பி.மல்வலகே, பிரதி பொலிஸ் மா அதிபர் காரியாலய பிரதான கணக்காளர் எஸ்.ரவிச்சந்திரன், வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மஹிந்த வில்வஆராய்ச்சி, பொலிஸ் அதிகாரிகள், பொலிசார், பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றும் சிவில் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் இதில் கலந்து கொண்டனர்.

## வடமாகாண ஆளுநரை தொடர்ந்தும் வடமாகாணத்திற்கே கடமையில் அமர்த்த கோரி கவனஈர்ப்பு போராட்டம்



வடமாகாண ஆளுநரை தொடர்ந்தும் வடமாகாணத்திற்கே கடமையில் அமர்த்த கோரி கவனஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகம் முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட குறித்த கவன ஈர்பபு குழுவினர், கிளிநாச்சி புகையிரத நிலையம் வரை சென்றனர்.று கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு ஜனாதிபதி வருகைதரக்கூடும் என கருதி குறித்த குழுவினர் கிளிநொச்சி புகையிரத நிலையம் வரை வருகை தந்தனர். எனினும் ஜனாதிபதி வருகை தராமையால் அங்கு கிளிநாச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் ஜனாதிபதிக்கான மகஜரை கையளித்தனர். குறித்த போராட்டத்தில் வடமாகாண சுகாதார தொண்டர்கள், வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் உள்ளிட்ட சில அமைப்புக்கள் இணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தொடர்ந்து ஊடகங்களிற்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

வட மாகாண ஆளுநர் வடக்கில் நேர்மையாக செயற்பட்டு வந்ததாகவும், அவர் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பல பணிகள் இடையில் கைவிடப்பட்டுள்ள நிலை காணப்படுவதால், அவரை மீண்டும் வடமாகாணத்திற்கே நியமிக்க வேண்டும் என கோரினர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம்,

ஜனாதிபதிக்கு கையளிக்க கோரி மகஜர்கள் தம்மிடம் கையளிக்கப்பட்டதகவும், அவற்றை உடனடியாக ஜனாதிபதியின் கரங்களிற்கு கிடைக்ககூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.







**கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு தென்னிந்திய திருச்சபை உதவிகளை வழங்கியுள்ளது. விசுவமடு, முறிகண்டி, மாங்குளம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பபட்ட மக்களிற்கு நிவாரண பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. தென்னிந்திய திருச்சபையின் கொழும்பு மற்றும் நெடுபைகளின் நிதி பங்களிப்பில் குறித்த உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. தென்னிந்திய திருச்சபையின் பேராயரின் ஆலோசனைக்கமைய குறித்த நிவாரண பொருட்கள் நிறைவாழ்வு மையத்தின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.**

சிறுகதை

# எல்லாம் அவன் செயல்

மாலை 5 மணிக்கெல்லாம் வேலை முடிந்து வீட்டுக்கு வரும் மகன் பாஸிர் அன்று ஆறு மணியைத் தாண்டியும் கூட வராமல் இருந்தது கண்டு தாயார் கஸீமாவுக்குப் பய உணர்ச்சியையே கொடுத்தது. செல்போன் கூட பாவிக்கத் தெரியாதவராக இருந்தார் கஸீமா.

கொழும்பில் ஏற்றுமதி இறக்குமதி கம்பனி ஒன்றில் கணினிப் பகுதியில் வேலை செய்பவன்தான் பாஸிர். மல்வானையில் தன் தாயாருடன் மட்டும் வாழ்ந்து வருகின்றான். வயதும் இருபத்தாறாகின்றது. தகப்பன் யாரென்று தெரியாமல்தான் இருந்து வருகின்றான் அவன்.

இரண்டொரு தடவைகள் தனக்குப் புத்தி வந்த பருவத்தில் தகப்பன் யார் உம்மா என்று கேட்ட போது தாய் கஸீமா சொன்ன வார்த்தைகள் மகனே உனக்கு என்ன பிடிக்கும் எதில் ஆசை இருக்கின்றதோ அவைகளைக் கேள் மகன். இந்த உம்மா எப்படியும் வாங்கித் தருவேன். ஆனால் உன் வாப்பாவை மட்டும் கேட்காதே என்றுதான்.

உன்னுடைய இந்த உம்மா கெட்டவள் இல்லை. அதனால்தான் சொல்றேன். எங்கோ உன் வாப்பா உயிருடன்தான் இருக்கார். அவரைப் பற்றி நமக்கு எந்தக் காலத்திலும் தெரியாமல் இருப்பதுதான் நல்லது மகன் என்று சொன்னதில் இருந்து பாஸிர் எச்சந்தர்ப்பத்திலும் தகப்பனைப்பற்றி கேட்பதே இல்லை.

அப்போது மணி மாலை ஆறு முப்பதை நெருங்கும் வேளையில் கார்ச் சத்தம் கேட்டு அத்திசையை நோக்கினார் கஸீமா. காரிலிருந்து தன் மகன் பாசிர் ஒருவர் பிடித்து வர மெது மெதுவாக நடந்து வந்தான். என்ட அல்லாஹ்வே என்ன மகன் நடந்திச்சி உனக்கு என்று கத்தியே விட்டாள்.

காரை ஓட்டி வந்தவன் கஸீமாவிடம் சிங்களத்தில் விடயத்தைச் சொல்லவும். நீங்க என்னப்பா சொல்றீங்க. எனக்குப் புரியலியே என்றதும். பாஸிரே விடயத்தைச் சொன்னான். நான் வரும்போதும்மா வெல்லம்பிட்டியில் வெச்சி வேகமாக வந்த கார் நான் வந்த மோட்டார் சைக்கிளை மோதப் பாக்கவும் ஓரத்திற்கு வெட்டினேன் அது கானில் போய் விழுந்திடிச்சி உம்மா.

நல்லவேளை முழங்காலில் மட்டும் சிறுகாயம். வேறு ஏதும் ஆகலம்மா. உடனே எங்கட கம்பனியில சாமான் எடுக்கும் சிங்கள முதலாளி என்னைக் கண்டதும் பக்கத்தில் இருந்த கிளினிக்கில் காயத்திற்கு மருந்து போட்டு, சைக்கிளையும் கெரேச்சில் ஒப்படைச்சிட்டு மகன்மார்களை காரில் விட்டிட்டு வரச் சொன்னாரும்மா.

எனக்கு ஒண்ணுமே இல்லை உம்மா. பயப்படும்படியாக எதுவும் இல்லை. பாஸிருடன் வந்த இருவருக்கும் தாயும் மகனும் நன்றி சொல்லி வழியனுப்பி வைத்தார்கள். நான் பயந்தே போயிட்டேம்பா. எனக்கிண்டு வேறு யார்தான் இருக்கு. இப்போ நான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதெல்லாம் உனக்காகத் தான் பாஸிர்.

மகன் இரண்டு மூணு நாளைக்கு நீ வேலைக்குப் போக வாணாம். நல்ல நிம்மதியாய் இரு என்று சொல்லிவிட்டு தனிமையில் தன்னையும் மகனையும் இந்த நிலைமையில் இருப்பது பற்றி நினைத்துப் பார்க்கின்றார் அவரின் பரிதாபகரமான நிகழ்வுகளை.

மாவனல்லையில் வகாப் என்பவரைத் தெரியாதவர்கள் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பெரிய ஜவுளிக்கடையுடன் சேர்ந்து இரும்புக் கடையும் அவருக்குச் சொந்தமாக இருந்தன. மூவின மக்களின் பெருநாள் தினங்களில் வியாபாரம் அமோகமாக நடைபெறும். புதிய வீடு கட்டுவோரெல்லாம் இவருடைய கடையில்தான் தேவையானவற்றைக் கொள்வனவு செய்வார்கள்.

பொதுவாக இவரை எல்லோரும் வகாப் தொர என்றுதான் அழைப்பார்கள். மூத்த மகனும் இளைய மகளும் தான் இவரது வாரிசுகள். மிகவும் செல்லமாகவும் செல்வமாகவும் வகாப் தொர தம்பதியினர் இவர்களை வளர்த்து வந்தார்கள்.

பாடசாலை செல்லும் வயது வந்ததும் எல்லோரையும் போன்று பாடசாலைக்கு அனுப்பிவைக்கத் தவறவில்லை. வகாப் தொர மகன் அஸ்மிரும் பணச் செல்வம் கொண்ட பிள்ளைகள் கல்வியில் சிரத்தை காட்டுவது அரிதிலும் அரிது.

வகாப் தொரையின் மகனும் இதனையே கைக்கொண்டான். பத்தாம் தரத்திற்கு மேல் அவனால் ஈடு கொடுக்க இயலாமல் போகவே இடை நிறுத்திக் கொண்டான் கல்வியை. மகள் கஸீமா ஆறாம் தரத்துடன் படிப்பிற்கு முழுக்குப் போடச் செய்தார் வகாப் தொர. படித்தது போதுமென்று.

பின் வாரிசுகளாக இரண்டு கடைகளையும் இரு மக்களுக்கும் கொடுக்கும் தீர்மானத்திலேயே இருந்தார் தொர. அதனால் ஜவுளிக் கடையை மகன் அஸ்மிருடைய பொறுப்பில் விட நினைத்து கடையின் பொறுப்புக்களை ஏற்றாலும் அவனது எண்ணமெல்லாம் வெளிநாட்டு மோகத்திலேயே சுடர்விட்டுக் கொண்டிருந்தது.

மகள் கஸீமா பார்ப்போரைக் கவரும் வண்ணம் அழகியாகத்தான் இருந்தாள். இதனால் அவனுக்குத் தரமான மாப்பிள்ளை ஒருவரைப் பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்பதே வகாப் தொர தம்பதியினரின் நோக்கமெல்லாம். வெளிநாட்டுக்குச் சென்றுழைத்து சொகுசாக வாழவேண்டுமென்றிருந்த அஸ்மிர் அவன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டான்.

வகாப் தொரதான் என்ன செய்வார் மகன் விடும் மூச்செல்லாம் வெளிநாடு என்றுதான் சொல்லிக் கொண்டிருந்தது. அதனால் தடையாய் இருக்கவில்லை. ஒரே மகன் திருமணம் முடித்தாலும் தன்னோடுதான் இருக்க வேண்டுமென்றுதான் எண்ணிக் கொண்டிருந்தார் வகாப் தொர.

அப்போது கண்டிப் பகுதியிலிருந்து இளம் கொந்தராத்துக்காரரான நிஸ்பர் ஆறு பேர் கொண்ட குழுவினருடன் மாவனல்லைப் பகுதிகளில் நவீன வீடுகளை அமைத்துக் கொண்டிருக்கும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி வகாப் தொரையின் இரும்புக் கடையிலேயே கட்டிடங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்வார்கள்.

இதனால் வகாப் தொரைக்கும் நிஸ்பருக்குமிடையில் நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போதுதான் தனது வீடு இருக்கும் காணி எல்லைக்குள் மகள் கஸீமாவுக்கு நவீன மயமான வீடொன்றைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. ஒரு நாள் வகாப் தொர நிஸ்பருடன் பேசிக் கொண்டிருக்கும் போது தனது ஆவலை வெளியிட்டார்.

கொந்தராத்து நிஸ்பரும் வகாப் தொரயிடம் எவருக்குமே அமைத்துக் கொடுக்காத நவீனமயமான வீடொன்றை கட்டித் தருவதா வாக்குறுதியளித்தார் நிஸ்பர். அதன் பிரகாரம் தற்போதைய தொரையின் வீடு அமைந்திருக்கும் காணியின் ஒரு பகுதியில் புதிய வீடு அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள் இருவரும் சேர்ந்து.

பிறகு என்ன பார்க்கவா வேண்டும் அவரது வேலையாட்களுக்கு கட்டளையிட்டார். வீடு அமைக்கத் தேவையான கல், மண், சீமெந்து மற்றும் தேவையான அனைத்தும் உரிய இடத்திற்கு வந்து சேர்ந்தன. வீடு அமைக்கும் வேலைகளும் நடைபெறலாயிற்று. நிஸ்பரும் தொரையின் குடும்பத்தில் ஒரு அங்கத்தவர் மாதிரியே பழகி வந்தார். வகாப் தொரையும் அதே கொள்கையிலேயே இருந்தார்.

நிஸ்பருக்கும் அவர் குழுவினருக்கும் சாப்பாடு ஒழுங்குகள் எல்லாம் தொரையின் வீட்டிலேயே இடம்பெற்றது. நிஸ்பரை மட்டும் சாப்பாட்டு வேளைகளில் தன்னோடு இணைத்துக்கொண்டார் வகாப் தொர. இடைக்கிடை மகள் கஸீமாவும் சாப்பாடு வகைகளைக் கொண்டுவந்து வைப்பாள். நாட்களும் ஊர்ந்து சென்று கொண்டிருந்தன.

தொரைக்கும் மனதில் ஒரு எண்ணம் உதிக்கத் தொடங்கியது. தன் ஒரே மகள் கஸீமாவை நிஸ்பருக்கு திருமணம் செய்து வைத்தால் நன்றாக இருக்குமென்று. இளம் வயது கொந்தராத்துக்காரர் நல்ல உழைப்பாளி. மகளை இணைத்துவிட்டால் சந்தோஷமாக நம் கண் முன்னேயே வாழ்ந்து கொண்டிருப்பாள் என்று எண்ணி நிஸ்பரிடம் கேட்டுப் பார்க்கும் யோசனையில் இருந்தார் தொர.

இருவரும் தனிமையில் பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு நாள் வகாப் தொர தனது எண்ணத்தை மெதுவாக அவிழ்த்தார் நிஸ்பரிடம். தனக்கு ரொம்ப சந்தோஷம் என்றும் எதற்கும் ஊர் சென்று வீட்டாரிடமும் சொல்லிப் பார்த்து விடயத்தை முடிப்போம் என்றார் நிஸ்பரும்.

அதன் பின்னர் வகாப் தொர வீட்டில் பூரண சுதந்திரம் நிஸ்பருக்கு. கஸீமாவிடமும் சாடமாடயாய் பேச்சையும் வைத்துக் கொண்டான். அவளும் இனி நிஸ்பருடன்தான் வாழப் போகிறோமே என்ற நினைப்பில் நன்கு பழகத் தொடங்கினாள். வகாப் தொரயும் தனது துணைவியார் சல்மாவுடன் உறவினர் வீட்டுக் கல்யாணம் மரண வீடு என்று வந்தால் மகள் கஸீமாவை தனியே விட்டு விட்டுத்தான் செல்வார்.

தனிமையில் இருக்கும் வேளையிலும் கஸீமாவுடன் பழகத் தொடங்கினான் நிஸ்பர். அவளும் அதற்கு இடம் கொடுத்தாள். புதிய நவீன வீடு வகாப் தொரையின் காணியில் ஜொலித்துக் கொண்டிருந்தது. அவ்வீதியில் செல்வோரின் பார்வைகள் அவ்வீட்டைப் பார்க்காமல் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அவ்வீட்டின் வேலைகள் யாவும் முடிவுற்றதும் திருமணப் பேச்சை ஆரம்பித்தார் வகாப் தொர. தான் கண்டியில் தென்னக்கும்புர என்ற இடத்தில் வசிப்பதாகவும் அங்கு சென்றதும் தாய் தகப்பன் உறவினர்களிடம் சொல்லி பத்து நாட்களுக்குள் இங்கு வந்ததும் பெண்ணையும் பார்த்துவிட்டு திருமண நாளையும் வெச்சிடலாம் என்றார் நிஸ்பர்.

வகாப் தொரைக்கும் அது திருப்தியாய் படவே மிகச் சந்தோஷ மிகுதியில் நிஸ்பரின் பயணத்திற்கு விடைகொடுத்தனுப்பினார் அவர். கொந்தராத்து நிஸ்பர் சொன்னதின் பிரகாரம் பத்து நாட்களும் கழிந்து விட்டன. அது இருபது நாட்கள் ஒரு மாதம் என்று நான்கு மாதங்களும் கடந்து விட்டன.

அதற்கிடையில் கஸீமாவின் உடம்பிலும் ஒரு மாற்றம். வயிற்றில் மூணு மாத சிசு சந்தோஷக்களையில் மூழ்கியிருந்த வகாப் தொரயின் வீடு சோகத்தில் மூழ்கியது. திடீரென ஒரு நாள் வகாப் தொர தன் உறவினர் இருவருடன் காரொன்றில் கண்டி தென்னக்கும்புரவிற்குப் புறப்பட்டார். கொந்தராத்துக்காரர் என்றால் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்திருக்கும் தானே என்ற எண்ணத்தில் அங்கு போய் விசாரித்துப் பார்த்தார் வகாப் தொர.

ஆனால் அவருக்குக் கிடைத்த தகவல் இந்த ஊரில் இப்படியான ஒருவர் இல்லவே இல்லை. கொந்தராத்துக்காரராக சிங்களவர் ஒருவரே உள்ளார் என்றுதான். அப்போதுதான் தன் மகளின் வாழ்க்கையை பறிபோக வைத்துவிட்டான் இந்த நயவஞ்சகன் நிஸ்பர் என்பதை உணர்ந்து துடியாய் துடித்தார் வகாப் தொர. தொரையின் மனைவி சல்மா பக்குவமாய் கிளியை வளர்தது கடுவன் பூனைக்குப் பலி கொடுத்து விட்டோமே என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். கௌரவமாக நடித்து நயவஞ்சகத் தன்மையயைக் காட்டி விட்டானே நயவஞ்சகன் என்றார்கள் உறவினர்கள்.

இனி எங்கு போய் தேடுவது. எல்லோராலும் மதித்து கௌரவமாகத் தலை நிமிர்ந்து நடந்த வகாப் தொரையை தலை குனிய வைத்துவிட்டான். அந்தச் சதிகாரன் நிஸ்பர் என்பவன் மாவனல்லையில் உறவினர்கள் மூலம் ஒரு சிலரிற்குத் தெரியவும் செய்தது. வகாப் தொரையின் வெளி நடமாட்டங்களும் வெகுவாகக் குறைந்து விட்டன.

மகள் கஸீமாவுக்கு பிரசவ வேளை வந்ததும் வகாப் தொரையின் உறவினரில் இருந்த டாக்டர் தாஸீமை அணுகி தாதி ஒருவரை வீட்டிற்கு வரவழைத்து பிரசவம் செய்வித்தார்கள். அழகான ஆண்குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள் கஸீமா. வீட்டில் எந்தவொரு வைபவமும் இல்லாமல் வகாப் தொரைக்கு பேரனும் கிடைத்துவிட்டான்.

சிசு உண்டான ஆரம்பத்திலேளேய வகாப் தொர அதனை அழிக்க முற்பட்ட வேளையில் மகள் கஸீமா அதற்கு இடம் கொடுக்கவில்லை. அந்தச் சிசு என்ன பாவம் வாப்பா செஞ்சிச்சி. இது அல்லாஹ்வின் ஏற்பாடு. என்னால் பெற்றெடுக்கப்பட வேண்டும் என்ற நியதியை வகுத்து விட்டான். இனி என்ட வாழ்க்கை இந்தக் கொழந்தையோடுதான் வாப்பா. இவனை வளர்த்தெடுத்து நல்லா படிக்கவெச்சி உத்தியோகமும் கெடைக்கச் செய்வேன் வாப்பா. தகப்பன் இல்லாக் கொறையை நான் வைக்கவே மாட்டேன். இதுமட்டும் நிச்சயம் வாப்பா.

அந்த வார்த்தைகளைக் கேட்டு என்ட ஒரே மகளின் வாழ்க்கை இப்படிச் சீரழிந்து விட்டதே என்று வகாப் தொர அழுதே விட்டார். மகள் கஸீமாவின் நிலையால் சிந்தனை செய்து செய்து நோயாளியாகவும் ஆகிவிட்டார் வகாப் தொர. கஸீமாவின் தாயார் சல்மாவுக்கும் திடீரென ஒருநாள் மாரடைப்பு ஏற்பட்டு இறைவனடி எய்து விட்டார்.

இதன் பின்னர் வகாப் தொரைக்கு இந்த மாவனல்லையில் இருக்க மனமில்லாமல் போனது. அதனால் கடைகள், புதிய, பழைய வீடுகள் எல்லாவற்றையும் விற்று மகனினதும் மகளினதும் பெயர்களில் அரைவாசியை வங்கியில் இட்டார். பின்னர் மல்வானை என்ற இடத்தில் வீடு ஒன்றை வாங்கி அங்கு மகள், பேரனுடன் குடியிருந்தார் வகாப் தொர. மகனுக்கு பாசிர் என்று பெயரிட்டு வளர்த்து வந்தாள் கஸீமா.

பாடசாலை செல்லும் வயது வரவே மல்வானையிலுள்ள மகாவித்தியாலயத்தில் சேர்த்துவிட்டாள் கஸீமா. படுத்த படுக்கையாய் கிடந்த வகாப் தொரையும் ஒரு நாள் திடீரென காலமானார். இப்பொழுது கஸீமா தனித்தவளாகிவிட்டாள். அதனால் வறுமை நிலையில் வாழ்ந்து வந்த விதவைப் பெண்ணொருத்தியை தனக்குத் துணையாக வைத்துக் கொண்டாள் கஸீமா.

பாடசாலையில் விடப்பட்ட பாஸிர் கல்வியில் கெட்டிக்காரனாகவும், அதிக அக்கறை காட்டுபவனாகவுமிருந்தான். காலங்களும் வெகுவாக உருண்டோட பாஸிர் உயர்தரப் பரீட்சையில் கணிணிப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தான். பருவம் வந்து ஒரு தடவை ஆறாம் தரம் கற்கும் வேளையில் ஒருநாள் வாப்பா எங்கேம்மா போனாங்க என்று கேட்டுவிட்டான்.

கஸீமாவுக்கு இவ்வார்த்தைகள் திகீரென்றது. ஒருநாளும் இவன் இப்படிக் கேட்டதில்லையே என்று அவனை அணைத்தபடியே தேம்பித் தேம்பி மகனே உனக்கு உம்மாவும், வாப்பவும் நான்தான்டா, அப்படி அல்லாஹ் எஎன்னை ஆக்கி வெச்சிட்டான். மகமீனு உனக்கு என்னென்ன வேணுமோ தாராளமாய் கேள் வாப்பாவை மட்டும் கேட்டிடாதேடா கண்ணு.

சரிம்மா இனிநான் கேட்கவே மாட்டேன். நீங்க இழக் கூடாதும்மா அத என்னால தாங்கவே ஏலாது. ஆதன் பின்னர் உயர்தர வகுப்பு வரை வந்தும் வாப்பாவை கேட்டகவே இல்லை பாஸிர். அப்படிப்பட்டவன் ஒருநாள் உம்மா கோவிச்சிக் கொள்ள வாணாம் இப்போவாவது சொல்லுங்கம்மா வாப்பாவுக்கு என்னம்மா நடந்திச்சி உசிரோடு இருக்காங்களா இல்லை.

அவன் வாயைக் கையால் பொத்தியபடி வாப்பாவை மட்டும் கேட்காதே என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். உன் உம்மா தப்பானவளே இல்லை. எப்போதாவது ஒருநாள் தெரிய வேண்டி வரும் மகன். இப்போதைக்கு உன்படிப்பு வருங்காலத்தைப் பற்றித்தான் நீ யோசிக்கணும். வாப்பாவில் ஏதோ மர்மம் ஒன்று தங்கியிருக்கு என்பதை மட்டும் உணர்ந்து கொண்டான் பாஸிர்.

பாசிருக்கு கணினி அறிவு மிக அதிகமாக இருந்ததால் அதிலேயே பயிற்சியெடுத்து அதற்கான பரீட்சையிலும் திறமைச் சித்தியடைந்திருந்தான். இதனால் பெரிய பெரிய தனியார் கம்பனிகள் மூன்று அவனைத் தேடி வந்தது. அதில் ஏற்றுமதி இறக்குமதிக் கம்பனியொன்றில் இணைந்து கொண்டான் பாஸிர்.

மகன் இக்கம்பனியில் இணைந்து இரண்டு வருடங்களிற்கும் மேலாகின்றன. எந்தப்பிரச்சினையுமில்லாமல் வந்து போய்க் கொண்டிருந்தான். ஆனால் இன்றுதானே ஒரு பிரச்சினையுடன் வந்து நின்கின்றான் பாஸிர். பழைய நினைவுகளில் கஸீமாவின் துன்பகரமான நிகழ்வுகள், மகன் பாஸிரின் தற்போதய நிலைமை எல்லாம் மேகங்களாக மறைந்து சென்றன. பாஸிர் கடமைபுரியும் கம்பனியொன்றின் கிளை நுவரெலியா நகரத்திலும் இருந்தது. அங்குள்ள விபரங்களை அறிந்து வர பாஸிருடன் மேலும் இருவரை கம்பனி வாகனத்தில் உரிமையாளர் அனுப்பி வைப்பது வழக்கம். இடைக்கிடை இது நடந்து கொண்டே இருக்கும்

அங்குள்ள கம்பனியின் பொறுப்பாளர் ஓரளவு வயதானவர். இப்போது தலையிலும் மீசையிலும் அங்கொன்று இங்கொன்றாக வெள்ளை முடிகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவர் பாஸிருடன் அன்பாகவும் பற்றுதலாகவுமிருந்தார். தனது ஒரே மகள் ஆபிதாவுக்குப் பொருத்தமானவள் பாஸிர்தான் என்பதை மனதில் பதித்துக் கொண்டிருந்தது அவனுக்கு எங்கே தெரியப் போகின்றது.

ஒரு தடவை கம்பனி விஷயமாகச் சென்ற பாஸிருக்கு கணக்கு இருப்பு விபரங்கள் யாவும் சுலபமாக முடிவுற்றதால் உடனே கொழும்பு செல்லப் புறப்பட்டவனிடம் தனிப்பட்ட விடயம் ஒன்று பேச வேண்டும் எனச் சொல்லி அவனிடம் தன் எண்ணத்தை வெளியிட்டார். அப்போது கம்பனி பொஸ் உங்களப் பாக்கும் போது என் சொந்தத்தில் ஒருத்தர் போன்றே எனக்குத் தோன்றுது என்றும் சொன்னார்.

பாஸிரும் தனக்குத் தகப்பன் இல்லையென்றும் தாயார்தான் உம்மா வாப்பாவாக இருந்து தன்னை வளர்த்து இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்காங்க என்று சொல்லி தாயாரிடம் விபரத்தைக் கூறி அவங்களும் இதனை ஏற்றுக் கொண்டால் நான் அறிவிப்பேன். உங்கள் வீடு வரும் தினத்தை அறிவித்தால் உம்மாவுடன் வருவேன் பொஸ் என்றான் பாஸிர்.

ஆனால் ஒன்று என் உம்மாவின் அனுமதி விருப்பம் இல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யவே மாட்டேன் பொஸ். நல்ல ஒழுக்கமான பிள்ளை நீங்க. தாயாரும் விரும்பி வந்து பெண்ணையும் பார்த்திட்டா அப்புறம் திருமணத்தையும் முடித்த பிறகு கம்பனி பொறுப்பை ஒங்கிட்ட ஒப்படைச்சிடுவேன். உங்க தாயாருடன் இங்கேயே செட்டிலாகிடலாம். மாளிகை மாதிரி வீடு இருக்கு.

வீடு சென்ற பாஸிர் தன் தாயாரிடம் பொஸ் சொன்ன விபரங்களையெல்லாம் சொன்ன போது கஸீமாவுக்கு ஒன்று மட்டும் தெளிவாகியது. மகன் பாஸிர் திருமண பந்தத்தில் இயைண விரும்புகின்றான். தனக்குத்தான் இல்லற வாழ்க்கை சந்தோஷம் எதுவும் கிடைக்கவில்லை. தான் பெற்றெடுத்த மகனாவது சந்தோஷமாக இருக்கட்டும் என்றே கஸீமாவின் உள்ளம் தெளிவுபடுத்தியது.

உடனே பாஸிரைப் பார்த்து உனக்கு விருப்பமாக இருந்தால் மகன் நான் தடையாக இருக்க மாட்டேன். உங்க விருப்பம் இல்லாம நான் எந்த முடிவும் கொடுக்கல உம்மா. உங்க முடிவ கேட்டு செல்போனில் சொல்லச் சொன்னார். அதன் பின்னர் ரெண்டு பேரையும் நாள் குறிப்பிட்டு வரச் சொல்லுவார். உங்களுக்கு அந்தப் பெண்ணைப் பிடித்திருந்தால் மட்டுமே உம்மா நான் சம்மதிப்பேன்.

ஒரு கிழமை நகர்தலின் பின்னர் நுவரெலியாக் கிளையின் பொறுப்பாளர் அழைப்பின் பிரகாரம் அங்கு கொழும்பில் இருந்து பதுளை செல்லும் இரவு நேர புகையிரதத்தில் பயணமானார்கள் தாயும் மகனும். எந்த வாகனத்திலும் செல்ல மறுத்து விட்டார் கஸீமா புகையிரதத்தைத் தவிர. பேராதனைச் சந்தியிலிருந்து ரயில் புறப்பட்டதும் கஸீமாவைக் குளிர் தாக்கத் தொடங்கியது.

தயாராகக் கொண்டு வந்த கம்பளி ஆடையை அணிவித்து ஆசன மூலையில் சாய்ந்து கொள்ளுமாறு செய்வித்தான் பாஸிர் ஜன்னல்களையெல்லாம் மூடிவிட்டு குளிரின் வேகம் போகப் போக அதிகரிக்க கஸீமா சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

மகன் பாஸிர் இப்படிப்பட்ட எடத்திலேயா நீ கலியாணம் செஞ்சி கொள்ளப் போற. எனக்கு இப்படிப்பட்ட எடம் சரிவராதப்பா. அது ரெண்டு மூணு நாளையால் பழகிப் போயிடும்மா. என்னா இருந்தாலும் சரிதான் பெண்ணு நம்மளோட மல்வானையிலேயே இருக்கணும்.

எப்படியோ அதிகாலை 4.30 மணிக்கு நானுஓயா புகையிரத நிலையத்தில் வந்து இறங்கினார்கள் தாயும் மகனும். கஸீமாவுக்கு நடுக்கம் ஏற்படத் தொடங்கியது. இப்படியெல்லாம் இந்த ஊரில் இருக்குமென்று தெரிஞ்சிருந்தா நான் வந்திருக்கவேமாட்டேன் பாஸிர் என்று உதடுகள் நடு நடுங்கக் கூறினாள் கஸீமா.

அங்கிருந்த வாங்கு ஒன்றில் அமர்ந்து கொண்டார்கள் இருவரும். இனி எங்கேயப்பா போவணும். நுவரெலியா நகருக்கு இன்னும் ஆறு கிலோ மீற்றர் போக வேணுமும்மா. இப்போ வந்தது பற்றி செல்போனில் சொன்னால் காருடன் வருவார். எதுக்கும் கொஞ்சம் பொறுப்போம் உம்மா. இவ்வளவு தூரம் வந்திட்டோம். இப்போ நான் செல்போன் பண்றன். உம்மா இன்னும் எட்டு ஏழு நிமிஷங்களுக்குள் வந்திடுவாராம். அதற்கிடையில் நான் அவசரமாக பாத்றூம் போக வேண்டி இருக்கும்மா. இதோ வந்திடுறேன் என்று சென்றான் பாஸிர்.

பாத்றூம் போனவன் எட்டு நிமிடங்களுக்குப் பின்னரே வந்தான் பாஸிர். இன்னும் ஒத்தரும் வந்து என்னைக் கேட்கலையா உம்மா. ஏன் வரலை. என் முன்னதாலே வந்து என் முகத்தைக் கண்டதும் அவன்ட மொகம மாறியே போயிற்று. என்னம்மா மரியாதை இல்லாம பேசறீங்க.

அவனுக்கென்ன மரியாதை. இப்போ சொல் அவன் பெயர் நிஸ்பர்தானே. ஆமா. ஒங்களுக்கு நான் இதுவரை சொல்லவே இல்லையே உம்மா. எப்போதும் நீண்ட வெள்ளை நிற சட்டைதானே அவன் போடுவான். ஒங்களுக்கு இதெல்லாம் எப்படிம்மா தெரியும். அதுதானே என்னைக் கண்டதும் உடனே வந்த வழியைப் பார்த்து போயிட்டான்.

ஒங்க பேச்சு எனக்கு ஒண்ணுமே புரியலையே உம்மா. இப்படி உட்கார் பாஸிர். நீ என்னிடம் இரண்டொரு தடவை கேட்டிருக்கியே என்ட வாப்பா யாரும்மா என்று இப்போதான் நான் சொல்லப் போறேன். இப்போ வந்திட்டுப் போனானே நய வஞ்சகன். அவன்தான்டா உன்ட வாப்பா.

இவரா என் வாப்பா. இவ்வளவு நாளும் சேர் என்றும் பொஸ் என்றும் சொல்லிச் சொல்லிப் பழகிய இவர் என் வாப்பாவா. இது என்ன சங்கடமான நிலைம்மா. எப்படிம்மா உங்களுக்கும் அவருக்கும் தொடர்பு ஏற்பட்டிச்சி. எப்புடி என்னப் பெத்தீங்க.

சொல்றேன் பொறுமையாய் இருந்து கேள் மகன் என்று நிஸ்பர் மல்வானைக்கு வந்து கஸீமாவுடன் நெருங்கிப் பழகி நம்ப வைத்து ஊரையும் மாற்றிச் சொல்லிச் சென்ற பாதகன் வரை சொன்னாள் கஸீமா.

என்னம்மா உங்கட வாழ்க்கை உங்கட பொறுமை தியாகம் எந்தப் பெண்ணுக்கும் வராதும்மா. வரவும் கூடாதும்மா. சந்தோஷமா நீங்க இல்லற வாழ்வு வாழவே இல்லையே உம்மா. இவ்வளவு காலமாக அதை இழந்திட்டீங்களே உம்மா.

அது மட்டுமா உம்மா வேறு ஒருத்திக்கு அவன் மூலம் பொறந்த பொண்ணுக்கு என்னைக் கலியாணம் செய்யவும் பாத்திட்டானேம்மா அந்த நய வஞ்சகன். இப்போ நம்மாலே எதுவும் செய்ய ஏலாதம்மா. அல்லாஹ்தான் ஏதோ ஒரு வகையில் தண்டனையைக் கொடுக்கணும்.

நல்லது மகன். நமக்கு அவன் எப்புடி எழுதியிருக்கானோ அதன்படியே நடக்கட்டும். இப்போ நாம் வந்த திசையில் திரும்புவோம் என்று கொழும்பு செல்லும் புகையிரதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள் கஸீமாவும் பாஸிரும்.

## விஜயுடன் பிரச்சினை இல்லை

எனக்கும் விஜய்க்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் என தயாரிப்பாளரும், மக்கள் தொடர்பாளருமான பி.டி.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

'சர்கார்' இசை வெளியீட்டில் விஜய் பேசியதில் இருந்து, அவரைப் பற்றிய அரசியல் விவாதங்கள் தொலைக்காட்சிகளில் இடம்பெற்றன. இதில் பலரும் கலந்து கொண்டு விஜய் பற்றிய தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்தனர். இதில், விஜய்யின் மக்கள் தொடர்பாளராகப் பணிபுரிந்த பி.டி.செல்வகுமாரும் கலந்துகொண்டு, தன்னுடைய கருத்துகளைக் கூறினார். 'புலி' படத்தின் தயாரிப்பாளர்களுள் ஒருவர் பி.டி.செல்வகுமார் என்பது நினைவுகூரத்தக்கது.

இந்நிலையில், பி.டி.செல்வகுமார் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சியில் பேசும்போது, விஜய் தான் எப்போதுமே நம்பர் 1. ரஜினி மற்றும் அஜித் எல்லாம் நம்பர் 2 தான் என்று பேசினார். இது தொடர்பாக சமூக வலைதளங்களில் பெரும் சர்ச்சை உருவானது.

எனவே, அகில இந்திய விஜய் மக்கள் இயக்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், முன்னாள் மக்கள் தொடர்பாளராக நீண்டகாலம் நல்ல விதமாகப் பணிபுரிந்தவர், தற்போது வேறு சில காரணங்களால் அப்பணியில் விஜய்யுடன் இல்லை என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர கடமைப்பட்டுள்ளேன். மேலும், அவர், நமது மக்கள் இயக்கத்தில் யாதொரு பொறுப்பையும் இதுநாள் வரை வகிக்கவில்லை.

இருப்பினும், விஜய் பெயரைப் பயன்படுத்தி ஒரு சிலர், அவர்களது சொந்தக் கருத்தை, விஜய் கருத்தைப் போல் ஊடகங்களில் வெளியிடுவதை விஜய் ஏற்கவில்லை என்பதை இதன்மூலம் உறுதிப்படுத்த விரும்புகிறோம்.

அத்துடன், விஜய் எந்தக் காலகட்டத்திலும், எச்சூழலிலும், சக நடிகர்களையோ, பொது மனிதர்களையோ, இழிவாக, தரம் தாழ்ந்தோ, ஒப்பிட்டுப் பேசியதில்லை. அப்படி யாரையும் பேசச்சொல்லி யாருக்கும் விஜய் அதிகாரம் அளிக்கவில்லை என்பதை இந்நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

ஆகவே, விஜய் குறித்த தகவல்களை ஊடகங்களில் பேசுவது, விவாதிப்பது, பங்கேற்று கருத்து கூறுவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துவோரின் கருத்துகளை யாரும் நம்பவேண்டாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த அறிக்கைக்குப் பதில் அளித்துள்ளார் பி.டி.செல்வகுமார்.

விஜய்க்கும், அவருடைய அப்பாவுக்கும் நான் 25 வருடங்களுக்கு மேலாக நம்பிக்கையுள்ள மனிதராக, மக்கள் தொடர்பாளராக, அவர்களின் குடும்பத்தில் ஒருவராக இருந்து வந்தேன். பேட்டி கொடுப்பது என்னுடைய தனிப்பட்ட விருப்பம். விஜய்யின் பெயரைப் பயன்படுத்தி யாருடைய மனதையும் புண்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் நான் பேட்டி கொடுக்கவில்லை. என்னுடைய தனிப்பட்ட கருத்தைத்தான் நான் பதிவு செய்திருந்தேன்.

இதனை சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொண்டு, சிலர் எங்களுக்குள் பிரிவினையை ஏற்படுத்த முயற்சி செய்யும் செயலாகத்தான் எனக்குத் தெரிகிறது. நான் எந்தளவிற்கு உண்மையானவர் என்பது விஜய்க்கும் தெரியும். அவருடைய குடும்பத்தாருக்கும் தெரியும். என்மீது நம்பிக்கை இருந்ததால்தான், எனக்கு 'புலி' படத்தைத் தயாரிக்கும் வாய்ப்பைக் கொடுத்தார்.

நான் விஜய்க்கு மக்கள் தொடர்பாளராக மட்டுமில்லாமல், ரசிகனாகவும் இருந்து வந்தேன். தற்போதும் அப்படித்தான் இருந்து வருகிறேன். இளையராஜாவின் ராயல்டி தொகைக்கு எதிராகக் குரல் கொடுப்பது, ஒரு தயாரிப்பாளராக சக தயாரிப்பாளர்களுக்கு நல்லது நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான். விஜய்யின் 'ஆதி', 'தலைவா', 'காவலன்', 'மெர்சல்' போன்ற படங்களின் பிரச்சனைகளின்போதும் அவருடன் இருந்துள்ளேன். தமிழ் சினிமா வரலாற்றிலேயே முதல் முறையாக 100 கோடி ரூபாய்க்கு அதிகமாக விற்பனையான படம் என்றால், அது 'புலி' படம் தான். 'காவலன்'' பட ரிலீஸின்போது ஆளுங்கட்சியாக இருந்த திமுக பிரச்சினை செய்தபோது கூட, நான் 50 லட்சம் கடன் வாங்கி அந்தப் படத்தை ரிலீஸ் செய்தேன். இது அனைவருக்குமே தெரிந்த உண்மை.

அவர் மீது அன்பும் மரியாதையும் இருப்பதால்தான், என்னால் உண்மையான உழைப்பைக் கொடுக்க முடிந்தது. 'புலி' படத்தின் போது ஐடி ரைடு வந்தபோதும் கூட அவருக்குத் துணையாக இருந்தேன். தற்போது விஜய்க்கு பி.ஆர்.ஓ-வாக இல்லை என்றாலும், அவருடன் நல்ல குடும்ப நண்பராகத்தான் இருந்து வருகிறேன். மேலும், விஜய்யின் பெயரைப் பயன்படுத்தி தன்னை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. தற்போதும் நான் பல படங்களுக்கு பி.ஆர்.ஓ-வாகப் பணியாற்றி வருகிறேன். சமீபத்தில் வெளியான விஷாலின் 'இரும்புத்திரை' படம் பிரச்சினைகளைச் சந்தித்தபோது, அதனைத் தீர்த்து மிகப்பெரிய வெற்றிப் படமாக அமையச் செய்தேன். இன்றுவரை நான் விஜய்க்கும், விஜய் குடும்பத்துக்கும் உண்மையான விசுவாசம் உள்ள மனிதராகத்தான் இருந்து வருகிறேன். எனக்கும் விஜய்க்கும் இடையே பிரிவினையை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். இறுதியில் உண்மை வெளிச்சத்துக்கு வரும் என பி.டி.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.




## த்ரிஷா என்னைக் கிள்ளினார்

த்ரிஷா என் கன்னத்தைக் கிள்ளிவிட்டு சென்றுவிட்டார் என துருவ் விக்ரம் தெரிவித்தார்.

தெலுங்கில் விஜய் தேவரகொண்டா நடிப்பில் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்ற படம் 'அர்ஜுன் ரெட்டி'. இப்படம் 'வர்மா' என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்யப்பட்டுள்ளது. பாலா இயக்கியுள்ள இந்தப் படத்தில், விக்ரமின் மகன் துருவ் விக்ரம் ஹீரோவாக அறிமுகமாகிறார்.

'வர்மா' படத்தில் மேகா என்ற மாடல், துருவ் விக்ரம் ஜோடியாக நடித்துள்ளார். ஏற்கெனவே ஒரு பெங்காலிப் படத்தில் நடித்திருக்கும் மேகா, 'வர்மா' மூலம் தமிழில் அறிமுகமாகிறார். பாலாவின் 'பி ஸ்டுடியோஸ்' இந்தப் படத்தை வழங்க, இ4 என்டெர்டெயின்மென்ட்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் படத்துக்கு 'குக்கூ', 'ஜோக்கர்' படங்களின் இயக்குநர் ராஜு முருகன் வசனம் எழுதியுள்ளார்.

ஒட்டுமொத்தப் படப்பிடிப்பும் முடிவடைந்து, இறுதிக்கட்டப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. டிசம்பர் வெளியீடாகத் திரைக்கு வரும் என்று அறிவித்தது படக்குழு.

தற்போது, இப்படத்தின் தமிழக விநியோக உரிமையைக் கைப்பற்றியுள்ள சக்திவேலன், 'பிப்ரவரியில் வெளியாகும்' என்று அறிவித்துள்ளார்.

இந்நிலையில், 'எந்த நடிகையோடு நடிக்க ஆசை?'என துருவ் விக்ரமிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அவர், சிறுவயதில் இருந்தே த்ரிஷாவை ரொம்பப் பிடிக்கும். ஆனால், இதுவரை அவரைச் சந்தித்தது கூட இல்லை.

ஒருமுறை ப்ரிவியூ தியேட்டரில் இருந்தபோது நான் தூங்கிவிட்டேன். அப்போது அவர் வந்து என் கன்னத்தைக் கிள்ளிவிட்டு சென்றுவிட்டார் எனத் தெரிவித்தார்.

## சரண் இயக்கத்தில் ஆரவ்

அஜித் நடிப்பில் 'காதல் மன்னன்', 'அமர்க்களம்' படங்களை இயக்கிய சரண், தற்போது ஆரவ்வை ஹீரோவாக வைத்து ஒரு படத்தை இயக்குகிறார்.

மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'ஒ காதல் கண்மணி' படத்தில், துல்கர் சல்மானுடன் பணியாற்றுபவராக மிகச்சிறிய வேடத்தில் நடித்தவர் ஆரவ். அதன்பிறகு 'சைத்தான்' படத்தில் முகம் தெரிகிற வேடத்தில் நடித்தார். 'ஒரு கப் காஃபி' என்ற குறும்படத்திலும் நடித்துள்ளார்.

2017-ம் ஆண்டு விஜய் டிவியில் ஒளிபரப்பான 'பிக் பாஸ்' ரியாலிட்டி ஷோவில் கலந்து கொண்டதன் மூலம், மிகப்பெரிய அளவில் பாப்புலாரிட்டி கிடைத்தது. அதுவும் ஆரவ் - ஒவியா காதல், இன்றளவும் பேசப்படும் ஒரு விஷயமாக இருக்கிறது.

அந்த நிகழ்ச்சியில் வெற்றிபெற்று, டைட்டிலை தட்டிச் சென்றதும் ஆரவ் தான். 'பிக் பாஸ்' நிகழ்ச்சிக்குப் பிறகு பல படங்களில் அவர் ஹீரோவாக நடிப்பார், மிகப்பெரிய உயரத்துக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்போது 'ராஜ பீமா' என்ற ஒரு படத்தில் மட்டுமே நடித்து வருகிறார் ஆரவ். நரேஷ் சம்பத் என்பவர் இந்தப் படத்தை இயக்குகிறார். சதீஷ்குமார் ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, சைமன் கே கிங் இசையமைக்கிறார்.

'மார்க்கெட் ராஜா எம்பிபிஎஸ்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ள இந்தப் படம், கிட்டத்தட்ட 'வசூல் ராஜா எம்பிபிஎஸ்' போன்று இருக்கும் என்கிறார்கள். சுரபி ஃபிலிம்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில், ஆரவ் ஜோடியாக காவ்யா தாபர் நடிக்கிறார். மேலும், ராதிகா சரத்குமார், யோகி பாபு, நாசர் ஆகியோர் முக்கியக் கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.



## மக்கள் ஆதர



2018-ம் ஆண்
இருந்தது. இந்த வரு
இதுகுறித்து சிவ
அதில் அவர் பே
கடந்த 2018-ம்
இவை அனைத்திற்கு
நம்பிக்கையைக் கொ



மணிரத்னம் இயக்கவுள்ள 'பொன்னியின் செல்வன்' படத்தில், அமிதாப் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

மணிரத்னம் இயக்கத்தில் கடைசியாக வெளியான படம் 'செக்கச்சிவந்த வானம்'. வசூல் ரீதியாக மட்டுமின்றி, விமர்சன ரீதியாகவும் இந்தப் படத்துக்கு வரவேற்பு கிடைத்தது. அரவிந்த் சாமி, விஜய் சேதுபதி, ஜோதிகா, சிம்பு, அருண் விஜய், ஐஸ்வர்யா ராஜேஷ், அதிதி ராவ், டயானா எரப்பா, பிரகாஷ் ராஜ் ஆகியோர் நடித்தனர்.

இந்நிலையில், தன்னுடைய நீண்ட நாள் கனவுப்படமான 'பொன்னியின் செல்வன்' கதையைக் கையில் எடுத்திருக்கிறார் மணிரத்னம். கடந்த முறை விஜய், மகேஷ் பாபு என மிகப்பெரிய நடிகர்களை வைத்து படத்தைத் தொடங்க முயற்சித்தார். ஆனால், பட்ஜெட் ஒத்து வராததால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

தற்போது, விக்ரம், சிம்பு மற்றும் ஜெயம் ரவியை வைத்து மறுபடியும்'பொன்னியின் செல்வன்' படத்தை எடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிக்கிறார் மணிரத்னம். ஜெயம் ரவி அல்லது விஜய் தேவரகொண்டா என்ற ஆப்ஷனையும் வைத்திருக்கிறார் மணிரத்னம்.

இந்தப் படத்தில், அமிதாப் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராயும் நடிக்கலாம் என்கிறார்கள். இருவரிடமும் கதை சொல்லிவிட்டாராம் மணிரத்னம். விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகலாம் என்கிறார்கள்.

மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'இருவர்', 'குரு' மற்றும் 'ராவணன்' ஆகிய படங்களில் ஏற்கெனவே ஐஸ்வர்யா ராய் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஜினி படம் கிடைத்தால் மகிழ்ச்சி



முன்னணி இசையமைப்பாளரான ஹாரிஸ் ஜெயராஜின் இசையில் இந்த ஆண்டில் முதல் படமாக வெளிவரவுள்ளது 'தேவ்'. உலகத்தரம் வாய்ந்த அவரது 'ஸ்டுடியோ ஹெச்'சில் மும்முரமாகப் பணிபுரிந்து கொண்டிருந்தவரிடம் பேசியதிலிருந்து...

**2018-ல் உங்களுடைய இசையில் படம் வெளியாகவில்லை. ஏன்?**

அதற்கு நான் காரணமல்ல. பிரபுதேவா இயக்கத்தில் விஷால், கார்த்தி நடிப்பில் உருவான 'கருப்பு ராஜா வெள்ளை ராஜா' படத்துக்கு சுமார் 6 மாதங்கள் பணிபுரிந்தேன். அப்படம் ட்ராப்பாகிவிட்டது. 'துருவ நட்சத்திரம்' வெளிவருவதாக இருந்தது. அதுவும் வெளிவரவில்லை. 'தேவ்' படமும் 2018 செப்டம்பரில் வெளிவரத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனாலும் இப்போதுதான் தயாராகியுள்ளது. என் பணிகளை நான் செய்துகொண்டே இருந்தேன். 2019-ல் நிறையப் படங்கள் வரும்.

**'தேவ்' பாடல்கள் குறித்து...**

எப்போதுமே இளமை ததும்பும் படங்களுக்கு இசையமைப்பது எனக்குப் பிடிக்கும். அந்த வகையில் 'வாரணம் ஆயிரம்'படத்துக்குப் பிறகு அந்த பாணியில் அமைந்த படம் 'தேவ்'. மொத்தம் 5 பாடல்கள் என்றாலும் 15 பாடகர்கள் பாடியுள்ளனர். அனைவரது வார்த்தை உச்சரிப்புமே மாறுபடும். அந்த வகையில் ஒவ்வொருவரையும் பாடவைத்து, எந்த வரி யாருடைய உச்சரிப்பில் அழகாக இருக்கிறதோ அவற்றை எல்லாம் இணைத்துப் பாடலாக்கியுள்ளேன். பாடல்கள் உருவாக்கத்திற்கு வெளிநாடு செல்வார் என்ற பெயர் எனக்கு உண்டு.

டியூன் உருவாக்கத்தின்போது எந்தத் தொந்தரவும் இருக்கக் கூடாது என நினைப்பேன் எனவே, வெளிநாடு செல்லத் தோன்றும். நல்ல அமைதியான சூழலில்தான் நல்ல ட்யூன்கள் கிடைக்கும். இயக்குநருடன் சென்று டியூன்களை உருவாக்கும்போது, இருவருமே கதை, காட்சியமைப்புகள் குறித்து முழுமையாகப் பேசி இறுதி செய்ய முடிகிறது. ஆனால், இப்படத்தின் பாடல்கள் கொடைக்கானலில்தான் உருவாயின.

**நீங்கள் மிக்ஸிங்கிற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்களாமே. ஏன்?**

சிற்பி, ஆதித்யன் உள்ளிட்ட பல இசையமைப்பாளர்களிடம் பணிபுரிந்துள்ளேன். அவர்கள் அனைவருமே டியூனை இறுதிசெய்து கொடுத்துவிடுவார்கள். அதைப் பாடலாக உருவாக்கும் பணி என்னுடையது. சுமார் 600-க்கும் மேற்பட்ட படங்களில் கீபோர்டு பிளேயராக வேலை செய்துள்ளேன். முன்பெல்லாம் பாடகர்களின் குரல்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து, இசைக் கருவிகளுடைய முக்கியத்துவத்தைக் குறைப்பார்கள். சில பாடல்களில் மிக்ஸிங் சரியாகவே இருக்காது. அப்படியொரு இரைச்சல் இருக்கும்.

அப்போது என்னென்ன தவறுகள் நடந்ததோ, அதெல்லாம் நாம் பண்ணக் கூடாது என முடிவு பண்ணினேன், இப்போது பாடல்களை உருவாக்குவதில் தொடங்கி, அதை மிக்ஸிங் செய்து, இறுதி செய்வதுவரை அனைத்தையும் நானே செய்கிறேன். அப்படிச் செய்வதால் முழுமையான திருப்தி கிடைக்கிறது. மேலும், வெளிநாடுகளில் சில திரையரங்குகள் மற்றும் ஸ்டுடியோக்களில் இசையின் துல்லியத்தைக் கணக்கிட என்னோட பாடல்களைப் போட்டு இறுதி செய்கிறார்கள். இதன் வீடியோக்கள் இணையத்திலேயே இருக்கின்றன. ஒரு படம் பாக்ஸ் ஆபீஸ் ஹிட் ஆகாமல் போகலாம். ஆனால், இசை அப்படியல்ல. பெயரே தெரியாத படத்தின் பாடல்கூட நம் நினைவில் நிற்கும்.

**இசையமைப்பாளர்களின் ராயல்டி குறித்து உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

உலக அளவில் மிகவும் போற்றப்படும் இசையமைப்பாளர் மொசார்ட். அவர் அரண்மனையில் பணிபுரிந்து வந்தார். அப்போது அரசாங்கம் சொல்லும் விஷயங்களுக்காக மட்டுமே இசையமைத்து வந்தார். அதற்கு அரண்மனை முழுச் செலவையும் செய்து வந்தது. இன்று இசையுலகில் மொசார்ட்டைத் தான் பல இசையமைப்பாளர்கள் கொண்டாடுவார்கள். அரண்மனை செலவு செய்து மொசார்ட் உருவாக்கிய இசைக்கு இப்போதும் ராயல்டி செல்கிறது. எங்கு தெரியுமா? அரண்மனைக்கு அல்ல. மொசார்ட் அருங்காட்சியத்துக்குச் செல்கிறது. இதுதான் என் நிலைப்பாடு.

ரஜினி - ஏ.ஆர்.முருகதாஸ் இணையும் படத்துக்கு நீங்கள்தான் இசையமைக்கிறீர்களா?

ரஜினி சாருடைய படத்துக்கு மட்டும் இன்னும் பணிபுரியவில்லை. அப்படியொரு விஷயம் நடந்தால் மகிழ்ச்சி தான். இதுவரை எதுவும் முடிவாகவில்லை. அவருடைய படத்துக்கு இசையமைக்க வேண்டும் என்ற ஏக்கமுள்ளது. ஆனால், உதவியாளராக இருந்தபோது பல ரஜினி சாருடைய படங்களுக்கு கீபோர்டு வாசித்துள்ளேன்.

**கார், வாட்ச், ஷூ என உங்களிடம் இருக்கும் அனைத்துமே விலையுர்ந்ததுதான் என்று சொல்கிறார்களே, அப்படியா?**

நான் அடிமட்ட குடும்பத்திலிருந்து வந்தவன். 10-வது வரை தான் படித்தேன். அதற்குப் பிறகு கீபோர்டு பிளேயரானேன். சிறுவயதிலேயே இசையமைப்பாளராகும் வாய்ப்பு வந்தது. அப்போது கொஞ்சம் கடன் இருந்தது. அதெல்லாம் அடைத்துவிட்டு தான் இசையமைப்பாளராக வேண்டும் என முடிவு பண்ணினேன். நான் கீபோர்டு பிளேயராக இருந்தபோது, பல முன்னணி இசையமைப்பாளர்கள் விலையுர்ந்த கார்களில் வருவதைப் பார்த்துள்ளேன்.

அப்போது, நாமும் இப்படி ஆக வேண்டும் என நினைத்தேன். கோட் போட்டுக் கொண்டு சொகுசு வாழ்க்கை வாழக் கூச்சப்படக் கூடாது என முடிவு செய்தேன். வசதி வந்தவுடன் வாழ்க்கை முறையை மாற்றினேன். விலையுர்ந்த கார் வைத்துக்கொண்டு நான் பார்ட்டிகள், பப்புகளுக்குச் செல்வதில்லை. ஞாயிற்றுக்கிழமை மட்டும் சர்ச்சுக்குச் செல்வேன். என்னை மாதிரியாக வேண்டும் என இளைஞர்களுக்கு உந்துதலாக இருக்க வேண்டும் என நினைக்கிறேன்.



# வுக்கு சிவகார்த்தியேன் நெகிழ்ச்சி

டில் நிறைய முயற்சிகள் மேற்கொண்டதற்கு மக்களாகிய உங்களின் ஆதரவு ரொம்பவே ஊக்கப்படுத்துவதாக
டமும் இது தொடரவேண்டும் என நடிகர் சிவகார்த்திகேயன் நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.
கார்த்திகேயன் தனது ட்விட்டர் பக்கத்தில் வீடியோ ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.
சியிருப்பதாவது:
வருடத்தில் ஒரு நடிகராக, பாடலாசிரியராக, தயாரிப்பாளராக என்று பல முயற்சிகள் செய்திருந்தேன்.
ும் உங்களின் வரவேற்பு நன்றாகவே இருந்தது. இந்த வரவேற்புதான் நம்பிக்கையைக் கொடுக்கிறது. இந்த
ஆண்டுதான், நல்ல நல்ல முயற்சிகளைச் செய்யத் தூண்டுகிறது. 'கனா' படத்தின் 'வாயாடி பெத்த புள்ள' பாட
லுக்கு நீங்கள் எல்லோரும் கொடுத்த வரவேற்பும் பாராட்டும் ஆசீர்வாதமும் மறக்கவே முடியாதது. மகள்
ஆராதனா பாடிய முதல் பாடல் இது. நம்பிக்கையை மட்டுமே மூலதனமாகக் கொண்டு நண்பர்கள் அனை
வரும் சேர்ந்து உருவாக்கிய 'கனா' படத்தைக் கொண்டாடி விட்டீர்கள். உங்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த உற்சாகத்துடன் இன்னும் பல நல்ல விஷயங்களைச் செய்யவேண்டும் என்கிற முனைப்பு ஏற்பட்டி
ருக்கிறது. ஆதரவளித்த பத்திரிகையாளர்கள், ஊடக நண்பர்கள், பொதுமக்கள் எல்லோருக்கும் இனிய புத்
தாண்டு வாழ்த்துகள்.


இந்த வருடமும் நிறைய படங்களில் நடிக்கிறேன். மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இருக்கிறேன்.
ம்.ராஜேஷ் இயக்கத்தில் நடிக்கும் படத்தின் பர்ஸ்ட் லுக், இந்த மாதத்தில் வரவிருக்கிறது.


தொடர்ந்து உங்கள் ஆதரவு வேண்டும். இவ்வாறு சிவகார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.



ஆபாச படங்களில் நடித்து வந்த சன்னி லியோன் தற்போது திரைப்படங்களில் கவர்ச்சி நடிகையாக நடித்து வருகிறார். ஆரம்ப கட்டத்தில் அவர் திரைப்படத்தில் நடிக்க வருவதற்கு ஒரு சில ஹீரோயின்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். பின்னர் அந்த எதிர்ப்பு மங்கிப்போனது. இந்தி தவிர தமிழ் படத்திலும் சன்னி நடித்து வருகிறார்.

சன்னி லியோனுக்கு கேரளாவில்தான் ரசிகர்கள் அதிகம். கடந்த ஆண்டு அவர் கேரளா வந்தபோது அவரை பார்ப்பதற்கு ஆயிரக்கணக்கில் ரசிகர்கள் திரண்டனர். அதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப்போனார் சன்னி. ரசிகர்களின் திருப்திக்காக மலையாள படத்தில் விரைவில் நடிப்பேன் என்று கூறியிருந்தார். அதன்படி தற்போது சந்தோஷ் நாயர் இயக்கும் மலையாள படமொன்றில் நடிக்க ஒப்புக் கொண்டிருக்கிறார். இதில் பஹத் பாசில் ஹீரோவாக நடிக்கிறார். ரசிகர்களுக்கு புத்தாண்டு கொண்டாட்டமாக சன்னி லியோன் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், அழகான உடை உடுத்தி குத்தாட்டம் போட்டு ஆச்சர்யத்தை தந்திருக்கிறார்.





# வில்லனான பாரதிராஜா

'ராக்கி' படத்தில் வில்லனாக நடிக்கிறார் இயக்குநர் பாரதிராஜா.

ராம் இயக்கத்தில் வெளியான 'தரமணி' படத்தில் ஹீரோவாக அறிமுகமானவர் வஸந்த் ரவி. இந்தப் படத்தின் பிரதான பாத்திரத்தில் ஆண்ட்ரியாவும், முக்கியக் கதாபாத்திரத்தில் அஞ்சலியும் நடித்தனர். யுவன் சங்கர் ராஜா நடித்த இந்தப் படம், 2017-ம் ஆண்டு ரிலீஸானது.

'தரமணி' படத்தைத் தொடர்ந்து வஸந்த் ரவி ஹீரோவாக நடிக்கும் படம் 'ராக்கி'. கதை, திரைக்கதை, வசனம் எழுதி இந்தப் படத்தை இயக்குகிறார் அருண் மாதேஸ்வரன். ஸ்ரேயாஸ் கிருஷ்ணா ஒளிப்பதிவு செய்யும் இந்தப் படத்துக்கு, தர்புகா சிவா இசையமைக்கிறார்.

இந்தப் படத்தில் இயக்குநர் பாரதிராஜா முக்கியக் கதாபாத்திரத்தில் நடிக்கிறா. அதுவும் வில்லனாக நடிக்கிறார் என்கிறார்கள்.

அவர் தற்போது வில்லன் கதாபாத்திரம் ஏற்றிருப்பதால், இந்தப் படத்துக்கு இப்போதே எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.



# உண்மை சம்பவ கதையில் அமலாபால்

ஹீரோயினுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதைகளில் நயன்தாரா போல் நடிக்க ஆரம்பித்துள்ளார் அமலாபால். அதோ அந்த பறவை போல, ஆடை படங்களை தொடர்ந்து அவர் நடிக்கும் மற்றொரு படத்திலும் முக்கிய வேடம் ஏற்றுள்ளார். இந்த படத்தில் தடயவியல் அறுவை சிகிச்சை நிபுணராக அவர் நடிக்கிறார். இந்த படத்துக்கு அபிலாஷ் பிள்ளை கதை எழுதியுள்ளார். அனூப் பணிக்கர் இயக்குகிறார். படம் குறித்து அனூப் பணிக்கர் கூறும்போது, இது புலனாய்வு திரில்லர் கதையாக உருவாகியுள்ளது.

ஒரு மர்மமான வழக்கை தீர்க்க, அமலாபால் கையாளும் தனித்துவமான வழிமுறைகள்தான் படம். கேரள முன்னாள் காவல் துறை மருத்துவர் உமாதத்தன் கையாண்ட ஒரு வழக்கை அடிப்படையாகக் கொண்டு இந்த படத்தின் கதை உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 6 மாதமாக அவரை அவ்வப்போது சந்தித்தும் தடய அறுவை சிகிச்சை மருத்துவம் பற்றி தெரிந்துகொள்ள பல்வேறு மருத்துவ கல்லூரிகளுக்கு சென்றும் ஆலோசனைகள் பெற்று திரைக்கதையை எழுதியுள்ளேன். மார்ச்சில் ஷூட்டிங் தொடங்குகிறது என்றார்.





# மீண்டும் நடிப்பா? சுவாதி பதில்

தனது நீண்ட நாள் காதலனும், பைலட்டுமான விகாஷ் வாசு என்பவரை கடந்த ஆண்டு திடீரென்று திருமணம் செய்துகொண்டார், சுப்ரமணியபுரம் சுவாதி. பிறகு சினிமாவுக்கு முழுக்கு போட்டுவிட்டு இந்தோனேஷியாவில் குடியேறிய அவர், சமீபத்தில் அளித்துள்ள பேட்டி: சில வருடங்களுக்கு முன் வெளியான வீடியோவில், ஒரு பெண்ணுக்கு என்னைப்போல் ஒரு பல் மீது இன்னொரு பல் இருந்தது. அதைப் பார்த்தவர்கள், நான்தான் அந்த பெண் என்று நினைத்து சர்ச்சை எழுப்பினார்கள். என்னை தரக்குறைவாக விமர்சிப்பதை பொறுத்துக் கொள்ள மாட்டேன்.

அப்படி பேசியவர்களுக்கு பதிலடி கொடுத்தேன். அப்போது என் நடுவிரலில் வரைந்திருந்த டாட்டூவை, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு எச்சரிக்கையாகவும் காட்டினேன். இப்போது அதை பார்க்கும்போது, பழைய விஷயத்தை நினைத்து வாழ வேண்டாம். இப்போதுள்ள வாழ்க்கையை கவனி என்ற எண்ணம் மேலோங்கியது. தற்போது இன்னொரு டாட்டூ வரைந்துள்ளேன். அது என் கணவருக்காக நான் வரைந்திருக்கிறேன். மீண்டும் நடிக்க வரும் எண்ணமில்லை. வாய்ப்பு வந்தால் பார்க்கலாம்.



# அசுரன் பாதி;குருபாதி

அசுரன் பாதி குரு பாதிங்கிறதுதான் படத்தோட கான்செப்ட். அதை நிஜ சம்பவமும் கற்பனையும் கலந்து ஆக்ஷனோடு சொல்ற படமா அசுர குரு இருக்கும் என்கிறார் அறிமுக டைரக்டர் ராஜ்தீப்.

**முதல் பட வாய்ப்பு எப்படி கிடைச்சது?**

திருச்சி ஸ்ரீரங்கம்தான் சொந்த ஊர். டிகிரி முடிச்ச பிறகு சினிமா ஆசையால சென்னை தரமணி ஃபிலிம் இன்ஸ்டிடியூட்ல சேர்ந்தேன். 2011ல டைரக்ஷன் கோர்ஸ் முடிச்சேன். அப்போ கோர்ஸ் முடிச்சதுல கோல்டு மெடல் வாங்கினேன். அதோடு நான் எடுத்த ஷார்ட் ஃபிலிம், தமிழக அரசோட சிறந்த குறும்படத்துக்கான விருதும் எனக்கு வாங்கிக் கொடுத்துச்சு. அதுக்கும் சேர்த்து இன்னொரு கோல்டு மெடல் கிடைச்சது. அந்த சமயத்துல டைரக்டர் ராஜா சார் தன்னோட 'வேலாயுதம்' படத்துக்காக என்னை உதவியாளரா சேர்த்துக்கிட்டார். 'தனி ஒருவன்' படத்துலேயும் அவர் கூட ஒர்க் பண்ணினேன். அதுக்கு பிறகு தனியா படம் பண்றேன்னு சொல்லிட்டு வந்தேன். 2015ல் நான் எழுதிய கதை சில தயாரிப்பாளர்கள்கிட்ட சொன்னேன். கேட்ட எல்லோருமே நல்லா இருக்கு பண்ணலாம்னு சொன்னாங்க. ஆனா, அது உடனே டேக் ஆஃப் ஆகல. அது சயின்ஸ் ஃபிக்ஷன் கதை. பட்ஜெட் அதிகம்கிறதால தள்ளிப்போயிட்டே இருந்துச்சு. அதுக்கு இடையே நான் பண்ணின கதைதான் 'அசுர குரு'. இந்த கதையை தயாரிப்பாளர்கிட்ட சொன்னதும், கமர்ஷியலா ஒர்க் அவுட் ஆகுற மாதிரி இருக்கு. விக்ரம் பிரபுகிட்ட கதை சொல்ல சொன்னாங்க. அவருக்கும் கதை பிடிச்சிருந்துச்சு. 2017 அக்டோபர் மாசம் படம் ஆரம்பிச்சோம். கடந்த வருஷம் ஸ்டிரைக்னால படம் தாமதமாச்சு.

**அப்போ விக்ரம் பிரபுவுக்காக எழுதின கதை கிடையாதா இது?**

எந்த ஹீரோவையும் மனசுல வச்சு இந்த கதையை எழுதல. இது ஆக்ஷன் சப்ஜெக்ட். திரைக்கதையோட ஹாட் திரில்தான். படம் செம விறுவிறுப்பா போகும். இளம் ஆக்ஷன் ஹீரோ நடிக்கிற மாதிரியான கதைதான். அதனால விக்ரம் பிரபுகிட்ட கதை சொல்ல சொன்னப்போவே, கண்டிப்பா இந்த கேரக்டர்ல அவர் உட்காருவாருன்னு தெரிஞ்சு போச்சு. அவருக்கு கதை பிடிச்சுப்போனப்போ, பிறகுதான் கதையில லேசான சில மாற்றங்கள் பண்ணினேன்.

**என்ன மாற்றம்?**

விக்ரம் பிரபு உயரமான ஹீரோ. அதுக்கேற்ப சில காட்சிகள்ல சில நுணுக்கங்களை புகுத்த முடிஞ்சது. அதேபோல, அவர்கிட்ட இருக்கிற மேலும் பல பிளஸ் பாயின்ட்டுகளை அவரோட கேரக்டரை இன்னும் மெருகேற்ற பயன்படுத்திக்கிட்டேன்.

**ரயில் கூரையில துளை போட்டு கொள்ளையடிக்கப்பட்ட நிஜ சம்பவம்தான் கதையா?**

அந்தச் சம்பவம் நடந்தப்போதான் இந்த கதையை எழுதினேன். பேப்பர்ல அந்த செய்தியை படிச்சி அதிர்ச்சி அடைஞ்சவங்கள்லே நானும் ஒருத்தன். உடனே அந்த சம்பவத்தை இந்த கதையில ஒரு முக்கிய சம்பவமா கொண்டு வந்தேன். படத்துல முக்கிய காட்சியா அந்த கொள்ளை சம்பவம் இருக்கும். ஆனா அது கதை கிடையாது. படத்துலேயும் அஞ்சே முக்கால் கோடி பணம் கொள்ளைனு தான் காட்சி வச்சிருக்கேன்.

**டிரெய்லர் பார்க்கும்போது விக்ரம் பிரபுவைத்தான் கொள்ளையனா காட்டியிருக்கீங்க. படத்துல அவருக்கு நெகட்டிவ் ரோலா?**

விக்ரம் பிரபு கொள்ளையடிக்கிற மாதிரி காட்சி டிரெய்லர்ல வரும். படமும் அப்படித்தான் போகும். அந்த சம்பவத்துலேருந்து படம் ஆரம்பிச்சாலும் படத்தோட மெயின் தீம் வேற. 'ஆளவந்தான்' படத்துல ரெண்டு கமல் இருப்பாங்க. ஒருத்தர் நல்லவர், இன்னொருத்தர் கெட்டவர். இந்த ரெண்டு பேரும் சேர்ந்து ஒரே கேரக்டரா இருந்தால் எப்படி இருக்கும். அந்த கேரக்டர்தான் படத்துல விக்ரம் பிரபு. அசுரன் மாதிரியானவரும் அவர்தான். குரு போன்ற ஆசிரியரும் அவர்தான். சின்ன தப்பை மறைக்கும்போது பல பெரிய குற்றங்கள் வரை அது கொண்டு போய் சேர்க்கும். இந்த செய்திதான் படத்துல சொல்ல வருகிறேன்.

**மகிமா நம்பியாருக்கு என்ன ரோல்?**

வழக்கமான கமர்ஷியல் பட ஹீரோயினா அவங்களை பார்க்க முடியாது. இந்த ரோலும் அதுபோல கிடையாது. படத்துல அவங்க டிடெக்டிவ்வா வர்றாங்க. விக்ரம் பிரபுவை ஃபாலோ பண்ணி, அவரோட நிஜத்தை கண்டுபிடிக்கிற கேரக்டர். படம் முழுக்கவே வருவாங்க. கதையோட முக்கிய திருப்பமா இந்த கேரக்டரை பார்க்கலாம். அது மட்டும் இல்ல, இந்த கேரக்டருக்கு 5 முன்னணி ஹீரோயின்களை அப்ரோச் பண்ணினேன். கதை கேட்டுட்டு, இதுல ஹீரோயின் ரோலுக்கு இருந்த முக்கியத்துவம் காரணமா, அவங்க ரொம்பவே இம்பிரஸ் ஆனாங்க. ரெண்டு பேர் சில காரணங்களால நடிக்க முடியல. கால்ஷீட் பிரச்னையால மத்தவங்களால இந்த படத்துக்கு தேதி ஒதுக்க முடியாம போச்சு. இந்த வேடத்துல நயன்தாராவை கூட அப்ரோச் பண்ணியிருக்கலாம். அந்த அளவுக்கு ஹீரோயின் கேரக்டர் படத்துல பலமா இருக்கும்.

**காமெடிக்கும் படத்துலே தனி முக்கியத்துவம் கொடுத்திருக்கீங்க போல?**

ஆமாம். இந்த மாதிரி ஆக்ஷன் திரில்லர் படங்கள்ல காமெடிக்கு முக்கியத்துவம் தரமாட்டாங்க. ஆனா, கண்டிப்பா இதுல காமெடிக்கு முக்கியத்துவம் இருக்கணும்னு முடிவு பண்ணியே படத்துல ஹியூமர் காட்சிகளை வச்சிருக்கேன். ஆனா கதை பண்ணிட்டு, அதை திணிக்கல. கதையோடு சேர்ந்துதான் எல்லாமே வரும். யோகி பாபு மெயின் காமெடியன். அவர் தவிர, ஜெகன், குமரவேல், மனோபாலா ஆகியோரும் காமெடிக்கு இருக்காங்க. விக்ரம் பிரபு, கூரியர் கம்பெனியில ஒர்க் பண்றவரா நடிச்சிருக்கார். அந்த கம்பெனி மேனேஜரா மனோபாலா வருவார். குமரவேலுக்கு போலீஸ்காரர் வேடம். அவர் பேசுற வசனங்கள்ல நாட்டு நடப்போட உண்மைகளை காமெடி கலந்து சொல்ற மாதிரி இருக்கும். நாகிநீடு வில்லனா வர்றார். வடசென்னையில கடத்தல் தொழில் பண்றவரா அவரோட கேரக்டர் இருக்கும்.

**படத்துல சிஜி ஒர்க் அதிகம் இருக்கிறதால லேட் ஆகுதா?**

அப்படி கிடையாது. இன்னிக்கு பெரும்பாலான படங்கள்ல சிஜி தவிர்க்க முடியாத அங்கம் ஆயிடுச்சி. இந்த படத்துலேயும் அது இருக்கு. ரயில் கொள்ளை சம்பவம் உள்பட சில ஆக்ஷன் காட்சிகள்ல சிஜி இருக்கும். அதுக்காக படம் லேட்டாகல. நாங்க பிளான் பண்ணினபடிதான் முடிச்சிருக்கோம்.





# இரத்தம் கொடுப்பதும் எடுப்பதும் எளிதல்ல!

உயிர்காக்கும் இரத்தம் எடுப்பது, சேமிப்பது, பகுப்பாய்வு செய்வது எல்லாம் அவ்வளவு சுலபமானதா என்று கேட்டால் இல்லவே இல்லை என்று அடித்து சொல்கிறார்கள் சம்பந்தப்பட்ட துறையினர். அரசோ, தனியாரோ இரத்த பரிசோதனை நிலையம், இரத்த வங்கி தொடங்க அனுமதி பெறுவது கூட சாதாரண விஷயமல்ல. அதற்கு பல விதிமுறைகள், கட்டுப்பாடுகள் உள்ளன.

தகுதி பெற்ற மருத்துவர், செவிலியர், லேப் டெக்னிஷியன், நவீன ஆய்வு கருவிகள், பரிசோதனை கூடம், குளிர்சாதன வசதி உள்ளிட்ட பல வசதிகள் இருக்க வேண்டும். இந்த வசதிகள் அனைத்தும் இருந்தால் மட்டுமே விண்ணப்பிக்கவே முடியும். அந்த விண்ணப்பத்தின் அடிப்படையில் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு கழகம் நேரடியாக ஆய்வு செய்து திருப்தி ஏற்பட்டால் மருந்து கட்டுப்பாட்டு கழகத்துக்கு பரிந்துரைப்பார்கள்.

இதையடுத்து மருந்து கட்டுப்பாட்டு கழகம் சோதனையை தொடங்கும். அவர்களும் முழு திருப்தி அடைந்தால் மத்திய அரசுக்கு அனுப்புவார்கள். இதையடுத்து மத்திய அரசு துறையும் ஆய்வு மேற்கொண்டு அதன் பிறகே லைசென்சு வழங்கப்படும். அறையின் அளவு குறைந்தாலோ அல்லது ஏ.சி.யின் அளவு குறைந்தால்கூட அனுமதி கொடுக்க மாட்டார்கள். அந்த அளவு நுணுக்கமாகவும், கண்டிப்பாகவும் விதிமுறைகள் பின்பற்றப்படும்.

சரி, ஆய்வகம், இரத்த வங்கி தொடங்கியாச்சு. இஷ்டம் போல் இரத்தம் எடுத்துவிட முடியுமா? அதற்கும் கட்டுப்பாடுகள் அதிகம்! இரத்தம் கொடுப்பதால் எந்த ஆபத்தும் வராது. அப்படியிருந்தும் இரத்தம் கொடுக்க பலர் முன்வருவதில்லை. எனவே இரத்த தானம் செய்ய வருபவர்களை வரவேற்று எல்லோரிடமும் 350 மி.லி. இரத்தம் எடுத்து விடுவார்கள். இரத்தம் எடுக்கும்போது இரத்தத்தின் எச்.பி. அளவு மற்றும் இரத்ததானம் செய்பவரின் உடல் எடையை மட்டும் பார்த்து எடுப்பார்கள்.

பின்னர் அந்த இரத்தத்தின் மாதிரிகள் ஆய்வு கூடத்திற்கு கொண்டு சென்று அதில் எச்.ஐ.வி., மலேரியா, மஞ்சள் காமாலை, பால்வினை நோய், எச்.பி.வி. ஆகிய 5 நோய் தொற்றுக்கான அறிகுறி இருக்கிறதா? என்பது பகுப்பாய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். எதுவும் இல்லை என்று உறுதி செய்த பிறகு மருத்துவரின் ஒப்புதல் பெற வேண்டும். அதன் பிறகு தான் அந்த இரத்தபை இரத்த வங்கியில் சேமிப்பு செய்யப்படும். இப்படித்தான் ஒவ்வொரு பை இரத்தமும் தீவிர பரிசோதனைக்கு பிறகே ஸ்டோரேஜ் செய்ய வேண்டும்.




இந்த பரிசோதனையின் போது ஏதாவது இரத்தத்தில் எச்.ஐ.வி. நோய் தொற்று இருப்பது தெரிய வந்தால் உடனே அந்த இரத்தம் அழிக்கப்படும். அதோடு அந்த இரத்தத்தை கொடுத்தவர் பற்றிய விபரம் நம்பிக்கை மையத்துக்கு தெரிவிக்கப்படும். அவர்கள் அந்த நபரை உடனே அணுக வேண்டும். அவரை வரவழைத்து நம்பிக்கை மையத்தினர் அவரிடம் இரத்த பரிசோதனை மேற்கொள்வார்கள். அது மிகவும் துல்லியமான பரிசோதனை. அந்த பரிசோதனையில் தான் எச்.ஐ.வி. இருக்கிறதா என்பது உறுதி செய்யப்படும்.

உறுதி செய்யப்பட்டால் சம்பந்தப்பட்ட நபருக்கு கவுன்சிலிங், விழிப்புணர்வு, கூட்டு மருந்து சிகிச்சை ஆகியவை வழங்கப்படுவதோடு அவர் நம்பிக்கை மையத்தின் தொடர் கண்காணிப்பில் இருக்க வேண்டும். சில நேரங்களில் நம்பிக்கை மையத்தின் பரிசோதனையில் எச்.ஐ.வி. இல்லை என்றும் வருவதுண்டு. பொதுவாக சேமிக்கப்படும் இரத்தத்தை விட அழிக்கப்படும் இரத்தம் அதிகம் என்கிறார்கள் நிபுணர்கள்.

100 பேரிடம் இரத்தம் எடுத்தால் குறைந்தது 10 பேருக்காவது எச்.ஐ.வி. இருப்பதற்கான அறிகுறி தென்படுவதுண்டு. ஆனால் நம்பிக்கை மையத்தின் துல்லிய ஆய்வில் அதில் பலருக்கு இல்லாமல் கூட இருக்கும் என்கிறார்கள். இரத்தம் 36 நாட்கள் வரை மட்டுமே கெடாமல் இருக்கும். அதற்குள் வரிசைப்படி இரத்தத்தை பயன்படுத்துவார்கள்.

இரத்த வங்கியில் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்பதற்காக இரத்தம் தேவைப்படுவோருக்கு உடனே செலுத்திவிட முடியாது. இரத்தம் தேவைப்படுபவரின் இரத்தமும் செலுத்த வேண்டிய இரத்தமும் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இரு இரத்தமும் ஒரே பிரிவு இரத்தம் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமானால் மட்டுமே பயன்படுத்தப்படும்.

# கொஞ்சம்



# கொடுங்க!

★ வெளியிலிருந்து வரும் ஒலிகள் காது குழாயின் வழியாக நடு மற்றும் உள்செவியை அடைந்து, பிறகு நரம்பு மூலம் மூளைக்கு அனுப்பப்படுகிறது. மூளை, அந்த ஒலியை இனம் கண்டு உணர்த்துவதால் அது ஒரு பறவையின் ஒலியா அல்லது இயந்திரத்திலிருந்து வருகிறதா என்று நாம் அறிகிறோம்.

★ காதைப் பரிசோதிக்க காதின் வெளிப்பகுதியை முதலில் கவனிக்க வேண்டும். அதில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

★ குழந்தைகளின் அழுகைக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் காதுத் தொற்றும் முக்கியமானது. காதைத் தேய்த்துக்கொண்டு ஒரு குழந்தை அழுவதாக உணர்ந்தால் காதுத்தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில் அணுகுவதும் அவசியம்.

★ உடல்நிலை பாதிக்கப்பட்ட ஒருவரின் காதுமடல்களுக்குப் பின்னாலுள்ள தோல் சிவந்திருந்தால், அது எலும்பில் ஏற்பட்டுள்ள தொற்றைக் குறிக்கும் என்றும் கூறுகிறார்கள் நிபுணர்கள். இதேபோல், காதின் உட்பக்கத்தைப் பார்க்க காதை உங்கள் விரல்களால் மெதுவாக இழுத்துப் பாருங்கள். இது மேலும் அதிகமான வலியை ஏற்படுத்தினால் காதுக்குழாயில் தொற்று ஏற்பட்டிருக்கலாம்.

★ காதுக்குள்ளிருக்கும் பகுதியை ஆய்வு செய்ய சிறிய டார்ச் விளக்கு உதவியுடன் காதின் உட்பகுதி சிவந்திருக்கிறதா அல்லது சீழ் பிடித்து இருக்கிறதா என்று கவனியுங்கள். ஆனால், எக்காரணம் கொண்டும் குச்சி, கம்பி அல்லது வேறு கடினமான பொருட்களைச் செலுத்தாதீர்கள்.

★ காதில் தொற்று ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், தாமதிக்காமல் விரைவாக சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம்.

★ காதில் சீழ் பிடித்திருக்கும் பட்சத்தில் பஞ்சு கொண்டு அகற்றலாம். அதற்காக, பஞ்சைக் காதினுள் வைத்து அடைக்க வேண்டாம். இது தவறான அணுகுமுறை.

★ காதில் குரும்பி இருப்பதுதான் பலருக்கும் காது குடைவதற்கான காரணமாக இருக்கிறது. ஒருவேளை குரும்பி மிகவும் அதிகமாக ஏற்படுவதாக நினைத்தால் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளவும்.

★ காதுக் குரும்பி என்பது காதில் இயல்பான சுரப்பு. அது தொற்றிலிருந்து காப்பாற்றும் பணியைச் செய்கிறது. அது வழக்கமாக அலர்ந்து, உதிர்ந்து காதிற்கு வெளியே வந்துவிழுகிறது. பஞ்சு, குச்சி கொண்டு அதனை சுத்தப்படுத்த முயலும்போது, காதுக்குரும்பி உள்ளே தள்ளப்பட்டு, காதுக் குழாயை அடைத்துவிடுகிறது. இதனால் கேட்கும் திறன் பாதிக்கப்படும். அரிப்பு, வலி, காதுக்குழாய்த் தொற்றும் ஏற்படக்கூடும்.

★ சிறு குழந்தைகளுக்குக் காதுத் தொற்றுகள் ஏற்படுவது சாதாரணம். எனவே, அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. அதற்காக அலட்சியமாகவும் இருக்காதீர்கள். சளி, மூக்கடைப்பு ஏற்பட்ட பின்னர் பெரும்பாலான குழந்தைகள் காதுத்தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

★ இது வினோதமான ஒரு மருத்துவ உண்மை. சில குழந்தைகளுக்கு காதிலிருக்கும் தொற்று, வயிற்றுப் போக்கை ஏற்படுத்தலாம். ஆகையால், ஒரு குழந்தைக்கு வயிற்றுப்போக்கும் காய்ச்சலும் ஏற்பட்டால் காதுகளை சோதித்துப் பார்க்கவும்.

★ எந்தவொரு காயமோ தொற்றோ காதுக்குழாயில் ஏற்படுமானால் காது கேட்கும் திறன் குறையக்கூடும் அல்லது முழுவதுமாகக் காது கேளாமல் ஆகிவிடக்கூடும்.

★ Eustachian tube மூலம் காதானது தொண்டையுடனும் மூக்குடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தொண்டையிலும், மூக்கிலும் தொற்று ஏற்பட்டால் Eustachian tube மூலம் அது காதுக்கும் பரவும் வாய்ப்பு உண்டு.

★ மூளைக்கு அருகிலேயே காதும் அமைந்துள்ளது. காதில் ஏற்படும் தொற்றுகளுக்குச் சிகிச்சையளிக்காமல் விட்டுவிட்டால் மூளைக்கும் பரவலாம்.

★ காதை சுத்தப்படுத்த கூர்மையான அல்லது முனையுடன் உள்ள பொருட்களை ஒருபோதும் பயன்படுத்தாதீர்கள். காய்ச்சல், காதின் பின்புறம் வலி மிகுந்த கணுக்கள் அல்லது சீழ் இருந்தாலோ உடனடியாக மருத்துவரை அணுகவும்.

★ நடுச்செவித் தொற்று பாக்டீரியாவினால் உண்டாகக் கூடியது. இந்த நிலை சிறு குழந்தைகளிடம் சளி மற்றும் மூக்கடைப்பு வந்த சில நாட்களுக்குப் பின்பு வரலாம்.

★ காதிலிருந்து சீழ் வடியும் குழந்தைகள் காதுகள் சரியான பின்பு இரண்டு வாரங்கள் வரையும் நீச்சலடிக்கவோ அல்லது நீருக்குள் குதிக்கவோ கூடாது.

★ குழந்தைகளுக்குப் புட்டிப்பால் கொடுக்காதீர்கள் அல்லது அவ்வாறு கொடுக்க வேண்டியிருந்தால் குழந்தையை மல்லாந்து படுக்க வைத்துப் பால் ஊட்டக்கூடாது. மூக்கின் வழியாகப் பால் சென்று காது நோய்த்தொற்றுக்கு வழிவகுக்கும்.

★ குழந்தைகள் விளையாடும்போது ஏதாவது தானியத்தையோ அல்லது வேறு ஏதாவது பொருட்களையோ காதினுள் போட்டு விடலாம். சில நேரங்களில், சில பூச்சிகள்கூட காதிற்குள் சென்றுவிடுகின்றன. இந்த மாதிரியான சூழலில் காதிலிருந்து வெளியே எடுப்பதற்கு முன்பு அந்தப் பூச்சி கொல்லப்பட வேண்டும். பீச்சுக்குழாய் மூலம் சுத்தமான வெதுவெதுப்பான நீரைக் காதில் பீச்சி இறந்த பூச்சியை வெளியே கொண்டு வர வேண்டும்.

★ தானியம் அல்லது வேறு பொருள் உள்ளே இருந்தால் பிறச்செவியை வெளியேயும், மேலேயும் இழுத்து, காதுக் குழலை நேராக்கி குழந்தையின் தலையைக் குலுக்க வேண்டும். வெளியே கொண்டுவர முடியவில்லையெனில், மருத்துவர் உதவியை நாடவும்.

★ எந்த சூழலிலும் கூர்மையான பொருளை உள்செலுத்தி அதை அகற்ற முயலாதீர்கள். அப்படிச் செய்தால் செவிப்பறைக்கு ஊறு நேர்ந்து, மேலும் தீங்கு விளையலாம்.

★ செவிட்டுத் தன்மை என்பது ஓர் அறிகுறியே தவிர நோய் அல்ல. காது கேட்பது குறைந்து வருகிறது அல்லது காது கேட்கவில்லை என்று ஒருவர் முறையிடலாம். இது கடினப்பட்ட குரும்பியினாலோ, காதுக்குழாய் பாதிக்கப்பட்ட நோயினாலோ அல்லது மூளைக்குச் செல்லும் நரம்பில் ஏதாவது பிரச்னையினாலோ இருக்கலாம்.

# குளிர்காலை உடல் பிரச்சினைகள்

வெப்பத்துக்குப் பழக்கப்பட்ட நமது உடல் குளிரைச் சமாளிக்கத் தடுமாறும். கால நிலை மாறுவதால், சுவாசப் பிரச்சனை, காய்ச்சல், தோல் வறட்சி போன்ற உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். பனிக்காலத்தில் நமது உடலை நோயின்றி பாதுகாப்பதற்கான வழிமுறைகளை பார்க்கலாம்.

1. குளிர்காலத்தில் உடலுக்குக் கதகதப்பு அளிக்கும் சில உடற்பயிற்சிகள், நிமிர்வது, குனிவது போன்ற அசைவுகளைச் செய்துகொண்டே இருக்க வேண்டும். இதனால், குளிரினால் ஏற்படும் உடல் மற்றும் தசை பனி வலி நீங்கும்.

2. குளிர் காலத்தில் உணவை மிதமானச் சூட்டில் உண்ண வேண்டும். நேரம் தவறாமல் சாப்பிடுவதால் உடல் ஆற்றல் அதிகரிக்க உதவும். எளிதில் செரிக்கக் கூடிய பச்சைக் காய்கறிகள் மற்றும் நார்ச்சத்து மிகுந்த பீன்ஸ், முருங்கைக்காய் அதிக அளவில் சாப்பிடலாம். அசைவ உணவுகள் எளிதில் ஜீரணமாகாது என்பதால் அதனைக் குறைத்துக் கொள்வது நல்லது.

3. குளிக்கச் செல்லும்முன் தேங்காய் எண்ணெய் அல்லது ஆலிவ் எண்ணெயை உடலில் தேய்த்து மசாஜ் செய்தால், சருமம் வறண்டு போகாமல் ஆரோக்கியமாக இருக்கும். கற்றாழையைக் கூழாக அரைத்து முகம் மற்றும் உடலில் தேய்த்தாலும் சருமம் மிருதுவாக இருக்கும். ஒவ்வாமை மற்றும் சுவாசப் பிரச்சனை உடையவர்கள் கற்றாழை க்ரீம் பயன்படுத்தலாம்.

4. குளிர்காலத்தில் வெந்நீர் குளியல் நல்லது. அதிக சூடான தண்ணீரில், அதிக நேரம் குளித்தால் சருமத்தில் அதிக வறட்சி ஏற்படும். அதனால் வெதுவெதுப்பான சூட்டில் குளிக்க வேண்டும்.

5. பனிக்காலத்தில் தாகம் குறைவாக ஏற்படும். அதனால் தண்ணீர் குடிப்பதைத் தவிர்த்தால் உடலில் உள்ள நீர்ச்சத்து குறைந்து, வேறு பிரச்சனைகளை உருவாக்கும். எனவே, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு லிட்டர் வரை தண்ணீர் அவசியம் குடிக்கவேண்டும்.

6. அதிக குளிர் காணப்படும் நேரத்தில் உடலுக்குக் கதகதப்பு தரும் கம்பளி ஆடைகளை உடுத்த வேண்டும். இந்த ஆடைகள் குளிர்காலத்தில் வரும் நடுக்கத்தைக் குறைக்கும். கை, கால்கள், மூக்கு, காது பகுதியையும் கதகதப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

7. மாத்திரைகள் - ஆஸ்துமா, மூச்சுத் திணறல் மற்றும் சுவாச நோய்களால் அவதிப்படுபவர்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி தங்களுக்கான மாத்திரை மருந்துகளை எப்போதும் உடன் வைத்துக் கொள்ள வேண்டும்.



# அன்னாசியில் கிடைக்கும் நன்மைகள்

அன்னாசிப் பழத்தின் சாறு மிகுந்த சுவையுடன் இருக்கும். இயற்கையாகவே இதில் சர்க்கரை அதிகமாக இருக்கும். இதனால் அனைவரும் இந்த பழச்சாற்றை பெரிதும் விரும்புவர். ஆனால் இதில் பல வகை ஊட்டச்சத்துகள் உள்ளதை பலரும் அறிவதில்லை. இந்த பழச்சாறில் ப்ரோமெலைன் என்ற என்சைம் உள்ளது. இது செரிமானத்திற்கு உதவும் முக்கியமான என்சைம் ஆகும். மேலும் பொட்டாசியம், பி வைட்டமின்கள், மாங்கனீஸ் மற்றும் நார்ச்சத்து ஆகியவை நிறைந்து உள்ளது. உயர் ரத்த அழுத்தம், குறைந்த வளர்சிதை மாற்றம், குறைந்த நோய் எதிர்ப்பு சக்தி, கருவுறுதலில் பிரச்சினைகள், வீக்கங்கள், புற்றுநோய் அபாயம், மலச்சிக்கல், மனச்சோர்வு, பதற்றம் போன்ற பாதிப்புகள் உள்ளவர்கள் அன்னாசி பழச்சாறை தொடர்ந்து அருந்தலாம்.

பொட்டாசியம் அதிகமாக இருப்பதால், உயர் ரத்த அழுத்தத்திற்கு இது ஒரு சிறந்த மருந்தாக இருப்பதாக கூறுகின்றனர் மருத்துவர்கள். இது ஒரு சிறந்த குழல் விரிப்பி. அதனால் ஹைப்பர் டென்ஷன் குறைகிறது. இதனால் இதய நலன் முற்றிலுமாக பாதுகாக்கப்படுகிறது. இதன் மூலம் மாரடைப்பு, வாதம் போன்றவற்றின் அபாயங்கள் குறைகிறது.

இந்த பழச்சாறில் வைட்டமின் சி அதிகமாக உள்ளது. கடைகளில் கிடைக்கும் அன்னாசி பழச்சாறில் அஸ்கார்பிக் அமிலம் சேர்க்கப்படுகிறது. இதன் மூலம் வைட்டமின் சி ஊட்டச்சத்து இன்னும் அதிகரிக்கிறது. இது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை ஊக்கப்படுத்தி வெள்ளை அணுக்களின் உற்பத்தியை அதிகரிக்கிறது. இதுவே உடலை காக்கும் அரணாக இருக்கிறது.



வைட்டமின் பி அன்னாசி சாறில் அதிகமாக உள்ளது. இது மனநிலையை மேம்படுத்தி, ஹார்மோன் வளர்ச்சியை சீராக்குகிறது. இதனை அருந்துவதால் பதற்றம் தணிக்கப்படுகிறது. கீல்வாதத்தின் அறிகுறிகளை களைகிறது. அன்னாசியில் உள்ள நார்ச்சத்து மற்றும் ப்ரோமெலைன் போன்றவை குடல் இயக்கத்தை அதிகப்படுத்தி சரியான ஊட்டச்சத்துகள் செரிமான மண்டலத்தில் சேர்வதற்கு உதவுகின்றன.

அன்னாசி பழச்சாறை அருந்துவதால் நல்ல உடல் வளர்ச்சியும், முன்னேற்றமும் காணப்படும். இதில் உள்ள பொட்டாசியம் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதோடு, உடலில் நீர்ச்சத்தை சமன் செய்கிறது. நரம்புகள் தூண்டப்பட்டு, தசைகள் சுருங்கும் தன்மை சீராக்கப்படுகிறது. தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவர்களுக்கு உகந்த தசை செயல்பாடு இருப்பது அவசியம். அவர்கள் அன்னாசி சாறை குடிப்பதன் மூலம் நல்ல பலனை அடையலாம்.

இந்த பழத்தை அதிகமாக உட்கொள்வதால் சில தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. அவை, கர்ப்ப கால சிக்கல்கள், நீரிழிவு பாதிப்புகள், எடை அதிகரிப்பு, ஒவ்வாமை, ரத்தப்போக்கு போன்றவை ஆகும். அன்னாசியை அளவாக உட்கொண்டால் சிறந்த பலன்களை அடையலாம் என்பது மருத்துவ நிபுணர்களின் கூற்றாக உள்ளது.



# தூதுவளை இலை அரைச்சு....

சளி, இருமல், காய்ச்சல் முதலான மழைக்கால உடல்நலக் கோளாறுகளை சமாளிப்பதற்கான எளிய வழி வகைகளில் தூதுவளையும் ஒன்று. இதன் சிறப்புகள் பற்றிப் பேசுகிறார் சித்த மருத்துவர் மீனாட்சி சுந்தரம்.

★ உணவாகவும், மருந்தாகவும் பெருமளவில் பயன்படக்கூடிய தூதுவளைக்கு ‘கபநாசினி’ என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

★ தூதுவளை இலைகள் மூளையின் செயல்பாட்டினை அதிகரிக்கும் திறன் கொண்டுள்ளதால், இதனை 'ஞானப் பச்சிலை' என்ற பெயராலும் அழைக்கின்றனர்.

★ தூதுவளையின் இலை, தண்டு முதலியவற்றில் சிறிய முட்கள் காணப்படும். தூதுவளை இலை உண்டிக்குச் சுவையைத் தரும். இதன் இலைகள் நம் உணவில் கீரையாகவும், ரசம், துவையல் செய்து உண்ணவும் பயன்படுகிறது.

★ தூதுவளை பூ ஆண்மையைப் பெருக்கும் தன்மை கொண்டது. காயானது, வாதம், பித்தம், கபம் என மூன்று நோய்களையும் நீக்கும் குணமுடையது.

★ நுரையீரல், மூச்சுப்பாதை தொடர்புடைய நோய்கள் அனைத்தையும் நீக்குகிறது.

★ தூதுவளையின் இலைகள் மூச்சுப்பாதையில் கோழையகற்றி செய்கையை வெளிப்படுத்தி இருமல், இரைப்பு நோய்களைக் குணப்படுத்தக் கூடிய தன்மை வாய்ந்தது.

## ஹார்ட் ட்ரைவ் பிரச்சினையை கண்டறிவது எவ்வாறு?

ஹார்ட் ட்ரைவ்களில் ஏற்படும் பழுதுகளால், விண்டோஸ் முடங்கிப் போவது அடிக்கடி நடக்கும் நிகழ்வாகும். பயாஸ் புரோகிராம் சரியாக வடிவமைக்கப்பட்டு, உங்கள் கம்ப்யூட்டர், ஹார்ட் ட்ரைவில் பூட் செய்யக்கூடிய பகுதியைத் தேடி அறிய முடியவில்லை எனில், இதற்குக் காரணம் ஹார்ட் ட்ரைவாகத்தான் இருக்க முடியும்.

பொதுவாக, இவற்றில் பதிந்துள்ள பைல் ஒன்றைத் திறக்க முயற்சிக்கும் போதுதான், ஹார்ட் ட்ரைவில் பிரச்னை இருப்பது தெரியவரும். இலவசமாக ஹார்ட் ட்ரைவினை சோதித்து முடிவுகளைத் தரும் புரோகிராம்கள், இணையதளங்களில் கிடைக்கின்றன.

இவற்றைப் பயன்படுத்தி, சோதனை செய்து, கிடைக்கும் அறிக்கையில் தவறு உள்ளது என முடிவு கிடைத்தால், உங்கள் ஹார்ட் ட்ரைவ் தன் மரணத்தைச் சந்திக்க இருக்கிறது என்று பொருள்.

எப்படியாவது சரி செய்து, அதில் உள்ள டேட்டாவினை மீள எடுத்துவிட்டு, ட்ரைவினை அழித்துவிடுவதே நல்லது. அதற்கு முன், அந்த ட்ரைவினை இன்னொரு கம்ப்யூட்டரில் இணைத்து, இயக்கிப் பார்க்கலாம்.

அதில் சரியாக இயங்கினால், மீண்டும் சோதனை நடத்திப் பார்த்து முடிவெடுக்கலாம். ட்ரைவ் சரியாக உள்ளது என சோதனை முடிவுகள் தெரிவித்தால், பிரச்னை கம்ப்யூட்டரின் பிற பகுதிகளில் உள்ளதா எனத் தேடிப் பார்க்க வேண்டும்.

## மொனிட்டரின் பயன்பாட்டினை நிறுத்தி சி.பி.யு.வினை இயங்க வைக்கலாமா?


சில நிறுவனங்கள் தொடர்ந்து தங்கள் நிறுவனத் தகவல்களை நெட்வொர்க் அமைப்பில் அப்டேட் செய்து கொண்டே இருக்கும்.

அது போன்ற சூழ்நிலையில் கம்ப்யூட்டரைச் செயல்படுத்தாத நிலையில், மொனிட்டரின் பயன்பாட்டினை நிறுத்தி, சி.பி.யு. மட்டும் இயங்கும் வகையில் அமைக்கலாம்.

இதனால், மொனிட்டர் பயன்படுத்தும் மின் சக்தி மிச்சமாகும். மேலும், அதன் வாழ் நாள் நீடிக்கும்.எனவே, பயன்படுத்தாத சூழ்நிலையில், மொத்த கம்ப்யூட்டரையும் ஓப் செய்து வைப்பதே நல்லது. மின்சக்தி விரயமாகாது. ஹார்ட் டிஸ்க் சுழல்வது நிற்பதால், அதன் வாழ்நாள் அதிகமாகும்.

இல்லை கட்டாயம் இயங்க வேண்டும் என்று முடிவெடுத்தால், ஹைபர்னேட் நிலையில் வைக்கலாம்.

## பைல்களை Desktop இல் சேமிக்கலாமா?



டெஸ்க்டொப் பகுதியில் சேவ் செய்வதில் உள்ள பிரச்னைகளை நினைவு படுத்திக் கொள்ளலாம். இதில் பதிந்து வைப்பதனால், பயன்படுத்த எடுப்பது எளிதாகிறது. ட்ரைவ் மற்றும் போல்டர்களைத் தேடி எடுக்க வேண்டிய அவசியமில்லை. இந்த உடனடி அணுகு முறையே நமக்கு டெஸ்க்டொப்பில் பைல்களை சேமிக்கும் பழக்கத்தைத் தூண்டுகிறது. இதனால் பிரச்னைகளையும் நாம் வரவேற்கிறோம் என்பதே உண்மை.

முதலில், சிஸ்டம் ரெஸ்டோர் பயன்படுத்துகையில், டெஸ்க்டொப்பில் உள்ள பைல்கள் உறுதியாக மீண்டும் கிடைக்காது. இந்த ஆபத்தை பலர் உணர்ந்திருப்பதில்லை. பல பைல் பேக் அப் புரோகிராம்கள், டெஸ்க்டொப்பில் உள்ள பைல்களை கண்டுகொள்வதில்லை. தொடர்ந்து பைல்களை டெஸ்க்டாப்பில் சேவ் செய்திடுகையில், அவை குப்பையாக அமைகின்றன. தேவையான பைல் ஒன்றைத் தேடி எடுப்பது சிரமமான காரியமாகிறது. சரி, இனி எங்கு சேவ் செய்திடலாம், செய்திடக் கூடாது எனப் பார்க்கலாம்.

ஆப்பரேட்டிங் சிஸ்டம் பைல்கள் உள்ள சி ட்ரைவில் நம் டேட்டா பைல்களை என்றும் சேவ் செய்திடக் கூடாது. ஆப்பரேட்டிங் சிஸ்டம் இயங்காமல் போனால், அதனை ரீ இன்ஸ்டால் செய்திடுகையில், நம் டேட்டா பைல்கள் அனைத்தும் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். இதற்குப் பதிலாக, சி ட்ரைவினை விடுத்து, டி அல்லது வேறு ஒரு ட்ரைவில் பைல்களைப் பதிந்தால், அவை வைரஸால் பாதிக்கப்படாமல் இருக்கும் வாய்ப்புகள் அதிகம். மேலும் சி ட்ரைவினை ரீ பார்மட் செய்கையில், பைல்களை இழக்கும் வாய்ப்பு இருக்காது.

முன்பு விண்டோஸ் சிஸ்டத்தில் பைல்களை சேவ் செய்திட My Documents என்னும் போல்டர் தரப்பட்டது. பின்னர், விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இது Documents என பெயர் மாற்றப்பட்டது. அத்துடன் அதில் Music, Pictures, and Videos எனப் பல பிரிவுகளும் தரப்பட்டன. இவை மொத்தமாக libraries என அழைக்கப்பட்டன. இந்த நான்கு லைப்ரேரிகளும் சில சிறப்பு தன்மை கொண்டவை. இவை டைரக்டரிகள் மட்டும் அல்ல. பல டைரக்டரிகளின் தொகுப்பாகும். எடுத்துக் காட்டாக, நீங்கள் உங்கள் வீடியோக்களை பல இடங்களில் சேவ் செய்து வைக்கலாம். செய்து வைத்திடுகையில், வீடியோ டைரக்டரிக்கு லிங்க் கொடுக்கலாம். அதன் பின், வீடியோ டைரக்டரியை அணுகினால், அனைத்து வீடியோ பைல்களும் ஒரே இடத்தில் காட்டப்படுவதனைக் காணலாம். இந்த வகையில் பைல்களை சேவ் செய்வதும் திரும்பப் பெறுவதும் எளிதாகிறது. பாதுகாப்பும் கிடைக்கிறது.

இப்போதெல்லாம், க்ளவ்ட் கம்ப்யூட்டிங் முறையில், பைல்களை ஸ்டோர் செய்திடும் பழத்தினை அனைவரும் பின்பற்றுகின்றனர். பெரும்பாலும் இலவசமாகவும், கட்டணம் செலுத்தியும் இந்த இடம் கிடைக்கிறது. இவற்றில் அதிகம் பிரபலமானவை Dropbox, G+ Drive, or Microsoft One Drive ஆகும். இவை கூடுதல் வசதிகளை வழங்குகின்றன. இவற்றுடன் அக்கவுண்ட் வைத்துக் கொண்டு, பைல்களை இணைக்கும் வசதியையும் (Sync) அமைத்துக் கொண்டால், பைல்கள் தாமாகவே, இணைய வசதி இருக்கும்போது, இந்த க்ளவ்ட் டைரக்டரிகளில் பதிந்து வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட டைரக்டரிகளில் நீங்கள் அமைக்கும் பைல்கள் தாமாகவே இவற்றுடன் இணைக்கப்பட்டு சேவ் செய்திடும் வகையில் அமைப்பினை உருவாக்கிக் கொள்ளலாம்.

இவ்வாறு சேவ் செய்திடும் பைல்களை எந்த இடத்தில் இருந்தும் நீங்கள் மீண்டும் பெற்றுக் கொண்டு திருத்தலாம், பயன்படுத்தலாம். நம் கம்ப்யூட்டர் முழுமையாக இயக்க முடியாமல் போனாலும், இந்த பைல்கள் நமக்கு என்றும் கிடைக்கும். இவ்வாறு சேவ் செய்யப்படும் பைல்களுக்கு Revision history என்ற ஒரு வசதியும் தரப்படுகிறது. அனைத்து க்ளவ்ட் ஸ்டோரேஜ் வசதிகளிலும் இந்த வசதி தரப்படவில்லை. ஆனால், பெரும்பாலான பிரிவுகளில் கிடைக்கிறது. இந்த வசதியின் மூலம், பைல் ஒன்றில் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் அனைத்தும், குறிப்பிட்ட எண்ணிக்கையில், குறிப்பில் வைத்து சேவ் செய்யப்படுகின்றன. எனவே, நீங்கள் ஒரு பைலின், குறிப்பிட்ட திருத்தத்திற்கு முந்தைய பதிப்பு தேவை எனில், அதனை க்ளவ்ட் ஸ்டோரேஜில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் விண்டோஸ் 8 பயன்படுத்துபவராக இருந்தால், மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஒன் ட்ரைவின் க்ளவ்ட் ஸ்டோரேஜ் வசதி உங்களுக்கு சிஸ்டம் மூலமாகவே தரப்படுகிறது. பைல்களை ஒருங்கிணைக்கும் சிங்க் வசதியும் கிடைக்கிறது.

பைல்களை உடனே அணுகி, டபுள் கிளிக் செய்து திறக்க முடிகிறது என்ற ஒரு வசதியே, நம்மை டெஸ்க்டாப்பில் பைல்களை சேவ் செய்து வைத்திடத் தூண்டுகிறது. ஆனால், டெஸ்க்டாப் இடத்தில் பைல்களை சேவ் செய்வது சரியல்ல என்ற நிலையில், உடனுடக்குடன் டெஸ்க்டாப்பிலிருந்தே பைல்களைத் திறக்க ஏதேனும் வழி உண்டா என நாம் எண்ணலாம். வழி உள்ளது.

பைல்களுக்கான ஷார்ட் கட் (shortcuts) ஐகான்களை உருவாக்கி, டெஸ்க்டாப்பில், எளிதில் பெறும்படி அமைத்தால், அதில் கிளிக் செய்து பைல்களைத் திறக்கலாம். இந்த வகையில் ஷார்ட் கட் அமைப்பதுவும் எளிதுதான். ரைட் மவுஸ் பட்டனை பைல் பெயர் மீது அழுத்தி, எந்த இடத்தில் ஷார்ட் கட் அமைக்கப்பட வேண்டுமோ அங்கு விட வேண்டும். பின்னர் கிடைக்கும் மெனுவில் Create shortcut here என்பதில் கிளிக் செய்தால், ஷார்ட் கட் அமைக்கப்படும். இந்த ஷார்ட்கட் நீக்கப்பட்டாலும், பைல் நீங்கள் சேவ் செய்த இடத்தில், டைரக்டரியில் அல்லது போல்டரில், இருக்கும். ஆனால், இவற்றையும் டெஸ்க் டாப்பில் வைத்து அது குப்பைக் களமாக மாறுவதை ஏன் உருவாக்க வேண்டும். அதற்குப் பதிலாக, இது போல உருவாக்கப்படும் ஷார்ட் கட் ஐகான்களை அப்படியே இழுத்து வந்து டாஸ்க் பாரில் பின் அப் செய்து வைக்கலாம். இதற்கு Pin to taskbar என்பதனைப் பயன்படுத்த வேண்டும்.

மேலே சொன்ன வழிகள் அனைத்தும் பொதுவாகச் சொல்லப்பட்டவையே. இது வரை டெஸ்க்டாப்பில் மட்டுமே அவசரமாகத் திறக்க வேண்டிய, அடிக்கடி பயன்படுத்த வேண்டிய பைல்களை சேவ் செய்து பழக்கப்பட்டவர்கள், அவர்களுடைய விருப்பத்தின் அடிப்படையில் மேலே சொல்லப்பட்ட வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து பைல்களை சேவ் செய்து கொள்ளலாம்.

## முகநூல் கணக்கு இல்லை என்றாலும் திருடப்படும் தகவல்கள்

ஃபேஸ்புக் சேவையில் கணக்கு வைத்திருக்காத பயனர்களின் விவரங்களும் ஃபேஸ்புக்கிற்கு அனுப்பப்படுவதாக சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த தனியார் பாதுகாப்பு நிறுவனம் மேற்கொண்ட ஆய்வில் ஃபேஸ்புக் பயன்படுத்துவோர், பயன்படுத்தாதோர் மற்றும் தளத்தில் இருந்து லாக்-அவுட் செய்தோரின் தகவல்களை ஃபேஸ்புக் டிராக் செய்வது கண்டறியப்பட்டுள்ளது.

ஆப் டெவலப்பர்கள் ஃபேஸ்புக்கின் மென்பொருள் மேம்பாட்டு முகமை எனும் மென்பொருள் மூலம் பயனர் விவரங்களை ஃபேஸ்புக்கிற்கு வழங்கி வருவது ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த மென்பொருள் மூலம் டெவலப்பர்கள் குறிப்பிட்ட இயங்குதளத்திற்கு ஏற்ப புதிய செயலிகளை உருவாக்க முடியும்.

இந்த ஆய்வுக்கென ஆராய்ச்சியாளர்கள் ஆண்ட்ராய்டு இயங்குதளத்தின் 34 செயலிகளை எடுத்துக்கொண்டனர். ஒவ்வொன்றும் 10 முதல் அதிகபட்சம் 50 கோடி பேர் டவுன்லோடு செய்த செயலிகள். இவற்றில் மொழி கற்றுக் கொள்ளும் செயலி, பயணம், உணவகம் மற்றும் பல்வேறு இதர பலன்களை வழங்கும் செயலிகளை தேர்வு செய்தனர்.

பின் இந்த செயலிகள் ஃபேஸ்புக் எஸ்.டி.கே. மூலம் எதுபோன்ற தகவல்களை பரிமாறிக் கொள்கின்றன என்பதை ஆய்வு செய்தனர். அனைத்து செயலிகளும் ஆகஸ்டு 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான காலக்கட்டத்தில் சோதனை செய்யப்பட்டது. ஜெர்மனியில் நடைபெற்ற கணினியியல் நிகழ்வில் ஆய்வறிக்கை சமர்பிக்கப்பட்டது.



ஆய்வறிக்கையின்படி 61 சதவிகித செயலிகள், பயனர் தங்களது ஸ்மார்ட்போனில் செயலியை திறந்ததும் அவர்களின் விவரங்கள் தானாக ஃபேஸ்புக்கிற்கு அனுப்பப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பயனர் ஒவ்வொரு முறை செயலியை திறக்கும் போதும் அவரது தகவல் ஃபேஸ்புக்கிற்கு அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த சூழலில் பயனர் ஃபேஸ்புக் அக்கவுண்ட் வைத்திருந்தாலும், வைத்திருக்கவில்லை என்றாலும், ஃபேஸ்புக்கில் லாக் இன் செய்திருந்தாலும் அல்லது லாக் இன் செய்யவில்லை என்றாலும் பயனர் விவரங்கள் அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வைபை ரொம்ப ஸ்லோவாக இருக்கிறதா?



உங்க கணினி மற்றும் லாப்டாப்களுக்கு வைபை மூலம் இன்டெர்நெட் பபயன்படுத்துறீங்களா, நீங்க யூஸ் பன்னும் வைபை அடிக்கடி ஸ்லோ ஆகிடுதா, இன்டெர்நெட் தானாக டிஸ்கனெக்ட் ஆகிடுதா, இதே பிரச்சனை வைபை பயன்படுத்தும் எல்லோருக்குமே இருக்குங்க. சரி டென்ஷன் ஆகாதீங்க இந்த பிரச்சனைக்கு என்ன பன்னலாம்னு முதல்ல பாருங்க, அடுத்து வரும் ஸ்லைடரில் உங்க வைபை நெட்வர்க்கில் பிரச்சனை இல்லாமல் வேகமான இன்டெர்நெட் வசதியை பெருவது எப்படினு பாருங்க.

வேகமான வைபைக்கு முக்கியமாக அப்-டு-டேட் ஹார்டுவேரை பயன்படுத்துங்கள் இதற்கு வயல்ரெஸ் என் சிறந்ததாக இருக்கும்

உங்க ரவுட்டர் பார்க்க அழகாக இல்லை என்று அதை மறைத்து வைக்க கூடாது, நல்ல காற்றோட்டமான இடத்தில் வைத்தால் தான் முழுமையான சிக்னல் கிடைக்கும்


அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் வைபை உங்களது வைபைக்கு இடையூறாக இருக்கலாம், இதை சரி செய்ய வைபை ஸ்டம்ப்ளர் அல்லது வைபை அனலைஸர் போன்றவற்றை பயன்படுத்தி உங்க வைபையை சரியான சேனல் கிடைக்கும் இடத்தில் பொருத்துங்கள்

நீங்க உங்க வீட்டில் பயன்படுத்தும் கார்டுலெஸ் போன், மைக்ரோவேவ் போன்றவைகளும் உங்க வைபை சிக்னலை பாதிக்கும் இதனால் டுயல்



பேண்ட் ரவுட்டரை பயன்படுத்துங்கள்

உங்க ரவுட்டருக்கு பாஸ்வேர்டு இருந்தாலும் அதை சுலபமாக களவாட முடியும், அதனால் நிகஅ பாஸ்வேர்டை பயன்படுத்துங்கள்



வைபை பயன்படுத்தும் போது உங்கள் வீட்டில் யாரேனும் அடிக்கடி வீடியோ சாட், டோரென்ட் டவுன்லோடு என எதையவது செய்யலாம், இது மற்ற எல்லாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும், இதை சரிகட்ட QoS பயன்படுத்தலாம்

உங்க ரவுட்டர் சரியாக சிக்னல் கிடைக்காத சமயத்தில் பழைய பாட்டில்களை ரவுட்டர் மேல் பொருத்தலாம், இது ஓரளவு கைகொடுக்கும்

உங்க வைபை ரேன்ஜ் அதிகரிக்க DD& WRT firmware இன்ஸ்டால் செய்யலாம், இது ஒரு வகையில் ஆபத்தானது என்றாலும் சில ரவுட்டர்கள் 70 மெகாவாட் வரை தாங்கும் திறன் கொண்டது. உங்க பழைய வயர்லெஸ் ரவுட்டரை எக்ஸ்டென்டர் ஆக பயன்படுத்தலாம், இதற்கு DD&-WRT firmware அவசியம் தேவை. உங்க ரவுட்டரை நாள் ஒன்றுக்கு ஒரு முறை ரீபூட் செய்யுங்கள்.

## கூகுள் வரைபடத்திலும் குறுஞ்செய்தி வசதி

கூகுள் மேப்ஸ் செயலியில் குறுந்தகவல் அனுப்பும் வசதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் பயனர்கள் மேப்ஸ் செயலியில் இருந்தபடி குறுந்தகவல்களை அனுப்ப முடியும்.

கூகுள் மேப்ஸ் செயலியில் புதிய அம்சம் சேர்க்கப்பட்டுள்ளது. புதிய அம்சம் மூலம் பயனர்கள் கூகுள் மேப்ஸ் செயலியில் இருந்தபடி குறுந்தகவல் அனுப்பிக் கொள்ளலாம். எனினும், இந்த அம்சம் கொண்டு நண்பர்கள் மற்றும் குடும்பத்தாருடன் குறுந்தகவல் அனுப்பிக் கொள்ள முடியாது.

புதிய அம்சம் மூலம் கூகுள் மேப்ஸ் செயலியில் பட்டியலிடப்பட்டு இருக்கும் வியாபார மையங்களுக்கு மட்டுமே குறுந்தகவல் அனுப்பிக் கொள்ளலாம் என கூறப்படுகிறது. இதுகுறித்து வெளியாகி இருக்கும் ஸ்கிரீன்ஷாட்களில் கூகுள் மேப்ஸ் பயனர்கள் சிறு வியாபார நிறுவனங்களை தொடர்பு கொள்ள முடியும்.

இதன் மூலம் சிறு வியாபார நிறுவனங்கள் எதிர்காலத்தில் அதிகளவு வாடிக்கையாளர்களை ஈர்க்க முடியும். இத்துடன் வியாபார நிறுவனங்களும் வாடிக்கையாளர்களை அழைக்காமல், அவர்களை வேகமாக தொடர்பு கொள்ளலாம்.

முன்னதாக கூகுள் மேப்ஸ் செயலியில் ஆட்டோ ரிக்ஷா அம்சம் பொது பயணங்களில் ஒன்றாக சேர்க்கப்பட்டது. இதன் மூலம் பயனர்கள் தேடும் முகவரிக்கு செல்லும் நேரத்தை மேம்படுத்த முடியும். இந்தியாவில் முதற்கட்டமாக டெல்லியில் மட்டும் ஆட்டோ ரிக்ஷா அம்சம் வழங்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர கூகுள் தனது டுயோ செயலியில் வழங்க புதிய அம்சங்களை உருவாக்கும் பணிகளில் கூகுள் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே வெளியான தகவல்களில் கூகுள் டுயோ செயலியில் லோ லைட் மோட் மற்றும் க்ரூப் வீடியோ காலிங் உள்ளிட்ட வசதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன.

## மூன்று கமராவுடன் ஐபோன்

ஆப்பிள் நிறுவனத்தின் 2019 ஐபோன் மாடலின் கான்செப்ட் புகைப்படம் இணையத்தில் வெளியாகியுள்ளது. இதில் புதிய ஐபோனில் மூன்று பிரைமரி கேமரா வழங்கப்படலாம் என தெரியவந்துள்ளது. ஆப்பிள் நிறுவனம் தனது ஐபோன் மாடல்களின் வடிவமைப்பை 2020 ஆம் ஆண்டு வாக்கில் முற்றிலும் மாற்ற இருக்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டு ஆப்பிள் அறிமுகம் செய்யவிருக்கும் ஐபோன்களை வித்தியாசப்படுத்த மேற்கொள்ளும் முயற்சி பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து ப்ளூம்பெர்க் வெளியிட்டிருக்கும் தகவல்களில் ஆப்பிள் நிறுவனம் சோனியுடன் இணைந்து புதிய ஐபோன்களில் 3ஈ கேமரா வழங்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பம் ஸ்மார்ட்போன்களில் புகைப்படம், பாதுகாப்பு மற்றும் கேமிங் என மூன்று தளங்களில் புதிய வசதிகளை வழங்க வழிசெய்யும்.



# முகத்தில் வழியும் எண்ணெய்; சமாளிப்பது எப்படி?

என்னதான் சருமத்தைப் பாதுகாத்து வந்தாலும் சிலருக்கு முகத்தில் எண்ணெய் வடிவது குறையவே குறையாது. அது கொழுப்புச்சத்து உள்ள உணவுகளை அதிகம் சாப்பிடுபவர்களுக்கு சொல்லவே தேவையில்லை.

அதோடு, காலையில் எழுந்ததும் நான்கு தக்காளி, நான்கு மிளகு, ஒரு டீஸ்பூன் தேன் சேர்த்து அடித்து கலந்து குடியுங்கள். இது உடலின் நச்சுப் பொருட்களை வெளியேற்றி சுத்தம் செய்கிறது.

இதன் மீதியை முகத்தில் தேய்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் தோலின் துவாரங்கள் இறுகி கூடவே முகம் பளபளப்பாகவும் மாறும். நிறைய தண்ணீர் குடித்தால் நச்சுப் பொருட்கள் உடலில் இருந்து வெளியேறும்.

நார்ச்சத்து மிகுந்த உணவுகள், காய்கறிகள், பழங்கள், முட்டைக்கோஸ், கேரட் போன்றவற்றை தினமும் சாப்பிடுங்கள். முகத்தில் பருக்களே வராமல் இருக்க ஒவ்வொரு மாதமும் ஒரு வாரத்திற்கு பச்சைக் காய்கறிகள், வேகவைத்த காய்கறிகளை எடுத்துக்கொள்ளுங்கள்.

முகத்திற்கான அழகு சாதனப் பொருட்களை வாங்கும்பொழுது அதில் கிளைகாலிக் அமிலம், ரெட்டினாயிக் அமிலம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குங்கள். இவை ஆயில் அதிகமாக உருவாவதை தடுக்கக் கூடியவை.

டோனர்கள் வாங்கும்போது அதில் ஆல்கஹால் இருப்பதைத் தவிருங்கள். இவை முகத்தில் இருக்கிற மொத்த ஆயிலையும் நீக்கி சருமத்தை வறட்சி அடையச்செய்து சுருக்கம் ஏற்பட வழி ஏற்படுத்தும்.

வெதுவெதுப்பான தண்ணீரால் தினமும் மூன்று முறையாவது முகத்தை கழுவுங்கள். இதனால் அதிகப்படியான ஆயில் நீக்கப்படும். முகம் கழுவும்போது தேய்க்காதீர்கள். முகம் கழுவ ஜான்சன் அண்ட் ஜான்சன், க்ளீன் அண்ட் க்ளியர் டீப் ஆக்ஷன் கிளன்ஸர், லோ ஓரல் போன்றவை பயன் தரும்.

மேலும் களிமண் அடிப்படையில் செயல்படும் மாஸ்க்குகளைப் பயன்படுத்துங்கள். இவை தோல் துவாரங்களை இறுக்கி ஆழமாக சுத்தம் செய்யும். ஆயில் அதிகம் சுரப்பவர்கள் ஆயில் அற்ற தோல் கிரீம்களைப் பயன்படுத்துவது நல்லது.

# தூங்கச் செல்லும் முன்...

பெண்களே தினமும் இரவு தூங்கச் செல்லும் முன்பாக, சில விஷயங்களை கண்டிப்பாக செய்துவிட்டோமா என சரிபார்த்துக் கொள்ளுங்கள்.



அலுவலக வேலை, வீட்டு வேலை என எல்லாவற்றையும் முடித்துவிட்டு, அலுப்பில் அப்படியே தூங்கச் சென்றுவிடுகிறீர்களா? அப்படியானால் இன்று முதல் உங்களுக்காகவும் கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள். தினமும் இரவு தூங்கச் செல்லும் முன்பாக, சில விஷயங்களை செய்துவிட்டோமா என சரிபார்த்துக் கொள்ளுங்கள். அதன்பிறகு, அடுத்த நாள் வேலைகளைப் பற்றி யோசித்துக் கொண்டே தூங்கச் செல்லலாம்.

தினமும் தூங்கச் செல்லும் முன்பாக, முகத்தில் உள்ள மேக்கப்பை நிச்சயம் கலைத்துவிட்டுத் தான் தூங்க வேண்டும்.

அதேபோல் நீங்கள் கான்டக்ட் லென்ஸ் பயன்படுத்துபவராக இருந்தால், அதை இரவில் கட்டாயம் நீக்கிவிட்டு, கண்களைக் கழுவி விட்டு தான் தூங்க வேண்டும். நீண்ட நேரங்களுக்கு லென்ஸ் அணிந்திருத்தல் கூடாது.

தங்கத் தோடு, மூக்குத்தி, மோதிரம், தங்க செயின்கள், வளையல் ஆகியவற்றை அணிந்திருப்பார்கள். அவற்றைத் தூங்கச் செல்வதற்கு முன்பாக கழட்டி வைத்துவிடுவது நல்லது. சின்ன அணிகலனாக இருந்தாலும் சில சமயங்களில் எங்காவது குத்தி, பெரும் ஆபத்தைக் கூட விளைவிக்கும்.

தூங்கும் போது மேக்கப்பை கலைத்துவிட்டாலும், தலை அலங்காரங்களைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. ஆனால் கட்டாயம் தூங்கச் செல்லும்போது, தலையில் உள்ள ஹேர் -பின் ஆகியவற்றை எடுத்துவிட்டுத்தான் தூங்கச் செல்ல வேண்டும். இல்லையென்றால் அவை தலையில் எங்காவது குத்திவிடும்.

பெரும்பாலான பெண்கள் தூங்கச் செல்லும் முன் உடை மாற்றிவிடுகிறார்கள். ஆனால் தங்களுடைய உள்ளாடைகளைப் பற்றிக் கண்டு கொள்வதே கிடையாது. ஆனால் அது முற்றிலும் தவறான விஷயம். தூங்கச் செல்லும்போது, இறுக்கமான உடைகளை அணிந்திருத்தல் கூடாது. உள்ளாடைகளை நீக்கிவிட்டு தூங்கச் செல்வது சிறந்தது.



# முகப்பருக்கள் மறைய...

முகத்தைப் பளபளப்பாகப் பேணிக் காக்க வேண்டும் என்கிற எண்ணம் பெண்களுக்கு மட்டுமல்ல... ஆண்களுக்கும் உண்டு.. பொடுகுத்தொல்லை, உடல் சூடு காரணமாக முகப்பரு வந்தாலும் இது நீங்கும்.

வெங்காரத்தைப் பொரித்தால் (போரக்ஸ்) அது மாவாகக் கரையும். அதைத் தண்ணீருடன் கலந்து பரு பழுத்திருக்கும் இடங்களில் தடவி வந்தால் விரைவில் பழுத்து உடையும்.

வெள்ளரிப் பிஞ்சை தக்காளி ஜூஸில் ஊற வைத்துத் தொடர்ந்து முகம் கழுவி வர விரைவில் பரு மறையும். அத்துடன் மீண்டும் முகப்பரு வருவதைக் கட்டுப்படுத்தும்.




மலச்சிக்கல் இருந்தாலும் முகப்பரு ஏற்படும். வெட்பாலை தைலத்தைப் பயன்படுத்தி வர மலச்சிக்கல் நீங்குவதோடு, முகப்பருவும் மறையும்.

பொடுகால் ஏற்படும் முகப்பருவுக்குப் பொடுதலை இலைச்சாற்றைத் தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்து வர பொடுகு நீங்குவதோடு, முகப்பருக்கள் சீக்கிரம் மறையும்.

எலுமிச்சைச் சாற்றுடன் நீர் சேர்த்து பரு உள்ள இடங்களில் தடவி இரண்டு முதல் மூன்று மணி நேரம் கழித்து முகம் கழுவ வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் பருக்கள் மறையும். சருமத்தில் உள்ள எண்ணெய் பிசுக்கையும் எலுமிச்சைச் சாறு நீக்கும்.

இந்த முறைகளைப் பின்பற்றினால் முகப்பருக்கள் நீங்கிப் பொலிவுடன் வலம் வரலாம்.

### எளிமையான முறையில் அதை எப்படி நீக்குவது.

திருநீற்றுப்பச்சிலையை அரைத்து முகப்பரு உள்ள இடங்களில் தொடர்ந்து தடவி வந்தால் எளிதில் குணம் கிடைக்கும். திரிபலா பொடி கசாயத்தால் முகம் கழுவிவந்தாலும் பருக்கள் நீங்கும்.

குங்குமாதி லேபத்தைப் பருக்களின் மீது தடவி வர, பருக்கள் மறைவதோடு தழும்புகளும் விரைவில் நீங்கும்.

பசுஞ்சாணத்தில் செய்யப்பட்ட விபூதியை தண்ணீரில் குழைத்துத் தேய்த்து வந்தாலும் பருக்கள் மறையும்.

50 மில்லி நல்லெண்ணெயுடன் மிளகை ஊற வைக்க வேண்டும். 20 நாட்கள் கழித்துப் பயன்படுத்த வேண்டும். இதை முகப்பரு உள்ள இடங்களில் தடவி வர பருக்கள் நீங்கும்.

அரிசி மாவில் செய்யப்பட்ட நாமக் கட்டியை உரசி தொடர்ந்து பயன்படுத்திலாம்.

# பெண் குழந்தை வளர்ப்பில் கவனத்தில் கொள்ள வேண்டியவை!

குடும்பம், பள்ளி, சமூகம், நண்பர்கள் மற்றும் இப்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ள சிக்கல்களை இன்றைய பெண் குழந்தைகள் சந்திக்கிறார்கள்.

பெண் பிள்ளைகள் இயல்பாகவே தங்கள் அப்பாக்களின் மீது பாசம் கொண்டவர்களாகவும், ஆண் பிள்ளைகள் தங்கள் அம்மாக்களின் மீது பிரியம் கொண்டவர்களாகவும் இருப்பதை பலரும் கவனித்திருக்கலாம். அதன் பின்னணியில் மனிதனது பல்லாண்டுகால பாரம்பரியம் கொண்ட மன உணர்வுகள் அடிப்படையாக இருப்பது அறியப்பட்டுள்ளது.

### மென்மை கொண்டவர்கள்

பெண் குழந்தைகளிம் மனம் இயல்பிலேயே மென்மையான தன்மை கொண்டதாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடையே வரக்கூடிய சாதாரண சண்டை என்றால் கூட அதன் வாயிலாக, மன அளவில் பெண் குழந்தைகள்தான் முதலில் பாதிக்கப்படுகிறார்கள். குடும்பம், பள்ளி, சமூகம், நண்பர்கள் மற்றும் இப்போதைய தொழில்நுட்ப வளர்ச்சிகள் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ள சிக்கல்களை இன்றைய பெண் குழந்தைகள் சந்திக்கிறார்கள்.

### சிக்கல் இருவகை

பெண் குழந்தைகளுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்கள் இரண்டு வகையாக உள்ளன. முதலாவது உடல்நிலை சார்ந்து ஏற்படக்கூடியது. இரண்டாவது அவர்களது வளரும் சூழல் மற்றும் உணவு முறைகள் சார்ந்து ஏற்படக்கூடியது. அவர்களது இயல்பான வளர்ச்சிக்கு தேவைப்படும் அவசியமான சத்துக்கள் கிடைக்கவில்லை என்றால் நரம்பு மண்டல பாதிப்பாக மாறி, காலப் போக்கில் அது உளவியல் சிக்கலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக வல்லுனர்கள் கூறுவது கவனிக்கத்தக்கது.

### பெற்றோர்கள்

பொதுவாக, பெண் குழந்தைகளின் அன்றாட நடவடிக்கைகள் அவர்களது விருப்பத்தின் அடிப்படையில் அமைவது இல்லை. காலையில் முதல் இரவு வரையிலான அவர்களது அன்றாட நடவடிக்கைகள் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் தீர்மானிக்கப்படுகிறது. தேர்வுகள் மற்றும் மனப்பாட பகுதிகளுக்கு தரப்படும் நேர நெருக்கடிகளால், விளையாடுவதற்கு நேரம் இல்லாமல் போகிறது. விளையாட்டின் மூலம் கிடைக்கும் நண்பர்கள், அனுபவம் ஆகியவை கிடைக்காமல் போவதாலும் பெண் குழந்தைகள் உளவியல் ரீதியாக பாதிக்கப்படுகிறார்கள்.

படிப்பதில் செலவழிக்கும் கூடுதல் நேரம் காரணமாக உண்டாகும் மனஅழுத்தம் அவர்களது பசி உணர்வை பாதிப்பதால், மதிய உணவை சாப்பிடாமல் கீழே கொட்டிவிடும் வாய்ப்புகள் உள்ளன. அதன் காரணமாக, சோர்வாக வீடு திரும்பும் குழந்தைகள் 'ஜங்க் புட்' வகைகளை உண்பதும் வழக்கமாக உள்ளது.



### கருவறை பொறுப்பு

அன்னையின் கருவில் இருந்தே குழந்தைகளின் மன ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் சமூகம் மற்றும் குடும்ப அளவில் தொடங்கப்படுவது நமது பாரம்பரியத்தில் வழிவழியாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மகிழ்ச்சியை தரக்கூடிய அத்தகைய நிகழ்ச்சிகள் காரணமாக கருவுற்ற பெண்கள் சந்தோஷமான மனநிலையில் இருப்பார்கள். கருவுற்ற அன்னையின் மனப்பதற்றம், குழந்தையின் இயல்பான மூளை இயக்கத்தை பாதிப்பதாகவும் கண்டறியப்பட்டிருக்கிறது.

# ஃபிஷ் ஸ்பா; அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும்

அதென்ன ஃபிஷ் ஸ்பா என்கிறீர்களா? அது ஒன்றுமில்லை... ஆறோ, வாய்க்காலோ ஓடும் பகுதியில் நீங்கள் வசிப்பவராயின் அதில் குளிக்கும்போதும், தண்ணீருக்குள் நின்று துணி துவைக்கும்போதும் மீன்கள் உங்கள் கால்களைக் கடிக்கும். அப்போது ஒரு வித கூச்சத்தை உணர்வீர்களல்லவா? அப்படியாக மீன்கள் கடிப்பது பல விதங்களில் நமக்கு நன்மையை ஏற்படுத்தும் ஒரு சிகிச்சை என்கின்றனர்.ஸ்பா சென்டரில் தொட்டிக்குள் வளர்க்கப்படும் ஒரு வகையான மீனைக் கொண்டு உடலின் சில பாகங்களைக் கடிக்க விடுவதுதான் ஃபிஷ் ஸ்பா.

ஃபிஷ் ஸ்பா ஒன்றும் புதிய கண்டுபிடிப்பல்ல. துருக்கியில் 100 ஆண்டுகளுக்கு முன்பே சொரியாஸிஸ், எக்சீமா போன்ற தோல் நோய்களுக்கு மீன்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதுதான் பின்னர் ஃபிஷ் ஸ்பா என அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறையானது. எல்லா வகையான மீன்களையும் இச்சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியாது. காரா ரூஃபா வகை மீன்களைத்தான் இதற்கு பயன்படுத்தலாம் .சுத்தமான, வெதுவெதுப்பான தண்ணீர் நிரப்பப்பட்ட தொட்டிகளில் டஜன் கணக்கான காரா ரூஃபா மீன்கள் இருக்கும். அந்த நீருக்குள் காலை வைத்ததுமே, இம்மீன்கள் காலில் இருக்கும் அழுக்கு மற்றும் இறந்த செல்களை சாப்பிட ஆரம்பித்துவிடும். இதனால் இறந்த செல்கள், அழுக்குகள் எல்லாம் நீங்கி பாதம் புதுப்பொலிவு பெறும்.

மீன் கடிப்பதால் வலி இருக்குமோ என்கிற சந்தேகம் எழலாம். இவ்வகையான மீன்கள் பற்கள் இல்லாதவை என்பதால் வலியே இருக்காது. மாறாக கூசுகிற உணர்வுதான் ஏற்படும். ஃபிஷ் ஸ்பாவிலும் சில வகைகள் உண்டு. பாதங்களுக்கு மட்டும் மேற்கொள்ளப்படுவது ஃபிஷ் பெடிக்யூர். முகத்துக்கும் ஃபிஷ் ஸ்பா மேற்கொள்ளலாம். அது ஃபிஷ் ஃபேஷியல். ஃபிஷ் ஃபேஷியல் செய்யும்போது முகப்பருக்களில் உள்ள பாக்டீரியாக்களை அவை தின்றுவிடுவதால் பருக்கள், பருக்களினால் வரும் அடையாளங்களை போக்க முடியும்.

மேலும், வயதான தோற்றத்தைத் தரும் முகச்சுருக்கங்கள் இதனால் நீங்குகிறது. முகத்துக்கு பொலிவான தோற்றத்தை ஃபிஷ் ஃபேஷியல் தருகிறது. முழு உடலுக்கும் கூட ஃபிஷ் ஸ்பா சிகிச்சை கொடுக்க முடியும்.



குறிப்பாக சொரியாஸிஸ் நோயுள்ளவர்களுக்கு மேற்புறத்தோல் செதில் செதிலாக உதிரும். இதனால் பார்ப்பதற்கு அழகற்ற தோற்றம் உண்டாகிவிடும். அவர்களுக்கு இம்மீன்களைக் கொண்டு உடல் முழுவதும் சிகிச்சை அளிக்கும்போது இறந்த செல்களை மீன்கள் உண்பதால் தோலின் தன்மை மாறி மிருதுவாகிவிடும். புற ஊதாக்கதிர்சிகிச்சை உடன், ஃபிஷ் ஸ்பாவும் சேர்த்து கொடுக்கப்படும்போது தோலில் ஏற்படும் அரிப்பை குறைப்பதால் சொரியாஸிஸ் நோயாளிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஃபிஷ் ஸ்பாவினால் ரத்த ஓட்டம் தூண்டப்படுகிறது. இதனால் உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் ரத்த ஓட்டம் சீராகப் பாய்கிறது. இதயத் தமனிகள் மற்றும் உடலின் தசைகளில் ஆக்ஸிஜன் நிறைந்த ரத்த ஓட்டம் இருக்கும். கால்களில் உள்ள நரம்புப் புள்ளிகளில் மீன்கள் கடிக்கும்போது அப்புள்ளிகளில் மின் தூண்டல் ஏற்பட்டு உடலின் உள் உறுப்புகளின் செயல்பாடுகளும் தூண்டப்படுகின்றன. இதனால் மூளையின் நரம்புகளும் தூண்டப்பட்டு மூளை அமைதியடைந்து மன அழுத்தத்திலிருந்தும் விடுபட முடியும்.

இந்த ஃபிஷ் ஸ்பா முறை மசாஜ் செய்வது போல் இருப்பதால் கால்களில் ஏற்படும் சோர்வு, அசதிகளையும் போக்கும். பாக்டீரியாக்கள் அழிவதால் கிருமிநாசினி போல் செயலாற்றி கால்களின் வீக்கமும் குறைகிறது. பெண்களுக்கு இச்சிகிச்சையின் மூலம் மேலும் பல நன்மைகள் உண்டு. மாதவிடாய் நாட்களில் ஏற்படும் உடற்சூட்டை ஃபிஷ் ஸ்பா தணித்து அப்போது ஏற்படும் அடிவயிற்று வலியைப் போக்குகிறது. அந்நாட்களில் மனதளவிலும் அவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள். ஃபிஷ் ஸ்பாவினால் அவர்கள் உடலளவிலும், மனதளவிலும் புத்துணர்ச்சியை உணர முடியும். ஃபிஷ் ஸ்பா குறித்த விழிப்புணர்வு தற்போது அதிகரித்து வருகிறது.

# குதிக்கால்களுக்கு பயிற்சி!

பெண்கள் ஒரு சேரில் அமர்ந்தவாறோ (அ) படுத்து கொண்டோ இந்த உடற்பயிற்சியை செய்யலாம். சேரில் அமர்ந்து கால்களை நேராக இருக்க செய்து பாதத்தின் பின்புறம் குதிகால்களை மட்டும் மேல் தூக்கி இறக்கவும். இது போல் ஒரு நிமிடம் செய்தாலே மேலும் பல தசைகள் நல்ல வலுப்பெறுவதுடன், குதிக்கால்களின் வலி குறையும்.

### கைவிரல்களுக்கான சிறுபயிற்சி

பெண்கள் அலுவலகத்திலும் சரி, வீட்டிலும் சரி, கைகளை பயன்படுத்தியே அதிகப்பணிகளை மேற்கொள்வர். இதன் மூலம் கைவிரல்கள் வலுவிழந்து, அவ்வப்போது வலி மற்றும் பிடிப்புகளை ஏற்படுத்தும். இதனை போக்க கைகளை அகல விரித்து விரல்களை மட்டும் நன்கு மடிக்கவும். விரல்களின் அடிப்பகுதியை தொடும் அளவிற்கு விரல்களை மடக்கவும். இப்படியே 30 வினாடி இருக்கவும். பின் விரல்களை விரிக்கவும். இது போல் நான்கு முதல் ஐந்து முறை செய்யும் போது அசைவுகள், உறுதித் தன்மை மேம்படும்.

### முதுகெலும்புக்கு வலுசேர்க்கும் பயிற்சி

சம்மணமிட்டு நேராக அமர்ந்து கொள்ளவும். இடது கையை வலது முட்டி பகுதியில் வைத்து கொண்டு வலது கையை எடுத்து பின்புற தரையில் வைக்கவும். பின் அதுபோல் வலது கையை இடது முட்டி பகுதியில் வைத்து இடது கையை பின்புற தரையில் படும் படி வைக்கவும். இதன் மூலம் முதுகெலும்பு சுழல வைக்கப்படுகிறது. இந்நேரத்தில் மூச்சு நன்றாக இழுத்து விட்டு பிறகு சாதாரண நேர் நிலைக்கு வரவும். இதன் மூலம் பெண்களின் இடுப்பு ஓரப்பகுதிகளில் சதை போடாது. எப்போது மெல்லிய இடுப்பாகவும், முதுகெலும்புகள் வலுவாகவும் இருக்கும்.

### கழுத்திற்கு ஏற்ற பயிற்சி

பெண்களின் கழுத்து பகுதி அழகுடன் திகழவும், கழுத்து எழும்புகளில் வலி ஏற்படாமல் இருக்கவும் இந்த பயிற்சி உதவுகிறது. நேராக நின்று தலையை மெதுவாக சுழற்றவும். இது போல் வலது, இடது என மாறி மாறி கழுத்தை மெதுவாக சுழற்றும் போது கழுத்து தசைகள் வலுப்பெற்று நல்ல வனப்புடன் காட்சி தரும்.

# அப்துல் கலாம் பற்றிய அரிய தகவல்கள்



இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவரான அப்துல் கலாம் மேகாலயா ஐ.ஐ.எம்மில் மாணவர்களுக்கிடையே உரையாற்றிக் கொண்டிருந்த போது மாரடைப்பால் மயங்கி விழுந்தார். உடனடியாக ஷில்லாங்கின் பெதானி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரை பற்றி சில அரிய தகவல்கள்.

★ நாட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காக பெருந்தலைவர் காமராஜர் திருமணம் செய்து கொள்ள மறுத்தார். அதுபோல திருமணம் செய்தால் அறிவியல் வளர்ச்சிப் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாது என்று திருமணம் செய்ய மறுத்தார் அப்துல் கலாம்.

★ இவரது வாழ்க்கையின் ஒவ்வொரு வினாடியும் காந்திய கொள்கைகளை பிரதிபலித்தது.

★ அக்னிச் சிறகுகள் எனும் நூல் அப்துல் கலாமின் சுய சரிதையாக வெளி வந்துள்ளது.

★ அப்துல் கலாம் நிறைய கவிதைகள் எழுதியுள்ளார். அந்த கவிதைகளின் வரிகள் ஒவ்வொன்றும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வார்த்தைகளாக உள்ளன.

★ இந்திய அரசியல்வாதிகளிடம் இவர் அடிக்கடி உதிர்த்த வார்த்தை தொழில் நுட்பத்தில் கவனம் செலுத்துங்கள். அது தான் நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்

★ அப்துல் கலாமிடம் ஒரு தடவை ஒரு மாணவி நல்ல நாள், கெட்ட நாள் எது? என்று கேட்டாள். அதற்கு அப்துல் கலாம், பூமி மீது சூரிய ஒளிபட்டால் அது பகல். படாவிட்டால் இரவு. இதில் நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை என்றார்.

★ அப்துல் கலாமின் நீண்ட நாள் காலை உணவு ஒரே ஒரு ஆப்பம். ஒரு டம்ளர் பால். வேறு எதையும் சாப்பிட மாட்டார்.

★ அப்துல் கலாமிடம் ஒரு பழமையான வீணை உண்டு. எப்போதாவது நேரம் கிடைத்தால் அந்த வீணையை வாசிப்பார்.

★ அப்துல் கலாமுக்கு மிகுந்த இசை ஞானம் உண்டு. தியாகராஜ கீர்த்தனைகளில் சிலவற்றை அவர் தெரிந்து வைத்திருந்தார்.

★ 1958ல் மத்திய அரசின் பாதுகாப்புத் துறையில் அப்துல்கலாம் வேலைக்கு சேர்ந்த போது அவருக்கு மாத சம்பளமாக ரூ.250 வழங்கப்பட்டது.

★ இந்திய ராணுவத்தில் உள்ள திரிசூல், அக்னி, பிருத்வி, நாக், ஆகாஷ் அகிய ஏவுகணைகள் அப்துல் கலாம் திட்ட இயக்குனராக இருந்த போது வடிவமைக்கப்பட்டவையாகும்.

★ போலியோ நோயாளிகளுக்கான எடை குறைந்த ஊன்றுகோல் மற்றும் இருதய நோயாளிகளுக்கான எடை குறைந்த ஸ்டெண்ட் கருவி ஆகியவை இவர் கண்டுபிடித்தவையாகும். அந்த ஸ்டெண்டுக்கு கலாம் ஸ்டெண்டு என்றே பெயராகும்.

★ அப்துல் கலாமிடம் நகைச்சுவை உணர்வு அதிகம் உண்டு. நெருக்கடியான சமயங்களில் கூட அவர் நகைச்சுவையை வெளிப்படுத்த தயங்கியதில்லை.

★ சென்னை மூர் மார்க்கெட்டில் உள்ள ஒரு பழைய புத்தகக் கடைகளில் 1950க்களில் அப்துல் கலாம், த லைட் பிரம் மெனி லேம்பஸ் என்ற புத்தகத்தை வாங்கினார். கடந்த 60 ஆண்டுக்கும் மேலாக அதை அவர் பொக்கிஷமாக வைத்திருந்தார்.

★ அறிவியல் தொழில் நுட்பத்துக்கு மிகவும் உதவும் பெரிலியம் தாது பொருளை வெளிநாடுகள் இந்தியாவுக்கு தர மறுத்தன. உடனே இதுபற்றி கலாம் ஆய்வு செய்தார். இந்தியாவின் பல பகுதிகளில் பெரிலியம் மண்ணில் அதிக அளவில் கலந்து இருப்பதை கண்டுபிடித்தார். கலாம் ஒவ்வொரு நொடியும் நம்முடன் வாழ்ந்துக்கொண்டே தான் இருக்கின்றார். அவருக்கு என்றுமே இறப்பு என்பதே இல்லை.

# வரலாற்று நிகழ்வுகள்

**ஜனவரி 24**

1848 கலிபோர்னிய சட்டர்ஸ்மில் எனுமிடத்தில் தங்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இச்செய்தி பரவியதும் அமெரிக்காவில் இருந்து பலர் அங்கு குடியேறினர். இந்த ஆண்டு 820 ஆக இருந்த மக்கள் தொகை 1849 ஆம் ஆண்டு 25000 ஆக உயர்ந்தது.

1920 போர் இழப்பீட்டை நிர்ணயம் செய்ய நேசனடுகளால் ஒரு குழு அமைக்கப்பட்டது.

1946 இலண்டனில் கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அணு ஆற்றலைப்பயன்படுத்துவதை நெறிப்படுத்த ஒரு தனிக் கமிஷசனை அமைக்க வேண்டும் என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

1950 சுதந்திர இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக பாபு ராஜேந்திரப்பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவின் தேசியகீதமாக 'ஜனகண மன' அறிவிக்கப்பட்டது.

**ஜனவரி 25**

1899 வீட்டிலே திரைப்படம் பார்க்க வசதியாக கமெரா இணைந்த புரஜெக்ரர் அறிமுகப்படுத்தப்பட்டது.

1924 பெரியவர்களுக்காக எழுதப்பட்ட ஓரங்க நாடகம் முதன் முதலாக பி.பி.சியில் ஒலிபரப்பப்பட்டது.

1945 மிச்சிகனில் முதன் முதலாக குடிநீரில் குளோரின் கலந்து விநியோகிக்கப்பட்டது.

1949 புதிய நாடானன இஸ்ரேலில் சட்டசபைக்கு முதலாவது தேர்தல் நடைபெற்றது.

1971 உகண்டாவின் மேஜர் ஜெனரல் இடி அமீன் இராணுவப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினர்.

1981 ஆட்சியைக் கைப்பற்ற சதிசெய்த குற்றச்சாட்டில் மாஸேதுங்கின் மனைவி உட்பட நால்வருக்கு சீன அரசு மரணதண்டனை விதித்தது.

**ஜனவரி 26**

1818 பெண்கள் விற்பனை சட்டவிரோதம் என இந்தியாவில் அறிவிக்கப்பட்டது.

1864 இலண்டனில் ஈஸ்டர்ன் ஈவினிங் நியூஸ் இன்று முதல் வெளியானது.

1866 சூயஸ் கால்வாயில் போக்கு வரத்து ஆரம்பமானது.

1907 அவுஸ்திரேலியாவில் 24 வயதுக்கு மேற்பட்ட அங்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழஞ்கப்பட்டது.

1978 முதலாவது வானியல் செயற்கைக் கோள் ஏவப்பட்டது.

**ஜனவரி 27**

1926 ஜோன் வகிபெத் என்பவர் இலண்டனில் முதன் முதலாக பொதுமக்களுக்கு தொலைக்காட்சியை இயக்கிக் காட்டினர்.

1944 ரஷ்யப் படைகள் லெனின்கிராட் முற்றுக்கையைத் தகர்த்தன.28 மாத முற்றுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் நோயினாலும் உணவின்மையாலும் மாண்டனர்.

1967 விண்வெளியை இராணுவ காரியங்களுக்கு பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் ஒப்பந்தத்தில் 62 நாடுகள் கைச்சாத்திட்டன.

1973 அமெரிக்க வியட்நாம் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானது . இதன்படி 60 நாட்களுக்குள் அமெரிக்கப்படைகள் வியட்நாமை விட்டு வெளியேற வேண்டும்.

**ஜனவரி 28**

1878 தொலைபேசி தொடர்பகத்தில் முழு நேர இணைப்பாளர் முதன் முதலாக நியமனம்.

1958 மருத்துவம், கட்டடக்கலை, அச்சுத் துறை முதலியவற்றில் புரட்சியை ஏற்படுத்தி வரும் லேஸர் பிறந்தநாள்

**ஜனவரி 29**

1780 தி பெங்கால் கஸட் எனும் வார இதழ் கல்கத்தாவில் இருந்து வெளியானது. இந்தியாவின் முதலாவது ஆங்கில வார இதழ் இது.

1896 மார்பகக் புற்றுநோய்க்கான முதலாவது கதிரியக்க சிகிச்சை சிக்காக்கோ மருத்துவ மனையில் நடந்தது.

1916 பாரிஸில் கப்பலில் இருந்து புறப்பட்ட விமானம் முதன் முதலாக குண்டு வீசியது.

**ஜனவரி 30**

1857 கடற்படைக்கு சீருடை வழங்கும் திட்டத்துக்கு பிரிட்டன் அனுமது வழங்கியது.

1930 சுதந்திர சங்கு எனும் பத்திரிக்கை வரம் மும்முறை சென்னையில் இருந்து வெளியானது. 1948 தேசபிதா மகாத்தமா காந்தி சுட்டுக்கொலை. 1972 பங்களாதேஷுக்கு பிரிட்டனும் அவுஸ்திரேலியாவும் அங்கீகாரமளித்ததைக் கண்டித்து காமன் வெல்த் அமைப்பில் இருந்து பாகிஸ்தான் விலகியது.

# என்னைப் பத்தியும் கொஞ்சம் தெரிஞ்சு கொள்ளுங்க...

## இப்படிக்கு எறும்பு!



உடலமைப்பில் மிகச் சிறியது, சுறுசுறுப்புக்கும் ஒற்றுமைக்கும் பெயர் பெற்றது எறும்பு. அந்த எறும்பை பற்றிய அபூர்வ தகவல்களை நாம் கொஞ்சம் தெரிஞ்சுவச்சுக்குவோம்.

★ நம்மை விட அளவில் கிட்டத்தட்ட 10000 மடங்கு சிறியவை எறும்புகள். பூமியில் உள்ள மொத்த எறும்புகளின் எண்ணிக்கை பூமியில் உள்ள மொத்த மனிதர்களில் எண்ணிக்கைக்கு சமனானது என விஞ்ஞான ஆய்வுகள் கூறுகின்றன.

★ எறும்புகள் டைனோசர்களின் காலத்தில் இருந்தே இருக்கின்றன. எறும்புகளில் குறிப்பிடத்தக்க பரிமாணம் நடைபெற்று சுமார் 130 மில்லியன் வருடங்கள் ஆகின்றன.

★ 10,000 முதல் 12,000 வகையான எறும்புகள் உலகம் பூராவும் வாழ்கின்றன.

★ எறும்புகள் தனது எடையை விட 20 முதல் 50 மடங்கு அதிகமான எடைய தூக்க வல்லது.

★ எறும்புகளின் வாழ்வை 4 வகைப்படுத்தலாம் அவை egg, larva, pupa, adult.

★ சாதாரணமாக எறும்புகள் 90 நாட்கள் வரை உயிர் வாழும். (பிரிட்டானியா ஆய்வுப் படி கறுப்பு பெண் எறும்பு சுமார் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும் என அறியப்பட்டுள்ளது)

★ எறும்புகளுக்கு காதுகள் கிடையாது, நடக்கும் போது எற்படும் அதிர்வுகளை வைத்தே உணருகின்றன.

★ எறும்புகள் சண்டையிட்டால் ஒரு இறப்பு வரும் வரை சண்டை நடைபெறும்.

★ எறும்புகளில் அதிகாரம் உள்ள எறும்பு ராணி எறும்பாகும்.

★ எறும்புகளுக்கு இரண்டு வயிறுகள் உண்டு. ஒன்று அவைக்காகவும் மற்றையது ஏனைய எறும்புகளுக்ககவும் உள்ளது.

★ எறும்புகள் பல்வேறு அளவில் இருக்கின்றன. சில எறும்புகளை பூதக் கண்ணாடியினால் மட்டுமே பார்க்க முடியும். அதிகபட்சமாக 3 இன்ச் அளவுடைய எறும்புகளும் இருக்கின்றன.

★ எறும்புகள் எப்போதும் தனித்து வாழாது! கூட்டம் கூட்டமாகவே வாழும். இக்கூட்டத்தை colony(காலனி) என்பார்கள். (2002ஆம் ஆண்டில் பில்லியன் கணக்கான எறும்புகளைக் கொண்ட சுமார் 5800 கிலோ மீட்டர்கள் நீளமுடைய எறும்புகளின் காலனி கண்டறியப்பட்டது. (இது இத்தாலி - ஸ்பெயின் எல்லையில் அறியப்பட்டது.)

★ சில எறும்புகள் சொந்த இனப்பெருக்கம் செய்யக்கூடியன. அவைக்கு ஆண் துணை தேவைப்படுவதில்லை.

★ சில எறும்புகள் நீந்தக் கூடியவை. பொதுவாக 24 மணி நீரம் நீருக்கடியில் உயிருடன் வாழும் தகுதி உடையவை.

★ வடஅமெரிக்காவில் நெருப்பு எறும்புகளால் சுமார் 5 பில்லியன் பெருமதியான உடமைகள் சேதமாகின்றன.

★ எறும்புகள் தமக்கு தேவையான உணவுகளை விவசாயம் செய்யக்கூடியன. மனிதர்களும் எறும்புகளும் மட்டும் தான் விவசாயம் செய்கின்றோம். ஆனால் மனிதன் விவசாயம் செய்வதற்கு முதலிலிருந்தே எறும்புகள் விவசாயம் செய்துள்ளன.

ஒரு எழுத்துச் சொல்லாகி தருகிற அர்த்தங்களோடு பார்ப்போம்.

- ஆ - பசு
- ஈ - பறவை
- ஊ - இறைச்சி
- ஏ - கணை
- ஐ - தலைவன்
- ஓ - வியப்பு
- மா - பெரிய
- மீ - மேல்
- மூ - மூப்பு
- மே - மேன்மை
- மை - இருள்
- மோ - மோதுதல்
- தா - கொடு
- தீ - நெருப்பு
- தூ - தூய்மை
- தே - தெய்வம்
- தை - மாதம்
- சா - சாதல்
- சீ - இலக்குமி
- சே - எருது
- சோ - மதில்
- பா - பாட்டு
- பூ - மலர்
- பே - நுரை
- பை - பசுமை
- போ - செல்
- நா - நாக்கு
- நீ - முன்னால் இருப்பவர்
- நே - அருள்
- நை - இகழ்ச்சியை குறிப்பத்து
- நோ - வலி
- கா - பாதுகாப்பு
- கூ - வெல்
- கை - ஒப்பணை
- கோ - அரசன்
- வீ - மலர்
- வை - வைக்கோல்
- வெள - கைப்பற்றுதல்
- யா - கட்டுதல்
- நொ - துன்பம்
- து - உணவு




# ஞாபக சக்தியை வளர்க்க...



நான் மிக மோசமான நினைவாற்றலை கொண்டவன். நான் ஞாபக சக்தி மிகவும் குறைவாக உள்ளவன். படித்தது எனக்கு ஞாபகத்திற்கு வருவதில்லை. நினைவாற்றலில் நான் மற்றவர்களோடு ஒப்பிடுகையில் பின்தங்கியுள்ளேன். இது போன்ற கருத்துகள் உங்களிடமும் இருக்கலாம். ஆம் எனில், ஓர் அறிவியல் பூர்வமான உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எந்த மனிதனுக்கும் குறைந்த அளவு ஞாபக சக்தி அதிக அளவு ஞாபக சக்தி என்பதை வகுத்துக் கூற இயலாது. ஒவ்வொருவரும் அதை எப்படி பயன்படுத்துகிறார்களோ அவ்வாறு அவர்களுடைய நினைவாற்றல் அமைகிறது. நம் நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள சில வழிமுறைகளைக் கடைப்பிடித்தாலே போதுமானது. திறமையுடன் மனப்பாடம் செய்யும் முறை தெரிந்து கொள்வோம்.

★ ஒரு பாடத்தைப் படிக்கும்போது அவற்றில் உள்ள வினா விடைகளை தனித்தனிப் பிரிவாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பிரிவாகப் படித்து முடித்த பின்பும் சிறிது நேரம் இடைவெளி விட்டு பின்பு படிக்க வேண்டும். ஒரே நேரத்தில் மொத்தமாகப் படித்தால் நினைவில் வைத்துக் கொள்வது கடினமாகும். உடனடித் தேவைக்கு மட்டும் மொத்தமாகப் படிக்கலாம். ஆனால் இவை நீண்ட நாள்களுக்கு நம் நினைவில் நிற்காது. ஆனால் இடைவெளிவிட்டுப் படித்தால் நீண்ட நாள்களுக்கு நம் நினைவில் பதிந்து இருக்கும்.

★ நாம் சிறிய அளவில் உள்ள செய்யுளையோ அல்லது விடையையோ முழுமையாகக் கற்க இதுவே சிறந்ததாகும். மனப்பாடம் செய்வதற்கு இவ்விரு முறைகள் பயன்படுகின்றன. ஆனால் பெரிய அளவில் உள்ள செய்யுளையோ அல்லது விடைகளையோ பகுதி, பகுதியாகக் கற்றால் நன்றாக நினைவில் பதியும். மேலும் இவ்விரு முறைகளையும் சேர்த்துப் படித்தால் அதாவது முதலில் பகுதி, பகுதியாகப் படித்து விட்டுப் பிறகு முழுமையாகப் படித்தால் நன்றாக மனப்பாடம் செய்ய இயலும். அதாவது நன்றாக நம் நினைவில் நிற்கும்.

**ஒப்பித்தல் முறை**

இம்முறையில் நாம் கற்றவற்றை நாமே தொடர்ந்து பார்க்காமல் சொல்லிப் பார்க்க வேண்டும். இப்படிச் செய்யும்பொழுது பிழைகள் இருந்தால் அதை மாற்றிக் கொள்ளலாம். தனக்குத்தானே ஒப்பித்துப் பார்த்துக் கொள்ளும் பொழுது கடினமானப் பகுதிகளை முதலிலேயே தெரிந்து கொண்டு அதற்குத் தனிக் கவனம் செலுத்திப் படித்துக் கொள்ளலாம்.

**நினைவுக்குறிப்புகள்**

கற்பவற்றை நாம் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ள நாம் கற்கும் செய்திகளுக்கு அல்லது விடைகளுக்கு அவற்றோடு தொடர்புடைய ஒரு பொருளையோ அல்லது எண்களையோ நினைவுக்குறிப்புகளாக எடுத்துக் கொண்டு படித்தால் நன்றாக நினைவில் இருக்கும். உதாரணமாக Vibgyor என்ற சொல் தெரிந்தால் போதும் நிறமாலை (வானவில் நிறங்கள்) நமக்குத் தெரிந்துவிடும். நினைவு என்பது நம்மிடம் உள்ள தனிச்சிறப்புத் தகுதியாகும். இதைச் சரியாக கைகொள்ளும்போது நம் குறையாய்த் தென்பட்ட பல விஷயங்கள் திருத்தப்பட்டு நினைவுத்திறன் சிறப்பாய் இருக்கும்.

# இளமையின் மதிப்பு



ஹென்றி போர்ட் என்பவர் மோட்டார் கம்பெனியை நிறுவி, மிகப் பெரிய கோடீஸ்வரர் ஆனவர்! ஒரு அமெரிக்க இளைஞர் அவரிடம், ''ஐயா, தங்களிடம் இவ்வளவு செல்வம் கொட்டிக்கிடக்கிறது. என்னிடம் எதுவும் இல்லை. உங்களைப்போல் நான் சம்பாதிக்க முடியுமா? ஒரே கவலையாக இருக்கிறது.''என்றான்.

அதற்கு ஹென்றி போர்ட், ''என்னால் சம்பாதிக்கவே முடியாத ஒன்று உன்னிடம் இருக்கிறது. அதுதான் உன் இளமை! அதை வைத்து இதைவிடப் பல மடங்கு செல்வத்தை என்னால் சம்பாதிக்க முடியும். உன் இளமையை மட்டும் எனக்குக் கொடுக்க முடியுமா? சொல்! நான் இப்போதே என் கோடிக்கணக்கான சொத்துக்களையும் உன் பெயருக்கே எழுதி வைத்துவிடுக்றேன்.''

தன் இளமையின் மதிப்பை உணர்ந்தான் இளைஞன்!

# பிரமிப்பு!




பிரபல விஞ்ஞானி ஐன்ஸ்டீன் மாலையில் உலாவச் சென்றபோது, அவருடைய மாணவன் அவரிடம், ''நான் வெகு நாட்களாக உங்களைக் காணவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தேன்'' என்றான்.

அதற்கு ஐன்ஸ்டீன், ''ரொம்ப மகிழ்ச்சி! உன் டெலிபோன் நம்பரைக் கூறு. நானே உனக்கு போன் செய்து உன் வீட்டிற்கு வருகின்றேன்'' என்றார்.

அந்த மாணவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை! தன் தொலைபேசி எண், ''121144' என்றவுடன் ஐன்ஸ்டீன் ''சரி'' என்றார். அவரிடம் விடைபெற்றுச் சற்று தூரம் சென்ற மாணவன், ''புரபொசர் சார்...! என் டெலிபோன் நம்பரைக் குறித்துக் கொள்ளவில்லையே'' என்று கேட்டான். உடன் அந்த அறிவியல் மேதை, ''உன் டெலிபோன் நம்பர், ELEVEN SQUARED AND TWELVE SQUARED (112 122) என்பதுதானே?'' என்றார்.

தன் ஆசிரியரின் அபார ஞாபக சக்தியைக் கண்டு பிரமித்தான் மாணவன்!

# தன்னம்பிக்கை!



நியூயார்க் நகரத்துக்கும் லாங் ஐலேண்ட் தீவுக்கும் இடையே பாலமில்லாமல் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ''ஜான் ரோப்ளிங்' என்ற பொறியாளர் கட்டடப் பொறியாளரான தன் மகன் வாஷிங்டனுடன் கலந்தாலோசித்து முதல் கட்டப் பணியைத் தொடங்கினார். சில மாதங்களிலேயே பால கட்டுமானம் சரிந்து விழுந்தது. அந்த விபத்தில் ஜான் ரோப்ளிங் இறந்தார். மகன் வாஷிங்டனும் பக்க வாத நோயால் பாதிக்கப்பட்டு பேசும் திறன் இழந்தார். அவரது வலது கை செயலிழந்தது. என்றாலும் சைகை மொழியில் தன் மனைவியிடம் தகவல் தொடர்பு கொண்டு மீண்டும் பாலம் கட்டும் பணியைத் தொடங்கினார். பத்து வருடங்களில் ''ப்ரூக்ளின் பிரிட்ஜ்' என்ற பெயரில் பாலம் எழுந்து இன்றும் தன்னம்பிக்கையின் அடையாளமாக திகழ்கிறது.

# சிந்தனையாளர் முத்துக்கள்

ஒரு துறையில் புதிய திசையில் முதல் அடி எடுத்து வைப்பது தனி நபராகத்தான் இருக்க முடியும். பிற்பாடு அந்த யோசனையை செம்மைப்படுத்துவதில் ஒரு பெரிய குழுவினர் உதவக்கூடும். ஆனால், முன்னோடி சிந்தனையை முன்வைப்பது தனி நபர் தான்.

**சர் அலெக்சாண்டர் பிளெமிங், விஞ்ஞானி**

## இவ்வார இராசி பலன்கள்

**ஜோதிடர் த.சத்தியதாஸன்**




இவ்வாரம் சப்தம பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் பாசம், அன்பு நிலவும். உத்தியோகத்தர்கள் ஏற்றம் காண்பர். கன்னிப் பெண்களின் காதல் விவகாரம் ஜெயமளித்து திருமணப் பேச்சுக்கள் நிலவும். வங்கி வசதிகள் உண்டாகும். ஜென்மராசி அதிபதி தனுசு இராசியில் பலமாக இருப்பதால் தேச சுகம், மனோ தைரியம் மிகும்.




இவ்வாரம் இலாப பாவத்தில் குஜன் சஞ்சரிப்பதால் செய்தொழில் இலாபம், விருத்தி ஈடுபடும் கரும காரியங்கள் யாவும் ஜெயம் பெறும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமை குறைவடையும். வியாபாரிகள் இவ்வாரம் கூட்டு வாணிபத்தையும் புதிய முதலீடுகளையும் தொடங்கலாம். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பூச்சி, புழுக்களின் தொல்லைகளிலிருந்து பயிர் பாதுகாப்புக்களை மேற்கொள்ளலாம்.




சப்தம பாவத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் இல்லத்தில் கணவன், மனைவியருக்கிடையே கருத்து மோதல் அவ்வப்போது தோன்றி மறையும். நிதானத்துடன் செயற்பட்டால் நன்மையுண்டு. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு குறைவடையும். சக உத்தியோகத்தர்களை அனுசரித்து நடந்தால் நன்மை பயக்கும். வியாபாரிகளுக்கு இவ்வாரம் வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். புதிய கொள்முதல் தொடங்கலாம்.




இவ்வாரம் மாதுரு பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் மாதா நலம், கல்வி விருத்தி, வாகன சுகம், மனை நலம், குடும்ப ஷேமம் உண்டாகும். ஜீவன பாவத்தை வெள்ளி நோக்குவதால் தொழில் உயர்வு, விருத்தி, வங்கி வசதிகள் உண்டாகும். உத்தியோகத்தர் அதிகாரிகளின் பாராட்டையும் ஊக்குவிப்பையும் பெறுவர். வியாபாரிகளுக்கு கூட்டு வாணிபம் நல்ல இலாபத்தை தரும். விவசாயிகளுக்கு அரச மானியங்கள் உரிய வேளையில் வந்து சேரும்.




இவ்வாரம் தன பாவத்தைக் குஜன் நோக்குவதால் தனலாபம், பொருள் விருத்தி, மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி அடையும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். நற்செய்திகளால் நன்மை உண்டாகும். மாதுரு ஸ்தானத்தில் சனி இருப்பதால் இடையிடையே மாதா நலம் பாதிக்கப்படும். உத்தியோகத்தருக்கு வேலைச்சுமையும் மேலக வேலையும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு வாடிக்கையாளர்களின் வருகை திருப்தி தரும்.




இவ்வாரம் தன பாவத்தில் வெள்ளி ஆட்சி பெறுவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்ப விருத்திகள் உண்டாகும். கணவன்-மனைவி ஐக்கியம், பிள்ளைகளுடன் அன்பு பாசம் நிலவும். செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு கிட்டும். உத்தியோகத்தர் பதவிச் சிறப்பு, உத்தியோகத்தர் அதிகாரம் கொள்வர். உத்தியோகப் பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர்.




இவ்வாரம் ஜென்மத்தில் வெள்ளி ஆட்சி, தன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அமைதி, நிம்மதி நிலவும். குடும்ப ஷேமம் நன்மை தரும். வெளிநாட்டு நிதி வந்து சேரும். உத்தியோக பெண்களும் தம் பணிகளில் ஏற்றம் காண்பர். வியாபாரிகள் புதிய கொள்முதல்களை தொடங்கலாம். பழைய நிலுவைகள் வந்து சேரும். குடும்பப் பெண்களுக்கு இல்லத்தில் பிள்ளைகளுடன் உறவு சீரான நிலையில் இருக்கும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். ஈடுபடும் கரும, காரியங்கள் யாவும் ஜெயமளிக்கும். உத்தியோகத்தருக்கு கணிசமான அளவு வேலைச்சுமையும் மேலதிக வேலையும் கிட்டும். வியாபாரிகளுக்கு புதிய முதலீடுகளை மட்டுப்படுத்தல் வேண்டும். குடும்ப பெண்களின் நிர்வாகம் சிறப்பாக நடைபெறும்.




ஜென்மத்தில் சூரியன், சனி சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தேகாபிமானம் அவசியம். இலாப பாவத்தில் இவ்வாரம் குரு சஞ்சரிப்பதால் செய்யும் தொழிலால் இலாபம், சேமிப்பு, நிதிவரவு, வங்கி வசதிகள் மன நிறைவைத் தரும். கர்ம பாவத்தில் சுபர் நோக்குவதால் உத்தியோகத்தருக்கு பதவிச் சிறப்பு உத்தியோக அதிகாரம் வரும். புத்திரர்களால் பெண்களுக்கு மிகுந்த நன்மையுண்டு.




இவ்வாரம் ஜீவன பாவத்தில் வெள்ளி உச்ச யோகம் பெறுவதால் செய்தொழில் விருத்தியுண்டு. ஈடுபடும் கரும காரியங்கள் ஜெயமளிக்கும். குடும்பத்தில் இல்லறம் நல்லறமாக அமையும். விவேக வீரிய பாவத்தில் சுபர் சஞ்சரிப்பதால் மனோ தைரியம் தரும். நோய்கள் அகலும். தேகம் புதுப்பொலிவு பெறும். உத்தியோகத்தருக்கு பதவி உயர்வு ஏற்படும். இல்லறத்தில் பெண்களுக்கு மிகுந்த மரியாதை ஏற்படும்.




இவ்வாரம் செய்தொழில் விருத்தி, தொழில் இலாபம், சேமிப்பு, வங்கி வசதிகள், மன நிறைவைத் தரும். உத்தியோகத்தருக்கு வேலைச் சுமையும் மேலதிக வேலையும் கிடைக்கும். வியாபாரிகள் கூட்டு வாணிபத்தால் நல்ல இலாப முன்னேற்றம் காண்பர். விவசாயிகள் நவீன முறைகளைக் கையாண்டு பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள முடியும். பெண்களுக்கு சௌபாக்கிய யோகம் ஏற்படும்.




ஜென்மத்தில் குஜன் சஞ்சரிப்பதால் உஷ்ண ரோகத்திற்கு இடமுண்டு. தோகாபிமானம் முக்கியம். அஷ்டமத்தில் வெள்ளி இருக்க தனபாவத்தை நோக்குவதால் தனம், பொருள், மனை, வாகன, குடும்பம் அபிவிருத்தி ஏற்படும். வியாபாரிகள் புதிய கொள்முதலை தொடங்கலாம். உத்தியோகத்தருக்கு மேலதிகாரிகளின் அழுத்தமும் வேலைச் சுமையும் குறையும். பெண்களின் குடும்ப நிர்வாகம் புத்திரர்களின் உதவியுடன் நன்கு இடம்பெறும்.

# பைரவரை வணங்குதலால் ஏற்படும் பலன்கள்




பைரவரை தினமும் வழிபாடு செய்வதால் தோஷங்கள், அனைத்து விதமான பிரச்சனைகளில் இருந்து விடுபடலாம். பைரவரை வழிபாடுவதால் கிடைக்கும் நன்மைகளை பார்க்கலாம்.

பைரவரை வணங்குதலால் ஏற்படும் பலன்கள்

பைரவப் பெருமானை காலையில் வழிபட சர்வ நோய்களும் நீங்கும். பகலில் வழிபட விரும்பியது யாவும் கிட்டும். மாலையில் வழிபட இதுவரை செய்த பாவம் யாவும் விலகும். இரவு அதாவது அர்த்த சாமத்தில் வழிபட வாழ்வில் எல்லா வளமும் பெருகி மன ஒருமைப்பாடும் கிடைத்து முக்திநிலை என்ற இறைப்பரம்பொருளான பைரவப் பெருமானை அடையும் சாகாக் கல்வியும், மரணமில்லாப் பெருவாழ்வும் கூட கிட்டும்.

1. தலை குனியா வாழ்க்கை.
2. சுப மங்களம் ஊர்ஜிதம்.
3. தீயவினைகள் முற்றிலும் அழிவு.
4. பிறவியின் பலனை முழுவதுமாக உணர்தல்.
5. தடையில்லாமல் சவுகரியம் ஏற்படுதல்.
6. கர்வம் இல்லாமல் சமயோஜித பாக்கியம்.
7. கிரகன தோஷங்களின் பாதிப்பு விலகுதல்.




8. வாழ்ந்த ஜனனங்களின் பிறவியை புனிதப்படுத்துதல்.
9. இறைவனை எளிதாக உணர்தல்.
10. உலக உயிரினங்களின் காவல் தெய்வம் என்பதை உலகுக்கு உணர்த்திவிடுதல்.

# வளர்பிறை அஷ்டமி விரத பூஜை பலன்கள்



அஷ்டமியில் அஷ்ட லட்சுமிகள் தங்கள் செல்வங்களை அதிகப்படுத்தி கொள்ள ராகுகால நேரத்தில் பைரவரை வழிபாடு செய்ததாக சாஸ்திரம் கூறுகிறது. நாமும் ராகுகால நேரத்தில் விரதமிருந்து 11 சொர்ணஹர்சன பைரவருக்கு மந்திரத்தை கூறி வழிபாடு செய்தால் அஷ்ட லட்சுமிகளின் அருள் கிட்டும். வளர்பிறை அஷ்டமியில் 108 காசுகள் வைத்து அர்ச்சனை செய்து அந்த காசுகளை தாங்கள் தொழில் புரியும் அலுவலகத்திலோ அல்லது வணிக நிறுவனங்களிலோ வைத்தால் வியாபாரம் பெருகும்.

வீட்டில் உள்ள பீரோவில் வைத்தால் பணம் சேரும். தொடர்ந்து 8 மாதமும் கோவிலுக்கு வந்து காசு வைத்து பூஜை செய்ய வேண்டும். 48 நாட்கள் விரதமிருந்து தினமும் 108 முறை ‘ஸ்ரீசொர்ணஹர்சன பைரவாய நமஹ’ என்ற மந்திரத்தை மனதில் ஜெபிக்க வேண்டும். சொர்ணஹர்சன பைரவருக்கு வளர்பிறை அஷ்டமி பூஜை ஆத்தூர் காயநிர்மலேஸ்வரர் கோவிலில் நடந்து வருகிறது.

# இறை வேதத்தின் இலக்கியச் சிறப்பு



குர்ஆனின் இறைவசனங்களின் மொழிப்பெயர்ப்பை படிக்கும் போது அரபி வடிவத்தில் இருக்கும் குர்ஆனின் அழகையும் நயத்தையும் நாம் தவறவிடுகிறோம் என்பதைப் பலர் அறிவதில்லை. குர்ஆனை எந்த மொழிகளிலும் முழுமையாக மொழிபெயர்க்க முடியாது என்பதே உண்மை.

இறைவன் ஒவ்வொரு இறைத்தூதருக்கும் வெவ்வேறு ஆற்றல்களைத் தந்திருந்தான். இறுதித் தூதர் நபி முகமது (ஸல்) அவர்களுக்குத் தந்தது திருக்குர்ஆனை.

நபிகளாருக்கு வஹியைத் (இறை அறிவிப்பு) தந்து மக்களை பிரமிக்க வைத்தான். காரணம் அந்தக் காலகட்டத்தில் கவிதைகளில் மக்கள் மனம் மயங்கியிருந்த தருணம். அந்த நேரத்தில் குர்ஆனின் இறை வசனங்களைக் கேட்கும் இலக்கியவாதிகள் வியந்தார்கள். படிப்பறிவில்லாத முகமது (ஸல்) எப்படி இப்படியான அழகிய மொழியில் வாழ்வில் வெற்றி பெற உதவும் கட்டளைகளையும், வாழ்ந்து மடிந்த மக்களைப் பற்றியும் சொல்ல முடிகிறது என்று ஆச்சர்யத்தில் இருந்தார்கள். இது இறைவனிடத்திலிருந்து வந்த செய்தி என்றால் யாரும் நம்பத் தயாராக இல்லை. ஆனால் அதே சமயம் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. காரணம் அப்படியான இலக்கிய வடிவமாக குர்ஆன் இருந்தது. ‘‘நீங்கள் உண்மையாளராக இருந்தால் உங்கள் கற்பனையால் பத்து அத்தியாயங்களை இது போன்று கொண்டு வாருங்கள் (குர்ஆன் 11:13)‘‘ என்று குர்-ஆனில் மனிதர்களை நோக்கி சவால் விடப்பட்டது.

இந்த சவாலை தேர்ந்த அரபி கவிஞர்களாலும் தோற்கடிக்க முடியவில்லை. முயன்று தோற்றார்கள். இன்றும் இந்த சவாலை முறியடிக்கும் சக்தி எவருக்கும் இல்லை என்பதே உண்மை.

அப்படியான குர்ஆனின் இறைவசனங்களின் மொழிப்பெயர்ப்பை படிக்கும் போது அரபி வடிவத்தில் இருக்கும் குர்ஆனின் அழகையும் நயத்தையும் நாம் தவறவிடுகிறோம் என்பதைப் பலர் அறிவதில்லை. குர்ஆனை எந்த மொழிகளிலும் முழுமையாக மொழிபெயர்க்க முடியாது என்பதே உண்மை.

எவ்வளவு பெரிய புலமை வாய்ந்த எழுத்தாளர்களும் தாம் சொல்ல வரும் விஷயத்திற்கு நடுவில் ஒரு வார்த்தைக்கு விளக்கம் தர நேர்ந்தால் அதனை அடைப்புக் குறியில் அல்லது அந்தப் பகுதிக்கு கீழே அடிக்குறிப்பில் தருவார்கள். ஆனால் கவிதை நடையில் இருக்கும் குர்ஆன், ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டு வரும்போது - வேறு ஒரு சொல்லுக்கு விரிவான விளக்கத்தை அதே இடத்தில் வேறு ஓசை நயத்தில் சொல்லிவிட்டு - மறுபடியும் முன்பிருந்த நயத்திற்குத் தொடர்கிறது.

விளக்கும்படியாகச் சொன்னால் ஓர் ஓசையில் ஒரு சூரா ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது அதில் வரும் ஒரு வார்த்தையின் பொருளை வேறு நயத்தில் தந்து விளக்கிவிட்டு, பின்பு மீண்டும் சொல்லிக் கொண்டிருந்த ஓசைக்கே திரும்பிவிடுகிறது.

இதனை கிராத் வடிவில் குர்ஆனை ஓதுபவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். திருக்குர்ஆன் ஒலி வடிவத்தில் இருப்பதாலேயே பலர் மனதில் அப்படியே பதிந்துவிடுகிறது.

இப்படியான சந்த நயத்துடன் பொருள் மாறாமல் ஒரே சூராவில் ஈரொலி வடிவத்தைக் கொண்டு வருவது இன்றுவரை எவராலும் முயன்றும் முடியாமல் போன விஷயம். குர்ஆனின் இந்த நடை பல இலக்கிய நயங்களை உள்ளடக்கியது. திருக்குர்ஆனின் இலக்கியச் சிறப்பிற்கு இது ஒரு சான்று மட்டுமே. குர்ஆனைப் போன்று வேறு ஒன்றை கொண்டுவர முடியாததற்கு இப்படிப் பலநூறு காரணங்கள் உண்டு, அதனால்தான்,

இந்த குர்ஆன் போன்றதைக் கொண்டுவருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று திரண்டாலும் இது போன்ற ஒன்றை கொண்டுவரமுடியாது (குர் ஆன்17:88) என்கிறது திருக்குர்ஆன்.

# வேலையில் ஜாக்கிரதை



மனித வாழ்க்கைக்கு ‘கவனம்’ மிகவும் அவசியம். வாகனம் ஓட்டும் போது, ‘‘ஜாக்கிரதையாகப் போய் வா’ என பெற்றவர்கள், பிள்ளைகளுக்கு அறிவுரை சொல்கிறார்கள்.

ஆன்மிக வாழ்விலும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஜாக்கிரதையான விஷயங்கள் பற்றி பைபிளில் இருந்து மேற்கோள் காட்டப்படுகிறது.

1. உன் ஆத்துமாவை ஜாக்கிரதையாய் காத்துக் கொள்.
2. கற்பனைகளை எல்லாம் கைக்கொள்ள ஜாக்கிரதையாய் இருங்கள். (நீங்கள் நினைப்பதை செயல்படுத்த முயற்சிக்கும் போது சர்வ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்).
3. தேவனுடைய ஆலயத்திற்கு தேவனுடைய கற்பனையின் படியே தேவையான எல்லாம் ஜாக்கிரதையாய் செலுத்தப்பட வேண்டும். (ஆலயத்துக்கு கொடுக்க வேண்டியதை தவறாமல் கொடுத்து விட வேண்டும்).
4. ஜாக்கிரதை உள்ளவர்களுடைய கை ஆளுகை செய்யும்.
5. ஜாக்கிரதை உள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்.
6. ஜாக்கிரதை உள்ளவனுடைய நினைவுகள் செல்வத்தை அடைய ஏதுவாகும்.
7. தன் வேலையில் ஜாக்கிரதையாய் இருக்கிறவன் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்.

இதில் வசனம் 4 முதல் 7 வரை உள்ளவை எதிலும் கவனமாக இருப்பதால் நமக்கு கிடைக்கும் நன்மைகளை சுட்டிக்காட்டுகிறது. கவனமாய் இனி வேலைகளைச் செய்வோமா!

நல்லதை கடைபிடியுங்கள் சொல்கிறது பைபிள்

நன்மை செய்வது குறித்த பைபிள் பொன்மொழிகளைக் கேளுங்கள்.

★ நன்மையை விரும்ப என்னால் முடிகிறது. ஆனால், நல்லதைச் செய்து முடிக்கவோ என்னால் முடிவதில்லை.

★ எல்லாவற்றையும் பரிசோதித்துப் பார்த்து நல்லதை விரைவில் கடைபிடியுங்கள்.

★ நன்மை செய்ய அறிந்திருந்தும், அதை செய்யாமல் இருப்பதே பாவமாகும்.

★ நல்ல மனுஷன் நல்லவைகளை இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலிருந்து எடுத்துக்காட்டுகிறான். தீயவன் தீய பொக்கிஷத்திலிருந்து தீயதைக் கொண்டு வருகிறான்.

# முயன்றால் முடியாதது எதுவும் இல்லை

கர்த்தருடைய வசனம் சொல்லக்கூடாத சில நாடுகளுக்கு, தேவனுடைய வசனத்தைக் கொண்டு செல்ல, வாஞ்சை கொண்ட ஒரு சுவிசேஷ குழுவினர், புதிய வழியைக் கையாண்டனர்.

காலி பாட்டில்களில் சுவிசேஷத்தை (பைபிள் வசனம்) நுழைத்து, அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையில் இருந்து மிதக்க விட்டனர். வேத வசனம் ஒருபோதும் வெறுமையாகத் திரும்புவதில்லை என்பது அவர்களின் திடமான தீர்மானம். பல மாதங்கள் கடந்தது.

ஒருநாள், ஒரு இளைஞன் கடல் அலைகளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கும் போது, தண்ணீரில் மிதந்த ஒரு பாட்டிலை எடுத்தான். அதனுள் மாற்கு எழுதிய சுவிசேஷம் காணப்பட்டது. ஆவலுடன் இரவும் பகலும் வாசித்தான். தன் வாழ்வையே இயேசுவுக்கு அர்ப்பணித்தான். அவன் இருந்த இடம் இனபாடி தீவிலுள்ள மைக்ரோநிசியா. இது கலிபோர்னியா

கடற்கரையில் இருந்து, ஏறக்குறைய 8000 கி.மீ., தொலைவிலுள்ள இடம். அந்தப் பாட்டில் மூன்று ஆண்டு காலம் கடலில் பயணம் செய்து, இளைஞன் கையில் கிடைத்துள்ளது. வேதத்தை வாசித்த அவன், உடனே வேதாகம சங்கத்தாருக்கு ஒரு கடிதம் எழுதினான்.

கர்த்தருடைய வேலைக்காக நாம் பிரயாசப்படும் ஒவ்வொரு முயற்சியையும் கர்த்தர் காண்கின்றார். வேத வசனம் ஒருபோதும் வெறுமையாகத் திரும்பாது. உலகின் எந்தவொரு கோடி முனையில் வாழும் ஆத்துமாவையும் சந்திக்க இயேசு வல்லவர். அவர் செய்ய நினைப்பதை தடுப்பவன் யார்?

இதோ சில வசனங்கள்.

★ நீதிமானுடைய பிரயாசம் ஜீவனையும், துன்மார்க்கனுடைய விளைவோ பாவத்தையும் பிறப்பிக்கும் (நீதி.10:16).

# குழந்தைகள் விரும்பும் பெற்றோராக நீங்கள் மாற வேண்டுமா?



★ குழந்தைகளின் நல்ல செயல்கள் ஒவ்வொன்றையும் பாராட்டுங்கள். 'வாவ் என் தங்கமா இவளோ சூப்பரா செஞ்சிருக்கு.. கங்கிராட்ஸ்' என்று குழந்தைகள் மகிழ ஆச்சர்யப்படுங்கள்.

★ பொது இடங்களில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை பாடமாக எடுப்பதைவிட, வெளியிடங்களுக்கு அழைத்து செல்லுங்கள். அங்கே அவர்கள் என்ன தவறு செய்தார்கள், அதை எப்படி செய்திருக்க வேண்டும் என்பதை விளக்கி சொல்லுங்கள்.

★ எலெக்ட்ரானிக் சாதனங்கள் என்பது இக்காலக்கட்டத்தில் குழந்தைகள் தெரிந்திருக்க வேண்டிய ஒன்றுதான். அதற்காக அவர்கள் அதிலேயே மூழ்கிவிட பெற்றோர்களான நீங்கள் காரணமாக இருக்க வேண்டாம். ஒன்றை குழந்தைகளிடம் அறிமுகப்படுத்தும் நமக்கு, அச்சாதனங்களை அவர்கள் எவ்வளவு நேரம் பயன்படுத்த வேண்டும் என்பதை சொல்லி கட்டுப்படுத்தவும் செய்ய வேண்டும்.

★ ஒரு வயதில் இருந்து குழந்தைகளுக்கு புத்தகங்களை வாசித்து காண்பியுங்கள். தினமும் இரவு படுக்கசெல்லும் முன் சில பக்கங்களையாவது வாசித்து காண்பிப்பதை பழக்கமாக்கி கொள்ளுங்கள். புத்தகம் விசாலமான அறிவை பெறச் செய்யும் என்பதை அவர்கள் உணர வையுங்கள்.

★ தினமும் ஒரு புது வார்த்தை கற்றுக் கொடுங்கள். அவர்களுடைய வேலைகளை அவர்களாக செய்ய பழக்குங்கள். இதில் ஆண்-பெண் பேதம் தேவையில்லை. பள்ளி முடிந்து வந்தவுடன் டிபன்பாக்ஸை எடுத்து சிங்கில் போடுவது, ஷூக்களை கழட்டி உரிய இடங்களில் வைப்பது, சாப்பிடும் முன் அதற்கான பொருட்களை பெற்றோர்களுடன் சேர்ந்து எடுத்து வைப்பது போன்ற வேலைகளை பகிர்ந்து கொள்ள பழக்குங்கள்.

★ உறவுகளை அறிமுகப்படுத்துங்கள். சித்தி, சித்தப்பா, மாமா என்று உங்கள் குடும்பத்தில் இருக்கும் உறவுகளை குழந்தைகளுக்கு பழக்கப்படுத்துங்கள். நேரில் பார்ப்பது, போனில் பேசுவது என எது சாத்தியமோ அதை செய்ய வையுங்கள். அப்போதுதான் குழந்தைகளின் வானம் விரிவடையும்.

★ குழந்தைகள் முன் உபயோகிக்கும் வார்த்தைகளில் கவனமாக இருங்கள். அவை ஃபேஷனாக, இதுவரை நீங்கள் உபயோகித்து வந்த அர்த்தமில்லாத வார்த்தைகளாக இருக்கலாம். உடனே சுதாரியுங்கள். இல்லையெனில் அவை நம் குழந்தைகள் மூலமாக வெளிப்படும்போது அவர்களை மட்டுமல்லாது அவை நம்மையும் சேர்த்தே பாதிக்கும் என்பதை உணருங்கள்.

★ குழந்தைகளிடம் பெற்றோர்கள் எந்த சூழலிலும் கடுமையான மனப்பாங்குடன் நடந்துகொள்வதை தவிர்க்க வேண்டும். குழந்தைகள் தெரிந்தோ, தெரியாமலோ ஏதேனும் ஒரு தவறை செய்தாலும் கூட, அந்த தவறை இனி அடுத்த முறை குழந்தைகள் செய்யாத வகையில் பக்குவமாக எடுத்துக்கூற வேண்டும்.

★ மற்றொரு மாணவரை உதாரணத்துக்கு எடுத்துச் சொல்லலாம் தவிர, இன்னொரு மாணவருடன் உங்கள் குழந்தைகளை ஒப்பீடு செய்து, குற்றம் சாட்டுவது மிகவும் தவறு.

★ குழந்தைகளின் கெப்பாசிட்டியை தெரிந்து கொள்ளுங்கள். அதை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளுங்கள். அதற்குபதில் கடல் தாண்ட சொல்லாதீர்கள். அப்போதுதான் அவர்களால் வெற்றியை அடைய முடியும்.

# உங்கள் மகனுக்கு பெண்கள் பற்றி கற்றுக் கொடுங்கள்!

ஒரு வீட்டில் ஆண், பெண் வேறுபாடு எங்கு ஆரம்பிக்கிறது தெரியுமா? குடும்பமாகச் சாப்பிட உட்காரும்போது, மகனுக்கு இரண்டு முட்டையும், மகளுக்கு ஒரு முட்டையும் வைக்கும் பழக்கத்தில் இருந்துதான். பெரும்பாலான வீடுகளில் ஆணுக்குச் சுதந்திரம் தருவதும், பெண்ணுக்குச் சட்டம் போடுவதும், வீட்டை நிர்வகிக்கும் பெண்களாகத்தான் இருப்பார்கள். இதுபோன்ற சின்னச் சின்ன விஷயங்களில் ஆரம்பிக்கும் வேறுபாடு, பின்னாளில் பெரிய சொத்து பிரச்னையில் கொண்டு வந்து நிறுத்தும். உண்மையில், பெண்களைப் பற்றி தங்கள் மகனுக்கு எத்தனை அம்மாக்கள் கற்றுக்கொடுக்கிறீர்கள்?

அவளுக்கு என்ன குறைச்சல்? இரண்டு ஆம்பளை பிள்ளைகள் இருக்கு, சிங்கக்குட்டி மாதிரி மகனைப் பெத்து வளர்க்குகிறேன் என்று நாம் அன்றாடம் பயன்படுத்தும் வார்த்தைகளிலேயே பெண்ணடிமைத்தனம் ஒளிந்து இருக்கிறது. இந்த வார்த்தைகளைக் கேட்டு வளரும் உங்கள் மகனுக்கும், ஆணாதிக்க மனோபாவமே வரும். பெண்களைப் பற்றியும், அவர்களின் முக்கியத்துவத்தைப் பற்றியும் நாம் சொல்லிக்கொடுக்க வேண்டிய காலத்தில் இருக்கிறோம். அதற்கான சில வழிகளைப் பார்ப்போமா?

★ஆணும் பெண்ணும் வெவ்வேறு உலகத்தில் இருந்து வந்தவர்கள் என்ற கற்பனைக் கதைகளை உடைத்தெறியுங்கள். நாம் எல்லாருமே ஒருவருக்கு ஒருவர் மாறுபட்டு இருக்கிறோம். ஆனால், மாறுபடுவதும் வேறுபடுவதும் ஆண் - பெண் இடையே நடக்கும் விஷயமாகப் பார்க்காமல், மனித இயல்பு என்ற அடிப்படையாகப் பார்க்க கற்றுக்கொடுங்கள். இதனை, உங்கள் செயலில் இருந்தே தொடங்குங்கள்.

★ 'சாட்டை' படத்தின் ஒரு காட்சியில்... ஒரு மாணவன், பெண்கள் கழிப்பறையில் எட்டிப் பார்த்ததற்காக, தண்டனைக் கொடுப்பார் ஆசிரியர். அதற்கு சமுத்திரக்கனி அமைதியாக, 'தெரியாத ஒரு விஷயத்தை அவன் தெரிந்துகொள்ள முயற்சி செய்தான். அதற்கு எதற்கு தண்டனை?' என ஒரு விளக்கம் கொடுப்பார். இந்தக் காட்சியில் வரும் சமுத்திரக்கனி போல நீங்களும் இருங்கள். பெண்களைப் பற்றி அவன் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டினால், அதற்கு தடைப் போடாதீர்கள். அவர்கள் பெண்களைப் பற்றி சந்தேகம் கேட்டால், நீங்கள் ஒரு வழிகாட்டியாக இருந்து, உங்கள் மகனின் வயதுக்கு ஏற்ப, புரியவையுங்கள். இதுவே, உங்கள் மகனுக்குப் பெண்களைப் பற்றி ஒரு தெளிவான சிந்தனை பிறக்கும் வழியாக இருக்கும்.

★ பெண்களைப் பற்றின நல்லப் புத்தகங்களை அறிமுகப்படுத்துங்கள். அன்னை தெரசா, ஜான்சி ராணி போன்று சரித்திரத்தில் இடம்பிடித்த பெண்களைப் பற்றிய கதைகளைச் சொல்லுங்கள். இந்த முயற்சி, அவர்களைப் பற்றி உயர்ந்த எண்ணங்களை உங்கள் மகனின் மனிதில் விதைக்கும்.



★ பொதுவாக, மகனுக்கு ஆடைகள் தேர்ந்தெடுக்கும்போது, 'பிங்க்', 'மஞ்சள்' நிற ஆடைகள் பெண்களுக்கானது என ஒதுக்கிவிடுவோம். ஆனால், இதுபோன்ற வெற்றுக் கருத்துகளை தூர வைத்துவிட்டு, எல்லா நிற ஆடைகளையும் அவன் அணிவதற்கு அனுமதியுங்கள். நண்பர்கள் கேலி செய்கிறார்கள் என அவன் தயங்கினாலும், நீங்கள் இதனை உணர்ந்துங்கள்.

★ குழந்தைப் பருவத்தில் இருந்தே, பெண் குழந்தைகளுக்கு பார்பி பொம்மை அல்லது சமையல் சொப்பு என்றும், ஆண் குழந்தைகளுக்கு கார், மோட்டார் பொம்மைகள் என நாம்தான் பிரிக்கிறோம். அப்படி இல்லாமல், ஆண் குழந்தைகளுக்கும் எல்லா வகையான பொம்மைகளையும் வாங்கிக் கொடுங்கள்.

★ அழுவது பெண்ணுக்குரிய விஷயம் என்றே காலங்காலமாக சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஆண்கள் அழக்கூடாது என்றும் நாமே ஒரு கருத்தை உருவாக்குகிறோம். இவை இரண்டுமே தவறு. அழுவது என்பது மனம் மற்றும் மனநிலை சம்பந்தப்பட்ட ஒரு உணர்வு. சிரிப்பது, அழுவது, கோபப்படுவது இவையெல்லாம் எல்லோருக்குமான உணர்வுகளே என்பதை உங்கள் மகனுக்கு உணர்த்துங்கள்.

# மாணவர்களின் பரீட்சை முடிவுகளும் பெற்றோர்களும்



மாணவர்கள் நம்மால் மதிப்பெண் வாங்க முடியவில்லையே, பின் வாழ்ந்து என்ன செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தோடு தாழ்வு மனப்பான்மையும் சேர்ந்து கொள்ள, தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இன்றைய நவீனகால கட்டம் போட்டி நிறைந்த ஒன்றாகும். மிக நல்ல மதிப்பெண் எடுத்தால் தான் விருப்பப்பட்ட பிரிவுகளுக்கு போக முடியும். மருத்துவம், பொறியியல், இளநிலை கம்ப்யூட்டர் போன்ற பிரிவுகளில் சேர நிறைய மதிப்பெண்கள் தேவைப்படும். மாணவர்களின் எதிர்பார்ப்பு மட்டுமின்றி பெற்றோர்கள், ஆசிரியர்களின் எதிர்பார்ப்பும் அதிகமாகவே இருக்கிறது.

நிறைய மாணவர்கள் தாங்கள் அல்லது பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் எதிர்பார்த்த அளவு மார்க் வரவில்லையென்றால் மனச்சோர்வு அடைவார்கள். சில மாணவர்கள் தற்கொலை செய்யும் அளவிற்கு துணிந்தும் விடுவார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்களின் எதிர்பார்ப்பின்படி நம்மால் மதிப்பெண் வாங்க முடியவில்லையே, பின் வாழ்ந்து என்ன செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தோடு தாழ்வு மனப்பான்மையும் சேர்ந்து கொள்ள, தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.

ஆராய்ச்சியின்படி, தேர்வில் தோல்வியுற்றவர்களில் 10 சதவீத மாணவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகிறார்கள், ஒரு சிலர் அதிலும் வெற்றியும் பெற்றுவிடுகிறார்கள். உலகத்திலே உருவாக்க முடியாதது என்று ஒன்று உண்டென்றால் அது உயிர் மட்டும் தான். உயிர் போய்விட்டது என்றால் திரும்ப வாங்க முடியாது.

எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பரிட்சை ரிசல்ட் வந்தவுடன் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பிள்ளைகள் நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும். அவர்களுக்கு தன்னம்பிக்கையும், ஊக்கத்தையும் அளிக்க வேண்டும். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல கடின வார்த்தைகளைக் கூறி மேலும் அவர்களை மனசோர்வுக்கு ஆளாக்கக் கூடாது.

பரிட்சையில் தோல்வியடைந்தால் மாணவர்களுக்கு ஏற்படும் மனரீதியான உணர்வுகள்.






1. கோபம், 2. பயம், 3. பதட்டம், 4. கலகலப்பு இல்லாமை, 5. தனிமையில் ஒதுங்கி இருப்பது, 6. குற்ற மனப்பான்மை, 7. தாழ்வு மனப்பான்மை, 8. தூக்கமின்மை, 9. பசியின்மை, 10. உடல் சோர்வு போன்ற பிரச்சனைகள் ஏற்படும்.

பரிட்சையில் தோல்வியடைந்தால் பெற்றோர்கள் செய்ய வேண்டிவை

1. பரிட்சையில் தோல்வியைடந்து விட்டால் வாழ்க்கையே முடிந்து விட்டது என்று நினைக்கக்கூடாது. வாழ்க்கையில் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என்ற எண்ணத்தை உண்டு பண்ண வேண்டும்.

2. தோல்வியடைந்த மாணவர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். எதிர்மறையாகப் பேசுவதையும், தற்கொலை பற்றி பேச்சு வந்தால் அதற்கு உண்டான தடுக்கும் முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும். ஆறுதலான வார்த்தைகளைப் பேச வேண்டும். வீட்டில் கத்தி, கயிறு மற்றும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய மாத்திரைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவற்றை அப்புறப்படுத்த வேண்டும்.

3. தோல்வியடைந்த மாணவர்கள் தனிமையில் வீட்டைப் பூட்டிக் கொண்டு இருப்பதை தவிர்க்க சொல்ல வேண்டும். தோல்வி தான் வெற்றிக்கான அறிகுறி போன்ற உற்சாகம் தரும் வார்த்தைகளைப் பேச வேண்டும்.

4. மேலும் மனநல மருத்துவரிடம் போய் காண்பித்து இவ்வாறான பிரச்சனைகளுக்கு மனநல ஆலோசனைப் பெறலாம்.

இது போன்ற விசயங்களை பெற்றோர்களும், மாணவர்களும் கடைபிடித்து வாழ்க்கையில் ஏற்படுகிற சில பின்னடைவுகளை எதிர்த்து வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தன்னம்பிக்கையோடு இருக்க வேண்டும்.






மண்முனை தென்மேற்கு பிரதேச பண்பாட்டு இலக்கிய விழா பிரதேசசெயலாளர் தெட்சணகௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்றது. கொக்கட்டிச்சோலை பிரதேச பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் கலந்து கொண்டிருந்தார்.

படம்: படுவான்கரை நிருபர்





சுகாதார அமைச்சின் 26 ஆவது ஆயுள்வேத மருத்துவ முகாம் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் அமைச்சின் ஆலோசகர் டாக்டர் கே.எல்.எம்.நக்பரின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் இடம்பெற்ற இம்மருத்துவ முகாமின் ஆரம்ப நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்ராஸ் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்தார்.

படம்: சாய்ந்தமருது நிருபர்







முன்பள்ளி பாலர்நிலைய மாணவர்களின் வருடாந்த விடுகை விழா நிந்தவூர் அல் ஹுதா முன்பள்ளி பாலர் நிலைய பணிப்பாளர் ஹாஜியானி மைமூனா செயினுலாப்தீன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில்பிரதம அதிதியாக சுகாதா ராஜாங்க அமைச்சர் பைசால் காசீம்,கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்விப் பணியகத்தின் தவிசாளர் எம்.எ.அமிர்தின், மற்றும் முன்னாள் நிந்தவூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் அமீன வைத்தியர், பாடசாலை அதிபர்கள் ஆகியோரை மாலை அணிவித்து அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் மாணவர்களுக்கான பரிசில்களை அதிதிகள் வழங்கிவைப்பதையும் படங்களில் காணலாம்.


படம்: காரைதீவு நிருபர்





கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையில் தம்பலகாமம் பிரதேச செயலக புதுக்குடியிருப்பு மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் தையல் கண்காட்சி மற்றும் பிரியா விடை நிகழ்வு அண்மையில் கிராம அபிவிருத்தி உத்தியோத்தர் தலைமையில் நடைபெற்றது. இம்முறை 23 மாணவர்கள் தையல் டிப்ளோமா கற்கைநெறியை பூர்த்தி செய்தனர்.

படம்: கிண்ணியா நிருபர்






மகாத்மா காந்தியின் 150ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு வரக்காபொல தமிழ் அபிவிருத்தி அமைப்பும் வரக்காபொல பத்திரகாளி அம்மன் அறநெறி பாடசாலையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்து கலாசார நிகழ்வு அண்மையில் வரக்காபொல நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கேகாலை மாவட்டத்தில் தமிழ்மொழி மூல பாடசாலைகளில் கடந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், வறிய குடும்பங்களுக்கு உணவு பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

படம்: இரத்தினபுரி நிருபர்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஜாஎல, மினுவான்கொட வீதி, 302/1/A இலக்கத்தில் அமைந்துள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டு 06.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று வெளியிடப்பட்டது.